LIBRARY
17 MAR 1967
STATE LEGISLATURE MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Wednesday, 9th November 1966.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (The HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

PRIVATE NOTICE QUESTION.

தி. மு. க. தலைவர் திரு. அண்ணாத்துரைக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

** 1. தனி நபர் கேள்வி.—திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளரும் இந்தியப் பாராளுமன்ற மக்கள் அவை உறுப்பினருமான அறிஞர் சி. என். அண்ணாத்துரை அவர்கள் கோவை மாவட்டத்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டபோது, 5-11-1966 அன்று உடுமலைப்பேட்டைக்கும் ஜல்லிப்பட்டிக்கும் இடையில் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் திட்டமிட்டுக் கார்களை வழி மறித்துக் கார்களை தாக்கியிருப்பதை அரசு அறியுமா ?

(இ) இரண்டு கார்கள் தாக்குதலுக்கு உள்ளாகி, சேதப் படுத்தப் பட்டிருப்பதை அரசு அறியுமா ?

(உ) அது குறித்து எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) *to* (*c*) At about 10 p.m. on 5th November 1966 a party of the members of the Dravida Munnetra Kazhagam including the Coimbatore district Secretary of the party was proceeding in cars from Udumalpet to Jallipatti to address a public meeting in Jallipatti. A crowd of about 100 labourers of Thirumurthi Mills situated about 2 miles from Udumalpet who intended to stage a black flag demonstration to Sri Annadurai, M.P. while he was passing by the side of the Mill, shouted at the passing cars and hit two of the cars with flag poles causing few dents in the car. At the time of this incident Sri Annadurai was addressing a pubilc meeting at Udumalpet. On receipt of information about the above incident the Inspector of Police, Udumalpet rushed to the scene. On a complaint from the local Dravida Munnetra Kazhagam Secretary, the Police have registered a case against the labourers. The case is under investigation.

(அ) முதல் (உ) வரை : திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோயம்புத்தூர் மாவட்ட செயலாளர் மற்றும் சிலரும் 5-11-1966 அன்று சுமார் இரவு 10 மணிக்கு ஜல்லிப் பட்டியில் பொதுக்கூட்டம்

[9th November 1966

ஒன்றில் உரையாற்றுவதற்காக உடுமலைப்பேட்டையிலிருந்து ஜல்லி பட்டிக்கு கார்களில் சென்று கொண்டிருந்தனர். உடுமலைபேட்டை யிலிருந்து சுமார் 2 மைல்கள் தூரத்திலுள்ள திருமூர்த்தி ஆலையின் 100 தொழிலாளர்கள் திரு. அண்ணாத்துரை, எம்.பி. அந்த ஆலை வழியாக சென்று கொண்டிருக்கும்போது அவருக்கு கறுப்புக் கொடி காட்ட விரும்பினார்கள். அவர்கள் அப்பொழுது அவ்வழியில் சென்று கொண்டிருந்த கார்களை நோக்கி கூக்குரலிட்டு இரண்டு கார்களை கொடி கம்பங்களைக் கொண்டு தாக்கினார்கள். இதனால் அந்த இரண்டு கார்களுக்கும் ஓரளவு சேதம் ஏற்பட்டது. இந்நிகழ்ச்சி நேரிட்ட நேரத்தில் திரு. அண்ணாத்துரை உடுமலைப் பேட்டையில் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசிக்கொண்டிருந்தார். இந்நிகழ்ச்சியைப்பற்றிய தகவல் கிடைத்தவுடன், உடுமலைப் பேட்டை போலீஸ் இன்ஸ்பெக்டர் நிகழ்ச்சி நேர்ந்த இடத்திற்கு விரைந்து சென்றார். உள்ளூர் தி.மு.க. செயலாளர் புகார் செய்ததின் மேல் போலிசார் அத் தொழிலாளர்களுக்கு எதிராக வழக்கு ஒன்றை பதிவு செய்துள்ளார்கள். இது இப்போது புலன் விசாரணை யில் உள்ளது.

திரு. மு. கருணாநிதி : அண்ணா அவர்களுக்கு கறுப்புக்கொடி காட்டுவதற்கு திருமூர்த்தி மில் தொழிலாளர்கள் திட்டமிட்டிருந் தார்கள் என்று கூறினார்கள். கறுப்புக்கொடி காட்டவேண்டு மென்ற இடத்தில் போலீஸ் பாதுகாப்பு முன்கூட்டியே போடாத தற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கறுப்புக்கொடி காட்டுவதற்கு திட்டமிட்டார்கள் என்பது போலிசாருக்குத் தெரிந்ததா என்ப தற்குத் தகவல் இல்லை.

திரு. கே. ஏ. மதியழகன் : கறுப்புக்கொடி காட்டுவதற்கு சாதா ரணமாக முன்கூட்டியே நோட்டீஸ் கொடுக்கப்படுகிறது. அப்படி ஏதேனும் போலிசாருக்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்டதா ? அந்த நோட்டீஸின் பேரில் போலீசார் நடவடிக்கையெடுக்காமலும், பந்தோபஸ்த் செய்யாமலும் அவர்களுக்கு உடைந்தையாக இருந் தார்கள் என்று சொல்லப்படுகிறது. அதைப்பற்றித் தகவல் சொல் வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : போலீசாருக்கு சில பேர் நோட்டீஸ் கொடுக்கலாம். ஆனால், எல்லோரும் அப்படிக் கொடுப்ப தில்லை. போலீசாருக்கு நோட்டீஸ் கொடுத்திருந்தால் அவர்கள் உஷாராக நடவடிக்கை எடுப்பார்கள். போலீசார் அதற்கு உடந்தையாக இருந்தார்கள் என்று சொல்லுகிறார்கள். அது முற்றிலும் தவறு. அது அவர்களுடைய கட்சிக்கும் நல்லதல்ல.

திரு. கே. ஏ. மதியழகன் : இந்தக் கலவரங்கள் தொடர்ந்து நடந் திருக்கின்றன. அங்கே இருக்கின்ற தொழிலதிபர் மணி என்பவர் திராவிட முன்னேற்றக் கழகக் கொடியை வெட்டிவிட்டிருக் கிறார்கள். டி.எஸ்.பி. அவர்களிடம் அந்த மாவட்டச் செயலாளர்

9th November 1966]

அதைப்பற்றி பதிவு செய்திருக்கிறார். தொடர்ந்து வருகின்ற கலவரங்களில் இது இரண்டாவது கட்டம் என்பதை முதல் அமைச்சர் அவர்கள் மறுக்கிறார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதெல்லாம் எனக்குத் தெரியாது.

திரு. மு. கருணாநிதி : கறுப்புக்கொடி காட்டுவதற்கு முயற்சிகள் எடுத்தார்கள் என்பது விளைவிற்கு மாறான வகையிலே அரசினர் தருகின்ற செய்தி. அண்ணா அவர்களுக்கு எதிராக மில் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதற்குக் காரணம் எதுவும் இல்லை. ஆகையால், அந்த விளைவிற்குப் பிறகு செய்த கற்பனைதான் இது என்பதை ஒப்புக்கொள்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : புலன் விசாரிக்கப்பட்டு வருகிறது என்று சொன்னேன். அதைப்பற்றி விவரம் தெரிந்த பிறகுதான் சொல்லமுடியும். கனம் உறுப்பினர் அவர்களுக்குத் தெரிந்தால் அதை அவர்கள் வைத்துக்கொள்ளலாம். எனக்கும் தெரிவிக்கலாம்.

திரு. கே. ஏ. மதியழகன் : விவகாரம் நடந்த இடம் உடுமலைப் பேட்டை நகரத்திலிருந்து இரண்டு மைல் தொலைவிலே உள்ள ஒரு இடம் கோடிப்பட்டி என்ற ஊர்தான் அது. நானும் அந்த ஊர்க்காரன்தான், அதனால்தான் எனக்குத் தெளிவாகத் தெரியும். 100 பேர்கள் கம்பு கொண்டு மாவட்டச் செயலாளர்களுடைய காரைத் தாக்கி இருக்கிறார்கள். அதற்குப் போலீசார் என்ன சமாதானம் சொல்லுகிறார்கள் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சமாதானம் சொல்வதற்கு ஒன்றும் அவசியம் இல்லை. போலீசார் தங்களுடைய கடமையைச் செய்வதில் தவறுவதில்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் சபாநாயகர் அவர்களே, போலீஸார் தாங்கள் செய்ய வேண்டிய கடமையிலிருந்து தவறவில்லை என்று எந்த ஆதாரத்தின் பேரில் சொல்லுகிறார்கள் ? எனக்குத் தெரிந்த வரையில் . . .

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் முதலிலேயே சொல்லி விடுகிறேன். போலீஸாரிடமிருந்து எனக்கு அறிக்கை வந்திருக்கிறது.

திரு. மு. கருணாநிதி : போலீஸார் புலன் விசாரணை செய்கிறார்கள் என்றால், மில் தொழிலாளர்கள் யாரையாவது, அல்லது தொழிலாளர்கள் தலைவரையாவது கைது செய்திருக்கிறார்களா ? அப்படிக் கைது செய்து விசாரித்தார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நாம் வேண்டுகிற முறையில் போலீஸார் செய்யமாட்டார்கள். அவர்கள் எப்படி எப்படிச் செய்ய வேண்டுமோ அப்படிச் செய்வார்கள்.

[9th November 1966

திரு. கே. ஏ. மதியழகன் : இந்தக் கலவரத்திற்குக் கதாநாயகனான மில் அதிபர்கள் கோயம்புத்தூரைச் சேர்ந்தவர்கள், மத்திய அமைச்சர் திரு. சுப்பிரமணியம் அவர்களுக்கு வேண்டியவர்கள் என்பதால் போலீஸார்கள் தலையிடுவதில்லை என்பது அமைச்சருக்குத் தெரியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அமைதிக்கு யார் பங்கம் விளைவித்தாலும் போலீஸார் நடவடிக்கை எடுத்துக்கொள்வார்கள். கனம் அங்கத்தினர் கேட்கிற கேள்வியில் கட்சிக் கண்ணோட்டத்தை அமைக்கிறார்கள். அவ்வாறு அமைத்தால் அப்படியே பேசிக்கொண்டு போகலாம்; பிரசாரத்திற்காகப் பேசலாம். ஆனால் போலீஸாரை இதிலே ஈடுபடுத்துவது சரியல்ல.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அண்ணா அவர்கள் கோவை மாவட்டத்தில் ஒரு மாத காலமாகச் சுற்றுப் பிரயாணம் செய்கிறார்கள். தமிழ்நாட்டில் உள்ள முக்கியமான கட்சியின் தலைவர் என்ற முறையில் அவர்களுக்கு போலீஸ் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறதா ? இல்லையென்றால் இனிமேலாவது அளிக்கப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : போலீஸார் எத்தகைய பாதுகாப்பு அளிக்கவேண்டுமோ அதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். முன்பே அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்பட்டுத்தான் வந்தது. குறிப்பிட்ட சம்பவத்திற்குப் பிறகு மேலும் கொஞ்சம் அதிகமான பாதுகாப்புக்கு அவர்களுடைய சுற்றுப் பிரயாணம் முடிகிற வரையில் ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்ற தகவல் கிடைத்திருக்கிறது.

திரு. கே. ஏ. மதியழகன் : இந்தச் சம்பவம் நடந்ததற்குப் பிறகு அவர்கள் நான்கு கூட்டங்களில் பேச வேண்டியிருந்தது. இதை அறிந்த பிறகு அந்தக் கூட்டங்களில் ஏதாவது கலவரம் ஏற்பட்டு ரத்தக்களரி ஆகிவிடுமோ என்று அந்தக் கூட்டங்களை ரத்து செய்திருக்கிறார்கள். போலீஸார் அந்த நான்கு கூட்டங்களுக்கும் வேண்டிய பந்தோபஸ்து கொடுத்து அந்தக் கூட்டங்களை நடத்துவதற்குத் தவறியதன் காரணம் என்ன என்று சொல்லுவார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கூட்டம் நடத்துவதிலே ஏதோ காரணத்தை வைத்துக்கொண்டு நடத்துவதை விட்டு விட்டால், போலீஸார் பந்தோபஸ்து கொடுக்கவில்லை என்பது அல்ல. அவர்களுக்கு ஏதோ கவலை இருக்கலாம்; ரத்து செய்யலாம். அதற்கு போலீஸார் பொறுப்பு அல்ல.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, உடுமலைப்பேட்டையில் இருந்து மூன்று மைல்கள் தொலைவில் மில்லின் வாயில்புறத்தில் 100 பேர்கள் கறுப்புக்கொடி காட்ட இருக்கிறார்கள் என்ற தகவல் ஒற்றர்கள் மூலம் கிடைக்கவில்லையா ? போலீஸார் உடனடியாக விரைந்து சென்றிருக்கக் கூடாதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எத்தனையோ சம்பவங்கள் நடக்கின்றன. போலீஸாரைப் பற்றிக் குறிப்பாகச் சொன்னால் அதைப்பற்றி நான் விசாரிக்கத் தயாராக இருக்கிறேன். ஏதோ

9th November 1966]

100 பேர்கள் வந்தார்கள், கறுப்புக் கொடி காட்டினார்கள் என்றால், போலீஸார் செய்ய வேண்டியதைச் செய்யத் தவறி விட்டார்கள் என்பதற்குக் குறிப்பாக இந்த மன்றத்திலும் சரி, அல்லது பின்னால் எழுதி அனுப்பினாலும் சரி, அதைப்பற்றி விசாரிக்கத் தயாராக இருக்கிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஸார், இப்போது அங்கே மாவட்ட போலீஸ் பொறுப்பை ஏற்று இருக்கும் அதிகாரி, பொறுப்பை ஏற்ற பிறகு எதிர்க்கட்சிகளுக்குத் தொந்தரவு வருவதாக என் கட்சியைச் சேர்ந்தவர்களிடமிருந்தும் புகார் வந்திருக்கிறது. இப்போது அவர் செய்துகொண்டிருக்கிற காரியங்கள், எடுத்துக் கொண்டிருக்கிற நடவடிக்கைகள் எதிர்க்கட்சிகளுக்குப் பாதகமாக இருக்கிறது. ஆளும் கட்சியை ஆதரிப்பதாக இருக்கிறது என்று என்னிடத்திலும் தகவல் இருக்கிறது. இந்த நிகழ்ச்சி சம்பந்தமாக போலீஸார் தங்களுடைய கடமையைச் சரியாகச் செய்திருக்கிறார்களா என்று பரிசீலிப்பது நியாயம் என்று கருதுகிறேன். அப்படிப் பரிசீலிப்பார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எனக்குத் தெரிந்த வரையில் அங்கு இருக்கிற போலீஸ் அதிகாரி அப்படிப் பட்சபாதமாக நடப்பவர் அல்ல. காங்கிரஸ்காரர்கள் அந்த மாதிரிப் புகார்கள் சொல்லுவதையும் கூட நான் கேட்டிருக்கிறேன். அதையும் நான் நம்புவதில்லை.

கனம் சபாநாயகர் : ஷார்ட் நோட்டீஸ் கேள்வி, நம்பர் 2. . .

SRI K. A. MATHIALAGAN : Sir, many hon. Members want to put supplementary questions.

MR. SPEAKER : This is not a debate. This is question hour and the main persons have taken part in it.

திரு. எம். எஸ். மணி : எங்களுக்கெல்லாம் சான்ஸே இல்லை.

கனம் சபாநாயகர் : எனக்கு டிஸ்க்ரீஷன் இருக்கிறது. எந்த அளவுக்கு உப-கேள்விக்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டுமோ அந்த அளவுக்குக் கொடுத்தாகி விட்டது.

Scholarship

* *S.N.Q. No.* 2.—SRI M. S. SELVARAJAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) Whether any representations have been received recently requesting for the provision of eligibility for grant of scholarships to the converted christians from Paravan community included in the list of Most Backward Class; and

(*b*) if so, the action taken thereon ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes.

(*b*) It is under the consideration of the Government.

[9th November 1966

திரு. எம். எஸ். செல்வராஜன் : ஸார், கன்னியாகுமரி ஜில்லாவில் இந்த பரவன் இனத்தைச் சேர்ந்தவர்கள் கிறிஸ்தவர்களாக இருந்தாலும் ஷெட்யூல்ட் வகுப்பினரைப் போல எல்லாச் சலுகைகளும் வழங்கப்படுகிறது என்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ? இதை மற்ற ஜில்லாக்களுக்கு விஸ்தரிக்காமல் இருக்க என்ன காரணம் ?

கனம் திரு. பூ. கக்கன் : முன்பே இதைப்பற்றி விளக்கியிருக்கிறது. கன்னியாகுமரி ஜில்லா ஏற்கெனவே கேரள ராஜ்யத்தில் இருந்தபோது அவர்கள் சலுகைகள் எல்லாம் பெற்று வந்தார்கள். கன்னியாகுமரியை இங்கே சேர்த்தபோது அங்கே எவ்வாறு பாக்வேர்ட், ஷெட்யூல்ட் க்ளாஸஸ் ஆகியவர்களுக்குச் சலுகைகள் கொடுக்கப்பட்டு வந்ததோ அதை அப்படியே கொடுக்கவேண்டும் என்று அந்த ஒப்பந்தத்தில் இருக்கிறது. அதன்படி கொடுக்கப்படுகிறது.

திரு. எம். எஸ். செல்வராஜன் : பரவன் இனத்துக் குழந்தைகள், கிறிஸ்தவர்களாக இருந்தாலும் இத்தகைய ஸ்காலர்ஷிப் வழங்கினால் உத்தேசமாக எவ்வளவு செலவு ஆகலாம் என்று பரிசீலித்திருக்கிறதா ? அதன் விவரத்தை அளிக்க முடியுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : எத்தனை குழந்தைகள் இருக்கிறார்கள் என்று பார்க்கவில்லை. இருந்தாலும் குழந்தைகளுக்குக் கல்விச் சலுகை கொடுத்து உதவி செய்ய வேண்டுமென்று தூத்துக்குடியில் மீனவர்க் குழந்தைகளுக்கு ஹாஸ்டலே வைத்து நடத்தி வருகிறோம்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : பரவன் இனம் மோஸ்ட் பாக்வேர்டைச் சேர்ந்தது. அந்தக் குழந்தைகள் கிறிஸ்தவர்களானாலும் கொடுக்க நினைக்கும்போது மோஸ்ட் பாக்வேர்ட் இனத்தைச் சேர்த்தே அரசாங்கம் பரிசீலிக்கிறதா ? அல்லது பரவன் இனத்திற்கு மட்டும் கிறிஸ்தவர்களானாலும் கொடுக்க பரிசீலிக்கிறதா ?

கனம் திரு. பூ. கக்கன் : கனம் அங்கத்தினர் கேட்ட கேள்வியைப் பொறுத்த மட்டில் பதில் கொடுத்திருக்கிறேன். அது பற்றித்தான் பரிசீலனை செய்யப்படுகிறது.

STARRED QUESTIONS.

Theft of idols

* 531 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the temples in the State, from which thefts of idols have been reported during the past three years and the description of the said idols; and

(*b*) the steps proposed to be taken and measures to be adopted, to prevent recurrance of such thefts, in future ?

9th November 1966]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) A statement [a] is placed on the Table of the House.

(b) Circular instructions have been issued by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Administration) Department to the Executive Authorities of Religious Institutions to preven the theft of fools in the temples, in the State Instructions have also been issued to the Executive Authorities of Religious Institutions to take flash light photos of the existing idols, in the temples and to keep copies thereof with them in safe custody, to prevent the substitution of the idols in the temples, by greedy persons in collusion with unscruplous temple servants and trustees and also to facilitate the identification of stolen idols, if they are recovered by the Police.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, சபை முன் வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் கடந்த மூன்று ஆண்டுகளில் 44 கோவில்களில் சிலைக்ள் திருடு போயிருக்கின்றன என்று தெரிகிறது. ஆகவே, இதைத் தடுப்பதற்காகச் சிலைகளின் போட்டோ முதலியவற்றை எடுத்து வைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக பதில் கூறினார்கள். இந்தச் சம்பவங்கள் தமிழ்நாட்டில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதைத் தடுக்க தேவையான நடவடிக்கை இது வரையில் எடுத்ததாகத் தெரியவில்லை. ஏனென்றால் இது போன்ற களவுகள் இதற்கு முன்னாலேயே நடந்து வந்திருக்கின்றன. நான் ஊகிப்பது என்ன என்றால் . . .

கனம் சபாநாயகர் : கனம் அங்கத்தினர் கேள்வி போட வேண்டும்; பிரசங்கம் செய்யக் கூடாது.

திரு. து. ப. அழகமுத்து : தர்மகர்த்தாக்கள், அர்ச்சகர்கள் உடந்தையாக இருந்து செய்வதாகத் தெரிகிறது. அதைத் தடுக்க அரசாங்கம் என்ன நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : என்னென்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டுமோ அவை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்தக் களவுகள் நடக்க முக்கிய காரணமாக ஒருசில தர்மகர்த்தாக்களும் ஒரு சில ஊழியர்களும் இதில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்றாலும், இன்னொரு முக்கிய காரணம், நம் கோவில்களில் உள்ள விக்கிரகங்களின் மதிப்பை மற்றவர்கள் உணர்ந்திருக்கிறார்கள், வெளி நாட்டினரும் உணர்ந்திருக்கிறார்கள். அது தான் காரணம்.

திரு. சா. கணேசன் : முதல் அமைச்சர் அவர்கள் கூறியபோது இதைத் தடுப்பதற்காகப் புகைப்படங்கள் எடுத்து வைக்கவேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அப்படி எடுக்கப்படுகிற புகைப்படங்கள் அந்த கோவில் நிர்வாகியின் அலுவலகத்தில் வைக்கவேண்டுமென்றும், மற்றொரு பிரதி என்டௌமென்ட் போர்டுக்கு அனுப்பவேண்டும் என்றும் ஆணை பிறப்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அது மட்டும்

a Printed as Appendix I on page 881-891.

போதாது. இந்தப் படங்களையெல்லாம் கோவிலுக்குள் நுழைகிற வாயிலில் மாட்டிவைத்துவிட்டால் எத்தனை விக்கிரகங்கள் எங்கு எங்கு இருக்கின்றன என்று எல்லோருக்கும் தெரியும். அதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நுழை வாயிலில் இம்மாதிரி படங்களை மாட்டி வைத்து விட்டால் படங்களே காணாமல் போய் விடலாம். சுலபமாகக் களவு செய்து விடலாம்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : குறிப்பாக வெளிநாடுகளில் இந்த விக்ரகங்களை அதிக விலை கொடுத்து வாங்குவதன் காரணமாக இத்தகைய திருட்டுகளுக்கு ஒரு உணர்ச்சி ஏற்படுகிறது. ஆகவே, வெளிநாடுகளில் இத்தகைய விக்ரகங்கள் வாங்கும்பொழுது, நம்முடைய நாட்டு அரசாங்கத்தின் அனுமதி இல்லாமல் வாங்கக்கூடாத அளவுக்கு, நம்முடைய நாட்டு மத சம்பிர தாயத்தை மதிக்கிற அளவுக்கு, வெளிநாட்டு அரசாங்கம் அதற் குரிய எக்ஸிக்யூடிவ் இன்ஸ்டிரக்ஷன்ஸ் போடுவதற்கு இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்தின் மூலம் ஏற்பாடு செய்வார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட விக்ரகங்களை அரசாங்கத்தின் அனுமதி இல்லாமல் வெளிநாடு களுக்கு அனுப்பக்கூடாது என்ற நிலைமை இப்பொழுது இருக்கிற சட்டப்படியே இருக்கிறது. இருந்தாலும், அதையும் மீறி திருட்டுத்தனமாக சில விக்ரகங்கள் போகலாம்.

திரு. சா. கணேசன் : படங்கள் திருட்டுப்போய்விடும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். படங்கள் போனால் அதனால் பெரிய நஷ்டம் இல்லை. படங்களை கோவில் வாயில்களில் அமைத்து வைப்பதன் மூலம், கோவிலுக்குப் போகிற ஜனங்கள் அதைப் பார்ப்பார்கள். அவர்கள் கண்ணில் அந்தப் படங்கள் படும். அந்தப் படத்தை பார்த்துவிட்டு, என்றாவது சாமி விக்ரகம் காண வில்லை என்றால், எங்கே என்று கேட்பதற்கு இது வழிவகை செய்யும். ஆகவே, இம்மாதிரி செய்வதற்கு அவசியம் முன்வர வேண்டும், அப்படி முன்வருவார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மக்கள் அசல் விக்ரகத்தை தரிசிப்பதற்காக கோவில்களுக்குச் செல்கிறார்கள். படத்தை மாட்டி வைப்பது என்று சொன்னால் அந்த ஒரு முக்கியத்துவத் திற்கு பாதகம் ஏற்படலாம். படத்தைப் பார்த்துவிட்டு ஜனங்கள் திரும்பிவிடலாம்.

Electricity Board

*532 *Q.*—Sri S. MADHAVAN : Will the Hon. the Chief Minister be pleased to state whether the Government have directed the Madras State Electricity Board to submit the Employees Regulations with reference to the clerical employees for certification ?

9th November 1966]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Government have requested the Madras State Electricity Board to have the Standing Orders for the clerical staff certified by the Certifying Officer (Commissioner of Labour) as soon as possible. The Board has accordingly sent the draft Standing Orders for certification on 22nd August 1966.

Gandhigram

* 533 *Q.*—SRI V. S. S. MANI : Will the Hon. Chief Minister be pleased to state—

(*a*) whether the grants given to various Units in Gandhigram, Madurai district are audit-free ; and

(*b*) if so, the reasons therefor?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No.

(*b*) Does not arise.

திரு. வி. எஸ். எஸ். மணி : ஆண்டுதோறும் மாநில சர்க்காரும், மத்திய சர்க்காரும் எவ்வளவு மான்யம் வழங்குகிறார்கள் என்று அறியலாமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதுபற்றி தனிக் கேள்வி வேண்டும்.

கம்பம் போலீஸ் நிலையம்

*** 534 கேள்வி.— திரு. மா. இராசாங்கம் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், கம்பம் நகரில் பொதுஉடமை தோழர் ஒருவரை அண்மையில் போலீஸ் நிலையத்தில் அடித்துத் துன்புறுத்தியதாகத் தகவல் வந்ததா ?

(இ) ஆமெனில், அதன் மேல் என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) : The matter is *sub judice*.

பயிற்சிப்பள்ளிகள்

*** 535 கேள்வி.—திரு. நா. சௌந்தரபாண்டியன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழகத்தில் மாவட்டவாரியாக எத்தனை ஆண்கள் பெண்கள் முதுநிலை (Senior Basic) இளநிலை (Junior Basic) ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் இருக்கின்றன ?

(இ) இந்தக் கல்வி ஆண்டில் எத்தனை பேர் முதுநிலை (Senior Basic) இளநிலை (Junior Basic) ஆசிரியர் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் ?

(உ) வரும் கல்வி ஆண்டில் இளநிலை (Junior Basic) ஆசிரியர் பயிற்சியை நிறுத்த அரசாங்கம் உத்தேசித்துள்ளதா ?

[9th November 1966

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) A statement [a] is placed on the table of the House ;

(b) Roughly 8,350 for Senior Basic Grade and 2,800 for Junior Basic Grade have been admitted in the First Year Class;

(c) No.

திரு. நா. சௌந்தரபாண்டியன் : பள்ளி இறுதிப் படிப்பு முடிந்ததும் அநேக மாணவ மாணவிகள் வேலையில்லாமல் திண்டாடுகிறார்கள். அவர்களுக்கு ஆசிரியர் பயிற்சி அளித்து, ஆசிரியர் வேலைக்கு அவர்களை எடுத்துக்கொள்ள முயற்சி செய்யப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எவ்வளவு பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் வேண்டுமோ, அந்த அளவுக்கு ஆசிரியர் பயிற்சிக்கு வசதி அளிக்கப்பட்டு வருகிறது.

Text books

* 536 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Government have any proposal to seek the assistance of teachers and headmasters in the selection of text books in Secondary Schools; and

(b) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No.

(b) Does not arise.

Technical examinations

* 537 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether there has been any delay in holding the last technical examinations (typewriting and shorthand, etc.), scheduled to take place in April of each year;

(b) if so, the reasons therefor; and

(c) whether the results of the said examinations have been published?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes.

(b) Usually Technical Examinations in the subjects Typewriting, Shorthand, etc. are conducted only after the S.S.L.C. Public Examination is over. As the last S.S.L.C. Public Examination was held till April 1966, the Government Technical Examinations were conducted in May instead of in April.

(c) Yes.

[a] Printed as Appendix II on pages 892.

9th November 1966]

Education Cess

* 538 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state whether the Government have received any advice from the Union Government to raise an "Education Cess" for bettering the service conditions of teachers in the State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No.

Training for the deaf, dumb and blind

* 539 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the projects in the State established for training the deaf and dumb, and the blind respectively for employment; and

(*b*) the steps taken by the Government to secure employment for them?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No project has so far been established under the Department of Employment for training the deaf and dumb, and the blind for employment.

(*b*) The Special Employment Office for the physically Handicapped, set up in Madras since 1—4—1962, is rendering employment assistance to the deaf and dumb, the blind and the orthopaedics. From its inception till 31—8—1966, this office has registered 333 blind and 309 deaf-mutes. Seventy-six blind and 135 deaf-mutes have been placed in employment.

2. The Live Register of this employment office on 31–8–1966 contains 145 blind and 102 deaf-mutes waiting to secure employment.

திரு. எம். எஸ். செல்வராஜன் : தனியாக இதுபோன்று அங்க ஹீனமானவர்களுக்கு தொழிற் பயிற்சி அளிக்கக்கூடிய நிறுவனங்களுக்கு அரசாங்கம் ஏதேனும் மான்யம் வழங்கி வருகிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதற்குத் தனிக்கேள்வி வேண்டும்.

கேளிக்கை வரி

*** 540 கேள்வி.—திரு. சி. கோதண்டராம பாகவதர் : கனம் கைத் தொழில்** அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1965-66-ல் சினிமா காட்சிகள் மூலமாக அரசாங்கத்துக்கு கிடைத்த தமாஷா வரி வருமானம் எவ்வளவு ஜில்லாவாரியாக ?

THE HON. SRI R. VENKATARAMAN : A statement [a] is placed on the Table of the House.

[a] Printed as Appendix III on pages 893–894.

[9th November 1966

தீப்பெட்டி தொழிற்சாலைகள்

*541 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ராஜ்யத்தில் உள்ள தீப்பெட்டித் தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் மூலதனக் கடன்கள் தனித் தனியே எவ்வளவு ?

(இ) மூலதனக் கடன்களுக்கு செலுத்த வேண்டிய வட்டியைக் குறைக்குமாறு அந்த சொசைட்டிகளிலிருந்து முறையீடுகள் வந்துள்ளனவா ?

(உ) அவைகளின் மீது எடுத்துக்கொண்டுள்ள நடவடிக்கை என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) A statement [a] is placed on the Table of the House.

(b) & (c) No representation for reducing the rate of interest on the loans has been received. However, the Government have permitted postponement of repayment of certain instalment of loans by certain societies. For the period of postponement of instalment, simple interest has been ordered to be charged. The request of certain societies for waiver of this simple interest was turned down.

திரு. எம். எஸ். செல்வராஜன் : ராஜ்யத்தில் சில பகுதிகளில் நான் அறிந்த மட்டில் திருச்செந்தூர், குலசேகரப்பட்டினம் போன்ற பகுதிகளில் தீப்பெட்டித் தொழிற்சாலைகள் முறையாக நடைபெறவில்லை. அந்த சொஸைடிகள் பெரும்பாலும் லாபத்தில் வேலை செய்யவில்லை. அதற்குரிய காரணத்தை அரசாங்கம் ஆராய்ந்திருக்கிறதா ? இப்பொழுது கோரப்படும் சலுகை இந்த சொசைடிகள் முறையாக வேலை செய்வதற்கு உள்ள அம்சங்களில் ஒன்று அல்லவா ? ஆகவே, அவை முறையாக இயங்குவதற்கு வேறு என்னென்ன விதமான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது எகனமிக் ஸ்கீம் அல்ல. இது ஒரு வெல்பேர் ஸ்கீம். எந்தெந்த இடங்களில் பிற்பட்ட பகுதிகளில் தொழில் வாய்ப்பு இல்லை என்று நாம் கருதுகிறோமோ அந்தப் பகுதிகளில் பார்த்து தீப்பெட்டித் தொழிற்சாலைகள் அமைப்பதனால் சிலருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும் என்ற முறையில் இந்தத் தொழிற்சாலைகள் வைக்கப்பட்டுள்ளன. நஷ்டம் என்று சொல்லமுடியாது. லாபம் இல்லாமல் இருப்பதற்கு முக்கியமான காரணம் பெரிய பாக்டரிகளிடமிருந்து போட்டி ஏற்படுவது தான்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : அவைகளுக்குரிய எக்ஸைஸ் தீர்வை சம்பந்தமாக இப்பொழுது 'ஸி' பிரிவை 'டி' பிரிவாக, அல்லது 'பி' பிரிவை 'ஸி' பிரிவாக மாற்றி அமைப்பதன் மூலம் அவைகளை முறையாக இயங்க வைக்க முடியும் என்ற முறையீடு

[a] Printed as Appendix IV on pages 894–896.

9th November 1966]

அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? அதைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்து என்ன முடிவு செய்திருக்கிறது, என்ன ஏற்பாடுகள் செய்யும் என்று அறியலாமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : வரி விலக்கு எந்த அளவுக்குக் கொடுக்கிறோமோ அந்த அளவுக்கு இந்த சொஸைடிகளின் வருமானம் அதிகரிக்கும். அம்மாதிரி வரி விலக்கு கொடுக்க வேண்டும் என்று பல ஆண்டுகளாக, சற்றேறக்குறைய 10 ஆண்டுகளாக மத்திய சர்க்காரிடம் நாம் எடுத்துச் சொல்லி வந்திருக்கிறோம். சில சலுகைகள் அவர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். 'ஸி' பிரிவிலே இருக்கக்கூடிய சில சலுகைகள் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இந்தச் சலுகைகள் போதாமல் இருக்கின்றன. ராஜ்ய சர்க்கார் மத்திய சர்க்காரிடம் அதைப்பற்றி அடிக்கடி எடுத்துச் சொல்லிக்கொண்டுதான் வருகிறது.

திரு. எம். எஸ். செல்வராஜன் : நம்முடைய ராஜ்ய அரசாங்கம் கோருகிற அளவுக்கு மத்திய அரசாங்கம் இந்தச் சலுகைகளை வழங்குகின்ற வரையிலாயினும், இதுபோன்று வட்டியை வெய்வ் செய்வதற்கு தற்காலிகமாகவாவது ஏற்பாடு செய்வது பற்றி அரசாங்கம் மீண்டும் பரிசீலனை செய்வார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதற்காகத்தான் நாம் கையினால் செய்கிற தீப்பெட்டித் தொழிலுக்கு விற்பனை வரி கிடையாது என்ற பெரிய சலுகையை கொடுத்திருக்கிறோம். மேற்கொண்டு என்ன சலுகை கொடுப்பது என்று புரியவில்லை.

Dearness allowance

* 542 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state whether the orders revising the rates of D.A. issued in G.O. Ms. No. 590, Finance, dated 24th May 1966 have been extended to the teaching and non-teaching staff of polytechnics under private bodies ?

THE HON. SRI R. VENKATARAMAN : Yes.

திரு. செ. மாதவன் : அண்மையில் மத்திய சர்க்கார் பொதுவாக அகவிலைப்படியை ஏற்றுவதற்கு முடிவு செய்திருக்கிறார்கள். ஆகவே, மாநில சர்க்காரும் அதுபோன்று அகவிலைப் படியை உயர்த்த முன்வருவார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது பொதுவாக எல்லோருக்கும் பொருந்தும்படியான விஷயம். இப்பொழுது பாலிடெக்னிக்ஸ் பற்றித்தான் கேள்வி போடப்பட்டிருக்கிறது. அதற்குத் தனி கேள்வி போடவேண்டும்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : ஆசிரியர்களுக்கும், ஆசிரியர் அல்லாதவர்களுக்கும், இதர அரசாங்க சிப்பந்திகளுக்கும், இப்பொழுது விலைவாசி விஷம் போல் உயர்ந்திருப்பதன் காரணமாக,

[9th November 1966

ஏற்கனவே உள்ள 'டி.ஏ'-யையும், சம்பளத்தையும் மீண்டும் பரிசீலனை செய்து உயர்த்துவதற்கு அரசாங்கம் முடிவு எடுத்துள்ளதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதற்குத் தனிக் கேள்வி கல்வி அமைச்சருமாகிய முதல் அமைச்சர் அவர்களுக்குப் போட வேண்டும்.

திரு. செ. மாதவன் : பாலிடெக்னிக்ஸ் பிரைவேட் இன்ஸ்டிடியூஷன்ஸ்க்கு இந்த உத்தரவு பொருந்தாது என்று அவர்கள் அதைப்பின்பற்றவில்லை என்று சொல்கிருர்கள். அதுவும் தனிப்பட்டவர்கள் நடத்தக்கூடிய டெக்ஸ்டைல் கோர்சுக்கு இந்த உத்தரவு அமல்படுத்தப்படவில்லை என்று சொல்கிருர்கள். அதைப் பற்றி நம்முடைய அரசாங்கம் கவனித்து, அரசாங்கப் பள்ளிகளில் இருப்பதுபோல், அவர்களுக்கும் அகவிலைப் படியை உயர்த்திக் கொடுக்க முன்வரும்படி ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்தக் கேள்வி 'டீச்சிங் ஸ்டாப், நான்-டீச்சிங் ஸ்டாப்'-களுக்கு இந்த உத்தரவை எக்ஸ்டெண்டு பண்ணுவது பற்றியது. சமீபத்தில் 27-10-1966-ல் அதிகரித்தோம். மற்ற விவரங்கள் என்னிடம் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் பார்த்துச் சொல்லலாம்.

Industrial Training Centre

* 543 *Q.*—SRI R. S. ARUMUGAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that the same person is holding the post of the Principal, Stree Seva Mandir and the Principal, Industrial Training Centre for Women, Thiyagarayanagar, Madras ;

(*b*) whether any complaints have been received recently that the work in the Industrial Training Centre is affected because of this; and

(*c*) whether there is any proposal to appoint a separate Principal for the Industrial Training Centre for Women ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) The Principal of the Industrial Training Centre for Women is the Vice-President and Correspondent of the Stree Seva Mandir. There is no such post as Principal in the Stree Seva Mandir.

(*b*) No.

(*c*) No.

Raw materials

* 544 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government are aware of the hardship caused to and the serious crisis arisen in the stainless steel industry due to want of raw materials ; and

(*b*) if so, the action proposed thereon?

9th November 1966]

THE HON. SRI R. VENKATARAMAN : (a) & (b) Of late, owing to acute shortage of foreign exchange there has generally been some difficulty in getting adequate supplies of raw materials to industry including stainless steel. This Government have also addressed the Government of India requesting an enhanced allocation of ceiling to this State and thereby enable the small-scale units to get more raw materials.

Biscuit factory

* 545 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is any proposal to set up a Biscuit factory with American collaboration in the State ; and

(b) if so, the details thereof ?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) & (b) A private company, Messrs. Century Flour Mills, Limited, Madras, has been granted an industrial licence to set up a Biscuit factory in this State. The company is taking steps to implement the licence, in collaboration with the National Biscuit Company of America.

Tidal Power Project

* 546 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is a proposal to establish a tidal power project in the State ; and

(b) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) No, as the scheme has been found to be not feasible.

(b) Does not arise.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

செங்கல் தொழிற்சாலை

* 547 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம், ஓரக்காடு கிராமத்தில் உள்ள நவீன முறையில் செங்கல் ஓடு தயாரிக்கும் தொழிற்சாலைக்கு கடன் தொகை எதேனும் வழங்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், 6-9-1966 வரை எவ்வளவு தொகை வழங்கப்பட்டுள்ளது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) ஆம்.

(இ) மதருஸ் இன்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பரேஷன் லிமிடெட் இந்த தொழிற்சாலைக்கு ரூபாய் 23,60,000 அளவுக்கு கடன் தொகை வழங்கி உள்ளது.

[9th November 1966

Pond works

* 548 Q.—Sri S. NANJUNDA ROW : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) the number of pond works sanctioned in Palayam Block in Vedasandur Constituency;

(b) the amount spent on the pond works; and

(c) the number of ponds which have been completed?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) குளம் குட்டை அமைக்கும் எட்டு வேலைத் திட்டங்களுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

(இ) 50,503 ரூபாய் (ஐம்பதாயிரத்து ஐநூற்று மூன்று ரூபாய் மட்டும்).

(உ) பணிகள் எட்டும் நடந்தேறி வருகின்றன. அவை இன்னும் முடிவடையவில்லை.

திரு. எஸ். நஞ்சுண்ட ராவ் : தலைவர் அவர்களே, இந்த வேலைகளெல்லாம் மூன்று வருஷ காலமாக முடிக்காமல் இருப்பதால்தான் இந்தக் கேள்வியைக் கேட்டேன். வேலைகளை உடனடியாக முடிக்க உடனே உத்தரவு இடுவார்களா என்று அறியவிரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : விரைவாக முடிக்க தக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

பிரயாணப்படி

* 549 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்
9-00 a.m. பாரா—

(அ) உணவு உற்பத்தித் துறையில் பணிபுரியும் தலைமைக் கூலி, மேஸ்திரி ஆகியவர்களுக்கு பிரயாணப்படி கொடுக்கப்படுகிறதா ?

(இ) ஆம் எனில், எவ்வளவு ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) உணவு உற்பத்தி வட்டங்களில் பணிபுரியும் தலைமைக் கூலி, மேஸ்திரி ஆகியோருக்குப் பயணப்படி கொடுக்கப்படுவதில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆ. தங்கவேலு : தலைவர் அவர்களே, இந்த உணவு உற்பத்தி வட்டங்களில் பணிபுரியும், தலைமைக் கூலி, மேஸ்த்திரி முதலியவர்கள் தற்போது அடையும் பிரயாணப்படி போதவில்லை, மிகவும் கஷ்டமாக இருக்கிறது என்கிறார்கள். அவர்கள் அதிக தூரம் தாலுகாவில் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, அதை உயர்த்த பரிசீலனை செய்ய நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : இது டெம்பரரியாக நியமிக்கப்பட்ட மேஸ்திரி, தலைமைக் கூலி இவர்கள் பற்றியது. அவர்களுக்கு அதிகமாகக் கொடுப்பதற்கில்லை.

9th November 1966]

திரு. மா. தண்டாயுதபாணி: தலைவர் அவர்களே, விவசாயத் துறை மேஸ்திரிகள் 30 ஆண்டு சர்வீஸ் போட்டும், அடிப்படைச் சம்பளம் தற்போது ப்யூன்களுக்குக் கொடுப்பதையும் விட மிகக் குறைவாக இருக்கிறது. தற்போதுள்ள விலைவாசி ஏற்றத்தை அனு சரித்து, அவர்களுடைய சம்பளத்தை ப்யூன்கள் சம்பள அளவி லாவது நிர்ணயிக்க, உயர்ந்த ஆவன செய்யுமா?

கனம் திரு. பூ. கக்கன்: இப்பொழுது அந்தமாதிரி யோசனை சர்க்காருக்கு இல்லை.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: தலைவர் அவர்களே. இந்த உணவு இலாகா ஆரம்பத்திலிருந்து உத்யோகத்தில் அமர்த்தப் பட்ட தலைமைக் கூலிகள், மேஸ்திரி இவர்களை இதுவரைக்கும் உத்யோகத்தில் நிச்சயமாக்காமல், டெம்பரரியாகவே வைத்திருப் பதற்குக் காரணம் என்ன?

கனம் திரு. பூ. கக்கன்: உணவுத் திட்டத்தில் வேலை செய் பவர்கள் சில இடங்களில் தாற்காலிகமாக எடுக்கப்பட்டவர்கள். அவர்களை வேலை ஆனவுடன் அனுப்பிவிடுவார்கள். எங்கெல்லாம் நிரந்தரமாக்க முடியுமோ அங்கெல்லாம் அவர்கள் நிரந்தரம் செய்யப்படுவார்கள்.

தூருவாரிகள்

*550 கேள்வி.—திரு. நா. இராசாங்கம்: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) தென் ஆர்க்காடு மாவட்டம், கடலூர் வட்டம் பெருமாள் ஏரி, தூர்வாரி மராமத்து செய்வதற்கு அண்மையில் புல்டோசர் வரவழைத்து வேலையைத் தொடங்காமலேயே வந்த புல்டோசரை அனுப்பிவிட்டது உண்மையா?

(இ) மீண்டும் புல்டோசர் உதவியால் மராமத்து வேலை தொடங்க ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

(உ) அப்படியானல், எப்போது வேலை தொடங்கும்?

கனம் திரு. பூ. கக்கன்: (அ) 1952-ம் ஆண்டில் தூருவாரி இயந் திரத்தின் (Bull dozer) உதவியுடன் தூருவார முயற்சி செய்யப்பட்டது. அந்த ஏரிப்படுகை சகதி நிறைந்திருந்ததால், இந்த இயந்திரத்தின் உதவியால் தூரு எடுக்க இயலவில்லை. எனவே சம்பந்தப்பட்ட மாவட்ட வேளாண்மை அதிகாரி அந்த தூருவாரி இயந்திரத்தைத் திருப்பி அனுப்பிவிட்டார்.

(இ) அத்தகைய செயற்குறிப்பு எதுவுமில்லை.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. நா. இராசாங்கம்: கனம் சபாநாயகர் அவர்களே, 10,000 ஏக்கரா சாகுபடிக்கு உபயோகமாகக் கூடிய பெருமாள் ஏரி நாளா வட்டத்தில் குறைந்து இப்பொழுது 4,000 ஏக்கர் அளவிற்கு

வந்திருக்கிறது. அதிகமாக நெல் சாகுபடி செய்யக் கூடிய இந்த ஏரியை தூர்வாரி, மராமத்து செய்ய நடவடிக்கை உடனடியாக எடுப்பார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : இந்த ஏரியை தூர் வார வேண்டும் என்று பரிசீலனை செய்து வேலை செய்தது. இருந்தாலும், சில சமயங்களில் தண்ணீரை பூரா எடுத்து தூர் வார விவசாயிகள் சம்மதிக்கவில்லை. எப்பொழுதும் தண்ணீர் இருக்கிறது. எப்படியும் ஓரளவாவது செய்யவேண்டும் என்றுதான் இயந்திரத்தை அனுப்பியது. ஆனால், சகதி காரணமாக அந்த வேலை தடைபட்டு விட்டது.

திரு. நா. இராசாங்கம் : தூர் வாராத காரணத்தால், விவசாயம் மட்டுமல்ல பாதிக்கப்பட்டது; மேற்கில் தண்ணீர் வருவது நிற்காமல் வெள்ளம் எடுத்து, சமீபத்தில் பெய்த மழைகாரணமாக கிட்டத்தட்ட 500 ஏக்கரா விளைச்சல் போய்விட்டது. அதுசம்பந்தமான புகார்கள் வந்து சர்க்காரும் சில மானியங்கள் ஒதுக்கியிருக்கிறது. இதை உத்தேசித்தாவது, தக்க நடவடிக்கை எடுத்து, தூர் வாரி வேலையை மறுபடியும் செய்ய சர்க்கார் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : அரசாங்கத்திற்கும் அந்த எண்ணம் உண்டு. ஆனால், தண்ணீர் பூராவையும் விட்டுவிட விவசாயிகள் சம்மதிக்கவில்லை. எப்பொழுதும் விவசாயத்திற்கு தண்ணீர் வேண்டும் என்கிறார்கள். ஆகவே எந்தெந்த இடங்களில் தூர் வார முடியுமோ அந்த இடங்களில் செய்யலாம். ஆனால், சகதியாக இருந்ததால், அந்த வேலை நடக்க முடியவில்லை. அது பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, ஏரி எதுவாயினும் மண் எடுப்பதற்காக, சென்ற ஆண்டிலே எந்த எந்த பகுதிகள் தூர் வாரலாம் என்று ஒரு பட்டியலைக் கேட்டார்கள். அப்படி எழுதியும் அனுப்பப்பட்டது. ஆனால் அதன் பேரில் நடவடிக்கை எடுக்கவில்லை. அதற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : அப்பேர்ப்பட்ட பட்டியல் அனுப்பிய தகவல் என்னிடத்தில் இல்லை.

Agricultural development

*551 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether any technical assistance has been sought for from West Germany for establishing an Agricultural Development Project in Nilgiris district; and

(*b*) if so, the details thereof?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆம்.

(இ) சபைமுன் விவர அறிக்கை [a] ஒன்றுவைக்கப் பட்டுள்ளது.

[a] 897–898 பக்கங்களில் ஐந்தாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

திரு. டி. கார்ச்சா கவுடர் : சார், இந்தத் திட்டம் எப்பொழுது ஆரம்பிக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : எப்பொழுது ஆரம்பிக்கப்படும் என்பதற்கான தகவல் என்னிடம் இப்பொழுது இல்லை.

மின் இறைவைப் பாசனம்

* 552 கேள்வி.—**திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் மின் இறைவைப் பாசன திட்டம் எத்தனை போடப்பட்டது?

(இ) எத்தனை திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன? தாலுகா வாரியாக?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) 17 (பதினேழு மட்டும்).

(இ) திருத்துறைப்பூண்டி வட்டத்தில் பரிசிலனை செய்யப்பட்ட 14 (பதினான்கு) மின் இறைவைப்பாசனத் திட்டங்களில், கீழ்க்கண்ட 7 (ஏழு) திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு இயங்கி வருகின்றன :—

(1) ஆய்மூர்.

(2) பாமணிமுள்ளியாறு.

(3) தேவம்பாள்பட்டினம்.

(4) முள்ளியாறுமின் இறைவைப்பாசனம்.

(5) ஆயக்காரம்பலம்.

(6) வளவனாறு.

(7) தென்நடாறு.

திரு. மா. தண்டாயுதபாணி : அமைச்சர் அவர்கள் கூறிய பதிலில், பாமணியாற்றில் இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்று கூறினார்கள். அது இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. இனியாவது துரிதமாக ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா?

கனம் திரு. பூ. கக்கன் : பாமணிமுள்ளியாற்றுந் திட்டத்திற்கு 1,75,000 ரூபாய் செலவு செய்து, 217 ஏக்கர் நிலம் நன்மை அடைந்திருக்கிறது.

திரு. கோ. சி. மணி : அரசாங்கம், தஞ்சை மாவட்டத்தில் இந்த மின் இறைவைப் பாசனத் திட்டம் எந்த எந்த இடங்களில், எத்தனை ஏற்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன என்பதை சர்வே செய்து முன்பே விவரங்கள் சேகரித்து வைத்திருக்கிறதா?

THE HON. SRI P. KAKKAN : Seventeen pumping schemes have been taken up under the Minor Irrigation Programme.

கனம் சபாநாயகர்: ஸர்வே பண்ணி, எவ்வளவு தான் வைக்கலாம் என்பதற்கான விவரங்களை முன்கூட்டியே அரசாங்கம் சேகரித்து வைத்திருக்கிறதா என்று கனம் அங்கத்தினர் கேட்கிறார்.

கனம் திரு. பூ. கக்கன்: திருத்துறைப்பூண்டி, நாகைப்பட்டினம், ஓரத்தநாடு ஆகிய பகுதிகளில்தான் வைக்கவேண்டும் என்று ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

விடுதி கமிட்டி

*553 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், மன்னார்குடி தாலூகா, மன்னார்குடி அரசினர் மாணவிகள் விடுதிக்கு விடுதி கமிட்டி அமைக்கப்பட்டதா?

(இ) ஆம் எனில், அக்கமிட்டியில் அங்கம் வகிப்பவர்கள் பற்றிய விபரம் மேஜை மீது வைக்கப்படுமா?

கனம் திரு. பூ. கக்கன்: (அ) ஆம்.

(இ) நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்களின் பெயர்கள்—

அலுவல் முறையில் உறுப்பினர்கள்.

1. சகோதரி மேரி என்வாயிலெட், தலைமை ஆசிரியை, புனிதர் ஜோஸப் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, மன்னார்குடி.

2. பள்ளித்துணை இன்ஸ்பெக்டர், மன்னார்குடி.

அரசுப் பணியாளர் அல்லாதார்

1. ஸ்ரீமதி ஹம்சவல்லி, தலைவி, மாதர் சங்கம், அரவத்தூர்.

2. ஸ்ரீ அம்பிகாபதி, எம்.எல்.ஏ., எக்கல், இடும்பவனம் அஞ்சல் திருத்துறைப்பூண்டி தாலூகா.

3. ஸ்ரீ பரமசிவ செம்மதார், கான்ட்ராக்டர், மன்னார்குடி.

அரிசன கிறிஸ்துவர்கள்

*554 கேள்வி.—திரு. கோ. சி. மணி: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

இந்து ஹரிஜனங்களுக்கு அரசாங்கம் வழங்கும் சலுகைகள் யாவும் கிறிஸ்தவ ஹரிஜனங்களுக்கும் வழங்கும் வகையில் சட்டம் செய்யும் உத்தேசம் அரசாங்கத்துக்கு உண்டா?

கனம் திரு. பூ. கக்கன்: கிறிஸ்தவர்களாக மதம் மாறிய ஹரிஜனங்களுக்கு எந்தச் சலுகைகள் மறுக்கப்பட்டன என்பதைக் கனம் உறுப்பினர் குறிப்பிடவில்லை.

9th November 1966]

ஹரிஜனங்களுக்கு வழங்கப்படுகிற கீழ்க்கண்ட சலுகைகளை கிறிஸ்தவர்களாக மதம் மாறிய ஹரிஜனங்களும் பெறுவர் :—

1. வீட்டு மனைகள் வழங்குதல்.

2. குடிநீர் வழங்குவதற்காக கிணறுகள், குளங்கள் முதலியவற்றை வெட்டுதல்.

3. சுகாதாரவசதிகள், நடைபாதைகள் ஏற்படுத்தல், தெரு விளக்குகள் போடுதல், சுடுகாடுகளை அல்லது இடுகாடுகளை ஏற்படுத்தல்.

4. (இச்சலுகைகளைப் பெறத்) தகுதியுள்ள வகுப்பினர்களின் சமூக பொருளாதார முன்னேற்றத்துக்காகப் பணியாற்றும் தனிப்பட்ட நிறுவனங்களுக்கு மானியங்கள் வழங்குதல்.

5. பயிரிடப்படுவதற்காக நிலத்தை ஒப்படை செய்தல் அல்லது குத்தகைக்கு விடுதல்.

6. படிப்பு உதவித்தொகைகள் பள்ளி வசதிகள், மாணவ விடுதி வசதிகள், நண்பகல் உணவு வழங்கல்.

ஹரிஜனங்களுக்கு வழங்கப்படும் சலுகைகளைக் கிறிஸ்தவர்களாக மதம் மாறிய ஹரிஜனங்களும் பெறத் தகுதியுள்ளவர்களாகச் செய்யும் பொருட்டு சட்டமியற்றும் செயற்குறிப்பு எதுவும் இல்லை.

திரு. கோ. சி. மணி : தொழிற் படிப்பு முதலியவைகளுக்காக ஸ்காலர்ஷிப், விவசாயத்திற்காக வழங்கப்படும் மாட்டுக்கான கடன் முதலியவை, மற்றும் இதுமாகக் கொடுக்கக்கூடிய சலுகைகள் எல்லாம் இந்து அரிசனங்களுக்கு வழங்குவதைப் போல கிறிஸ்துவ அரிசனங்களுக்கும் வழங்கப்படவில்லை என்பது பற்றிப் புகார் அரசாங்கத்திற்கு ஏதாவது வந்திருக்கிறதா? அதன்மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டதா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஏற்கனவே இதுபற்றி இந்த மன்றத்தில் தெரிவித்திருக்கிறேன். சென்ட்ரல் கிராண்ட் ஸ்கீமின்கீழ்க் கொடுக்கும் சலுகைகள் மட்டும் இவர்களுக்குக் கொடுப்பதில்லை. மாநிலத்தைப் பொறுத்த வரையில், என்ன என்ன சலுகைகள் கொடுக்கிறோமோ, அந்தச் சலுகைகள் எல்லாம் அவர்களுக்கும் உண்டு.

Court buildings

* 511 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether any site has been chosen for location of the proposed new Court buildings at Madurai ;

(*b*) the estimated cost of the said work ; and

(*c*) when it is likely to be taken up for execution ?

The Hon. Sri V. RAMAIAH : (*a*) A site with an extent of 16·5 acres in the Managiri tank bed has been settled by the Government in consultation with the Collector of Madurai and the High Court ;

(b) Estimates are under preparation ; and

(c) It is likely to be taken up for execution immediately after estimates are finalised and got sanctioned.

திரு. வி. எஸ். எஸ். மணி : இப்பொழுது நீதி மன்றங்களெல்லாம் மதுரை திருமலை நாயக்கர் மகாலில் வைக்கப்பட்டிருக்கின்றன. அங்கிருந்து அவற்றை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டாம் என்று கோரி ஏதாவது ஆட்சேபணை மனு அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா?

கனம் திரு. வெ. ராமையா : அதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

திரு. செ. மாதவன் : இந்தத் திட்டம் பல ஆண்டுகளாக மேற்கொள்ளப்படும் காலதாமதம் ஏற்பட்டு வருகிறது. இரண்டு மாவட்டங்களினுடைய மாவட்ட நீதிபதிகளும், கலெக்டர்களும் இடத்தைச் சென்று பார்த்துவிட்டு வந்து பல ஆண்டுகள் ஆகிவிட்டன. இதிலே காலதாமதத்திற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. வெ. ராமையா : புது இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு, கட்டடம் கட்டுவதற்கான விவரத்தைத்தான் சொன்னேன். மற்ற விவரங்கள் வேண்டுமானால், சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களுக்குத் தனிக் கேள்வி போட்டால், அவர்கள் பதில் சொல்லுவார்கள்.

Inland waterways

* 555 Q.—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) whether the Government have appointed any Committee for a traffic-study of three inland waterways in the State, viz., the Buckingham Canal, the Vedaranyam Canal and the Cooum river ; and

(b) if so, the details thereof ?

THE HON. SRI V. RAMAIAH : (a) Yes.

(b) The Committee consists of the following members :—

1. Chief Engineer (Irrigation).

2. Officer on Special Duty, Tuticorin Area Development Project, Public Works Department.

3. Deputy Secretary to Government (Major Industries), Industries, Labour and Housing Department.

4. State Port Officer.

The Committee's report is awaited.

திரு. கு. ப. அழகமுத்து : இந்தக் கமிட்டி எப்போது அமைக்கப்பட்டது? இந்தக் கமிட்டி தன்னுடைய பணியை முடிப்பதற்கு ஏதாவது காலவரையறை கொடுக்கப்பட்டிருக்கிறதா ?

9th November 1966]

கனம் திரு. வெ. ராமையா : இந்தக் கமிட்டியினுடைய வேலை 'ட்ராபிக் சர்வே' செய்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டியது தான். இது நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கான திட்டம் ஆகையால், இந்த ட்ராபிக் சர்வே வேலை மிக விரைவில் முடியும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

திரு. இராம. அரங்கண்ணல் : இந்திய சர்க்கார் அமைத்த இல்லண்டு வாட்டர்வேஸ் கமிஷன் கிட்டத்தட்ட பத்து ஆண்டுகளுக்கு முன்பே இந்த இடங்களையெல்லாம் எப்படித் திருத்தியமைப்பது என்று ரிபோர்ட் தந்திருக்கிறது. அதை மாநிலக் கமிட்டி ஆராயப் போகிறதா? அல்லது அந்த ரிப்போர்ட்டைத் தூக்கியெறிந்துவிட்டு, புதிதாக யோசனை தெரிவிப்பதற்காக இந்தக் கமிட்டி அமைக்கப்பட்டிருக்கிறதா?

கனம் திரு. வெ. ராமையா : மத்திய சர்க்கார் கமிட்டி ஒன்றும் கிடையாது. நம்முடைய அரசாங்க உயர்தரக் கமிட்டி வேலை செய்கிறது. வேலையை எடுத்துக்கொள்வதற்கான எஸ்டிமேட் எல்லாம் தயார் செய்திருக்கிறது. அது பெருந்தொகையாக இருக்கிறது. ஆரம்பத்தில் 655 லட்சம் ரூபாய், பிறகு 355 லட்சம் ரூபாய். இந்த அளவு பெருந்தொகையில் ஏற்பாடு செய்யும்போது, அதில் போக்குவரத்து கட்டுபடியாகுமா என்றெல்லாம் பார்க்க வேண்டும். அந்தத் திட்டத்தைக் குறித்து ஒன்றும் பரிசீலனை இல்லை. ட்ராபிக் சர்வே தான் செய்யப்பட்டது.

திரு. இராம. அரங்கண்ணல் : பக்கிங்காம் கால்வாய், கூவம் நதி இரண்டையும் ஒரு கோடி அல்லது ஒன்றரைக் கோடி ரூபாயில் சீர்திருத்திவிடலாம் என்று தெரிவித்த யோசனை இப்பொழுது எப்படி இருக்கிறது?

கனம் திரு. வெ. ராமையா : ட்ராபிக் சர்வே நடந்துகொண்டிருக்கிறது.

திரு. து. ப. அழகமுத்து : இந்தக் கமிட்டி விரைவில் தன்னுடைய வேலையை முடிக்கும் என்று கூறுகிறார்கள். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இதை எடுத்துக்கொள்ளுவதற்கு உத்தேசிப்பதாகவும் கூறுகிறார்கள். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தைக் குறித்த இறுதி முடிவு இன்னும் ஒரு வாரத்தில் செய்யப்பட இருக்கிறது. ஆகவே, அதற்கு முன்னால் இந்தக் கமிட்டி தன்னுடைய வேலையை முடிக்குமா?

கனம் திரு. வெ. ராமையா : என்னிடம் இருக்கும் விவரம் அதற்கு முன்னதாக முடியும் என்பது.

நிலவரி தள்ளுபடி

***556 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரக்கோணம் தாலுகா, நாகவேடு கிராம ரயத்துக்கள் நிலவரி தள்ளுபடி சம்பந்தமாக 10—1—1966 அன்று அரசாங்கத்திற்கு முறையீடு ஏதேனும் அனுப்பியுள்ளார்களா?

(இ) ஆம் எனில், அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

கனம் திரு. வெ. ராமைய்யா : (அ) ஆம்.

(இ) நாகவேடு கிராமத்தில் 640.77 ஏக்கரா பரப்பளவுள்ள நன்செய் நிலங்களுக்கு 3,174.47 ரூபாய் அளவில் பருவகாலத் தீர்வைத் தளளுபடி அளிக்கப்பட்டுள்ளது.

புறம்போக்கு நிலங்கள்

*** 557 கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : கனம் உணவு** அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென்னார்க்காடு மாவட்டம், வானூர் பஞ்சாயத்து யூனியன் எல்லைக்குட்பட்ட பூத்துறை, திருச்சிற்றம்பலம், இரும்பை முதலான பஞ்சாயத்துக்களுக்கு ஒப்படைக்கப்பட்ட புறம்போக்கு நிலங்களைத் தனி நபர்களுக்கோ, மற்றும் பாண்டிச்சேரி மாநிலத்தைச் சேர்ந்த அரவிந்து ஆசிரமத்திற்கோ அதன் கிளை ஸ்தாபனங்களுக்கோ பட்டா மாற்றம் செய்து கொடுக்கும் உத்தேசம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

கனம் திரு. வெ. ராமைய்யா : (அ) புதுச்சேரி ஸ்ரீ அரவிந்தர் சங்கம் "அரோவில்லே" என்னும் நகரை அமைப்பதற்காக, தென் ஆர்க்காடு மாவட்டம், திண்டிவனம் தாலுகாவில், பூத்துறை கிராமத்தில் உள்ள தீர்வை விதிக்கப்படாத 41 ஏக்கர் தரிசு நிலங்களுடன் திருச்சிற்றம்பலம், இரும்பை, பாட்டனூர் கிராமங்களில் உள்ள 219.76 ஏக்கர் நிலங்களையும் பட்டா செய்து தருமாறு வேண்டியுள்ளது. இந்த நிலங்களைப் பட்டாசெய்து தரும்படி வேறு எவரிடமிருந்தும் விண்ணப்பம் எதுவும் வரவில்லை.

(இ) இது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : ஒரு தடவை பஞ்சாயத்துக்கு ஒப்படைக்கப்பட்டுவிட்ட புறம்போக்கு நிலங்களை சர்க்காரேகூட எடுத்துக்கொள்ளுவதற்குச் சட்டத்தில் இடம் இல்லை என்று பஞ்சாயத்து ஆக்ட்டிலே இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். ஆனால், பஞ்சாயத்துக்கு ஒப்படைக்கப்பட்ட நிலங்களை மறுபடியும் தனி நபருக்குப் பட்டா செய்துகொடுக்கவேண்டுமென்ற யோசனை வந்து, அதற்கு எதிராகப் பஞ்சாயத்து தீர்மானம் போட்டிருந்தும், தனி நபருக்குப் பட்டா செய்துகொடுப்பதற்கான காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : பஞ்சாயத்து ஆக்ட் பற்றி கேட்ட விவரத்திற்கு நான் பதில் சொல்ல முடியவில்லை. இப்பொழுது ஆசிரமத்தினுடைய டவுன்ஷிப் அமைப்பதற்காக அவர்கள் கேட்டிருக்கிறார்கள். பஞ்சாயத்து தீர்மானம் போட்டிருக்கிறது. கனம் அங்கத்தினரும் ஆட்சேபணை சொல்லுகிறார்கள். இதெல்லாம் பரிசீலனையில் இருந்து வருகிறது.

9th November 1966]

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, may I give a little more information on that point ?

அங்கே இருக்கக் கூடிய அரவிந்த ஆசிரமத்தைச் சேர்ந்தவர்கள் ஒரு இண்டஸ்ட்ரியல் டவுன்ஷிப் வைக்க முன் வந்திருக்கிறார்கள். பிரஞ்சு சர்க்காருடைய ஒத்துழைப்புக்கொண்டு இதை ஏற்படுத்த இருக்கிறார்கள். இதனால் அந்தப் பகுதியில் நல்ல தொழில் வளம் ஏற்படும் என்று நினைக்கிறேன். ஆகவே தான், இந்த மனையை ஒதுக்கவேண்டும் என்பதாக இண்டஸ்ட்ரீஸ் இலாகாவுக்கு அப்ளை செய்து கொண்டிருக்கிறார்கள். அதைத் தொழில் இலாக்கா பரிசிலனை செய்து கொண்டிருக்கிறது.

திரு. இராம. அரங்கண்ணல் : இந்தத் தொழில்பேட்டையை நிறுவ அரவிந்த ஆச்ரமமே அக்கறை காட்டுகிறதா ? அல்லது புதுச்சேரி சர்க்காரும் சேர்ந்து அக்கறை காட்டுகிறார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அரவிந்த ஆசிரமமேதான் அக்கறை காட்டுகிறது. இவர்களுக்குத்தான் பிரஞ்சு நாட்டு உதவி, பணம் எல்லாம் கிடைக்கும் என்ற நிலைமை இருக்கிறது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : அப்படியானால் பஞ்சாயத்துச் சட்டத்தைத் திருத்த அரசாங்கத்திற்கு அபிப்பிராயம் உண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதுபற்றி எனக்குத் தெரியாது.

நகைத்தொழிலாளர்கள்

* 558 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தங்கக் கட்டுப்பாட்டினால் பாதிக்கப்பட்ட நகைத் தொழிலாளர்களிடமிருந்து குடியிருப்பு நிலம் கோரி 1—10—1965-லிருந்து எத்தனை மனுக்கள் வந்துள்ளன ஜில்லாவாரியாக.

(இ) அவைகளின் மீது என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது ?

(உ) எத்தனை நகைத் தொழிலாளர்களுக்கு குடியிருப்புக்கு நிலம் வழங்கப்பட்டிருக்கிறது ?

(எ) அவசியமான இடங்களில் நிலம் ஆர்ஜிதம் செய்து வழங்கப்படுமா ?

THE HON. SRI V. RAMAIAH : (a) to (d) A statement [a] is placed on the Table of the House.

திரு. எம். எஸ். செல்வராஜன் : அரசாங்கம் கொடுத்திருக்கிற தகவல்களில் இருந்து கோயம்புத்தூர் மாவட்டத்தில் இருந்து மட்டும் 383 மனுக்கள் வந்திருக்கிறதாக தெரிகிறது. செங்கல்பட்டில் 40 மனுக்கள் வந்திருக்கின்றன. முப்பத்தாறுக்கு வழங்கப் பட்டுள்ளது. ஆனால் கோயம்புத்தூர், இராமநாதபுரம் ஆகிய

a Printed as a Appendix VI on pages 899-903.

[9th November 1966

இடங்களில் எல்லாம் அதிகமாக மனுக்கள் வந்தும் நகைத் தொழிலாளர்கள் குடியிருப்புக்கு நிலம் ஒதுக்கப்பட்டதாகத் தகவல இல்லை. அதற்கு என்ன காரணம்? நிலம் ஒதுக்குவதற்கு புறம்போக்கு நிலமே இல்லையா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா : நிலம் இருக்கும். ஆனால் அவர்கள் கேட்ட இடம் இருந்திருக்காது. அதனால் தான் ஒதுக்கிக்கொடுக்க முடியவில்லை.

திரு. து. ப. அழகமுத்து : கோயம்புத்தூர் மாவட்டத்தில் 383 மனுக்கள் வந்திருக்கின்றன, ஒன்றுக்கும் கொடுக்கப்படவில்லை. இராமநாதபுரத்தில் 144 மனுக்கள் வந்திருக்கின்றன. ஒன்றுக்கும் கொடுக்கப்படவில்லை. செங்கல்பட்டில் வந்த மனுக்களே 40 தான். முப்பத்தாறு பேர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் செங்கல்பட்டில் நிலம் இருந்தது, கொடுத்தார்கள், மற்ற மாவட்டங்களில் நிலம் இல்லை, ஆகவே கொடுக்கவில்லை என்பது தானு? அல்லது அவர்கள் துரிதமாக நடவடிக்கை எடுக்கவில்லை என்பதா? நடவடிக்கை எடுக்காததற்குக் காரணம் என்ன?

கனம் திரு. வெ. ராமையா : முழு விவரம் என்னிடம் இல்லை. கலெக்டரிடத்தில் இந்த மனுக்களைக் கொடுக்கிறார்கள். அவர்கள் குறிப்பிட்டு கேட்கிற நிலம் அவைலபிளாக இல்லாவிட்டால் மனுக்கள் தள்ளுபடி செய்யப்படுகின்றன. அந்த நிலம் இருந்தால் கொடுக்கப்படுகிறது என்பதாகத்தான் இருக்கும்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : அவர்களுக்கு நிலம் வழங்க மற்றவர்கள் நிலத்தை ஆர்ஜிதம் செய்து கொடுக்க சட்டபூர்வமாக இடம் இல்லை என்று சொல்லப்படுகிறது. நிலம் அற்ற ஏழை களுக்கு நிலம் கொடுக்க நில ஆர்ஜிதம் சட்டப்படி செய்ய வழி ஏற்பட்டிருக்கிறது. அதன் மூலமாவது நில ஆர்ஜிதம் செய்து இவர்களுக்கு நிலம் வழங்க ஏற்பாடு செய்யப்படுமா?

கனம் திரு. வெ. ராமையா : அந்தத் திட்ட அடிப்படையில் இவர்களுக்கு நிலம் வழங்கத் தகுதியிருக்கும் பட்சத்தில் அதை அரசாங்கம் கவனிக்கும்.

அழகநேரி இனும் கிராமம்

*559 கேள்வி.—**திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) திருநெல்வேலி ஜில்லா அழகநேரியென்ற இனும் கிராம மக்களிடமிருந்து சென்ற ஆண்டு ஓர் முறையீடு வந்ததா ?

(இ) அவர்களின் கோரிக்கை யாது ?

(உ) அதன்மீது எடுத்துக்கொண்ட நடவடிக்கை விவரம் என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (a) Yes.

(b) They have represented that the wet and dry lands in the village are being cultivated by 46 ryots, that they have applied for ryotwari patta to the Settlement authorities under the provisions

9th November 1966]

of the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963, that the inamdar with a view to deprive them from getting ryotwari patta is trying to evict them with the help of local police, that the order of the Tahsildar in holding the inamdar as prima facie entitled to ryotwari patta is against law and not justifiable. and that necessary enquiry be made in the matter.

(c) While the matter was under enquiry by the District Revenue Officer who granted interim stay of the orders of the Tahsildar, Tirunelveli, the inamdar had filed a writ petition in the High Court and obtained stay of all further proceedings in the matter. Hence, no further enquiry could be conducted. The writ petition has since been dismissed. As the request relates to grant of ryotwari patta, the petitioners have been informed that they may apply to the Assistant Settlement Officer, Kovilpatti who will conduct detailed enquiries.

தாம்பிரபரணி ஆறு

***560 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தாம்பிரபரணி நதியில் மழைகாலத்தில் கடந்த 15 ஆண்டுகள் வருடந்தோறும் வீணாகும் தண்ணீர் அளவென்ன ?

(இ) வீணாகும் தண்ணீரைப் பயன்படுத்துவதற்கு திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறதா?

(உ) திட்ட விவரமென்ன ?

THE HON. SRI V. RAMAIAH : A statement [a] is placed on on the Table of the House.

திரு. எம். எஸ். செல்வராஜன் : கொடுக்கப்பட்டிருக்கிற விவர அறிக்கையில் இருந்து ராம நதி திட்டத்திற்கு தொழில் நுட்ப அனுமதி கிடைத்துள்ளதாகத் தெரியவருகிறது. இந்தத் திட்டத்தை இந்த ஆண்டிலேயே எடுத்து ஆரம்பித்து வைக்க ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : அந்த முயற்சி எடுத்துக்கொள்ளப் படும் என்று நினைக்கிறேன்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : உத்தேச ராமநதித் திட்டம் இப்போதுள்ள அளவைவிட இன்னும் பரந்த விரிவான முறையில் வகுக்கப்பட்டு, அதிகப் பயன் தரத்தக்க வகையில் அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா ? அது பரிசீலிக்கப்பட்டதா ? அதன்மீது எடுக்கப்பட்ட முடிவு, விளைவு என்ன ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அது பெரிய திட்டமாக அமைக்கப் படவேண்டுமென்ற கோரிக்கை அந்த வட்டாரத்தில் இருந்து ஆலோசனைக்கு வந்து பரிசீலிக்கப்பட்டது. அதை எடுத்துக் கொண்டால் நீண்டகாலம் ஆகிவிடும், ஆகவே, உடனடியாக

a Printed as Appendix VII on pages 904–906.

[9th November 1966

இப்போதுள்ள முறையில் ஆரம்பித்துவிட்டால் போகப்போக விரிவுபடுத்திக்கொள்ளலாம் என்பதாகக் கருதப்பட்டது. அரசாங்கத்தின் முடிவு வறண்டு போய் இருக்கிற நிலங்களுக்கு அதிகமாகத் தண்ணீர் கொடுக்கக் கூடிய முறையில் இந்தத் திட்டம் அமைக்கப்படவேண்டும் என்பதாகும்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : அரசாங்கம் கொடுத்திருக்கக் கூடிய தகவல்களில் இருந்தே எத்தனையோ கோடி க்யூசெக்ஸ் தண்ணீர் வீணாகக் கடலில் போய்க் கலக்கின்ற நிலைமை இருப்பதைப் பார்க்கிறோம். திருச்செந்தூர் தாலுக்கா வறண்ட பகுதி, சடையனேரி, நொச்சிக் குளம் போன்ற இடங்களுக்குத் தண்ணீர் கொடுக்க இந்தத் திட்டத்தின் கீழ் வகை இருக்கிறதா என்று அறியவிரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : அந்த மாதிரி பரிசீலனை செய்ததாக ஞாபகம் எனக்கில்லை.

தண்ணீர்த் தீர்வை

*561 **கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கார்காலத்திலும், அட்வான்ஸ் கார்காலத்திலும் நஞ்சைப் பயிர் செய்யப்படும் புஞ்சை நிலங்களுக்கு விதிக்கப்படும் தண்ணீர் தீர்வையின் 'ரேட்' என்ன?

(இ) பிசானகாலத்தில் நஞ்சைப் பயிர் செய்யப்படும் புஞ்சை நிலங்களுக்கு விதிக்கப்படும் தண்ணீர் தீர்வையின் 'ரேட்' என்ன.

(உ) இவைகளுக்குள் வித்தியாசமிருப்பின், அதற்கான காரணமென்ன?

(எ) இதனைப் போக்கவேண்டுமென்று கோரி திருச்செந்தூர் தொகுதி சட்டசபை உறுப்பினரிடமிருந்து 1963, 1964, 1965 வருடங்களில் முறையீடுகள் வந்துள்ளனவா?

(ஐ) ஆம் எனில், அவைகளின்மீது எடுத்துள்ள நடவடிக்கை யாது?

THE HON. SRI V. RAMIAH : (a) to (e) A statement [a] is placed on the Table of the House.

திரு. எம். எஸ். செல்வராஜன் : அரசாங்கம் கொடுத்திருக்கக் கூடிய தகவல்களில் இருந்து மழை காலத்தில் புஞ்சையை நஞ்சையாகச் சாகுபடி செய்தாலும், ஒரு போகத்தை இரண்டு போகமாகச் சாகுபடி செய்தாலும் சாதாரணத் தண்ணீர்த் தீர்வையைவிட இரண்டு பங்கு, மூன்று பங்கு தீர்வை விதிக்கப் படுகிறது. முன்பு கேட்கப்பட்ட கேள்விக்கு எத்தனையோ கோடி க்யூசெக்ஸ் தண்ணீர் இன்றையதினம் வீணாகக் கடலில் போய்க் கலக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இங்கே தண்ணீரை உபயோகப்படுத்திக் கொள்ளாமல் இருக்க வழியில்லை என்கிற

[a] Printed as Appendix VIII on pages 906–908.

9th November 1966]

நிலையில் நஞ்சையாக்கினால், இரண்டு போகமாக்கினால் தீர்வை இரண்டு பங்கு. மூன்று பங்கு போடப்படுவது நியாயமா? இதை மறுபரிசீலனை செய்வார்களா என்று அறியவிரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா: கனம் அங்கத்தினருக்கு விவசாயத்தைப்பற்றித் தெரியும் என்று நினைக்கிறேன். மழை காலங்களில் ஐந்தாறு நாட்கள்தான் அதிகமாகத் தண்ணீர் போகும். அதை வைத்துக்கொண்டு வருஷத்தில் 6 மாதம், 9 மாதம் தண்ணீர் கொடுக்க வேண்டுமென்பது சரியாகாது. மற்ற விவசாயிகள் பாதிக்கப்படாதிருக்கத்தான் இந்த முறை.

மண்ணெண்ணெய்

* 562 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நமது மாநிலத்திற்கு 1965 எப்ரல் முதல் இன்றுவரை மத்திய அரசாங்கம் கிரோசின் & டீசல் எண்ணெய் எவ்வளவு ஒதுக்கியுள்ளது?

கனம் திரு. வெ. ராமையா: கிரோஸின்—2,75,605.3 கிலோ லிட்டர். டீசல் எண்ணெய்—2,74,535.7 கிலோ லிட்டர்.

திரு. எஸ். ஜே. ராமசாமி: ஒரு லிட்டர் கிரோசின் வெள்ளெண்ணெய் 50 பைசாவுக்கு விற்கப்படுகிறது. இது சர்க்கார் விதித்துள்ள ரேட்டா?

கனம் திரு. வெ. ராமையா: அந்த விவரம் என்னிடத்தில் இல்லை.

The Cauvery Delta

* 563 *Q.*—Sri M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) the details of the steps taken by the Government to give relief to the ryots affected by the scarcity of water in the Cauvery delta ; and

(*b*) the causes for the precariously low level of water reached of Mettur Dam during the year 1965?

The Hon. Sri V. RAMAIAH: (*a*) & (*b*) A statement [a] is placed on the Table of the House.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் சபாநாயகர் அவர்களே, மெர்க்காராவில் மழை அளவு எப்படிப் பதிவு செய்யப்படுகிறது என்பதை கவனித்துக்கொள்ள நம் அரசாங்கச் சார்பில் எந்த அதிகாரியாவது இருந்து பரிசீலனை செய்து வருகிறார்களா?

கனம் திரு. வெ. ராமையா: ஏ.இ. அல்லது இ.இ. கிரேடில் போடப்பட்டு இருக்கிறது.

[a] Printed as Appendix IX on pages 908–916

[9th November 1966

திரு. மீ. கலியாணசுந்தரம் : அது இருக்கட்டும். மெர்க்காராவில் அதிக மழை பெய்தாலும் நமக்குத் தொந்தரவாக இருக்கிறது, இல்லை என்றாலும் தொந்தரவாக இருக்கிறது. பழைய காலத்தில் கட்டப்பட்ட மேட்டூர் டாம் மட்டும் நமக்குப் போதாது. அதற்கு மேலோ, கீழோ வேறு ஒரு அணையையும் கட்டும் உத்தேசம் சர்க்காருக்கு இருக்கிறதா?

கனம் திரு. வெ. ராமையா : மேட்டூருக்கு மேலே கட்ட முடியாது. கீழே கட்ட ஒப்பந்த அடிப்படையில் நடவடிக்கை
9-30 a.m. நடந்துகொண்டிருக்கிறது. அந்த ஒப்பந்தம் கூட மீண்டும் பரிசீலனைக்கு வருகிறது. ஆகவே இப்போது அதைக் குறித்து அதிகமாகக் குறிப்பிட விரும்பவில்லை.

திரு. சா. கணேசன் : மேட்டூருக்கு மேலே ஹொகனேக்கல் போன்ற இடங்களிலே கட்டுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்ற கருத்து ஏற்பட்டு அது ஆலோசிக்கப்பட்டு வருவதாகத் தெரிகிறது. அப்படியானால் அந்தக் கருத்து சரியென்று சர்க்கார் ஏற்றுக்கொண்டு அதற்கு மேல் நடவடிக்கை எடுத்துக்கொள்ள முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா : இது மின்சார போர்டாரால் மின்சார உற்பத்திக்காக பரிசீலனை செய்யப்படுகின்ற திட்டம்.

Gang Mazdoors

* 564 *Q*.—Sri C. SRINIVASAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether there is any proposal to make permanent the gang mazdoors who have put in more than three or five years of continuous service in the department of Highways and Rural Works; and

(*b*) if so, whether effective and immediate steps will be taken to finalise the same ?

The Hon. Sri V. RAMAIAH : (*a*) No.

(*b*) Does not arise.

அரிசி விநியோகம்

* 565 கேள்வி.—திரு. இரா. நாராயணன் : கனம் உணவு அமைச்சர் நயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் அரியலூர் நகரைச் சேர்ந்த (சர்வ கட்சிக்காரர்கள்) பொது மக்கள் சார்பில், திருச்சி மாவட்ட கலெக்டர் அவர்களை அரியலூர் ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர் அவர்கள் மூலம் 25—7—1966 தேதியன்று ஆடி, ஆவணி, புரட்டாசி ஆகிய மூன்று மாதங்களுக்கு அரியலூர் பஞ்சாயத்திற்கு மட்டும் மாதம் 1,000 (ஆயிரம்) மூட்டை அரிசியாவது விநியோகம் செய்வதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்களா?

9th November 1966]

(இ) ஆமெனில், இதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

THE HON. SRI V. RAMAIAH : (a) & (b) No representation was received by Collector through Revenue Divisional Officer, Ariyalur regarding the supply of rice to Ariyalur Town Panchayat. But during the visit of the Chief Minister to the area in July 1966 representations were made to him for supplying rice to the public of Ariyalur Town Panchayat. One hundred and eighty bags of rice, 50 tonnes of wheat, 10 tonnes of cholam per month were placed at the disposal of the Reveune DivisionalOfficer, Ariyalur for distribution. The issue was made at the rate of one Madras Measure of rice per family per week (with wheat and cholam) from July 1966. The arrangement is still in force.

Family Planning Programme

* 566 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether the Government have envisaged a revised and reorganised Family Planning Programme for the State ; and

(b) if so, the details thereof ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (a) Yes.

(b) A copy of Government proceedings [a] No. 2460, Health, dated 8th December 1965 wherein the reorganised Family Planning Programme has been sanctioned for implementation is placed on the Table of the House.

திரு. கோ. சி. மணி : தலைவரவர்களே, இந்தத் திட்டத்தின் பிரகாரம் பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாக இதை அமலாக்க வேண்டுமென்றும் அதற்கு ஒரு விழா வைத்துக் கொண்டாடி அதிகப்படியாக எங்கு செய்துகொள்கிறார்களோ அந்தப் பஞ்சாயத்து யூனியனுக்குப் பரிசு அளிப்பதாகக் கூறி அத்தகைய நடவடிக்கைகளையெல்லாம் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இதனால் அங்கே இருக்கின்ற பீ.டீ.ஓ.-க்கள், மற்றவர்கள் எல்லாம் 60 வயதான கிழவர்கள், கல்யாணம் ஆகாதவர்கள் இவர்களையெல்லாம் கட்டாயப்படுத்தி குடும்பக் கட்டுப்பாடு செய்கின்ற முறைகளை மாற்றி, வேறு மாற்றுமுறைகளைக் கையாள்வதற்கு அரசாங்கம் முன்வருமா?

கனம் சபாநாயகர் : வேறு என்ன முறை இருக்கிறது ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இந்த முறை நல்ல முறை. பிளாக் லெவலிலே, பஞ்சாயத்து யூனியன் லெவலிலே பிரசாரம் பண்ணுகிறார்கள். அதை எல்லோரும், கிழவர்களும், கல்யாணம் ஆகாதவர்களும் வந்து கேட்கிறார்கள். வயதிலேயோ அல்லது கல்யாணம் ஆகாதவர்கள் என்றோ இதிலே பாகுபாடு கிடையாது. கட்டுப்படுத்திக் கொள்வதற்கு யார் முன்வருகிறார்களோ அவர்கள் செய்துகொள்வார்கள்.

[a] Printed as Appendix X on pages917–928

[9th November 1966

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : தலைவரவர்களே, இங்கே கொடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் அளவான குடும்பமே ஆனந்தக் குடும்பம் என்று போட்டிருக்கிறார்கள். ஆனந்தக் குடும்பம் வேண்டும் எனபதற்காக பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள் எல்லாம் எவ்வளவு கர்ப்பத்தடை செய்யவேண்டுமோ அவ்வளவும் செய்ய வேண்டும் என்று ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள், அங்கே சத்திரத்திலே இருக்கின்ற சாமியார்கள், பொம்பளைச் சாமியார்கள் இவர்களையெல்லாம் 60, 70 வயதிற்கு மேற்பட்டவர்களையெல்லாம் பிடித்து ஆப்பரேஷன் செய்து விடுகிறார்கள். இது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அப்படித் தெரிந்தால் இந்த முறைகளை மாற்றி வேறு முறைகளைக் கொண்டு வர நடவடிக்கை எடுப்பார்களா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : சார், கனம் அங்கத்தினர் அவர்கள் என்ன முறையிலே மாற்றவேண்டுமென்று ஸ்பெஸிஃபிக்காகச் சொல்லவில்லை. ஃபாமிலி பிளானிங் ஸ்கீமின் அடிப்படையில் மூன்று குழந்தைகள் இருக்கக்கூடியவர்கள் செய்துகொள்ளவேண்டும். இதை அமல்படுத்தவேண்டுமென்ற நோக்கத்துடன் எந்த அளவுக்கு ஒப்புக்கொள்கிறார்களோ அவர்கள்தான் செய்துகொள்கிறார்கள். இந்த சாமியார் கதையெல்லாம் எனக்குத் தெரியாது.

கனம் சபாநாயகர் : வேறு ஏதாவது முறை இருந்தால் எழுதியனுப்பச்சொல்லி அதைப் பரிசீலனை செய்யலாம்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : இப்பொழுது இருக்கின்ற முறையில் கல்யாணம் ஆனவர்கள், ஆகாதவர்கள் எல்லோருக்கும் செய்கிறார்கள். ஆகவே, கல்யாணம் ஆகாதவர்களுக்குக் கண்டிப்பாகச் செய்யக்கூடாது என்று உத்திரவிடுவார்களா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : கல்யாணம் ஆகாதவர்களுக்கு இந்த ஸ்கீமே கிடையாது.

திரு. கே. எஸ். நடராஜ கவுண்டர் : முஸ்லீம்களும் குடும்பக் கட்டுப்பாடு செய்துகொள்கிறார்களா? அவ்வாறு அவர்கள் செய்யாவிட்டால் முஸ்லீம்கள் ஜனத்தொகை பெருகி, முஸ்லீம் நாடு ஆகிவிடும் என்ற காரணத்தால் அவர்களும் செய்துகொள்வதற்கு ஏற்பாடு செய்வார்களா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : குடும்பக் கட்டுப்பாடு திட்டம் ஜாதி அடிப்படையில் செய்யவேண்டுமென்பதில்லை. யார் யார் எல்லாம் கட்டுப்படுத்தவேண்டுமென்று தேவைப்படுகிறதோ அவர்கள் செய்துகொள்ளலாம். இதிலே முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள், ஹிந்துக்கள் எல்லோரும் பண்ணிக் கொள்ளலாம். இதிலே பிரைவேட் நர்ஸிங் ஹோமிலே பண்ணிக்கொள்ளக் கூடியவர்களுடைய தகவல் நமக்குத் தெரியாது. எல்லோரும் அரசாங்கத் துறையிலும், பிரைவேட் டாக்டர்களிடத்திலும் செய்துகொள்கிறார்கள்.

9th November 1966]

திரு. டி. கார்ச்சா கவுடர்: இந்தக் குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்திலே ஆப்பரேஷன் செய்வது அல்லாமல் லூப் பொருத்தப் படும் முறையை பெண்கள் இப்பொழுது அதிகமாக விரும்புகிறார் கள். இந்த முறையை மாவட்டங்களில் எல்லாம் அமல்படுத்த என்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன? இப்படி லூப் பொருத்திக்கொள்கின்ற முறைக்கும் அரசாங்கம் 10 ரூபாய் அளவிலே இனாம் வழங்குமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: இதை எல்லா ஜில்லாக் களிலும், நகரங்களிலும் இன்ட்ரடியூஸ் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. இது தஞ்சாவூர், மதுரை, சென்னை போன்ற இடங்களிலே செய்யப்பட்டு வருகிறது. இதற்கு 10 ரூபாய் இனாம் கொடுப்பதற்கு இயலாது.

புலவர் கா. கோவிந்தன்: குடும்பக் கட்டுப்பாடுத் திட்டம் நல்லது தான். ஆனால், இதை இந்திய சர்க்காரிலே உள்ள எல்லா மாநிலங் களும் ஆர்வத்தோடு பின்பற்றுவதாகத் தெரியவில்லை. நம்முடைய மாநிலம்தான் பின்பற்றி வருகிறது. மற்ற மாநிலங்கள் ஆர்வம் காட்டாத நேரத்திலே தமிழ்நாட்டிலே மட்டும் ஆர்வம் காட்டினால் நம்முடைய ஜனத்தொகை குறையும். அதன் காரணமாக மத்திய சர்க்காரிலே இருந்து நமக்குக் கிடைக்கக்கூடிய பங்கு, அது மக்களுடைய எண்ணிக்கையின் அடிப்படையிலேதான் கொடுக்கப் படுகிறது, குறைந்துவிடும். ஏற்கனவே இப்பொழுது பார்லி மென்டில் உறுப்பினர்களின் எண்ணிக்கை 39 ஆக குறைந்திருக் கிறது. ஆகவே, அந்த இடைஞ்சல் வரக்கூடும் என்ற காரணத்தால் அதைப் பரிசீலித்து மற்ற மாநிலங்கள் பின்பற்றக்கூடிய அளவிலே தான் நம்முடைய மாநிலமும் இருக்கவேண்டுமென்ற வகையில் வழிவகை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: சார், எல்லா மாநிலங் களும் இதை ஒப்புக்கொண்டுதான் அகில இந்திய ரீதியில் இந்தக் குடும்பக் கட்டுப்பாடு அமலாக்கப்படுகிறது. ஒன்று பெருமைப் படக்கூடியது, நாம் கொஞ்சம் தீவிரமாகச் செய்கிறோம் என்பது.

திரு. இரா. நெடுஞ்செழியன்: கனம் அவைத் தலைவரவர்களே, தொழுநோய் உள்ளவர்கள், பெருநோய் உள்ளவர்கள், இதன் காரணமாக அங்கஹீனமாக்கப்பட்டவர்கள் எல்லாம் இருக் கிறார்கள்; அவர்களுக்கும் பிச்சைக்காரர்களுக்கும் இத்தகைய திட்டத்தைக் கட்டாயக் குடும்பக் கட்டுப்பாடுத் திட்டமாகக் கொண்டுவர அரசினர் முயற்சிப்பார்களா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: தொழுநோய் உள்ளவர் களுக்கு குடும்பக் கட்டுப்பாடுத் திட்டம் கட்டாயப்படுத்துகின்ற முயற்சி நல்லதுதான். ஆனால், இப்பொழுதே சிலர் வந்து செய்து கொண்டிருக்கிறார்கள்.

திரு. சா. கணேசன்: குடும்பக் கட்டுப்பாடு மாநிலத்திலே செம்மையாக நடைபெற்று அதன்மூலம் கருதிய பலன் ஏற்பட்டி ருக்கிறது என்பதை யாரும் மறுக்கமுடியாது. குடும்பக் கட்டுப்

[9th November 1966

பாடு செய்து கொள்பவர்களுக்கு நன்கொடை கொடுப்பதைப்போல் மாநிலத்தைப் பொறுத்தவரையில் மாநிலங்களுக்கும் நன்கொடைகள் வருவதில்லை. அதற்குப் பதிலாக தண்டனைதான் வந்து கொண்டிருக்கிறது. குடும்பக் கட்டுப்பாடு செய்துகொண்டதின் மூலம் பார்லிமெண்டிலே இரண்டு சீட்கள் பறிபோய்விட்டன. ஆகவே, அம்மாதிரி ஏற்படாமல் இருப்பதற்கு ஏற்ற முறையில் வழிவகை செய்ய முன்வருவார்களா ?

(பதில் இல்லை.)

திரு. மு. கருணாநிதி : குடும்பக் கட்டுப்பாடு என்று பெயர் இருப்பதால், ஏதோ இப்பொழுது குடும்பம் கெட்டு அலைவது போலவும், அதைக் கட்டுப்படுத்துவதுபோலவும் இருக்கிறது. ஆகவே அந்தப் பெயரை மாற்றி குழந்தைக் கட்டுப்பாடு என்று கொண்டுவருவார்களா? (சிரிப்பு).

(பதில் இல்லை.)

திரு. எஸ். சின்னையன் : கனம் சபாநாயகர் அவர்களே, குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தின்கீழ் சாதாரணமாக ஏழைகள் அதிகமாக அறுவை சிகிச்சை செய்து கொள்ளுகிறார்கள். அறுவை சிகிச்சை செய்த பிறகு 15, 20 நாட்களுக்கு மேல் தொழில் செய்து ஜீவிக்க முடியாமல் ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டியிருப்பதால் இந்த உதவித் தொகையை இன்னும் கொஞ்சம் அதிகப்படுத்திக் கொடுக்க முடியுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இப்பொழுது 30 ரூபாய் கொடுக்கிறோம். அதற்கு மேல் அதிகப்படுத்துவதற்கு உத்தேசமில்லை. அந்தக் காலத்தில் தொழிலாளர்களுக்கு ஊதியம் கிடைக்க முடியாத நிலை ஏற்படும் என்ற காரணத்தால்தான் 30 ரூபாய் கொடுக்கப்படுகிறது.

திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் : குடும்பக் கட்டுப்பாடு பிரசாரத்தைத் துவங்கியதிலிருந்து பேச்சு வழக்கில் அனுசரிக்க வேண்டிய தரம் குறைவதையும், நாணம், வெட்கம் இவை எல்லாம் குறைவதையும் சீர்திருத்துவதற்கு என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது ? ஏதாவது ஒரு முறையை அனுசரிக்க வேண்டுமென்ற நிலையை அரசாங்கம் ஏற்படுத்துமா ?

கனம் சபாநாயகர் : இதைப் பற்றி அதிகம் பேசாமல் இருந்தால் நல்லது.

திரு. ஏ. சுவாமிதாஸ் : குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்திற்காக இப்போது கையாளப்படுகிற முறைகளில் அபிப்பிராயபேதங்கள் இருக்கின்றன. தீமை விளைவிக்கக்கூடிய முறைகள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, 30 வயதுக்கு மேல்தான் திருமணம் செய்து கொள்ளலாம் என்று நிர்ணயித்து ஒரு சட்டத்தை இயற்ற அரசாங்கம் முன்வருமா ?

9th November 1966]

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இப்போது இருக்கும் பெண் பிள்ளைகள் எல்லாம் 24 வயது, 25 வயதுக்கு மேல்தான் திருமணம் செய்துகொள்கிறார்கள். முன்பு போல் 14 வயது 15 வயதில் திருமணம் செய்து கொள்வதில்லை. அந்த வயதையும் உயர்த்தலாமா என்பது அரசாங்கத்தின் பரிசிலனையில் இருக்கிறது. பெண்களுடைய வயதை உயர்த்தினால் ஆண்களுக்குக் கல்யாணம் ஆகும்போது 60 வயது ஆகிவிடும். (சிரிப்பு.)

கனம் சபாநாயகர் : வயதைக் குறைக்க வேண்டுமென்று போராட்டம் ஆரம்பித்து விடுவார்கள்.

திரு. இராம. அரங்கண்ணல் : இந்தத் திட்டத்திற்குப் பிரசாரம் அவசியமாகும். இந்தத் திட்டம் அபிவிருத்தி அடைவதற்கு நம்முடைய சர்க்கார் எந்தெந்த வகையில் பிரசார வகைகளை மேற் கொண்டிருக்கிறது ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஃபாமிலி பிளானிங் வீக் நடத்தப்படுகிறது ; டிராமா, சினிமாப் படங்கள் மூலம் பிரசாரம் செய்யப்படுகிறது. பிரசாரகர்களும் பிரசாரம் செய்து வருகிறார்கள். பாம்ஃப்லெட்ஸ் விநியோகிக்கப்படுகின்றன.

திரு. எஸ். முருகையன் : சட்டமன்ற உறுப்பினர்களில் எவ்வளவு பேர் கருத்தடை செய்து கொண்டிருக்கிறார்கள் ?

கனம் சபாநாயகர் : எல்லோரும் என்னிடம் வந்து ஒரு லிஸ்ட் கொடுத்துவிட்டுப் போங்கள்.

திரு. மு. கருணாநிதி : குடும்பக் கட்டுப்பாடுத் திட்டம், அதற்கான முறைகள் பலன் அளிக்கவில்லை என்ற முறையில் தினப் பத்திரிகைகளில் அடிக்கடி செய்திகள் வருகின்றன. இது குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்திற்குத் தடையாக இருக்கிறது. அந்தச் செய்திகள் பத்திரிகைகளில் வராமல் தணிக்கை செய்யப்படுமா ? தடுக்கப்படுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : பத்திரிகைகளில் ஏதேதோ செய்திகள் வரும். அவற்றுக்கும் நடைமுறையில் நடக்கக்கூடிய திட்டங்களுக்கும் உண்மையான சம்பந்தம் இல்லை.

கனம் சபாநாயகர் : பத்திரிகைகளுக்கு 'ஃபண்டமெண்டல் ரைட்ஸ்' இருக்கிறது.

திரு. இரா. நெடுஞ்செழியன் : குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தைப்பற்றித் தவறான கருத்துக்களை விஞ்ஞான ரீதியில் கொடுப்பதாகக் கூறிக்கொண்டு பத்திரிகைகள் பிரசாரம் செய்யும்போது தக்க வல்லுநர்களைக் கொண்டு மறுப்பு அறிக்கைகளைக் கொடுத்தால் மக்களுக்கு அதைப் பற்றிய விளக்கம் கிடைக்க வழி ஏற்படும். மெயில் போன்ற பத்திரிகைகளில் தினசரி ஒரு கட்டம்

போட்டு குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தை வலியுறுத்தி வருகிறார்கள். அந்த முறையில் அதைப் பற்றி வலியுறுத்துவதற்கான ஏற்பாட்டையும் செய்வார்களா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தைப் பற்றிய மாறான செய்திகள் பத்திரிகைகளில் வரும் போது மறுக்க வேண்டுமென்றுதான் நானும் எண்ணுகிறேன். ஆனால், பதில் அளித்தால் அவர்கள் திரும்ப பதில் அளித்து இப்படி போய்க்கொண்டே இருக்கும். ஆகவே, எங்கெங்கு பிரசாரம் செய்யப்படுகிறதோ அங்கெல்லாம் பத்திரிகைகளில் வந்த செய்திகள் உண்மைக்கு மாறானவை என்பதும் விளக்கிச் சொல்லப் படுகிறது.

முடநீக்கியல் நிலையங்கள்

*** 567 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் :**
திரு. வை. சங்கரன் : } கனம்

சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்தில் எங்கெல்லாம் ஆர்தோபீடிக் சென்டர்கள் இயங்கி வருகின்றன ?

(இ) அவைகளுக்கு சர்க்கார் கொடுத்து வரும் உதவியின் விபரம் என்ன ?

(உ) சென்னை நகரிலுள்ள ஆந்திர மகிள சபாவின் மேற்பார்வையிலுள்ள ஆர்தோபீடிக் சென்டருக்கு சர்க்கார் ஏதேனும் மானியம் வழங்கியுள்ளதா ?

(எ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

(ஐ) அங்கு சிகிச்சைக்குச் செலவிடப்படும் மருந்துச் செலவை முற்றிலும் சர்க்கார் ஏற்றுக்கொள்ளும் உத்தேசமுண்டா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) முதல் (ஐ) வரை—சபை முன் விவர அறிக்கை [a] ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. எம். எஸ். செல்வராஜன் : அரசாங்கம் கொடுத்திருக்கக் கூடிய குறிப்பிலிருந்து சென்னை, மதுரை, தஞ்சை ஆகிய மாவட்டங்களில் மட்டுந்தான் ஆர்தோபீடிக் சென்டர்கள் இருப்பதாகத் தெரிகிறது. எல்லா மாவட்டங்களிலும் இந்த சென்டர்களை அமைக்க ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : எல்லா ஜில்லா மருத்துவ மனைகளிலும் ஆர்தோபீடிக் சென்டர்களை அமைக்க வேண்டுமென்றால் தகுந்த கட்டடம் வேண்டும், எக்விப்மென்ட்ஸ் வேண்டும். இவைகளை எல்லாம் வாங்க வேண்டுமென்றால் அதிகப்படியாகச் செலவு ஏற்படும் என்ற காரணத்தால் தற்போது இந்த மூன்று இடங்களில் மட்டும் நடத்தப்படுகிறது. மற்ற ஜில்லாக்

[a] 928–929-ம் பக்கங்களில் பதினொன்றும் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

9th November 1966]

களிலும் இந்த சென்டர்களை அமைக்க வேண்டுமென்பது அரசாங்கத்தின் பரிசிலனையில் இருக்கிறது.

திரு. சா. கணேசன் : சித்த முறை அல்லது சுதேசி முறை என்ற வைத்தியத்தையும் இணைத்து அல்லது தனியாக இந்தத் துறையிலே பணி செய்வதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறதா? இல்லாவிட்டால் செய்வதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : சித்த வைத்திய முறைகள், சுதேசி முறைகளில் வைத்தியம் செய்யக்கூடியவர்கள் இந்தியன் மெடிகல் ரிஜிஸ்ட்ரேஷன் என்ற அடிப்படையின்கீழ் வருவார்கள். தனிப்பட்ட முறையில்தான் அவர்கள் வைத்தியம் செய்ய வேண்டும். இதோடு இணைக்க முடியாது.

திரு. எம். எஸ். செல்வராஜன் : சிகிச்சை செய்யப்பட்டு குணமடைகிறவர்களில், குறிப்பாக ஏழை மக்களாக இருப்பவர்கள் பூட்ஸ் போன்றவற்றை வாங்க முடியாத நிலையில் அவர்கள் குணம் பெற்றும் பலனை இழக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட ஏழைகள் சர்க்கார் நிறுவனங்களிலேயிருந்து வெளியே போகிறபோது நிரந்தரமாக அவர்கள் உபயோகப்படுத்தக்கூடிய முறையில் இலவசமாக பூட்ஸ் முதலியவற்றை வாங்கிக் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஏழைகள், பணம் கொடுத்து வாங்க இயலாத நிலையில் இருப்பவர்கள் அரசாங்கத்திற்கு மனுப் போட்டால் இவை எல்லாம் இலவசமாகவே கொடுக்கப்படுகிறது. அப்படி யாருக்காவது கிடைக்கவில்லையென்றால் அங்கத்தினர் அவர்கள் எழுதி அனுப்பலாம்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : ஆந்திர மகிள சபையிலிருந்து இந்த ஆண்டு சிகிச்சைக்குரிய பூரணச் செலவையும் ஏற்க வேண்டுமென்று கேட்டு அரசாங்கத்திற்கு மனு ஒன்றும் வரவில்லை என்று சொன்னார்கள். 1964-65-ல் பாதி அளவு மானியம் கொடுக்கப்பட்ட தகவல் இருக்கிறது. அதைக் கொள்கையாக ஏற்றுக்கொண்டு வருஷா வருஷம் பாதித் தொகையைக் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அவர்களிடமிருந்து என்ன கோரிக்கை வருகிறதோ அந்தக் கோரிக்கையின் அடிப்படையில் டெபிசிட் மெயின்டனன்ஸ் சார்ஜஸ் கொடுக்கப்படுகிறது.

Medical Colleges

* 568 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the State Government have received any communication from the Central Government for increasing the

number of seats in the medical colleges of the State and offering assistance in this regard ; and

(b) if so, the details thereof ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (a) & (b) In June 1966, this Government increased the number of admissions to State Medical Colleges by 89. Subsequently, in August 1966, a copy of Government of India's communication requesting State Governments other than Madras to increase the admissions was received. None of the Medical Colleges in this State was included in the annexure to this letter which indicated the Medical Colleges in the country which would be in a position to increase the number of seats from October 1966.

The Central assistance offered was Rs. 15,000 per additional admission towards non-recurring expenditure and Rs. 2,000 per additional admission towards recurring expenditure for the year 1966–67. The assistance is being claimed for the extra 89 seats.

திரு. சா. கணேசன் : மத்திய ஆட்சியிலிருந்து அரசாங்கத்திற்கு வந்துள்ள கடிதம் நமக்கு அவ்வளவு சாதகமானதாக இல்லை என்பது அமைச்சர் அவர்கள் படித்ததில் இருந்து தெரிகிறது. பிற மாநிலங்களுக்குள்ள அளவு வாய்ப்போ அல்லது சலுகையோ நமக்கில்லாத நிலையில் அது காணப்படுகிறது. ஆகவே, அதை வளர்த்து, அதாவது நம் மாநிலத்திற்கு ஏராள மான, ஏராளமான என்று கூறும்போது எண்ணிக்கையற்ற என்ற பொருள் அல்ல. இப்போதுள்ளதை விட அதிகப்படியான மாணக் கர்களைச் சேர்த்து பயிற்சி கொடுப்பதற்கோ அல்லது புதிய கல்லூரிகள் அமைத்து அதன் மூலம் செயல்படுவதற்கோ அரசாங்கம் மத்திய அரசாங்கத்தை அணுகிற்று? அப்படி அணுகி யிருந்தால் என்ன பலன் கிட்டிற்று?

கனம் *திருமதி ஜோதி வெங்கடாசலம் : என் விடையிலிருந்து அதைத் தெரிந்து கொண்டிருப்பார்கள். மற்ற மாநிலங்களுக்கு கொடுத்திருக்கிற காரணத்தினால் இங்கு 89 சீட்ஸ் அதிகப்படியாக இந்த ஆண்டு நாம் ஏற்கனவே ஜூன் மாதத்தில் சேர்த்திருக் கிறோம். ஏற்கனவே 986 ஆக இருந்ததை 1,075 ஆக உயர்த்தி இந்த 89 எக்ஸ்ட்ரா அட்மிஷனுக்கு அவர்கள் கொடுக்கும் 15,000 ரூபாய் நான்-ரெக்கரிங் கிரண்டும், ரூ. 2,000 ரெக்கரிங் கிரண்டும் இந்த 89 மாணவர்களுக்கு கொடுக்கவேண்டுமென்று எழுதிக் கேட்டு அதில் ஓரளவு அந்தப் பணத்தை உபயோகப்படுத்தி வருகிறோம்.*

Army Medical Corps

* 569 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether it is a fact that the family allowance of Rs. 250 per mensem offered by the Government to the doctors who had joined the Army Medical Corps has not been distributed to the dependents yet ; and

9th November 1966]

(b) if so, the reasons therefor?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) ஆம்.

(இ) இராணுவத்தில் சேர்ந்துள்ள தமிழ்நாடு மருத்துவப் பணி மருத்துவ அதிகாரிகளுக்குக் குடும்பப் படி வழங்க அரசாங்கம் மருத்துவத்துறை நெறியாளருக்கு அதிகாரம் வழங்கியுள்ளது. இதற்குத் தேவையான ஒப்பளிப்பு வழங்குவதற்கு நியமனப் படிவங்கள் முதலியவற்றை அனுப்பிவைக்குமாறு இராணுவத்தில் பணி புரிந்து வரும் சம்பந்தப்பட்ட மருத்துவர்களை போர் முனை இராணுவ-மருத்துவப் பணித் துறைத் தலைவர் மூலமாகத் தமிழ்நாடு மருத்துவத் துறை நெறியாளர் கேட்டுள்ளார். சம்பந்தப்பட்ட மருத்துவ அதிகாரிகளிடமிருந்து நியமனப் படிவங்கள் முதலியன கிடைத்தவுடன் இப் படியை வழங்குவதற்கு நெறியாளர் தேவையான ஏற்பாடுகளைச் செய்வார்.

Adulteration of oil

* 570 Q.—Sri V. SANKARAN : Will the Hon. the Ministre for Public Health be pleased to state—

(a) whether the Government have received any report of cases of adulteration of groundnut oil using rubber nuts; and

(b) if so, the action taken thereon?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. சா. கணேசன் : ரப்பர் கொட்டைகளை பயன்படுத்தி கடலை எண்ணெயில் கலப்படம் செய்யப்படுவதாக பரவலாக எங்கும் சொல்லப்படுகிறது. அமைச்சர் அவர்கள் தெரிவிக்கும்போது இப்படிப்பட்ட முறையீடு அரசாங்கத்திற்கு வந்ததாகத் தெரியவில்லை என்று சொன்னார்கள். இப்படி பரவலாக சொல்லப்படுகிற நிலைமையையாவது விசாரித்து ரப்பர் கொட்டைகளைக் கலப்பதால் குடலுக்கும், வயிற்றுக்கும் பெரும் தீமையை விளைவிக்கக்கூடும் என்பதை உணர்ந்து தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள முன்வருவார்களா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அரசாங்கத்திற்கு வந்த தகவலிலிருந்து சாம்பிள்களை எடுத்து அனலைஸ் செய்து பார்த்ததில் கடலை எண்ணெய்யோடு எள் எண்ணெய் கலந்திருப்பதாகத் தெரிந்தது. எள்ளோடு கடலை கலந்ததோ அல்லது கடலையோடு எள் கலந்ததோ எப்படியோ இரண்டும் கலந்ததான அனலிட்டிக்கல் ரிப்போர்ட்தான் வந்திருக்கிறது. ரப்பர் கொட்டை பற்றி வரவில்லை. அது பற்றி டைரக்டர் ஆஃப் பப்ளிக் ஹெல்த் மறுபடியும் இன்னும் கொஞ்சம் சாம்பிள்களை அனலைஸ் செய்து அதில் ஏதாவது இருக்கிறதா என்று பார்க்கும்போது தகவல் சொல்லலாம்.

[9th November 1966

Tuticorin Project

* 571 Q.—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) the estimate proposed by the Tuticorin Project Administrator for the project for the year 1966-67; and

(*b*) the actual allotment made by the Union Government thereon?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : (அ) ரூபாய் 575 லட்சம்.

(இ) இது தற்போதைக்கு ரூபாய் 193.60 லட்சம் என நிச்சயிக்கப்பட்டுள்ளது. கூடுதல் நிதி ஒதுக்குமாறு இந்திய அரசுக்கு எழுதப்பட்டுள்ளது.

திரு. எம். எஸ். செல்வராஜன் : துறைமுக வேலையை 1968-ல் பூர்த்தி செய்வது என்று அதன் ஆரம்பக் காலத்தில் திட்டம் இடப்பட்டது. இப்போது நாம் கோருகிற அளவிற்கு மத்திய அரசு கொடுக்காததின் காரணமாக அந்த இலக்கு தவறிவிடாதா? அதை வற்புறுத்தி காலாகாலத்தில் திட்டப் பிரகாரம் இந்த வேலைகள் முடிவடைய ஏற்பாடு செய்யவேண்டாமா? அதன் காரணமாக தொழில் வளர்ச்சி மற்றவைகளுக்கு எல்லாம் பாதகம் ஏற்படுகிறது என்று கூறி அதை மேலும் வற்புறுத்துவார்களா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : மேலும் மேலும் வற்புறுத்த வேண்டுமென்றுதான், மத்திய அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறோம்.

நாட்குறிப்பேடுகள்

* 572 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் செய்தி, விளம்பரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சர்க்காரிலிருந்து தயாரிக்கப்படும் நாட்குறிப்புகள் யாருக்கெல்லாம் வழங்கப்படுகின்றன?

(இ) இந்த டைரிகள் எத்தனை வகைகளில் தயாரிக்கப்படுகின்றன?

(உ) சம அந்தஸ்துள்ள வெவ்வேறு இலாகா அதிகாரிகளுக்கெல்லாம் ஒரே சீரான டைரிகள் வழங்கப்படுகின்றனவா?

(எ) வித்தியாசமிருப்பின் காரணமென்ன?

(ஐ) இந்த டைரிகள் விற்பனை செய்யப்படுகின்றனவா?

(ஒ) ஆம் எனில், சென்ற ஆண்டு, இந்த ஆண்டு விற்பனையான டைரிகள் எத்தனை, விற்பனைத் தொகை என்ன?

(ஔ) மீதியிருக்கும் டைரிகள் என்ன செய்யப்படுகின்றன?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) முதல் (ஔ) வரை; இக் கேள்விகளுக்கான பதில் * சபைமுன் வைக்கப்பட்டுள்ளது.

* 929-931-ம் பக்கங்களில் பன்னிரண்டாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

9th November 1966]

திரு. எம். எஸ். செல்வராஜன் : ஜில்லா அதிகாரிகளுக்கு கொடுக்கப்படக்கூடிய இந்த டைரிகள், ஒரேதரமான அதிகாரிகள், ஒரே சிரான சம்பளம் வாங்குகிறவர்கள், ஒரே தகுதியுள்ள அதிகாரிகள் இப்படிப்பட்டவர்களுக்கு பல்வேறுவிதமான டைரிகள் வழங்கப்பட்டுள்ளனவா? அதற்குரிய காரணம் என்ன? அப்படிப்பட்ட குறைபாடு இருக்குமானால் அதை நிவர்த்தி செய்ய ஏற்பாடு செய்வார்களா?

கனம் திரு. கோ. பூவராகன் : ஜில்லா மட்டத்தில் கலெக்டர்களிடம் இருந்து கோரிக்கை வருகிறது எவ்விதமாக டைரிகள் வேண்டுமென்று. அவர்களுக்கு சப்ளை செய்கிறோம்.

இனவிருத்திக்குச் செம்மறி கிடாக்கள்

* 573 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி : கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இம்மாநிலத்தில் 1965-ம் ஆண்டில் இனவிருத்திக்காக எத்தனை செம்மறி கிடாக்கள் விநியோகிக்கப்பட்டன, மாவட்டவாரியாக?

(இ) அதற்கான செலவு எவ்வளவு?

(உ) வடார்க்காடு மாவட்டத்தில் எந்தெந்த பஞ்சாயத்து மூலமாக என்ன விலையில் விற்கப்பட்டன?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) முதல் (உ) வரை இந்த விவரங்கள் அடங்கிய அறிக்கை ஒன்று சபை முன் வைக்கப்பட்டுள்ளது.[a]

Modern Bus stand

* 574 Q.—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state :

(a) whether it is a fact that the implementation of the proposal to construct a multi-storeyed modern bus stand for mofussil buses is being postponed; and

(b) if so, the reasons therefor?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) & (இ) சென்னை நகரில் வெளியூர் பஸ்களுக்காக நவீன பஸ் நிலையம் ஒன்றைக் கட்டுவது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

Sri C. CHIRANJEEVULU NAIDU : In view of the difficulty and inconvenience caused to the public, will the Government see that something is done to improve the mofussil bus stand expeditiously?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : பல லட்சம் ரூபாய் தேவைப்படுவதால் பரிசீலனைக்கு தாமதமாகிறது.

[a] 931–944-ம் பக்கங்களில் பதின்மூன்றுவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

[9th November 1966

UNSTARRED QUESTIONS.

ரயில்வே இணைப்புச் சாலைகள்

6. கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்தில் ஹைவேஸ் ரோடுகளுக்கிடையில் இருந்து வரும் ரயில்வே ஃபீடர் ரோடுகள் விவரம் என்ன ?

(இ) பஞ்சாயத்து யூனியன் ரோடுகளுக்கு இடையே இருந்துவரும் ரயில்வே ஃபீடர் ரோடுகள் விவரமென்ன?

(உ) இத்தகைய ரயில்வே ஃபீடர் ரோடுகளை அடுத்துள்ள ஹைவேஸ் ரோடுகள், பஞ்சாயத்து யூனியன் ரோடுகளின் தரத்திற்குத் தக்கபடி சீராக இல்லை என்ற விவரம் சர்க்கார் அறியுமா ?

பதில்.—(அ) & (இ) கோட்டவாரியாக, ரயில்வே இணைப்புசாலைகளின் நீளத்தைக் காட்டும் விவர அறிக்கை[a] ஒன்று சபைமுன் வைக்கப்பட்டுள்ளது.

(உ) ஆம்.

(*a*) & (*b*) A division-wise statement[a] showing the length of railway feeder roads division-wise is placed on the table of the House.

(*c*) Yes.

Match Co-operative Societies

7. *Q.*—Sri M. S. SELVARAJAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) The number of Match Co-operative Societies functioning in the State, District-wise ;

(*b*) the number among them working profitably ;

(*c*) whether it is a fact that there is slump in the trade ;

(*d*) The extent to which it has affected the Match Co-operative Societies ;

(*e*) Will the Government consider the possibility of routing the purchase of match boxes for defence department from the Match Co-operative Societies of our State ; and

(*f*) Will the Government consider starting an apex organisation for regularising and fetching marketing facilities for Match Co-operative Societies of our State ?

A.—(*a*) Chingleput district—One.

Thanjavur district—Two.

North Arcot district—One.

Madurai district—One.

Ramanathapuram district—Six.

Tirunelveli district—Two.

(*b*) Out of the eight Societies which have commenced production one Society is working at a profit.

(*c*) There is no slump in the trade at present.

(*d*) Does not arise.

(*e*) This is under the consideration of Government.

(*f*) When the need for an apex organisation is felt, the proposal of starting one such organisation will be considered.

[a] Printed as Appendix XIV on pages 945-946

9th November 1966]

பதில்—(அ) செங்கற்பட்டு மாவட்டம்—ஒன்று.

தஞ்சாவூர் மாவட்டம்—இரண்டு.

வட ஆர்க்காடு மாவட்டம்—ஒன்று.

மதுரை மாவட்டம்—ஒன்று.

இராமநாதபுரம் மாவட்டம்—ஆறு.

திருநெல்வேலி மாவட்டம்—இரண்டு.

(இ) உற்பத்தியைத் துவங்கியுள்ள எட்டுச் சங்கங்களில் ஒன்று லாபத்தில் செயல்பட்டு வருகின்றது.

(உ) தற்பொழுது இந்தத் தொழிலில் மந்த நிலை எதுவுமில்லை.

(எ) இக் கேள்விக்கு இடமில்லை.

(ஐ) இது குறித்து அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

(ஒ) தலைமைச் சங்கம் ஒன்று நிறுவுவது அவசியம் என்று உணரப்பட்டால், அத்தகைய சங்கம் ஒன்றை நிறுவுவது குறித்து ஆலோசிக்கப்படும்.

பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு வேலை

8. **கேள்வி—திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஜில்லாவாரியாக எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சுகளில் பதிவு செய்து வேலை பெறுமலிருக்கும் பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் எவ்வளவு பேர்?

(இ) அவர்களில் 1965–66-ல் பதிவு செய்தவர்கள் எவ்வளவு பேர் ?

(உ) 1965–66-க்கு முன்பே பதிவு செய்து காத்திருப்பவர்கள் எத்தனை பேர் ?

பதில்—(அ) 1966 ஜூன் மாத இறுதியில், இம்மாநிலத்தில் உள்ள பல்வேறு வேலை வாய்ப்பு நிறுவனங்களின் பதிவேடுகளில் பதியப்பட்டிருந்த பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் மொத்த எண்ணிக்கை விவரம் வருமாறு :—

வட ஆர்க்காடு	600
தென் ஆர்க்காடு	646
செங்கற்பட்டு	495
கோயம்புத்தூர்	580
கன்னியாகுமரி	1,024
சென்னை	549
மதுரை	1,418
நீலகிரி	384
இராமநாதபுரம்	741
சேலம்	1,525
தஞ்சாவூர்	386
திருச்சிராப்பள்ளி	929
திருநெல்வேலி	1,498
மொத்தம் ..	10,775

(இ) 1965-ல் 3,310 விண்ணப்பதாரர்கள் பதிவு செய்து கொண்டனர், 1966-ம் ஆண்டில் 6,123 விண்ணப்பதாரர்கள் பதிவு செய்து கொண்டுள்ளனர்.

(உ) 1965-க்கு முன்பே 1,342 நபர்கள் பதிவு செய்து கொண்டனர்.

[9th November 1966

A.—(*a*) The total number of trained teachers that remained on the registers of the various Employment Offices in the State at the end of June 1966 is as follows :—

North Arcot	600
South Arcot	646
Chingleput	495
Coimbatore	580
Kanyakumari	1,024
Madras	549
Madurai	1,418
The Nilgiris	384
Ramanathapuram	741
Salem	1,525
Thanjavur	386
Tiruchirappalli	929
Tirunelveli	1 498
Total ..	10,775

(*b*) 3,310 applicants had registered during the year 1965. 6,123 applicants had registered during the year 1966.

(*c*) 1,342 had registered before 1965.

குடும்பக் கட்டுப்பாடு

9. கேள்வி.—திரு. நா. ராஜாங்கம் : திரு. சி. சிவசுப்பிரமணியன் : } சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தின்கீழ் நம் மாநிலத்தில் 1963-ம் ஆண்டு டிசம்பர் முதல் 1965-ம் ஆண்டு டிசம்பர் 31-ந் தேதி முடிய அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்கள் எத்தனை பேர் ?

(ஆ) இவர்களில் ஆண்கள், பெண்கள் முறையே எத்தனை பேர், மாவட்டவாரியாக ?

(உ) ஜாதிவாரியாக மாநில மட்டத்தில் எத்தனை பேர், மாவட்டவாரியாக எத்தனை பேர் ?

A.—

(*a*) Medical Department	107,505
Private Medical Institutions	3,153
(*b*) Public Health Department	129,194

	Public Health Department.		Medical Department.	
(1)	Males. (2)	Females. (3)	Males. (4)	Females. (5)
Chingleput ..	663	84	576	123
South Arcot ..	7,143	150	4,571	150
North Arcot ..	6,248	361	5,152	385

9th November 1966]

(1)	Public Health Department. Males. (2)	Public Health Department. Femals. (3)	Medical Department. Males. (4)	Medical Department. Females. (5)
Salem ..	11,471	425	7,727	425
Coimbatore ..	4,594	772	3,747	772
The Nilgiris ..	2,458	180	2,136	172
Thanjavur ..	28,976	472	16,854	472
Tiruchirappalli ..	3,284	365	3,731	335
Madurai	37,010	1,205	15,013	1,207
Ramanathapuram	14,789	172	11,117	168
Tirunelveli ..	12,097	304	11,122	204
Kanyakumari ..	5,688	473	4,339	473
Madras City ..	..	..	14,844	2,710
Total ..	1,24,331	4,863	99,909	7,596
Private Medical Institutions and Railway Hospitals.	1,711	1,442	..	..

(c) These particulars are not collected at the time of operation.

புதிய பஸ் வழிகள்

10. கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா : சுனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கான விபரங்களைச் சபைமுன் வைப்பார்களா ?

(அ) 1965–66-ல் தஞ்சாவூர் மாவட்டத்தில் புதிதாக எந்தெந்த ரூட்களில் பஸ் விட அனுமதியளிக்கப்பட்டது ?

(இ) ஓடிக்கொண்டிருக்கும் பஸ்களை எந்தெந்த ரூட்களில் விஸ்தரிக்கப் பட்டிருக்கின்றன ?

பதில்.—சபைமுன் விவர அறிக்கை ஒன்று a வைக்கப்பட்டுள்ளது ?

A statement a is placed on the Table of the House.

Sago Factory

11. *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) Whether there is any proposal to start a giant modern sago factory in Salem district; and

(*b*) if so, the details thereof?

A.—(*a*) and (*b*) The Government are examining the feasibility of setting up a Central Co-operative Sago Factory at Salem consistingi of the local sago manufacturers as members.

பதில்.—(அ) & (இ) சேலத்தில் உள்ளூர் சவ்வரிசி உற்பத்தியாளர்களைக் கொண்ட மத்தியக் கூட்டுறவு சவ்வரிசி ஆலை ஒன்று நிறுவும் சாத்தியக் கூறு அரசாங்கம் பரிசீலித்து வருகிறது.

a Printed as Appendix XV on pages 946–950.

[9th November 1966

World Leather Fair

12 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to hold the World Leather Fair in Madras in the earlier part of 1967 ; and

(*b*) if so, the details thereof ?

A.—(*a*) (*b*) : The Indian Leather Fair Society is likely to hold a World Leather Fair in Madras in the earlier part of 1967.

பதில்.—(அ) & (இ) இந்திய தோற்கண்காட்சிக் கழகம் 1967-ம் ஆண்டு ஆரம்பப் பகுதியில் சென்னையில் உலகத் தோற்பொருட் கண்காட்சி ஒன்றை நடத்தக்கூடும்.

Veterinary College

13. *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is any proposal to establish another Veterinary College in the State ; and

(*b*) if so, the details thereof ?

A.—(*a*) No.

(*b*) Does not arise.

பதில்.—(அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

Children's Theatres

14. *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state the number and details of Children's Theatres, now existing and those proposed to be opened in the State ?

A.—There is only one Children's Theatre in the State. It is housed in the New Legislative Assembly Buildings in the Government House Estate, Mount Road, Madras-2. It was inaugurated on 7th December 1957 by the late Pandit Jawaharlal Nehru, Prime Minister of India. The State Government is conducting at the Theatre film shows for children between 4 and 5-30 p.m. on Fridays, Saturdays and Sundays. An additional show is conducted at 2 p.m. on Sundays. On other days documentaries produced by the Films Division of the Government of India are exhibited between 6 and 7-30 p.m. for the public. Admission rate for children's shows and documentary shows is 12 paise per child and 25 paise per adult.

A cultural programme consisting mostly of variety entertainment is offered to children once a month, usually on the last Sunday of the month. The children's. Theatre is primarily made available to children's organisations, children's schools, etc., for conducting shows by children or for children at a concessional rental of Rs. 50 per show.

The Theatre is also rented out to associations not connected with children's activities, and to Government bodies, and other institutions, for their functions and programmes. The Children's Theatre is let out

9th November 1966]

rent-free to Government bodies and to others in suitable and deserving cases. Then a nominal fee of Rs. 20 is levied towards electricity and other incidental charges.

In the case of educational institutions recognised by Government, students associations of such education, Institutions and *bona fide* Film Societies, the Children's Theatre is let out on a concessional rental of Rs. 75. In other cases, a rental of Rs. 150 is levied. All the above rates are as per allotment.

The Children's Theatre has the following staff :—

Manager	..	1
Cinema Operator	..	1
Reserve Operator	..	1
Booking Clerk	..	1
Typist	..	1
Attendants	..	4

and Menial Staff consisting of Sweeper—1 ; Scavengers—2 and Watchmen—2.

The Children's Theatre is under the administrative control of the Public (Information and Publicity) Department.

There is no proposal at present to open any more Children's Theatres in the State.

பதில்.—இம்மாநிலத்தில் ஒரே ஒரு பாலர் அரங்கம் மட்டுமே உள்ளது. இது சென்னை-2 மவுண்ட் ரோடு அரசாங்க எஸ்டேட்டில் உள்ள புதுச் சட்ட சபைக் கட்டிடத்தில் அமைந்துள்ளது. இது காலஞ்சென்ற இந்தியப் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களால் 1957-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 7-ந் தேதியில் திறந்து வைக்கப்பட்டது. இந்த அரங்கத்தில் வெள்ளி, சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் மாலை 4-மணி முதல் 5-30 மணி வரை சிறுவர்களுக்காக நமது மாநில அரசாங்கம் திரைப்படக் காட்சிகள் நடத்தி வருகின்றது. ஞாயிற்றுக்கிழமைகளில் பிற்பகல் 2 மணிக்கு ஒரு காட்சியும் கூடுதலாகக் காண்பிக்கப்படுகின்றது. இந்திய அரசின் செய்திப் படப்பிரிவினால் தயாரிக்கப்படும் செய்திப் படங்கள் மாலை 6 மணி முதல் 7-30 மணி வரை பொது மக்களுக்குக் காண்பிக்கப்படுகின்றன. சிறுவர்களுக்கான திரைப்படக் காட்சிகளுக்கும் செய்திப் படக் காட்சிகளுக்கும், சிறுவர்களுக்கு 12 காசு வீதமும், பெரியவர்களுக்கு 25 காசு வீதமும் நுழைவுக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

பெரும்பாலும் கதம்ப நிகழ்ச்சிகளைக் கொண்ட கலை நிகழ்ச்சி மாதத்திற்கு ஒரு முறை, பெரும்பாலும் மாதத்தின் இறுதி ஞாயிற்றுக்கிழமையில் சிறுவர்களுக்கென நடத்தப்படுகின்றது. இந்தப் பாலர் அரங்கம் முக்கியமாக, சிறுவர் நிறுவனங்கள், சிறுவர் பள்ளிகள் முதலியவற்றிற்கு, சிறுவர்களுக்காக அல்லது சிறுர்களால் காட்சிகள் நடத்தப்படுவதற்கென்று காட்சி ஒன்றுக்கு 50 ரூபாய் வீதம் சலுகையான வாடகைக்கு விடப்படுகின்றது. சிறுவர் நிகழ்ச்சிகளுக்குத் தொடர்பில்லாத சங்கங்களுக்கும், அரசாங்க நிறுவனங்களுக்கும் ஏனைய நிலையங்களுக்கும்கூட அவற்றின் விழாக்களுக்கும், நிகழ்ச்சிகளுக்கும் இந்த அரங்கம் வாடகைக்கு விடப்படுகின்றது. பாலர் அரங்கம், அரசாங்க நிறுவனங்களுக்கும், ஏற்பும் தகுதியும் பெற்ற ஏனையோர்க்கும் வாடகையின்றி விடப்படுகின்றது. அப்போது, மின்சாரச் செலவு, ஏனைய தொடர்பான செலவுகளுக்காகப் பெயரளவில் ரூ. 20 மட்டும் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது.

அரசாங்கம் அங்கீகரித்துள்ள கல்வி நிறுவனங்களுக்கும், அக்கல்வி நிறுவனங்களின் மாணவர் சங்கங்களுக்கும், திரைப்படச் சங்கங்களுக்கும் குறைந்த வாடகையாக ரூ. 75-க்கு இந்த அரங்கம் வாடகைக்கு விடப்படுகின்றது. மற்றவர்களுக்கு ரூ. 150 வாடகை விதித்து வாங்கப்படுகின்றது. இந்த வாடகை வீதங்கள் அனைத்தும் ஒரு தடவைக்கு உரியவை.

பாலர் அரங்கில் கீழ்க்கண்ட பணியாளர்கள் உள்ளனர் :—

மேலாளர்	..	..	1
திரைப்பட இயக்குநர்	..	..	1
மாற்று இயக்குநர்	..	..	1
நுழைவுச் சீட்டுக் கொடுப்பவர்	..		1
தட்டச்சர்	..	..	1
பணியாட்கள்	..	..	4

மற்றும் கீழ்காணும் குற்றேவலர்களும் வேலையில் உள்ளனர்:—

துப்புரவு ஆள்	..	..	1
தோட்டிகள்	..	..	2
படிகாரர்கள்	..	..	2

பாலர் அரங்கம் பொதுத் (செய்தி—விளம்பர) துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் உள்ளது.

நமது மாநிலத்தில் மேலும் பாலர் அரங்கங்கள் திறப்பதற்கு இப்போதைக்குச் செயற்குறிப்பு எதுவுமில்லை.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—ADJOURNMENT MOTION.

NON-IMPLEMENTATION OF BONUS ACT FOR WORKERS OF THE NEYVELI LIGNITE CORPORATION.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: கனம் சபாநாயகர் அவர்களே, நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் நிர்வாகத்தில் வேலை செய்யக் கூடிய 5,000-க்கு மேற்பட்ட தொழிலாளர்களுக்கு மத்திய அரசு போட்டிருக்கிற போனஸ் சட்டத்தின் பிரகாரம் குறைந்தபட்சம் போனசாக 4 சதவிகிதம் கூட இதுவரை கொடுக்கப்படவில்லை. மைனிங், தர்மல் ப்ளான்ட், பெர்டிலைசர் ப்ளான்ட், கார்பனைஸிங் யூனிட் இவையெல்லாம் நல்ல முறையில் நடைபெற்றிருந்தும் அந்த நிர்வாகத்தில் இருக்கிற இந்தக் கம்பெனிகளில் வேலை செய்கிறவர்களுக்குக் கொடுக்கவேண்டிய நியாயமான போனஸ் கொடுக்கவில்லை. இதை, இந்த மாநில அரசு இதுவரையில் வாங்கியும் தரவில்லை. ஆகவே, இந்தப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை விவாதிப்பதற்காக இந்தச் சபையின் மற்ற நடவடிக்கைகளை ஒத்தி வைக்கவேண்டுமென்று என் பிரேரபணையை கொடுத்திருக்கிறேன். நம் முதல் அமைச்சர் அவர்கள் அதற்கு இசைவு தந்து, தங்களுடைய அனுமதியையும் வேண்டுகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதைப்பற்றி கனம் அங்கத்தினர் அவர்கள் கேள்வி கேட்டிருந்தால் விடை அளித்திருக்கலாம், அல்லது, எனக்கு எழுதினாலும் மேலே கவனம் செலுத்தலாம். இது

9th November 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

ஒத்திவைப்புப் பிரேரணைக்கு உரியதல்ல. போனஸ் விஷயத்தைத் தொழிலாளர்கள் சட்டப்படி கவனிக்கக்கூடிய இயந்திரம் இருக்கிறது, அது கவனித்துக் கொண்டு வருகிறது. இது ஒத்திவைப்புப் பிரேரணைக்கு உரியதல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

MR. SPEAKER : This is not a matter for an adjournment motion. Hence consent is withheld.

III.—GOVERNMENT MOTION.

SUSPENSION OF RULE 41 (3).

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, under Rule 244 of the Assembly Rules, I move—

"That sub-rule (3) of Rule 41 of the Madras Legislative Assembly Rules, in so far as it requires that not more than two matters shall be raised under Rule 41 at the same sitting, be suspended."

The motion was put and carried.

IV.—CALLING ATTENTION TO—

(1) RICE SCARCITY IN THE NILGIRIS DISTRICT.

SRI T. KARCHA GOWDER : Sir, I call the attention of the Hon. Minister for Food to a matter of urgent public importance, namely, the inability of the Government to supply rice to the family card holders in the Nilgiris district for the last two weeks and the grave situation prevailing in the district.

THE HON. SRI V. RAMAIAH : Mr. Speaker, Sir, the entire Nilgiris district is covered by informal rationing and in order to meet the commitment, rice has to be moved from the districts of Thanjavur, North Arcot, South Arcot and Chingleput. Owing to the adverse south-west monsoon, the opening of the Mettur Dam 10-30
for irrigation which was due on 12th June 1966 was delayed till 21st July 1966. This upset the calculations in the food budget of the different districts as it involved an additional quantity of 80,000 tonnes of rice for issue through cards in Madras State. As such, movement to Nilgiris has to be planned on the basis of weekly supplies. Unfortunately during the middle of October 1966, there was heavy and continuous rain in the districts like Thanjavur and South Arcot. This involved delay in hulling and movement of rice to Nilgiris. In order to meet the situation, the Collector supplied 600 grams of rice per adult per week in the third week of October and 800 grams of rice per adult per week during the last week of October. This is against the normal supply of 1,200 grams of rice. The shortfall was made good by issue of more Atta and Milo. In addition to this, Milo and Ragi were also supplied to the card

[Sri V. Ramaiah] [9th November 1966

holders freely so that they may not suffer by the reduction in the rice content. It is not possible to assure the same quantum of rice throughout when there are adverse natural circumstances operating against the movement of rice. In addition to this, the position has been further complicated by the cyclone which hit the coastal districts of Madras State. However, arrangements have been made to supply as much rice as possible to Nilgiris so that full quantum of 1,200 grams per adult per week may be supplied to the card holders shortly. Nilgiris is also a millet eating district. Adequate quantities of millet including Milo have been supplied to the district. Thus there is no reason for anxiety over the food situation in the Nilgiris District.

(2) Damages caused to crops and houses in Thanjavur district due to floods.

திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் சென்ற மாதம் 17-ம் தேதியிலிருந்து 20-ம் தேதி வரையில் பெய்த பெரு மழையினால், குறிப்பாகத் தஞ்சை மாவட்டத்தில் பெரும் பகுதிகளில் பழவாறு வெள்ளத்தினால் பல பகுதிகளில் உடைப்பு எடுத்தமை காரணத்தினால் என்னுடைய தொகுதியில் ஏறத்தாழ 32 கிராமங்களில் 3,000 ஏக்கர் சம்பாப் பயிர், குறுவைப் பயிர் நாசமாக்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட கிராமங்களில் உள்ள விவசாயிகள் குறுகிய காலப் பயிர் செய்ய வசதி இல்லாமலும், உர வசதி இல்லாமலும் இது வரையில் காத்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்குக் குறுகிய காலப் பயிர் செய்ய வசதிகளையும், மற்றும் உரம் முதலியவற்றை வழங்குவதற்கும் ஆவன செய்ய உடனடி உதவி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அவசியம் குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தைக் கனம் உள்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

The Hon. Sri P. KAKKAN : Mr. Speaker, Sir, a survey of the areas affected has been made already. Though originally about 20,000 acres were estimated to have been submerged, it has now been finally assessed that the area of Kuruvai totally damaged will only be about 200 acres. In the rest of the area, the damage is slight. On the whole, due to the heavy rain received at the time of flowering, the yield of Kuruvai might, it is expected, be reduced by 5 per cent of what it would otherwise have been.

In respect of Samba crop as against 10,000 acres estimated to have been submerged, the crop in about 2,000 acres was damaged. Subsequently re-sowing in some areas and gap filling in the remaining area has been done and the damage has been repaired.

Regarding Taladi crop, there was some loss of seedlings in the nursery. Fresh seedlings were arranged to be supplied for these areas and short-term paddy seeds were also supplied and the demand was fully met. This year, special arrangements had

9th November 1966] [Sri P. Kakkan]

been made to supply short-term seeds for Thaladi in view of the delay in Kuruvai transplantation and a total quantity of 700 tonnes of short term seed has been distributed in Thanjavur district.

There is no need to supply seeds or fertilisers at subsidised rates considering that the overall damage is proportionally very small.

Regarding damage to houses and crops reported in a few villages in Kumbakonam division, they are all between Manniar and Palavar. There were three breaches in the Palavar and crops got submerged. The total area in these villages was 1,700 acres of Kuruvai and 3,500 acres of Samba. Out of 1,700 acres under Kuruvai, 850 acres were under ADT.27 and the balance was under other departmental strains. There has been a reduction in yield of about 10 per cent in the case of ADT 27. In the case of other strains there has been about 50 per cent reduction in yield. It may be pointed out that in ADT 27 crop general reduction in yield over the area affected by heavy rains is only about 5 per cent whereas it is about 50 per cent in other strains. There was no serious damage due to sand casting. As for Samba, total replanting was necessary in about 20 acres, partial replanting in 50 acres and gap filling in some more areas. The large bulk of the crop was, therefore, undamaged.

Samba seedlings were made available for gap filling, and replanting in the areas affected. The nursery for Thaladi faced the maximum damage about 40 acres having been completely lost. One and a half tonnes of short term paddy seeds have already been distributed and there is sufficient stock on hand. There is no need to subsidise the distribution of seeds and fertilisers. Application of a dose of fertiliser will improve the Samba crop in general now and there is also an adequate stock of fertilisers now.

In this connection, it may be stated that ADT 27 paddy raised this year in about 2 lakhs of acres of which 1 lakh of acres have been harvested already, has yielded an average 3,700 lb. per acre.

(3) DESTRUCTION OF POTATO CROPS IN THE NILGIRIS DISTRICT DUE TO HEAVY RAINS.

SRI T. KARCHA GOWDER: Mr. Speaker, Sir, I call the attention of the Hon. Minister for Home to a matter of urgent public importance, viz., the serious situation prevailing in the Nilgiris district owing to the heavy and continuous rains for the past two months, causing complete destruction of potato crops cultivated in 14,000 acres by the pest called 'Late Blight' and the consequent necessity to afford relief measures to the potato growers in that district.

[9th November 1966

THE HON. SRI P. KAKKAN : Mr. Speaker, Sir, The Nilgiris district experienced heavy rains in the months of September and October, the amount of rainfall received being 10·25 inches and 12.74 inches respectively. Heavy downpour was experienced from the second week of September to the third week of October 1966. The first crop of potato which is grown in an area of about 12,000 acres was not affected by this rain as the harvest was over by the time the rain intensified. The area under second crop potato is about 7,000 acres and this was sown in three stages—the first in June, the second in August-September and the third in October The early crop sown in June is ready for harvest and there has been no incidence of "Late Blight" in this crop. There has been a little delay in the harvest of this crop due to the wet weather, but this is not expected to affect the yield of the crop. The crop which was sown in August–September (covering about 5,000 acres) was caught in the heavy rain and due to the weather conditions being favourable for the "Late Blight" it was affected by 'Late Blight'. Necessary plant protection measures were taken to control the 'Late Blight' disease and plant protection chemicals were issued at 50 per cent cost as usual. So far 104 tons of chemicals (Dithaue and Copper compounds) have been sold, the subsidy on which alone works out to Rs. 2.5 lakhs. There is sufficient stock of Dithaue and copper compounds in the depots in the district and there is no difficulty about supplying the required chemicals. Spraying operations have been undertaken with the power operated sprayers held in stock in the Panchayats and the Panchayat Unions and by the Crop and Plant Protection Officer, Coimbatore. Ninety-five power units have also been sold to ryots during the year by the department. It is expected that the yield from these 5,000 acres of crop will be affected to the extent of about 50 per cent. The crop sown in the month of October is in different stages of germination and initial infection of 'Late Blight' has been noticed. Prompt spraying measures are being taken.

Regarding the relief measures proposed by the Member, I wish to state as follows :—

1. *Remission of land revenue.*—This can be decided only after assessing the full effect of the damage of the crops which can be known only after the harvest of the standing crop.

2. *Postponement of loans.*—The question of permitting the postponement of the repayment of the loans or granting conversion of short term loans provided by the Co-operatives into medium term loans will have to be considered after the extent of the damage is correctly assessed. The Central Bank has granted conversion of short term loans into medium term loans in respect of over dues accumulated from the year 1961–62 to 1964–65 to a total extent of Rs. 17.35 lakhs.

9th November 1966] [Sri P. Kakkan]

3. *The supply of seed potatoes.*—The irrigated crop will be following the standing crop and will be usually sown in the months of January–February. Its seed requirements have to be met from the present standing crop. As the area under cultivation of irrigated crop will be only 3,000 acres the seed requirements can be easily met. There is no necessity to import any seed material from outside for this crop.

4. *Supply of Ammonium sulphate.*—There is no immediate need for supply of Ammonium sulphate as the second crop sowings are already over. For the irrigated crop to be raised in January-February in about 3,000 acres, fertiliser will have to be moved by the end of December. Already 150 tons of Ammonium sulphate have been allotted to the Nilgiris Potato Growers' Co-operative Marketing Society and further allotment will also be made shortly out of the allocation of fertilisers for the third quarter.

5. *Supply of power sprayers at subsidised rates.*—There appears to be no need to subsidise any power equipment. The Department has distributed 95 power sprayers to riots and it is estimated that about 225 power units have been sold by private agencies. An adequate number is also stocked by the different Panchayat Unions. In addition in times of large scale infection, the power sprayers in the Crop and Plant Protection Officer's pool are also used.

(4) PEST ATTACK AND FAILURE OF CROPS IN CHINGLEPUT DISTRICT.

SRI A. RAGHAVA REDDI : Sir, I call the attention of the Hon. Minister for Home to a matter of urgent public importance, viz., the pest attack and failure of crops in Pennalurpet and Gummidipundi sub-taluks of Chingleput district due to failure to supply fertilisers in time for the samba crop.

THE HON. SRI P. KAKKAN : Mr. Speaker, Sir, at the outset, it may be stated that there has been no failure of samba crops raised this season and the condition of the standing samba crops is generally fair. Samba crop has been raised over an extent of 15,279 acres in Gummidipoondi sub-taluk and over an extent of 24,670 acre in Pennalurpet sub-taluk. Regarding the crops being affected by pest, no abnormal situation has developed so far. The usual jassids and stem borer which appear in this season are only present. Sufficient stocks of pesticides and fungicides are available on hand in the agricultural depots to meet the demands of Gummidipoondi and Pennalurpet sub-taluks and the stocks are being supplied as and when they are needed. There has been no complaint from the farmers regarding the distribution of pesticides.

The Member has brought to notice the inadequacy of the fertilisers supplied. Owing to the overall difficult stock and supply position, it has not been possible to supply the full needs

of the ryots in these areas just as in any other part of the district. As against the total requirement of 36,590 tonnes in terms of Ammonium sulphate indented for by the Collector of Chingleput for the first three quarters of 1966–67, a quantity of 11,908 tonnes has been supplied to the Chingleput district in straight form. Besides a quantity of 2,185 tonnes in the shape of mixtures has been made available, through manure mixing firms for various special programmes. The total allotment made so far to the district works out to 38 per cent of the requirement. But it has to be pointed out that the allocations made by the Government of India for the State as a whole for the normal programme are only 30 per cent of the State demand and the available supplies have therefore to be distributed equitably all over the State and consequently the quantity that is made available to Chingleput district has to be distributed on a *pro rata* basis having due regard to the area brought to cultivation in each season. A further stocks of 640 tonnes of Urea from Neyveli and 1,301 tonnes of Ammonium sulphate (Imported) are being just now moved to the district. The distribution of these stocks has been ordered to be made for the various taluks in proportion to the extent of crops raised.

V.—PRESENTATION OF REPORTS

(1) REPORT OF THE COMMITTEE ON PUBLIC ACCOUNTS ON THE PURCHASE OF THE LAND IN ERUKKANCHERI BY THE ELECTRICITY BOARD.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, பெரம்பூர் டிவிஷனைச் சேர்ந்த (எருக்கஞ்சேரி) மறுசர்வே என் 124/6 ல் அடங்கிய காலி நிலத்தைத் தமிழ்நாடு மின்சார போர்டு 1963-ம் ஆண்டு விலைக்கு வாங்கியது குறித்துப் பொதுக் கணக்குக் குழு ஆராய்ந்து ஒருமனதாகச் செய்த முடிவின் அறிக்கையை இந்த மன்றத்தின் முன் அளிக்கிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : On this report, I want to make a submission, Sir, இந்த அறிக்கையானது இன்றைக்குக் கடைசி நாளில் வைக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சபை அதை விவாதிப்பதற்கு சந்தர்ப்பம் இல்லாமல் போய்விடுகிறது. இப்பொழுது நாம் இதைப்பற்றி வேறு ஒன்றும் ஆலோசிப்பதற்கு இல்லை. இருப்பினும், இந்தக் கமிட்டி செய்திருக்கக்கூடிய சிபார்சின் அடிப்படையில் அரசாங்கம் இதைப்பற்றிப் பரிசீலனை செய்து, அவர்களுடைய அறிக்கையை பொதுத் தேர்தலுக்குப் பிறகு அமையக் கூடிய சபையிலாவது, முதலிலேயே பட்ஜெட் விவாதத்தின்போதே சமர்ப்பிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதற்குள்ள அரசாங்கத்தின் பதிலும், அவர்கள் எடுத்த நடவடிக்கையைப் பற்றியும் ஒரு அறிக்கையை இந்தச் சபை முன்பு பரிசீலனைக்கு வைக்கவேண்டும், இந்தச் சபை அந்த அறிக்கையை விவாதிப்பதற்குரிய ஒரு சந்தர்ப்பத்தை எற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்ற யோசனையை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

9th November 1966]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பப்ளிக் அக்கௌண்ட்ஸ் கமிட்டியின் அறிக்கையை, அவர்களுடைய கருத்துக்களை அரசாங்கம் ஆராய்ந்து, அதற்கு மேலே என்னென்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளக்கூடுமோ எடுத்துக்கொண்டு, ஒரு அறிக்கையை, கனம் உறுப்பினர் அவர்கள் கூறியபடி, அடுத்த சட்டசபை கூடும் பொழுது இந்தச் சபையில் சமர்ப்பிக்கலாம்.

(2) REPORT OF THE COMMITTEE ON ESTIMATES ON MEDICAL, PUBLIC HEALTH, PUBLIC HEALTH ENGINEERING AND TOWN-PLANNING DEPARTMENTS.

SRI P. RAMACHANDRAN : Mr. Speaker, Sir, I rise to present the Third Report of the Committee on Estimates on Medical, Public Health, Public Health Engineering and Town Planning Departments.

(3) REPORT OF THE COMMITTEE ON SUBORDINATE LEGISLATION.

SRI K. PARTHASARATHY : Mr. Speaker, Sir, I rise to present the Fourteenth and Fifteenth Reports (Third Assembly) of the Committee on Subordinate Legislation.

(4) REPORT OF THE COMMITTEE ON GOVERNMENT ASSURANCES.

திரு. இராம. அரங்கண்ணல் : கனம் தலைவர் அவர்களே, அரசாங்க உறுதிமொழிகள் பற்றிய குழுவின் (மூன்றாவது சட்டசபை) பத்தாவது அறிக்கையை இந்தச் சபை முன்பு வைக்கிறேன்.

MR. SPEAKER : It is now 10-20 a.m. The discussion on procurement will be over by 11-20. How long should we take for the discussion on cyclone havoc?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : One hour, Sir.

MR. SPEAKER : For the discussion on procurement, half an hour will be allotted to each side. The hon. Member Sri T. P. Alagamuthu may now speak. How long he should take depends upon his adjustment with the other Members on his side.

VI.—DISCUSSION FOR SHORT DURATION *RE*. PROCUREMENT OF PADDY IN TIRUCHIRAPPALLI DISTRICT

* SRI T. P. ALAGAMUTHU : Sir, I would like to raise a discussion on the following :—

"The serious situation in which the cultivators in Tiruchirappalli district are placed without paddy for their own consumption as the result of procurement by the Revenue Officials of all the Kuruvai produce in their possession without taking into consideration the *bona fide* requirement of the cultivators and to

discuss the steps to be taken to alleviate their suffering and to issue necessary instructions to the procurement officials in this regard."

தலைவர் அவர்களே, நெல் கொள்முதல் செய்யப் படுவதைப் பற்றி, அதிலிருக்கும் குறைகளைப் பற்றி இந்தச் சட்டமன்றத்தில் விவாதங்களின்போது தெரிவிக்கப்பட்ட கருத்துக்களுக்கும் கேட்கப்பட்ட கேள்விகளுக்கும் சர்க்கார் தரப்பில் அளிக்கப்பட்ட பதில்களின்படி, நெல் கொள்முதல் செய் கின்ற முறை நேர்மையாக நடைபெறவில்லை என்பதைக் குறித்து என் கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். விவசாயிகளை வற்புறுத்தாமல், தொந்தரவுபடுத்தாமல் செய்கிறார்களா? மார்க்கெட்டின் சர்ப்ளசைத்தான் கொள்முதல் செய்கிறோம் என்ற உறுதியைக் கொடுத்துக்கொண்டு வந்தார்கள். ஆனால், நடை முறையில் என்ன காரியங்கள் நடந்திருக்கின்றன என்று பார்க் கின்றபோது, தமிழகத்தில் விவசாயிகளை வற்புறுத்தி, கொள்முதல் செய்யப்படுவதுதான் நடந்துகொண்டிருக்கிறது. அதிலேயும் திருச்சி மாவட்டத்தில், இந்தத் தடவை குறுவை நெல் கொள் முதலின்போது நடந்திருக்கிறது. சம்பா கொள்முதல் செய்த போது, ஸ்லாப் சிஸ்டத்தில் கொள்முதல் செய்தார்கள். ஒரு ஏக்கர் நிலம் உள்ளவர்களுக்கு நெல் கொள்முதலிலிருந்து விதிவிலக்கு அளித்து, 2 ஏக்கரும் அதற்கு மேலும் உள்ளவர்களிடமிருந்து 5 மூட்டையும் அதற்கு மேலும் படிப்படியாக அதிகரித்தும், ஸ்லாப் சிஸ்டம் வைத்து கொள்முதல் செய்தார்கள். குறுவை நெல் கொள் முதலில் இந்தத் தடவை, அந்த முறையை மாற்றிவிட்டு, ஏக்கர் ஒன்றுக்கு சராசரி 12 மூட்டை வீதம் கொடுக்க வேண்டும் என்று வசூல் செய்ய ஆரம்பித்தார்கள். ஒரு ஏக்கர் உள்ளவர்களுக்குக் கூட விலக்கு கொடுக்கவில்லை. அப்படி கொள்முதல் செய்யப் படுவதற்குக் கொடுக்கும் காரணம் என்னவென்றால், இந்தத் தடவை ஏ.டி.டி. 27 வகை குறுவை நெல் புகுத்தப்பட்டிருக்கிறது, விவசாயத்தில் அதிகமாகக் கண்டுமுதல் ஆகியிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். ஒரு ஏக்கருக்கு கிட்டத்தட்ட 30 மூட்டை நெல் விளைந்திருக்கிறது. அதனால்தான் நாங்கள் 12 மூட்டை விதித்திருக்கிறோம் என்று காரணம் காட்டுகிறார்கள். மேலும், இப்படி 12 மூட்டை வாங்குவது ஒன்றும் அதிகம் இல்லை, குறை வானதுதான், கொடுக்கலாம், ஒரு ஏக்கரா வைத்திருப்பவர்களும் கொடுக்க வேண்டும் என்கிறார்கள். ஏ.டி.டி. 27 ரக நெல் திருச்சி மாவட்டம் பூராவிலும் பயிரிடப்படவில்லை. காவிரி பாயும் சில பகுதிகளில், லால்குடி தாலுகா, முசிரி தாலுகா ஆகிய இரண்டு தாலுகாக்களிலும் மட்டும் பயிர் செய்யப்பட்டிருக்கிறது. அதுவும் எல்லோரும் அப்படிப் பயிர் செய்யவில்லை. குறிப்பிட்ட சிலர்தான் செய்திருக்கிறார்கள். அதிலேயும்கூட, கலெக்டர் சொல்லுகிறபடி, ஒரு ஏக்கருக்கு கண்டுமுதல் ஆகிவிடவில்லை. லால்குடி தாலுகா வில் ஒரு ஏக்கருக்கு கிட்டத் தட்ட 20 அல்லது 22 மூட்டைதான் அதிகமான விளைச்சல் ஆகியிருக்கிறது. முசிரி தாலுகாவில் காவிரி பாயும் பகுதிகளில், 20 அல்லது 22 மூட்டைதான் கண்டுமுதல்

9th November 1966] [திரு. து. ப. அழகமுத்து]

ஆகியிருக்கிறது. மேலும் காவிரித் தண்ணீர் நேரிடையாக பாசனம் இல்லாமல், கழிவுத் தண்ணீர் பாயும் திருமானூரில் இன்னும் குறைவாகக் கண்டிருக்கிறது. பத்து அல்லது 15 மூட்டைகள்தான் கண்டுமுதல் ஆகியிருக்கிறது. ஆக, சராசரி என்று பார்க்கிற போது, 20 மூட்டைக்கும் குறைவாகத்தான் கண்டுமுதல் ஆகியிருக்கிறது. அப்படி இருக்கும்போது, ஒரு ஏக்கருக்கு 12 மூட்டை நெல் கொடுக்க வேண்டும் என்று விவசாயிகளை வற்புறுத்தினால், அவர்கள் அந்த அளவு நெல்லை எப்படிக் கொடுப்பார்கள்? அது வல்லாமலும், ஆற்றுப்பாசனம் இல்லாமல், ஏரிகளையும் கிணறுகளையும் நம்பியிருக்கும் பெரம்பலூர், முசிரி வடக்குப் பகுதி, இங்கெல்லாம் குறுவை நெல் கண்டுமுதல் அதிகமாக இல்லை. மற்ற பகுதிகளைப் போலத்தான் 20 அல்லது 22 மூட்டைகள் கண்டுமுதல் ஆகியிருக்கிறது. அப்படியெல்லாம் நிலைமை இருக்கும்போது ஒரு ஏக்கருக்கு 12 மூட்டை என்று வற்புறுத்தி வாங்குவது எப்படிப் பொருத்தமாகும் என்று எண்ணிப்பார்க்க வேண்டும். அமைச்சர் அவர்கள் இங்கே என்ன சொல்லுகிறார்கள். மார்க்கெட்டில் சர்ப்ளஸ் என்ற அடிப்படையில்தான் வசூல் செய்கிறோம் என்று கூறுகிறார்கள். ஒரு விவசாயி 20 மூட்டை கண்டுமுதல் செய்திருந்தால், 12 மூட்டை எப்படி மார்க்கெட்டில் சர்ப்ளஸ் ஆக இருக்க முடியும் என்பதைச் சிந்தித்துப்பார்க்க வேண்டும். அதை எடுத்துச் சொன்னால், மாவட்டக் கலெக்டர் ஏற்றுக் கொள்ளுவதில்லை. ஒரு ஏக்கருக்காவது விதிவிலக்கு கொடுங்கள் என்று கேட்டுக்கொண்டால், அதையும் ஒத்துக்கொள்வதில்லை.

திருச்சி நார்த் டெவலப்மெண்ட் கவுன்சிலில் விவசாயிகளும், சட்டமன்ற உறுப்பினர்களும் முறையிட்டுக் கொண்டார்கள். ஆனால், கலெக்டர் அவர்கள் கூறியது என்ன?

'He rejected the suggestion for exemption from the levy, of small holdings of one or two acres, as such small holdings form a majority in the district.'

மெஜாரிடியான விவசாயிகள் சிறுநிலச்சுவாந்தர்களாக இருப்பதால் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படுவதற்கில்லை என்று அந்த கோரிக்கையைத் தள்ளுபடி செய்துவிட்டார். இன்றையதினம், ஒரு ஏக்கருக்கு மட்டுமல்லாமல் அதற்கும் குறைவாகவும் நிலம் வைத்திருக்கிறவர்களிடம்கூட வற்புறுத்தி நெல் வசூல் செய்கிறார்கள். இந்தக் குறுவை அறுவடை சமயத்தில் பெரம்பலூர் தாலூகாவில் எப்படிக் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது என்பதை கனம் அமைச்சர் அவர்களே அறிவார்கள் என்று கருதுகிறேன். ஏனென்றால், காங்கிரஸ்காரர்களே பாதிக்கப்பட்டதால் இங்கே வந்து உணவு அமைச்சர் அவர்களையும், முதல் அமைச்சர் அவர்களையும் சந்தித்து தங்களுக்கு ஏற்பட்ட கஷ்டங்களை எடுத்துச் சொன்னார்கள். ஆனாலும் பலன் எதுவும் கிடைக்கவில்லை. அங்கே கொள்முதல் எப்படியென்றால் ஏக்கருக்கு 12 மூட்டையை வற்புறுத்தி வாங்கி இருக்கிறார்கள். அறுபத்தி மூன்றே செண்டுகள்

உள்ள ஒரு விவசாயி என்னிடத்தில் வந்து ஒரு விண்ணப்பத்தைக் கொடுத்திருக்கிறார். 'தனக்கு 63 செண்டுதான் நிலம் இருக்கிறது என்றும், கொள்முதல் செய்பவர்கள் 10 மூட்டைதான் கண்டுமுதல் ஆகியிருந்தும், அதில் 3 மூட்டை கூலி. பண்ணையாள்களுக்கு என்று போனது போக பாக்கியை துப்பாக்கி முனையில் போலீஸ் வைத்து வசூல் செய்து கொண்டு போய்விட்டார்கள்' என்று விண்ணப்பம் கொடுத்திருக்கிறார். நேற்றையதினம்கூட, சுதந்திரா கட்சித் தலைவர் திரு. கணேசன் அவர்கள் குறிப்பிட்டது போல, திருமானூர்ப் பகுதியில் 5 செண்ட், 10 செண்ட் வைத்திருப்பவர்கள் கூட நெல் கொடுக்கவேண்டும் என்று வற்புறுத்தப்பட்டிருக்கிறார்கள். இன்றைய தினமும் கணக்கப்பிள்ளைகளும், முன்சீப்களும் நோட்டீஸ் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படி சிறு நிலச் சொந்தக்காரர்களிடம் வசூல் செய்வதில்லை என்று கூறிவிடலாம், இங்கே. ஆனால் நடப்பது என்ன? இப்படிப்பட்ட சிறு நிலச் சொந்தக்காரர்களிடத்திலும் கட்டாயப்படுத்தி வசூல் செய்கிறார்கள்.

கிராம முன்சீப்புகளும், கணக்கப்பிள்ளைகளும் அதிகாரிகளைக் கண்டு பயப்படுகிறார்கள். காரணம் என்ன? ஏற்கனவே 5½ சதவிகிதம் லோன் வசூல் செய்ய வேண்டியிருந்தபோது, லோனை இவர்கள் சரியாக வசூல் செய்துகொடுக்கவில்லை என்று பெரம்பலூர் தாலுகாவில் 50 கிராம முன்சீப் கணக்கப்பிள்ளைகள் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். அந்த பயத்தில் இப்பொழுது நெல்லை எப்படியும் வசூல் செய்துகொடுக்க வேண்டும் என்ற நோக்கத்தில் நோட்டீசை சர்வ் செய்திருக்கிறார்கள். இது சம்மந்தமாக கிராம முன்சீப்கள் தங்களுடைய சங்கத்தில் ஒரு தீர்மானம் போட்டு தாங்கள் 5½ சதவிகிதம் லோன் வசூல் செய்யவில்லை என்று தங்களை ஆர்.டி.ஓ. அவர்கள் அவதூறாகப் பேசி, மறு உத்தரவு வரை சஸ்பெண்ட் செய்திருக்கிறார்கள் என்று தீர்மானம் போட்டிருக்கிறார்கள். என்னிடமும் ஒரு காபியைக் கொடுத்திருக்கிறார்கள். கலெக்டருக்கும் அனுப்பியிருக்கிறார்கள், சர்க்காருக்கும் அனுப்பியிருப்பார்கள் என்று நம்புகிறேன். கணக்கப்பிள்ளை, கிராம முன்சீப்களைக் குறை கூறுவதற்கில்லை. அதிகாரிகளைத்தான் சொல்ல வேண்டும். அதிகாரிகள் சொல்லுவதை அவர்கள் நிறைவேற்றுகிறார்கள். ஆகவேதான் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். இந்தப் பிரச்னையை காரைக்குடிக்குச் சென்று திரும்பும்போது, நம்முடைய மாநில முதல் அமைச்சர் திரு. காமராஜர் அவர்களிடம் எடுத்துச் சொன்னார்கள். (குறுக்கீடு.) எனக்குத் தெரியும். தெரிந்துதான் சொல்லுகிறேன். இப்போது சர்க்கார் கொள்கைகளையெல்லாம் காமராஜர்தான் அறிவித்து வருவதால், அவர்கள்தான் முதல் அமைச்சர் என்கிற சந்தேகம் வந்துவிட்டது. இந்தப் பிரச்னையை அவர்களிடம் எடுத்துச் சொன்னபோது, அவர் கலெக்டரை அழைத்துக் கேட்டார், 'என்ன வசூல் செய்கிறார்கள்' என்று. அவரிடமும் கலெக்டர் சரியான பதிலைச் சொல்லவில்லை, ஒரு ஏக்கருக்கு 30 மூட்டையா அல்லது ஒரு காணிக்கு 30

9th November 1966] *[திரு. து. ப. அழகமுத்து]*

மூட்டையா என்று தெளிவில்லாமல் மழுப்பி விட்டுவிட்டார். இன்றையதினம் பல விவசாயிகளுடைய வீடுகள் பூட்டி, சீல் வைக்கப்பட்டிருக்கிறது, நெல் கொடுக்கவில்லை என்பதற்காக. இது சரியா? சர்க்காருக்கு எவ்வளவு நெருக்கடி என்பதை நான் உணருகின்றேன். ஏனென்றால், முதல் அமைச்சர் இந்த நாட்டில் எவ்வளவு அரிசி ஸ்டாக் இருக்கிறது என்று சொன்னார்களோ அது போல, சிவில் சப்ளை கமிஷனர் இந்த மாநிலத்தில் எவ்வளவு அரிசி ஸ்டாக் இருக்கிறது என்று சொன்னார்களோ அதுபோல, அந்த அந்த மாவட்டக் கலெக்டர்கள் எவ்வளவு அரிசி ஸ்டாக் இருக்கிறது என்று சொன்னார்களோ அதுபோல இன்றைக்கு ஸ்டாக் இல்லை. ஆகவேதான், கெடுபிடி செய்கிறார்கள். சொல்லியதை நிறைவேற்றவேண்டும் என்று இந்த முறையில் கொள்முதல் செய்கிறார்கள். ஆகவே, இருக்கும் நெருக்கடியை உணருகின்றேன் என்றாலும், விவசாயிகளுக்கு அவர்களுடைய வீட்டுக்கு, தேவைக்கு வேண்டிய நெல்லை கொடுப்பதா இல்லையா என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நேற்றைய தினம் பேசிய திரு. செல்வராஜன் அவர்கள் 'கட்டாய ரேஷனை விரும்புகிறீர்களா' என்று கேட்டார்கள். நான் சொல்லுவேன், விரும்பினாலும், உங்களால் நடத்த முடியாது என்று. குறிப்பிட்டுள்ளபடி அரிசியை விநியோகிக்க முடியாது என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். அந்தக் காரணத்தால்தான் பரிபூரண ரேஷனைக் கொண்டுவர பயப்படுகிறார்கள். மார்க்கெட்டின் சர்ப்ளஸைத்தான் கொள்முதல் செய்கிறோம் என்கிற வாதம்கூடத் தவறான வாதமாகும். விவசாயிகளிடத்தில் அதிகப்படியாக உள்ள நெல்லை, ஊரிலே விற்பதற்காக உள்ள நெல்லைக் கொள்முதல் செய்து வாங்கிக்கொண்டு போய்விட்டால், கிராம மக்களுக்கு எப்படி நெல் கிடைக்கும்? அவர்கள் விற்க வேண்டிய நெல்லை வாங்கிக்கொண்டு போய் நகரத்தில் இருக்கிறவர்களுக்குக் கொடுத்துவிட்டால், கிராமத்திலே விவசாயத்தை நம்பி வாழாத மக்களுடைய நிலை என்ன ஆவது? கிராம மக்களைப்போலவே, மேஜர் பஞ்சாயத்திலே இருக்கும் மக்களுக்கு நெல் அல்லது அரிசி எப்படி ஓப்பன் மார்க்கெட்டில் கிடைக்கும்? அவர்களுக்கு அரிசி கொடுக்க இன்றையதினம் சர்க்காரிடம் உத்தரவாதம் இருக்கிறதா? மேஜர் பஞ்சாயத்துக்களிலும், கிராமப்புறங்களிலும் விவசாயத்தை நம்பி வாழாதவர்களுக்கு நெல் அல்லது அரிசி கொடுக்க உத்தரவாதம் இல்லை. நகரப் புறங்களில் இருக்கிறவர்களுக்கு அரிசி கொடுக்கக் கூடாது என்று நான் கூறவில்லை. கனம் முதல் அமைச்சர் அவர்களிடத்தில் தஞ்சை மாவட்டத்தில், கொள்முதல் கொடுமையைப் பற்றி எடுத்துச் சொல்லுகிறபோது, "இங்கிருப்பவர்கள் தஞ்சை மாவட்டத்திலிருந்து பல்வேறு மாவட்டங்களுக்கு அரிசி போக வேண்டாம் என்று விரும்புகிறீர்களா? இதை எப்படி அனுமதிக்க முடியும்? வெளி மாவட்டங்களுக்குக் கொண்டு போக வேண்டாம் என்றால், அவர்கள் என்ன செய்வது" என்று கேட்டிருக்கிறார்கள். 10-30 a.m.

அதே போலத்தான், திருச்சி மாவட்ட விவசாயிகளைப் பொறுத்தும், அவர்கள் விளைச்சல் என்ன என்பதைக்கூடக் கணக்கிடாமல், அவர்களுக்கு எவ்வளவு தேவை என்பதைக் கணக்கிடாமல், அவர்கள் வைத்திருந்த நெல்லை எல்லாம் துப்பாக்கி முனையில், போலிசாரை வைத்துக் கொள்முதல் செய்தால் எப்படி அவர்கள் வாழ்க்கை நடத்துவார்கள்? ஆகவே, இந்தப் பிரச்சினை பரிகரிக்கப்பட வேண்டியது என்பதற்காக இந்த விவாதத்தைத் துவக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டேன்.

பெரிய நிலச்சுவாந்தார்களிடம் அதிகாரி போவதில்லை. ஏனென்றால், அவர்களிடத்தில் பல முறைகளில் போக வேண்டியிருக்கிறது. ஆண்டுக்காண்டு எழுப்பப்படுகிற இரண்டு, மூன்று கடன்களுக்காக அவர்களை அணுக வேண்டியிருக்கிறது. அந்தக் காரணத்தால், அவர்கள் கொடுக்க வேண்டிய உரிய நெல்லை அதிகாரிகள் கேட்டுப் பெறுவதற்குத் தயங்குகிறார்கள். அவர்களை அணுகவே தயங்குகிறார்கள். அவர்கள் சொல்வதை வாங்கிக் கொண்டுவந்துவிடுகிறார்கள். ஆனால், சிறிய நிலச்சுவாந்தார்களிடம் குறிப்பாக ஒரு ஏக்கருக்கும் கம்மியாக நிலம் வைத்திருப்பவர்களிடம் வற்புறுத்திக் கொள்முதல் செய்கிறார்கள். ஏனென்றால், அவர்கள் வாயில்லாப் பூச்சிகளாக இருக்கிறார்கள். இந்தக் குறைகளையெல்லாம் பரிகரிக்கவேண்டும் என்பதற்காகத்தான் நான் இந்த விவாதத்தைத் துவக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டேன். முதலமைச்சர் அவர்கள் இதற்குச் சரியான பரிகாரத்தைக் காணவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

சென்ற முறை சம்பாக் கொள்முதல் நடந்தபோது, என்னுடைய தொகுதியில் இருக்கும் தேனூரில் ஒரு குத்தகை விவசாயி, தன்னிடமிருந்த நெல்லை ஏற்கனவே லெவிக்கு போட்டுவிட்டான். நெல் போட்டுவிட்ட பிறகும், அவன் வீட்டில் இல்லாதபோது, பெண்களைத் தெருவிலே இழுத்தெறிந்துவிட்டு, அங்கே கொள்முதல் செய்தார்கள். இதை நான் நேரில் பார்த்தேன். கொடுமை நடக்கிறது என்று சொல்லும்போது, 'நடக்கவில்லை', 'நடக்கவில்லை' என்று கூறுவது எப்படிப் பொருத்தமாக இருக்கும்?

திருச்சி மாவட்டக் கலெக்டர் கூறுகிறார். 12 மூட்டை நெல் கொடுக்கவேண்டும் என்று விதித்திருந்தால், அதில் 6 மூட்டை குத்தகைதாரர் கொடுக்கவேண்டும், பாக்கி 6 மூட்டை பட்டாக்காரர் கொடுக்கவேண்டும் என்று கூறுகிறார். பட்டாக்காரரைக் கேட்டால், "ஆண்டுக்கு ஒரு முறை தான் குத்தகை அளக்கிறான், நாங்கள் இந்தக் குறுவை விளைச்சலில் எப்படித் தரமுடியும்?" என்று கேட்கிறார். அப்படியானால், முழு நெல்லை, அதாவது ஒரு ஏக்கருக்கு 12 மூட்டை என்ற அளவில் குத்தகைதாரரே எப்படிக் கொடுக்க முடியும்? இப்படிப்பட்ட சூழ்நிலையெல்லாம் இருக்கிறது. விவசாயிகள் கசக்கிப் பிழியப்படுகிறார்கள். காரணம், அவர்கள் நெல் பயிர் செய்கிறார்கள். நெல் பயிர் செய்கிறார்கள் என்ற ஒரே பாவத்திற்காக அவர்கள் கசக்கிப் பிழியப்படுகிறார்கள். கரும்புப் பயிர் செய்கிறவர்களையும் வாழை வைத்துப் பயிர் செய்கிறவர்

9th November 1966] *[திரு. து. ப. அழகமுத்து]*

களையும், வெற்றிலைக் கொடிக்கால் வைப்பவர்களையும் அதிகாரிகள் நெருங்குவது கிடையாது. அதனால், அவர்கள் சுகமாக இருக்கிறார்கள். ஆனால், நெல்லைப் பயிர் செய்கிறார்கள் என்ற ஒரே பாவத்திற்காக அவர்களை இப்படியெல்லாம் கொடுமைப் படுத்துவது சரியல்ல, ஆகவே இந்தக்கொடுமை நிறுத்தப்பட வேண்டும், அமைச்சர் அவர்கள் இதில் தலையிட்டு ஆவன செய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்ளுகின்றேன்.

திரு. க. ர. நல்லசிவம் : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, இந்த விஷயத்தின்மீது இரண்டு விஷயங்களை நான் சபையினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஒன்று, கொள்முதல், மற்றொன்று, உணவுப் பிரச்னை. கடந்த ஒரு வார காலமாகச் சட்டசபை நடக்கிறது. ஆனால், இந்த ஒரு வார காலத்தில் உணவு நிலைமையைப்பற்றி விவாதிப்பதற்காக ஒரு குறிப்பிட்ட நேரம் ஒதுக்கப்படாதது உண்மையிலேயே வருத்தத்திற்குரியது.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினரோ அல்லது வேறு கனம் அங்கத்தினரோ உணவுப் பிரச்சினையைப்பற்றிப் பேசவேண்டும், அதற்காகக், காலம் ஒதுக்கவேண்டும் என்று எப்பொழுது கேட்டார்கள் என்று எனக்குத் தெரியவில்லை.

திரு. க. ர. நல்லசிவம்: சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை என்பதைச் சொன்னேனே தவிர, மற்றவற்றுக்குள் நான் இப்பொழுது விவாதத்தில் இறங்க விரும்பவில்லை. கோயமுத்தூர் ஜில்லாவைப் பொறுத்த வரையில், லெவி முறையில் கொள்முதல் செய்யப்படுகிறது. ஐம்பது செண்டுக்குக் குறைவாக நிலம் வைத்திருந்தால், அவர்கள் ஒரு குறிப்பிட்ட அளவு நெல் கொடுக்க வேண்டும். ஒரு ஏக்கரிலிருந்து இரண்டு ஏக்கருக்குள் நிலம் வைத்திருப்பவர்கள் இவ்வளவு கொடுக்க வேண்டும், இரண்டு ஏக்கரிலிருந்து ஐந்து ஏக்கர் வரையில் நிலம் வைத்திருக்கிறவர்கள் இவ்வளவு நெல் கொடுக்கவேண்டும் என்று படிப்படியாக லெவி முறை இருக்கிறது. கோயமுத்தூரில் அமலில் உள்ள இந்த லெவி முறையை அநேகமாக இராஜ்யம் பூராவிற்கும் விஸ்தரிப்பது நல்லது என்பது என்னுடைய அபிப்பிராயம் ஆகும்.

திருச்சி ஜில்லாவில் ஒரு ஏக்கருக்கு 12 மூட்டை கொடுக்க வேண்டும் என்று கொள்முதல் செய்யப்படுகிறது. அங்குள்ள நிலைமை எனக்குத் தெரிந்த வரையில், திருச்சி ஜில்லாவில் இரண்டு, மூன்று கரும்பாலைகள் இருக்கின்றன. கரும்பு பயிரிடாத காலம் போக மற்ற காலங்களில்தான் நெல் பயிரிடுகிறார்கள். சாதாரணமாக ஒரு ஏக்கரில் விளைச்சல் 12 மூட்டையிலிருந்து 16 மூட்டைக்கு மேல் கிடையாது. ஏடிடி. 27 ரகத்தைப் போட்டு ஒரு சிலர் ஏக்கருக்கு 25 முதல் 30 மூட்டைகள் எடுக்கலாம். ஆனால், சராசரியாக எல்லோருமே ஏக்கருக்கு 20 மூட்டைகள், 30 மூட்டைகள்

எடுத்திருக்கிறார்கள் என்று சொல்வதென்றால், அது உண்மைக்குப் புறம்பானதாகத்தான் இருக்க முடியும். நான் கொள்முதலைப் பற்றிச் சுற்றிவளைத்துப் பேச விரும்பவில்லை. குறிப்பாகச் சொல்லுகிறேன். லெவி முறையிலே இருந்தால் ஒரு தொந்தரவும் இருக்காது. அந்த அடிப்படையிலே ஒரு விகிதாசாரத்தில் கொள் முதல் செய்ய ஏற்பாடு செய்யவேண்டும். அத்துடன்கூட, உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு நியாய விலை கிடைப்பதற்கும் வகை செய்யவேண்டும். கொள்முதல் அவசியம் என்பதை நான் ஏற்றுக் கொள்ளுகிறேன். அதே நேரத்தில், விவசாயத்திற்குத் தேவை யான உரம் முதலியவை கிடைப்பதில் உள்ள சங்கடங்களையும் நீக்கவேண்டும். சூப்பர்பாஸ்பேட், யூரியா, போடாஷ் முதலிய உரங்கள் கிடைக்கவும் வழிவகை காணவேண்டும். அந்தத் தொல்லையை நான் அனுபவபூர்வமாக உணர்ந்தே பேசுகிறேன். சர்க்கார் அதிகாரிகளைக் கேட்டால், "மிகக் குறைவாகத்தான் கிடைக்கிறது, நாங்கள் என்ன செய்வது?" என்று சொல்லு கிறார்கள். வண்டி கொளிஞ்சி ரூ. 100, ரூ. 150 என்று விற்கிறது. இரண்டு வண்டி கொளிஞ்சி வாங்கவேண்டுமானால், 300 ரூபாய், 400 ரூபாய் கொடுத்தால்தான் கிடைக்கிறது. இப்படியெல்லாம் எருக் களையும் உரங்களையும் அதிக விலை கொடுத்து, சிரமப்பட்டு வாங்கிப் பயிர் செய்து நெல்லை விளைவிப்பதை அரசாங்கம் கருத்தில் கொண்டு, விவசாயி உற்பத்தி செய்யும் நெல்லின் ஒரு பகுதியைச் சர்க்காருக்கு நியாய விலைக்குக் கொடுத்தது போக, மீதமுள்ள பகுதியைப் பகிரங்கமாக 'ஓபன் மார்க்கெட்டில்' விற்பதற்கு அனுமதியளிக்கவேண்டும். இப்படி ஒரு பகுதியையாவது அதிக விலைக்கு விற்றால்தான், நெல் பயிரிடுவது ஓரளவுக்காவது கட்டுபடியாக இருக்கும். இதையெல்லாம் அரசாங்கம் கவனிக்க வேண்டும். நியாய விலையில் விவசாயிகளுக்குத் தேவையான உரம் போதுமான அளவு கிடைக்கவேண்டும். அப்படிக் கிடைப்பது கிடையாது. அதிக விலை கொடுத்து, கொளிஞ்சி, மற்ற உரங்களை விவசாயிகள் வாங்கவேண்டியிருப்பதால், அவர்கள் உற்பத்தி செய் யக்கூடிய நெல்லை நியாய விலைக்கு அரசாங்கத்திற்கு லெவி முறையில் கொடுத்தது போக, மீதமுள்ளதை பகிரங்கமாக விற்ப தற்கான சூழ்நிலை இருக்கவேண்டும். இந்த நிலையில் லெவி முறை தான் நியாயமானதாக இருக்கமுடியும்.

இன்னும் இரண்டு நாட்களில் தீபாவளிப் பண்டிகை வரப் போகிறது. இப்பொழுது ராஜ்யத்தில் உள்ள உணவு நெருக்கடி நிலையில், உணவுத் தானியங்களை மாயா ஜால முறையில் கொண்டு வந்துவிடுவது என்பதும் சாத்தியம் அல்ல. மாயா ஜாலம் செய்து உணவுத்தானியம் கொண்டு வரக்கூடியவர்கள் யாரும் கிடையாது. முதல்நாள் நட்டு, மறுநாள் கதிர் மூழம் காண முடியும் என்று யாராவது சொன்னால், அதை ஒப்புக்கொள்ள முடியாது. இருப் பினும், சாத்தியப்பட்ட வரையிலும் முயற்சி செய்யலாம். பெரும் பகுதி மக்கள் கிராமப் புறங்களில்தான் வசிக்கிறார்கள். கிராம மக்கள் தங்களுக்கு அரிசி வேண்டும் என்று கூடக் கேட்பதில்லை. எதையாவது கொடுங்கள் என்றுதான் கேட்கிறார்கள். மனிதன் சாப்பிடத் தகுந்த உணவுத் தானியம் எதையாவது கொடுங்கள்

9th November 1966] [திரு. க. ர. நல்லசிவம்]

என்றுதான் சொல்லுகிறார்கள். நானும் நேரில் போய் அதிகாரிகளைக்கேட்டேன். அதற்கு அவர்கள் ' நாங்கள் என்ன செய்வது ?' என்று தான் சொல்லுகிறார்கள். முதல் அமைச்சர் சொன்னாரே, எட்டு லட்சம் டன் இருக்கிறது என்று, அதில் ஏதாவது கொடுக்க ஏற்பாடு செய்யுங்கள் என்று அங்குள்ள அதிகாரிகளைக் கேட்டாலும் ஒன்றும் கிடைப்பதில்லை. இங்கு ஏதோ சொல்கிறார்கள். அதைக் கேட்டுக்கொண்டு அங்கு போய்ப் பார்த்தால் நிலைமை வேறாக இருக்கிறது. ஒவ்வொரு ஜில்லாவிற்கும் எவ்வளவு எவ்வளவு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று இங்கே அறிக்கை வாசிக்கப்படுகிறது. ஆனால், கிராமப் புறங்களில் சென்றால், சரிவரக் கிடைப்பதில்லை. எங்கள் ஜில்லாவில், ஒவ்வொரு கிராமத்திற்கும் குறைந்தது குடும்பம் ஒன்றுக்கு வாரத்திற்குப் பத்து லிட்டர் சோளமாவது கிடைக்கும்படி ஏற்பாடு செய்யுங்கள் என்றுதான் நான் முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். இரண்டொரு தினங்களில் தீபாவளி வர இருக்கிறது. அந்த வேளையில் கிராமப்புற மக்கள், குறிப்பாக நெசவாளி மக்கள், சாதாரண அரிசன மக்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்று தெரியவில்லை. உணவுப் பொருள்கள் கிடைப்பதில் பெருத்த கஷ்டம் இருக்கிறது. நம்மைப் பொறுத்த வரையில், நாம் ஏதோ ஒரு வகையில் நிலைமையைச் சமாளித்துக்கொள்ளுகிறோம். ஆனால், கிராமப்புற மக்களுடைய நிலைமையை எண்ணிப்பார்த்தால், கவலைக்கிடமாக இருக்கிறது. ஆகவே, இந்தியக் குடிமகன் என்ற நினைப்பிலும், மனிதாபிமான எண்ணத்திலும் இந்தப் பிரச்னை அணுகப்படவில்லை. இந்த நாட்டில் பிறந்த குடிமகனுக்கு, ஒரு படி அரிசி, அரைப் படி அரிசியாவது இந்த நாட்டில் அவன் பிறந்து விட்ட பாவத்திற்காக, பிச்சை போடுவது போலவாவது கொடுத்திருந்தால், உண்மையிலேயே இந்த அரசைப் பாராட்ட முடியும். அதற்குக் கூட வழி கிடையாது.

சிவகிரி என்ற ஊருக்குப் போயிருந்தேன். நெசவாளிகள் மலிந்த ஊர் அது. தேர்தல் வரும்போது வரட்டும். தேர்தல் வந்தால் என்ன? போனால் என்ன? அதைப்பற்றிக்கூட நான் கவலைப்படவில்லை. நெசவாளிகள் மலிந்த அந்த ஊரிலே போய்ப் பார்த்தால், "15 பைசா கொடுத்து நாங்கள் தானியம் வாங்க முடியவில்லை" என்று சொல்லுகிறார்கள் என்றால் அதற்குக் காரணம், விலைவாசி ஏற்றமும், நெசவாளிகளுக்குத் தொழில் இல்லாத நிலையும் தான்.

ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். இன்றையதினம் பயங்கரமான ஒரு நிலைமை தமிழ்நாட்டில் இருந்து வருகிறது. நான் ரேஷன் பற்றிச் கூடச் சொல்லவில்லை. நெசவாளர்கள் வாழக் கூடிய பகுதியில் கஞ்சித் தொட்டிகள் வைத்தாகவேண்டும். காரணம் இன்றைக்கு ஆயிரக்கணக்கான நெசவாளர்கள் வேலை இன்றியே இருந்து வருகிறார்கள். அவர்களுக்குத் தொழில் கிடையாது. வெளியில் சொல்ல நான் வெட்கப்படுகிறேன். நீங்களே கோயம்பத்தூர், சேலம் போன்ற மாவட்டங்களில் நெசவாளர்கள் வாழக்கூடிய பகுதியில் என்ன நிலைமை இருந்து

கொண்டிருக்கிறது என்பதை விசாரியுங்கள். அந்தப் பகுதிகளில் நியாயவிலைக் கடைகள் மட்டும் வைத்துப் பயன் இல்லை. கஞ்சித் தொட்டிகளை ஏற்படுத்தியாக வேண்டும். நான் முதல் அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பீகாரில் பஞ்சம், உத்திரப் பிரதேசத்தில் பஞ்சம். அவர்கள் சண்டையிட்டு மத்திய சர்க்காரிடத்தில் இருந்து தானியங்களை வரவழைத்துக்கொள்கிறார்கள். இங்கே கோயம்புத்தூரில் பஞ்சம், சேலத்தில் பஞ்சம், தஞ்சை மாவட்டத்தில் பஞ்சம். ஏன் தமிழ் நாடு அரசாங்கம் சும்மா இருந்துகொண்டிருக்கிறது? முதல் அமைச்சர் அவர்கள் மத்திய அரசாங்கத்தோடு சண்டைபோட்டு போதுமான தானியத்தை தருவித்தாகவேண்டும். மழை பெய்வதற்கு முன்னால் இருந்த நிலைமை என்ன? கம்பு வரும், சோளம் வரும், கடலை வரும் என்று இருந்தோம். மழையினால் கம்பு பூ உதிர்ந்து போய்விட்டது. சோளம் பூ உதிர்ந்து போய் விட்டது. கடலை வேரே ஓடவில்லை. தண்ணீர் பாசனம் உள்ள பகுதியில் இன்னும் இரண்டு, மூன்று மாதங்கள் போகவேண்டும் தானியத்தைப் பார்க்க. சண்டை போட என்ன ?வெட்கம் இல்லாததை இல்லை என்று சொல்ல ஏன் தயங்கவேண்டும்? கண்டிப்பாக நமது முதல் அமைச்சர் அவர்கள் மத்திய சர்க்காருடன் சண்டையிட்டு போதுமான தானியத்தைப் பெறவேண்டும். புயலுக்காக இரண்டு கோடி ஒதுக்க வேண்டும் என்று மத்திய சர்க்காரிடத்தில் கேட்கவில்லையா? அதைப் பாராட்டுகிறோம். அதைப் போல நமக்குத் தேவைப்படுகிற அரிசிதான் வேண்டும் என்று கேட்கவில்லை, கல் மண் இல்லாத எந்த தானியத்தை வேண்டுமானாலும் வாரத்திற்குப் பத்து லிட்டர் கொடுங்கள் போதும். சோளமாக இருந்தாலும், கம்பாக இருந்தாலும், வரகாக இருந்தாலும், எந்தத் தானியமாக இருந்தாலும் பரவாயில்லை. வாரத்திற்கு பத்து லிட்டர் கொடுங்கள் போதும். இன்றைக்கு மக்கள் உணவு தானியம் கிடைக்காது தவித்துக்கொண்டிருக்கிறார்கள். இங்கே நாம் விருந்து வைத்து, ஒருவருக்கொருவர் முகமன் கூறிக் கொண்டு போவதில் பிரயோசனம் இல்லை. உணவுப் பிரச்சினையில் தமிழ்நாடு அரசாங்கம் அலட்சியமாக இருக்கக் கூடாது.

இன்று நாட்டில் ஒரு பயங்கர நிலை உருவாகிக்கொண்டிருக்கிறது. அங்கே ரயிலை நிறுத்தினார்கள், ஊட்டியிலே அரிசிச்சோறு இல்லை. டிரைவர், மற்ற ஊழியர்கள் அப்படியே ரயிலை நிறுத்தி விட்டார்கள், நாம் பார்க்கிறோம். ஒவ்வோர் இடத்தில் உருக்காலை இல்லை உடனே போராட்டம். அது போன்ற அராஜகச் செயல்கள் ஏற்படக்கூடாது என்பதாக இந்த நாட்டில் பிறந்த பிரஜை என்ற முறையில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த மாதிரியான போக்குக்கு நம்முடைய அலட்சியத்தினால் மக்களைத் திருப்பி விட்டு விடக் கூடாது. இன்றைக்கு நாட்டில் ஒரு பயங்கரமான—மயான அமைதிதான் நிலவுகிறது. இவர்கள் நாடு அமைதியாக இருப்பதாக நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். இங்கே இருப்பது மயான அமைதி தான்.

9th November 1966] [திரு. க. ர. நல்லசிவம்]

ஆகவே நான், முதல் அமைச்சர் அவர்களிடம் வற்புறுத்தித் தெரிவித்துக்கொள்கிறேன். வாரத்திற்கு ஒரு பத்து லிட்டர் எந்தத் தானியமாக இருந்தாலும் மக்களுக்கு விநியோகிக்க உடனடியாக எல்லாக் கிராமங்களிலும் ஏற்பாடு செய்தாகவேண்டும். அப்போது தான் மக்கள் வாழ்வார்கள், ஜனநாயகம் வாழும், நாட்டில் உண்மையான அமைதி ஏற்பட முடியும் என்று தெரிவித்துக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: கனம் சபாநாயகர் அவர்களே, கனம் உறுப்பினர் திரு. அழகமுத்து துவக்கிவைத்த இந்த விவாதத்தின் பேரில் நான் எனது கருத்துக்களை, எனது மாவட்டம் சம்பந்தப்பட்ட கருத்துக்களைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். உணவு தானியங்களை ப்ரொக்யூர்மென்டு செய்வதன் மூலமாக அரசாங்கத்தில் இருக்கிற தாசில்தார், ரெவின்யூ இன்ஸ்பெக்டர் போன்ற அத்தனை அதிகாரிகளுமாகச் சேர்ந்து இன்றைக்கு உணவு தானிய விலை ஏற்றத்திற்குக் காரணமாகச் செயல்படுகிறார்கள். எங்கள் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் அது சுயதேவையைப் பூர்த்தி செய்து கொள்ளக் கூடியது. அங்கே உற்பத்தியாகும் தானியம் அந்தப் பகுதிக்கு ஓரளவு போதுமானது ஆகும். இருந்தும் இன்றையதினம் 2 ரூபாய். 2½ ரூபாயாக அந்தப் பகுதியில் ஒரு படி அரிசி விற்கிறது என்றால் அதற்குக் காரணம் அதிகாரிகளே தவிர வேறு ஒருவரும் இல்லை என்று நான் முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு அரசாங்க ப்ரொக்யூர்மென்டு பாலிசியை எடுத்துக் கொண்டால் கோயம்பத்தூரில் லெவி முறை, தஞ்சையில் மார்க்கெட்டபிள் சர்ப்ளஸ் கொள்முதல் செய்யப்படும் என்பது. இப்படி ராஜ்ய முழுவதுக்கும் ஒரு பொதுக்கொள்கை என்று இல்லாமல் அமைத்து—அங்கங்கே உள்ள அதிகாரிகள் அவரவர்கள் இஷ்டப்படி செயல்பட இந்த அரசாங்கம் வழி வகுத்துவிட்டது. இதன் காரணமாக யார் யார் எவ்வளவு கொடுக்க வேண்டும் என்பதாக நியாயமான உத்தரவு இல்லாமல் போய்விட்டது. எங்கள் பகுதியில் அதிகாரிகள் சின்னஞ்சிறு விவசாயிகளை எல்லாம் நெருக்கி கொள்முதல் செய்கிறார்கள். அதேசமயம் ஐயாயிரம் மூட்டை, நாலாயிரம் மூட்டை என்று கோடவுனில் அடுக்கி வைத்திருக்கிற பெரிய நிலச்சுவான்தார்களைக் கண்டு பயப்படுகிறார்கள். அவர்கள் இன்றையதினம் தங்களது சொந்த லாரியிலே அந்த மூட்டைகளை எடுத்துச் சென்றால் பயந்துகொண்டு விடப்படுகிறார்கள். ஒரு விவசாயி ஒரு மூட்டையை அவித்து அறைக்க எடுத்துச்சென்றால் கூட அந்தத் தானியம் அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்பட்டு சூறையாடப்படுகிறது. கிராமத்தில் இருந்து, தான் இருக்கும் நகரத்திற்கு ஒரு வண்டி தானியம் எடுத்துச் செல்ல முடியாது. அதன் காரணமாக ஏற்கனவே 1½ ரூபாய், 1¾ ரூபாய் விற்று வந்த அரிசி இரண்டரை, மூன்று என்று ஆகிவிட்டது. இதற்குக் காரணமே அதிகாரிகளின் எதேச்சாதிகாரப் போக்குத் தான். அரசாங்கத்தின் திறமையற்ற கொள்கை தான்.

'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்றார்கள். இன்றைக்கு 'உழவுக்கும் தொழிலுக்கும் நிந்தனை' தான் செய்கிறார்கள். விவசாயிகள் நிந்தனை செய்யப்படுகிறார்கள். ரெஸ்ட்ரிக்ஷன் போட்டிருக்கிறார்கள். என்ன ரெஸ்ட்ரிக்ஷன்? ஜில்லாவுக்கு ஜில்லா எடுத்துச் சொல்லக்கூடாது. ஆனால் தாலுக்காவுக்கு தாலுக்கா எடுத்துச்சொல்லக்கூடாது என்று ரெஸ்ரிக்ஷன் போடவில்லை. நெல்லிக்குப்பத்தில் இருந்து பண்டுருட்டிக்கு எடுத்துச் சொல்ல முடியுமா? சிதம்பரத்திற்கு எடுத்துக்கொண்டு போகக் கூடாது, இது என்ன உத்தரவு? இத்தகைய நியாயமற்ற, விவேகமற்ற செயல்களினால் தான் இன்றைக்கு சிறு சிறு வியாபாரிகள் நான்கு மரக்கால் ஐந்து மரக்கால் என்று அங்கங்கே கிடைக்கிற தானியங்களை வாங்கிக் கொண்டு வந்து—நான் நீ என போட்டி போட்டுக்கொண்டு விற்க முடியாத காரணத்தினால் விலை—கொள்ளைக்காரர்களால் விஷம் போல ஏற்றப்படுகிறது. இதை அரசாங்கம் உணர்கிறதா? விவசாயிகளிடத்தில் இந்த அரசாங்கத்திற்கு எங்கே அனுதாபம் இருக்கிறது? அவர்களுக்கு ஆறுதல் சொல்லக்கூடிய காரியத்தை எங்கே செய்தார்கள்?

இன்றையதினம் அரசாங்கத்தால் ஏ.டி.டி. 27 மூட்டைக்கு முப்பத்தேழு ரூபாய் சொச்சம் கொடுக்கப்படுகிறது என்றால் ஓப்பன் மார்க்கெட்டில் 56 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. ஏறக்குறைய விவசாயிகளுக்கு 20 ரூபாயை ஒரு மூட்டைக்கு சர்க்கார் நஷ்டப் படுத்துகிறது. இன்றையதினம் தஞ்சை, தென்னாற்காடு போன்ற ஜில்லாக்களில் உழுது சாகுபடி செய்கிறவன் ஒரு வேளைச் சோற்றுக்கு திண்டாடுகிற நிலையை இந்தச் சர்க்கார் உண்டு பண்ணியிருக்கிறது.

உழுது பயிரிடக்கூடியவர்கள், நெல்லைப் பயிரிடுகின்றவர்கள், நெற்றிவேர்வை நிலத்தில் விழப் பாடுபடுகின்றவர்கள் அரிசி கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள் என்றால், அவர்களுக்கு எப்படி ஊக்கம் பிறக்கும்? பத்து ஏக்கர் நிலம் வைத்துள்ள விவசாயி, உற்பத்தி செய்தவுடன் வந்து கொள்முதல் செய்துவிடுவார்கள் என்ற காரணத்தினாலே அதற்குத் தகுந்தபடி கணக்குப்போட ஆரம்பித்துவிடுகிறான். நமக்குத் தேவையானதை மட்டும், இரண்டு ஏக்கர் மட்டும் பயிர் செய்வோம், மீதியிருக்கின்ற நிலத்தில் கரும்பு, மிளகாய் அல்லது ஏதாவது கமர்ஷியல் கிராப்சைப் பயிரிடுவோம் என்று அவனும் தன்னுடைய நிலையை மாற்றிக் கொள்கிறான். ஆகவே விவசாயிகளுக்கு அரசாங்கம் எப்படி ஊக்கத்தை இதன் மூலம் ஏற்படுத்தமுடியும்?

"உழவினர் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்
விட்டோமன் பார்க்கு நிலை"

என்று கூறியிருக்கின்ற வகையிலே, கிராமத்திலே இருக்கின்ற உழவன் கைவிட்டுவிட்டால், நகரத்திலே இருக்கின்றவன் பேனா பிடித்துஎழுத முடியாது! நகரத்திலே உள்ளவர்கள் சொகுசாக வாழ முடியாது! ஆகவே, பயிரிடுபவனுக்கு முதலிலே வசதிகளைச் செய்துகொடுக்கவேண்டும். அந்த முறையிலே விதை நெல்லை யாரும் ப்ரொக்யூர் பண்ணக்கூடாது என்று கண்டிப்பாகச்

9th November 1966] [திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி]

சொல்ல வேண்டும். விதை நெல் அவனிடம் இருந்தால்தானே அவன் மறுபடியும் உற்பத்திசெய்யமுடியும். அது இல்லாமல் மறுபடியும் அவன் எப்படி உற்பத்தி செய்யமுடியும்? இந்த தீபாவளிக்காக அரிசி வாங்குவதற்காக விவசாயிகள், கிராமங் களிலிருந்து டவுனுக்கு போகிறார்கள். கிராமங்களிலிருந்து ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் நிலம் உள்ள விவசாயிகள் கூட அரிசி வாங்குவதற்காக டவுனுக்குப்போய் கஷ்டப்படக்கூடிய நிலைமை தான் இருக்கிறது. இந்த அரசாங்கத்தினுடைய திறமையற்ற கொள்கையினாலும், அதிகாரிகளுடைய கெடுபிடியினாலும் அவர்கள் கஷ்டமான நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். இப்படி இருந்தால் அவர்கள் எப்படி வாழ்க்கை நடத்தமுடியும், உணவு உற்பத்தி செய்யமுடியும்? ஆகவே, விவசாயிகளுடைய நல்ல எண்ணத்தை, உணவு உற்பத்தி அதிகமாகச் செய்யவேண்டுமென்ற நல்ல லட்சியத்தை அமுக்குகின்ற வகையிலேதான் அரசாங்கத்தி னுடைய உணவுக் கொள்கையும், ப்ரொக்யூர்மென்ட் பாலிசியும் இருக்கிறது, இதை மாற்றவேண்டுமென்ற யோசனைகள் கூறி நான் என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

புலவர் கா. கோவிந்தன்: கனம் தலைவரவர்களே, உபரி மாவட் டத்திலே விளைகின்ற நெல் பற்றாக்குறை மாவட்டங்களுக்குக் கொடுக்கப்படவேண்டும் என்பதிலே எங்கள் கட்சியைச் சேர்ந்த வர்களுக்கு எந்தவிதமான கருத்து வேறுபாடும் கிடையாது. விவசாயிகள் அவர்களிடம் உள்ள நெல்லை விற்பதற்கு மறுப்பது கிடையாது, அவர்கள் விற்காமலும் இருக்கமுடியாது, இதையும் நாங்கள் அறிவோம். விவசாயிகளிடம் இருக்கின்ற நெல்லை உணவு தேவைப்படுகின்றவர்களுக்குக் கொண்டுவந்து கொடுக்கின்ற முறை யிலே இருக்கின்ற, அரசாங்கம் அதிலே மேற்கொண்டிருக்கின்ற, பிழைகளின் காரணமாகத்தான் விவசாயிகள் இன்னல்களுக்கு ஆளாகவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. அறுவடை நேரத்திலே ஏராளமான நெல்லை விவசாயிகள் விளைவிக்கின்றார்கள், அவ்வளவு நெல்லையும் கொள்முதல் செய்வதற்கு இந்த சர்க்கார் வழிவகை செய்யவில்லை. அறுவடையான நெல்லை வாழ்கைக்கு வேண்டிய அளவுக்கு வைத்துக் கொண்டு மீதியை அவன் பொரு ளாக்க வேண்டுமென்று துடிதுடிக்கிறான். விவசாயிகளிடமிருந்து அவ்வளவு நெல்லையும் வாங்குவதற்கு அரசாங்கத்திடம் வழிவகை கிடையாது. கொள்முதல் ஏஜண்ட்கள் என்று நியமித்திருக் கிறார்கள். அவர்கள் வாங்கி அரசாங்கத்தின் கிடங்குக்கு அனுப்பு கின்றார்கள். அப்படி அனுப்பப்படுகின்ற நெல்லுக்கு பணம் பெறு வதற்கு 10, 15 நாட்கள் ஆகின்றன. கொள்முதல் ஏஜண்ட்கள் அந்த நாட்கள் வரை விவசாயிகளிடமே வருவதில்லை. ஆகவே, விவசாயிகள் வேறு எங்காவது விற்பதற்குத்தான் முனைகிறான்.

கொள்முதல் ஏஜண்ட்கள் என்று நியமிக்கப்பட்டிருப்பவர்களைத் தவிர, ஃபுட் கிரைன்ஸ் லைசென்ஸ் ஹோல்டர்ஸ் என்ற நிலையிலே வைத்து இருக்கிறார்கள். இதிலே விவசாயி கொள்முதல் ஏஜண்ட் களிடத்திலே விற்றால் ஒரு விலை. அதே அளவை எஃப்.ஜி.எல். களிடம் விற்றால் விலை கூடுதலாகக் கிடைக்கின்றது. அறுவடைக்

[புலவர் கா. கோவிந்தன்] [9th November 1966

காலத்திலே நெல் தேங்கிக்கிடக்கின்ற காரணத்தினலே சர்க்காருடைய விலை ஒரு மூட்டை கிச்சடிசம்பா 75 கிலோ கொண்ட நெல்லுக்கு விலை ரூ. 33.90 காசுகள். அதே நெல்லை ஆறுமாதங்கள் கழித்து விற்றால் 59 ரூபாய், 60 ரூபாய் என்ற அளவுக்கு போகிறது. அறுவடை காலத்திலே இருக்கக்கூடிய விலையைக் காட்டிலும், ஆறு மாதங்கள் கழித்து அதனுடைய விலை இரண்டு மடங்காக உயர்ந்து போகின்ற நிலைமையைச் சர்க்கார்தான் உண்டாக்குகிறது. இதைத் தவிர உபரி மாவட்டத்திலே ஒரு விலை, பற்றாக்குறை மாவட்டத்திலே ஒரு விலையாக இருக்கிறது. உபரி மாவட்டமான வட ஆற்காடு மாவட்டத்திலே ரூ. 33.90 என்றால், செங்கற்பட்டு மாவட்டத்திலே அதே நேரத்திலே 5 ரூபாய் கூட விற்கப்படுகிறது. ஆகவே மாவட்டத்திற்கு மாவட்டம், காலத்திற்குக் காலம், கொள்முதல் செய்கின்றவர்கள் எல்லாவற்றிலும் விலை வித்தியாசம் இருக்கிறது. கொள்முதல் செய்கின்ற ஏஜண்ட்களைக் காட்டிலும் எஃப்.ஜி.எல். அதிகமான விலைக்கு வாங்குகிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகளையெல்லாம் உண்டாக்கி இருக்கக்கூடிய காரணத்தாலே தான் விவசாயிகள், எங்கே அதிகமாக விலை கொடுத்து வாங்கப் படுகிறது, எப்பொழுது கொடுக்கவேண்டும், எவர்களிடத்திலே கொடுக்கவேண்டும் என்பதையெல்லாம் பார்த்து விற்கலாம் என்ற நினைப்புடனே இருக்கக்கூடிய அளவுக்கு நிலைமையை உண்டாக்கியது இந்தச் சர்க்கார்தான். விவசாயிகள் செய்வது தவறு, சரியா என்பதைப் பற்றி நான் ஆராயவில்லை. முதல் அமைச்சர் அவர்களே ஒரு விவசாயியாக இருந்து, அவர்களிடம் உள்ள நெல்லை எஃப்.ஜி.எல்கள் வந்து ஐந்து ரூபாய்க்கு கூட்டி விலைக்குக் கேட்டால் அவர்கள் கொடுக்கத்தான் செய்வார்கள், வேண்டாம் என்று சொல்ல மாட்டார்கள். ஆகவே இப்படிப்பட்ட நிலைமைகளையெல்லாம் ஏற்படுத்தியது இந்தச் சர்க்கார்தான் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

உற்பத்திச் செலவுகள் அதிகமாகின்றன, உற்பத்திச் செலவுகள் அதிகமாவதினலே நெல்லுக்கு அதிகமான விலை கிடைப்பதைத் தடை செய்யக்கூடிய முறையிலேதான் தவறானவற்றைச் செய்து கொண்டிருக்கிறோம். அடுத்து, லெவி முறை வருகின்ற நேரத்தில் எப்படி வருகிறது ? வட ஆற்காடு மாவட்டத்திலே ஒவ்வொரு வட்டத்திலும் எவ்வளவு பயிர் ஏறியிருக்கிறது என்ற கணக்குகளை அதிகாரிகள் கேட்கிறார்கள். கிராம அதிகாரிகள் கணக்குக் கொடுக்கிறார்கள். அவர்கள் அப்படிக் கணக்குக் கொடுக்கின்ற நேரத்தில் ஒரு எக்கர், கால் எக்கர் நிலங்களைக்கூடச் சேர்த்துக்கொடுத்துவிடுகிறார்கள். ஐந்து ஆயிரம் எக்கர் நிலத்திலே பயிர் ஏறியிருக்கிறது என்றால், ஒரு எக்கர் நிலத்தில் எவ்வளவு மூட்டை நெல் விளைகிறது என்று கணக்கிட்டு அதன்மூலம் அந்த 5,000 எக்கர் நிலத்திலே எவ்வளவு நெல் கொள்முதல் செய்யலாம் என்று அதிகாரிகள் கணக்கிட்டு அந்த முறையிலே அந்த மாவட்டத்தின் லெவி அளவை நிர்ணயித்து விடுகிறார்கள். அந்த அளவிலேதான் கொள்முதல் செய்துதீரவேண்டுமென்பதால் கீழே உள்ள அதிகாரிகள் வட்டத்திலே உள்ள தாசில்தார் அந்த முறையிலே தான் லெவி செய்ய முன்வருகின்றார். இடையிலே ஏற்படுகின்ற நிலையை

அவர்கள் மறந்துவிடுகிறார்கள். நட்ட உடனே நட்ட நிலம் எல்லாம் விளைந்துவிடும் என்று அல்லது நினைக்கின்ற அளவுக்கு விளைந்து விடும் என்று தவறான எண்ணம் கொண்டுவிடுகிறார்கள். தண்ணீர் இல்லை, பூச்சி அடிக்கிறது இவற்றையெல்லாம் எண்ணாமலேயே கூட கணக்கிட்டுவிடுகிறார்கள். தண்ணீர் இல்லாததால் விளைச்சல் குறைந்து விடுகிறது. பூச்சி அடிப்பதால் விளைச்சல் குறைந்து விடுகிறது. இருபது மூட்டை விளையலாம் என்று நினைக்கின்ற நிலத்தில்கூட இந்தக் காரணங்களால் 10 மூட்டைதான் விளைகின்றது. ஆகவே, நாற்று நட்ட நேரத்திலே நிலத்திலே இருக்கின்ற விளைச்சல் அறுவடை நேரத்திலே குறைந்துவிடுகிறது. அவர்கள் கணக்குப் பிரகாரம் 5 ஆயிரம் ஏக்கரில் பயிர் ஏறியிருக்கிறது என்ற கணக்கில் ஒரு ஏக்கருக்கு 20 மூட்டை என்றால், 5,000 ஏக்கருக்கு எவ்வளவு விளையும், எவ்வளவு கொள் முதல் செய்யவேண்டுமென்ற முறையிலே பார்த்து, மேலே இருக்கிற அதிகாரிகள் கீழே இருக்கிற அதிகாரிகளுக்கு உத்தரவிடுகிறார்கள். ஒரு இடத்திலே கேள்விப்பட்டேன். மேலே இருக்கிற அதிகாரி, கீழே இருக்கிற ஒரு அதிகாரியைப் பார்த்து "ஏன் போட்ட அளவுக்குக் கொள் முதல் செய்யவில்லை? உதிய மரம் போல் நிற்கிறாயே, உனக்கேன் இந்த வேலை? இந்த வேலையை விட்டுவிட்டு நீ போய் விடலாமே?" என்ற அளவிலே திட்டிய காரணத்தினாலே அங்குள்ள அதிகாரிகள் கிராமங்களிலே சென்று விவசாயிகளை எந்த அளவுக்குத் துன்புறுத்த முடியுமோ அந்த அளவுக்கு துன்புறுத்துகின்றார்கள். அவர்கள் குதிரிலே நெல் இருக்கிறதா, வைக்கோல் போரிலே நெல் இருக்கிறதா என்று எல்லாம் பார்க்கிறார்கள். சீல் வைக்கிறார்கள், பூட்டை உடைக்கிறார்கள். ஆகவே, இந்த அளவுக்கு விவசாயிகளை துன்புறுத்துகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதைப்பற்றி அதிகாரிகளிடம் சொன்னால் அவர்கள் நாங்கள் என்ன செய்ய முடியும் என்ற வகையிலே கூறி உபரி மாவட்டம் என்று சொல்லி கொள்முதல் செய்துவிடுகிறார்கள். நாங்கள் இந்த நிலைமைகளை சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறோம்.

என்னுடைய மாவட்டம் உபரி மாவட்டம். என்னுடைய வட்டம் செய்யாறு உபரி வட்டம்தான். அப்படியிருந்தும் அங்கேயிருக்கக் கூடிய மக்களுக்கு அரிசி கிடையாது. கிராமங்களிலே மார்க்கெட்டபிள் சர்ப்ளஸ் என்று கொள்முதல் செய்துவிடுவதால் அங்கே இருக்கின்ற நிலமற்ற ஏழைகள், விவசாயிகள் அரிசி கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள். இந்த நிலையிலே அங்கே திருவொற்றியூருக்கு நாற்பது மூட்டைகள் கொடுக்கவேண்டுமென்று கலெக்டரிடம் கேட்கப்பட்டது. ஆனால் 10 மூட்டைகள்தான் கொடுக்க முடியும் என்று ஆர்.டி.ஓ. அவர்கள் சொல்லுகிறார்கள். ஏன் இந்த நிலைமை? எங்களுடைய தலையெழுத்தா? எங்களுடைய மக்களுக்கு ஏற்கனவே 40 போதாது என்றாலும்கூட அந்த அளவுக்குக் கூட கொடுக்க முடியாது, 10 மூட்டைதான் கொடுக்க முடியும் என்று சொன்னால், எப்படி நிலைமை சீர்படும்? எங்களுடைய மாவட்டத்திலிருந்து வெளி மாவட்டங்களுக்குக் கொண்டுபோகிறார்கள், ஆனால் எங்களுக்கு அரிசி கிடைப்பதில்லை. இதற்கெல்லாம் காரணம்

[புலவர் கா. கோவிந்தன்] [9th November 1966

இந்தச் சர்க்காரின் கொள்முதல் செய்கின்ற கொள்கையிலே உள்ள குறைபாடுகள்தான். ஆகவே இதையெல்லாம் மாற்றியமைக்க
11-00 a.m. வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* **திரு. சா. கணேசன்** : கனம் சபா நாயகர் அவர்களே, ப்ரொக்யூர்மென்ட் என்று சொல்லுகிற கொள்முதல் கட்டாயம் அல்ல என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டே வந்திருக்கிறார்கள் ஆட்சியிலுள்ளவர்கள். நேற்றுக் கூட நம்முடைய மதிப்புக்குரிய கனம் முதலமைச்சர் அவர்கள் 'உபரியைத்தான் கொள்முதல் செய்கிறோம். அவர்கள் விற்கக் கூடியதைத்தான் கொள்முதல் செய்கிறோம்' என்ற கருத்து புலப்படும்படியாகத் தெரிவித்தார்கள். அது அவர்களுக்கு ஆங்காங்குள்ள அதிகாரிகள் கொடுத்த நிலைமைக்கு மாறான செய்தியாக இருக்கலாம். ஆனால், அது முற்றிலும் தவறானது; உண்மைக்கு மாறுபட்டது என்பதை நிரூபிக்கின்ற பொறுப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன். பெயர் கட்டாயக் கொள்முதல் என்று இல்லாவிட்டாலும் நிலை முழுக்க முழுக்க கட்டாயக் கொள்முதலாகத்தான் இருக்கின்றது. ஆறு செண்ட் நிலமுள்ளவர்களுக்கு, அதிலும் தண்ணீர் செம்மையாகப் பாயாத பகுதியில் வாழ்பவர்களுக்கு என்ன உற்பத்தி கிட்டியிருக்கக் கூடும் என்பதை நாம் வெகு சுலபமாக உணர்ந்து கொள்ள முடியும்.

என்னுடைய கையிலே கிட்டத்தட்ட 40 சீட்டுகள் வைத்துக் கொண்டிருக்கிறேன். ஜெயங்கொண்டம் தாசில்தார் ஆபீசில் இருந்து வந்தவை. உடையார்பாளையம் தாலுகா, திருமானூர் கிராமத்தில் இருக்கும் பஞ்சநிவாரணத்திற்கு "நீங்கள் திருமானூர் கிராமத்தில் 0.06 ஏக்கர் நிலத்தில் நெல் சாகுபடி செய்த வகையில் சர்க்காருக்கு ஒரு மூட்டை நெல் லெவியாக அளிக்க வேண்டும்; நீங்கள் மேற்படி மூட்டைகளை அறுவடையான மூன்று தினங்களுக்குள் கொள்முதல் செய்வதற்கு திருமானூர் அசெம்பிளிங் சென்டரில் கொண்டுவந்து அளிக்கவேண்டும்" என்ற ஒரு உத்தரவு. ஆறு செண்ட் நிலத்தில் என்ன விளையும்? அதிலே விளையக்கூடியது அவனுக்கே போதாது; அவன் குடும்பத்திற்கே போதாது. இந்த ஆறு செண்ட் நிலத்தை மட்டும் வைத்துக் கொண்டு அவன் வாழ்ந்து விட முடியாது. வேறு கூலி வேலை செய்தோ அல்லது வேறு விதமான தொழில்கள் செய்தோதான் அதற்கு மேல் வேண்டிய, வாழ்க்கைக்குத் தேவையான பண்டங்களை வாங்கிப் பயன்படுத்தித் தன்னை வழிப்படுத்திக் கொள்ளுகிறான். இது மாதிரி பலருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. "ஐம்பது செண்டுக்கு மேற்பட்டு வைத்திருப்பவர்களிடமிருந்து இம்மாதிரி தங்கள் பகுதியில் கொள்முதல் செய்யப்படுகிறது" என்று திரு. நல்லசிவம் அவர்கள் கூறினார்கள். இங்கு நிலை அதுவல்ல. இப்போது வைத்திருப்பது கூட திருச்சி ஜில்லாவைப் பொருத்த வரைதான். 78 செண்டுக்கு 9 மூட்டை, 90 செண்டுக்கு 10½ மூட்டை, 58 செண்டுக்கு 7 மூட்டை, 27 செண்டுக்கு 3 மூட்டை என்றெல்லாம் இருப்பதை நாம் காண்கின்றோம். மூன்று ஏக்கர் 84 செண்டுக்கு 46 மூட்டை. இதுதான் என்னிடம் இருப்பதிலே அதிகப்படியான ஏக்கரேஜ் பற்றிய ஒரு

9th November 1966] [திரு. சா. கணேசன்]

புள்ளிவிவரம். இதை மனத்திலே கொண்டால், இது கடுமையானது மட்டுமல்ல கொடுமையானதும் கூட என்பதை நான் தெளிவு படுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

இன்னொரு அற்புதமும் அங்கே நடந்திருக்கிறது. மாரிமுத்துப் பிள்ளை என்பவருக்கு 4 ஏக்கர் நிலம் உண்டு. அவர் பயிர் செய்ததிலே சர்க்காருடைய திட்டப்படி—சர்க்காருடைய திட்டப்படி என்று சொல்வதுகூடத் தவறு—அதிகாரிகளுடைய விருப்பப்படி கொடுத்தது 26 மூட்டை. ராமசாமி கவுண்டர் வேளாண்மை செய்தது ஒரு ஏக்கர். அவர் அளந்து கொடுத்தது 8 மூட்டை. இன்னொருவர் தொப்புளான் மூப்பனார். அவர் 6 செண்ட் நிலத்தில் விவசாயம் செய்திருக்கிறார். அவர் கொள்முதலுக்கு கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறார். அவர் வீட்டுக்குப் போய் அவர்கள் உணவுக்கு அல்லது விதைக்கு என்று வைத்துக் கொண்டிருந்த நெல் குதிருக்கு அரசாங்கம் சீல் வைத்திருக்கிறது. இந்த மாதிரி நிலைமைக்கு பலர் ஆளாகியிருக்கிறார்கள். இதிலே மேலே கூறிய மூன்று பேரை நான் குறிப்பிட்டுச் சொல்லுகிறேன். அவர்கள் தங்கள் வீட்டுக்குள் செல்ல அனுமதிக்கப்படவில்லை. இதை நிரூபிக்கும் பொறுப்பை மனப்பூர்வமாக நான் ஏற்றுக்கொள்கிறேன் என்பதைத் தங்கள் மூலமாக அமைச்சரவைக்குப் புலப்படுத்திக் கொள்கிறேன். விவசாயி விளைவித்ததை அப்படியே விற்றுவிட வேண்டுமென்றால் நிலைமை என்ன ஆகும் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். சாப்பாட்டுக்காக மட்டுமல்ல, வயலில் இறங்கிப் பாடுபடுபவர்கள் இன்று கூலியை ரொக்கமாகப் பெற விரும்பவில்லை. நெல்லாகத்தான், உழவுக் கூலியைப் பெற விரும்புகிறார்கள். இதற்கெல்லாம் கொடுக்கவேண்டும். அடுத்து, விதைக்காக என்று ஓரளவு கையிலே வைத்துக் கொண்டிருக்க வேண்டும். இவற்றையெல்லாம் நாம் கவனிக்க வேண்டும். அதுவும் அனுமதிக்கப்படவில்லை. ஆறு செண்ட் நிலக்காரனுடைய நெல் குதிரைப் போய் சீல் வைக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. இது நியாயமா ? அறமா ? பயன் உள்ளதா ?

இன்னொரு வேடிக்கை, அவர்கள் பூரா நிலத்திலும் பயிர் செய்யவில்லை. 'இந்த ஆண்டு புது வாய்க்காலில் தண்ணீர் விடப்படமாட்டாது' என்று ரெவின்யூ அதிகாரிகள் ஏற்கனவே அறிவித்துவிட்ட காரணத்தால் ஒவ்வொருவரும் தங்களுக்கு உள்ள நிலத்தில் கால் பாகம், அரைக்கால் பாகத்தில்தான் உழவு செய்திருக்கிறார்கள். கிடைத்த நீரைக் கொண்டு பயிர் செய்திருக்கிறார்கள் இந்த ஆண்டு மழை நன்றாகப் பெய்து விட்டது. முழு நிலத்திலும் பயிர் செய்யலாம் என்ற நம்பிக்கை இருக்கிறது. இந்த நிலையில் இவர்களுக்கு விதை நெல் வேண்டாமா என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும். இப்பொழுதுள்ள நிலையில் ஒரு ஏக்கருக்கு அவர்களுக்குத் தற்போது கிடைத்திருப்பது பத்து அல்லது பன்னிரண்டு மூட்டை நெல்தான். இந்த நிலைமையில் நெல் குதிரை சீல் வைக்கக்கூடிய நிலைமை வருமானால், விவசாயிகள் எல்லாம் திருடர்களாக, கொள்ளைக்காரர்களாக கணிக்கப்படுகிற நிலைமை வருமானால் அது நாட்டுக்கு நன்மையா, மக்களை மதிக்கின்ற ஒன்றாகுமா என்பதையும்

மனத்தில் கொள்ளவேண்டும். விவசாயிகள் வேதனையோடு மனம் வெறுத்துப் பேசுகின்ற சொற்களை நான் எடுத்துக் கூற விரும்பு கிறேன். 'இந்த ஆண்டு சம்பா விதைக்கவே போவதில்லை' என்று கூறுகிறார்கள். ஆத்திரத்தில் இப்படிக் கூறினாலும் அவர்கள் பிறகு விதைக்கக்கூடும். ஆனால் உள்ளம் வெறுத்துக் கூறக்கூடிய நிலைமை இருக்கிறது. உணவு தானியப் பஞ்சம் ஏற்பட்டிருக்கும் இந்த நேரத்தில் உழுபவனுடைய மனம் உடைந்து, கசந்து, வெறுத்து விரக்தியாகப் பேசக்கூடிய நிலைமையை உண்டாக்குவோமானால் அது ஆட்சிக்கு நல்ல பெயரைத் தரமாட்டாது, என்பது மட்டு மில்லை, நாட்டிற்கும் நல்ல பலனைத் தரமாட்டாது. இவ்வளவு ஆதார பூர்வமாக நிரூபித்த பிறகு இதன் மீது தக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டு விவசாயிகள் மேலும் கஷ்டப்படாமலும், மா நிலம் உணவுத் திண்டாட்டத்திலிருந்து, உணவுப் பற்றுக்குறையி லிருந்து கணிசமான அளவுக்கு விடுபடவும் அரசு இதை முதற் கடமையாகக் கொள்ள வேண்டும். கனம் முதலமைச்சர் அவர் கள், அந்தத் துறை அமைச்சர் அவர்கள் எல்லாம் தலையிட்டு ஆங் காங்குள்ள அதிகாரிகள் அத்து மீறிய செயலில் ஈடுபடாமல் செய்ய வேண்டும். இந்த அசெம்பிளியின் இறுதி நாளிலே ஆளும் கணத் தவர்களுக்கு விடுக்கின்ற வேண்டுகோளாக இதைச் சொல்லு கிறேன். இதிலே கவனம் செலுத்தி, இந்தக் கொடுமைகள் அகற்றப் பட்டு நன்மை வளர வழிவகை செய்யவேண்டுமென்று மேலும் வற்புறுத்திக் கூறி என் உரையை முடிக்கின்றேன். நான் முன்னே கூறிய அனைத்துக்கும் பொறுப்பேற்று நிரூபிக்கத் தயாராக இருக் கிறேன் என்பதையும் மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

* **கனம் திரு. எம். பக்தவத்சலம்** : கனம் சபாநாயகர் அவர்களே, முக்கியமாக இந்த விவாதத்தைத் தொடங்கி வைத்த கனம் உறுப் பினர் திருச்சியில் நடைபெறுகின்ற கொள்முதலைப் பற்றிக் குறிப் பிட்டார்கள். இப்போது கொள்முதல் கொள்கையைப் பற்றி விவர மாக விளக்க வேண்டிய அவசியமில்லையென்று கருதுகிறேன். விலை நிர்ணயிக்கப்பட்ட பிறகு விலை அதிகமாக ஏறிக் கொண்டு வரு கிறது என்பதைக் கண்டு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு மீண்டும் விலை நிர்ணயிக்கப்பட்டது. நியாயமான விலையாக நிர்ணயிக்கப் பட்டது. அதற்கு மேல் விலை ஏறக்கூடாது, விற்கக் கூடாது என்ற நிலையில் அரசாங்கமே ஓரளவு கொள்முதல் செய்து அதை எங்கு வேண்டுமோ அங்கு வினியோகிக்க வேண்டுமென்ற வகையிலேதான் அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகிறது.

இதற்கு முன்பு குறைந்தவிலையில், ப்ரொக்யூர்மென்ட் செய்வதை நியாயவிலைக் கடைகள் வைத்திருந்தபோது மில்காரர்களோடு அல்லது ஹோல்சேலரோடு அல்லது வியாபாரிகளிடத்திலோ என்ன விலை உண்டோ அதற்குக் குறைத்துக் கேட்டு அதில் ஓரளவு வாங்கி நியாயவிலைக் கடைகளில் குறைந்த விலையில் விற்றுக் கொண்டிருந்தோம். அதற்கப்புறம், விலை ஏறிக்கொண்டு போகிறது, மக்களுக்கு நிவாரணம் இல்லை, குறைந்த விலைக்கு கேட்டு வாங்கு வது மற்றதை அதிக விலைக்கு விற்று விடுகிறார்கள். அதனால் விலை ஏறுகிறது என்பதையெல்லாம் கவனித்த பிறகுதான் விலையை

9th November 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

நிர்ணயித்து நியாயமான கட்டுப்படியான விலையை விவசாயி களுக்கு அளித்து அந்த விலைக்கு வாங்கவேண்டும், அந்த விலைக்கு மேலே விற்பது தவறு, அந்த விலைக்கு அரசாங்கமும் ஓரளவு கொள்முதல் செய்து விநியோகிப்பது என்ற முறை இப்போது கையாளப்பட்டு வருகிறது. அப்படி அரசாங்கம் வாங்குவது விவசாயிகள் விற்கக் கூடியதுதான், மார்க்கெட்டபிள் சர்ப்ளஸை விவசாயிகள் ஓரளவிற்கு விற்கவேண்டி யிருக்கிறது. விற்பதும் கூட எல்லாவற்றையும் வாங்குவதில்லை. ஆனால் கொள்கைப்படி விற்கக் கூடியது எல்லாம் இந்த விலைக்கு மேலே விற்கக் கூடாது, அந்த விலைக்கு வாங்கவேண்டும் என்பதுதான் இப்போது அனுசரிக் கப்பட்டு வருகிறது.

ஆனால், சில அங்கத்தினர்கள் சொன்னார்கள், விலை அதிகமாகக் கிடைக்கவேண்டும், எங்களுக்கு கட்டுபடியாகவில்லை. விவசாயச் செலவுகள் அதிமாக இருக்கிறது, அதிகமாக விற்கலாம் என்று சொல்கிறார்கள். எல்லாவற்றையும் ஆராய்ந்துதான் விலை நிர்ணயிக் கப்பட்டிருக்கிறது. விவசாயிகளை மேலும் ஊக்குவிக்கவேண்டு மென்றுதான் போனஸ், இன்ஸென்டிவ் போனஸ், இப்போது குறுகியகால சாகுபடி விளைச்சலுக்காக மேலும் க்விண்டால் ஒன்றுக்கு மூன்று ரூபாய் கொடுக்கிறது என்று அரசாங்கம அளித்துக்கொண்டு வருகிறது.

லெவி என்று சொல்கிறார்கள். டெக்னிக்கலாக எடுத்துக் கொண்டு இது லெவி, ஓரளவிற்கு கொடுத்து விட்டு மற்றதை விற்றுக்கொள்கிறது என்ற கருத்தில் சில அங்கத்தினர்கள் சொன் னார்கள். அதல்ல, விலை நிர்ணயிக்கப்பட்டது என்றால் எல்லாவற் றையும் பரிசிலனை செய்து விவசாயிகளுக்கு கட்டுபடியாகக் கூடிய விலை நிர்ணயிக்கப்பட்டது என்றால் அதற்கு மேலே விற்கக் கூடாது என்பதுதான். ஆகவே, அப்படி அதிக விலைக்கு விற்றுக்கொண்டு போனால் விலைவாசியைக் குறைக்கமுடியாது. விலைவாசியைக் குறைக்க ஒரு நடவடிக்கையாக இது எடுக்கப்பட்டு வருகிறது. லெவி என்றால் 'ரஃப் அண்ட் ரெடியாக' சுமாராக இவ்வளவு கொடுக்கலாம் என்று போடுகிறோமே தவிர அப்படிக் கொடுத்து விட்டு மீதியை எப்படி வேண்டுமானாலும் விற்றுக்கொள்ளலாம் என்பதல்ல.

எவ்வளவு கொள்முதல் செய்வது என்பது ஆங்காங்குள்ள பயிருக்குத் தகுந்தபடி, ஜில்லாவிற்குத் தகுந்தபடி, பிராந்தியத் திற்குத் தகுந்தபடி நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. திருச்சியில் 12 மூட்டை என்று சொன்னார்கள். உண்மைதான், 30, 25, 20 என்று விளைகிறது. பலவிதமாக விளைகிறது. ஏ.டி.டி 27 நன்றாக விளைந் திருக்கிறது. 'பம்ப்செட்ஸ்' வைத்து நீர்ப்பாசனம் செய்கின்ற இடத்தில் விளையாது என்று சொன்னார்கள். அங்குதான் அதிக மாக விளைகிறது. காவேரிப் பாசனத்தைவிட பம்ப் செட்ஸ் வைத்து பயிர் செய்கின்ற இடத்தில்தான் அதிகம் விளைகிறது. அரசாங்கம் கொள்முதல் செய்வது தங்களிடம் இருப்பதை அரசாங் கம் அல்லது அரசாங்கம் நியமித்த ஏஜெண்டினிடம் கொடுப்பது என்பது கட்டாயந்தான். ஆனால் இவ்வளவுதான் கொடுக்க

[திரு. எம். பக்தவத்சலம்] [9th November 1966

வேண்டும் என்பதை எல்லாம் பார்த்துச் செய்கிறார்கள். எவ்வளவு கொடுக்கத்தகும், விதைக்கு வேண்டியது, உணவுக்கு வேண்டியது, தொழிலாளர்களுக்குக் கொடுக்கவேண்டியது என்று எல்லாவற்றையும் வைத்துப் பார்த்துத்தான் செய்கிறார்கள். எங்கேயாவது அதிகமாக போட்டிருந்தால் கலெக்டர் அதைக் கவனித்து நியாயமாக எவ்வளவு தூரம் வாங்கலாம் என்பதை நிர்ணயிக்கிறார்கள். ஒரு ஏக்கருக்குக் கீழே கட்டாயப்படுத்துவதில்லை என்பது உண்மைதான். ஆனால் விற்கக் கூடியவர்கள் ஒரு ஏக்கருக்கு கீழே இருக்கிறவர்களும் விற்கலாம். அவர்களும் தங்களுக்கு வேண்டிய தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள விற்க முடியும். அவ்வாறு அவர்கள் கொடுக்கலாம் என்று சொல்கிறார்கள். கொடுக்கவில்லை என்றால் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவில்லை. ஆனால் தான்யம் இருந்தால் அதைக் கொள்முதல் செய்யவேண்டுமென்று அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்கிறார்கள். ஐந்து ஏக்கருக்கு உள்பட நிலங்களில் கொள்முதல் செய்யவேண்டாம் என்றுகூட கருத்து தெரிவிக்கிறார்கள். திருச்சி ஜில்லாவை எடுத்துக்கொண்டால் ஐந்து ஏக்கருக்கு மேற்பட்ட நிலம் என்பது மொத்தம் விளைச்சலில் 28 விதம்தான் தரும். இருபத்தியெட்டு விதம் ஐந்து ஏக்கருக்கு மேற்பட்டவர்களிடம் மட்டும் கொள்முதல் செய்து விடுவது என்றால் தமிழ் நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்யமுடியாது. மொத்தத்தில் தமிழ்நாட்டின் சராசரியைப் பார்த்தால் ஐந்து ஏக்கருக்கு மேற்பட்ட ஹோல்டிங் 26 சத விகிதம்தான் தேறுகிறது. கால் பங்குதான் கொள்முதல், மார்ஜினல் சர்ப்ளஸ் கால் பங்குதான் கொள்முதல் செய்ய முடியும். அப்படி கால் பங்கு கொள்முதல் செய்தால் வேண்டியவர்களுக்கு போதிய அளவிற்கு விநியோகிக்க முடியாமல் போய்விடும்.

1964-ல் என்ன நடந்தது? அப்போது இம்மாதிரியெல்லாம் கொள்முதல் செய்யவில்லை. வியாபாரிகளிடமே விடப்பட்டது. விலை நிர்ணயிக்கப்பட்டது. அந்த விலையைவிட அதிகமான விலைக்கு விற்கவேண்டுமென்ற நோக்கத்தோடு முக்கியமாக வியாபாரிகளால், வட ஆற்காடு, தென் ஆற்காடு, செங்கல்பட்டு என்று எல்லா ஜில்லாக்களிலிருந்தும் இந்த மாநிலத்திற்கு அப்பால் அரிசி கொண்டு போகப்பட்டது. சாதாரணமாக அப்படிப் போவதில்லை. தஞ்சை, திருச்சியில் இருந்துதான் போகும். ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் வியாபாரிகளிடம் இருந்து பிடித்து அதிக விலை கிடைக்கிறது என்று வெளியே அனுப்பி விட்டார்கள். அதனால்தான் பஞ்சம் ஏற்பட்டது 1964-ல். இப்போது கொடிய பஞ்சம், கடினமான பஞ்சம் என்றெல்லாம் சொல்வது, அதைச் சொல்பவர்களுக்கு அலங்கார வார்த்தையாக இருக்கிறது. ஆனால், இன்று அப்படி ஒன்றுமில்லை. தஞ்சையில்கூட பஞ்சம் என்று பேசினார்கள் திரு. நல்லசிவம் அவர்கள். அன்றைக்கு இருந்தது அரிசி. அரிசி இருந்தும் ஒரு பஞ்ச நிலை ஏற்பட்டது. அதைத் தவிர்க்கும் நோக்கத்தோடு கொள்முதல் திட்டம் கையாளப்பட்டு வருகிறது. ஓரளவிற்குத்தான் கொள்முதல் செய்யப்படுகிறது. அதை வைத்துத்தான் இப்போது விநியோகிக்கப்படுகிறது.

9th November 1966] *[திரு. எம். பக்தவத்சலம்]*

இப்போது திருச்சியில் கொள்முதல் செய்யப்படுகிறது என்றால் அதை மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக்கொண்டு போவது என்பதில்லை வட ஆற்காடு மாவட்டத்திலிருந்து எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு போவதில்லை, தென் ஆற்காடு மாவட்டத்தில் இருந்து எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு போவதில்லை. ஆனால் பெரும் பகுதி கொள்முதல் செய்யப்படுவது அந்தந்த மாவட்டத்தில்தான் வைக்கப்பட்டிருக்கிறது. அந்த மாவட்டத்தில் தேவை எப்போது ஏற்படுகிறதோ அதைப் பூர்த்தி செய்யவேண்டுமென்ற நோக்கத்தோடு அந்த அந்த மாவட்டத்திலேயே வைக்கப்பட்டிருக்கிறது. கொள்முதல் செய்யப்பட்டது ஐயாயிரம் டன் இருக்கும் திருச்சியில். அது பெரும்பாலும் திருச்சியின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காகத்தான் கையாளப்பட்டு வருகிறது.

எங்கு பார்த்தாலும் அரிசிப் பஞ்சம் ஏற்பட்டு விட்டது, அரிசி கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். மழை பெய்வதற்கு முன்பு, காவேரியில் தண்ணீர் வருவதற்கு முன்பு தான்யம் வைத்துக் கொண்டிருந்தவர்கள்கூட அதை வெளியிடத் தயங்கினார்கள். அப்போது அரிசிப் பற்றாக்குறை ஏற்பட்டது. ஆனால், அப்போது அரசாங்கம் அதை சமாளித்து எங்கெங்கு கிடைக்குமோ அங்கிருந்து அரிசி பெற்று, எங்கு வேண்டுமோ அங்கெல்லாம் விநியோகித்து வந்தது. ஆனால் இப்போது நிலைமை சீர்பட்டு இருக்கிறது. மழை வந்த பிறகு, காவேரியில் தண்ணீர் வந்த பிறகு நிலைமை சீர்ப்பட்டிருக்கிறது. இன்பார்மல் ரேஷனிங் என்று வைத்து எங்கெங்கு வேண்டுமோ அங்கு கொடுத்துக்கொண்டு வருகிறோம். சென்ற மாதம் 29-ம் தேதி வரையில் அந்த வாரத்தில் 1,400 டன் அரிசி விற்கப்படும் என்றிருந்தது—அப்படி வைத்திருந்து—பின்னால் பார்த்தால் அந்த வாரம் மழை பெய்துவிட்டதால் 700 டன்தான் விற்கப்பட்டிருக்கிறது. அதிலிருந்து அரிசிப் பற்றாக்குறை அதிகம் என்பதில்லை, அரிசி கிடைக்கவில்லை என்ற நிலை இல்லை. அந்தநிலை மாறியிருக்கிறது என்பதை கனம் அங்கத்தினர்கள் உணருவார்கள். இப்போது கிடைக்கிற அரிசியை கொள்முதல் செய்து அதை எங்கெங்கு வேண்டுமோ, மாநிலத்திற்குள்ளே எங்கெங்கு வேண்டுமோ அங்கு அதை விநியோகிக்க வேண்டியிருக்கிறது. அப்படி விநியோகிக்கவில்லை என்றால் விலை இன்னும் ஏறுகிறது, சிலருக்கு அரிசி கிடைக்காமலேயே போய் விடலாம். ஒருபக்கத்தில் கொள்முதல் செய்யக் கூடாது என்று சொல்லி இன்னொரு பக்கத்தில் அரிசி இல்லை என்று சொன்னால் அது ஒன்றுக்கு ஒன்று முரண்பாடாக இருக்கிறது. விவசாயிகள் துன்புறுத்தப் படுகிறார்கள் என்றெல்லாம் சொல்லலாம். ஆனால் நான் சொல்கிறேன், நான் அடிக்கடி பெருமையோடு பாராட்டுவதுபோல் விவசாயிகள் நல்லமுறையில் ஒத்துழைக்கிறார்கள். நம்முடைய தமிழ்நாட்டிலே இருக்கிற விவசாயிகளைப்பற்றி நான் பெருமைப் படுகிறேன். அவர்கள் ஒத்துழைப்பால் தான் நிலைமையைச் சமாளித்துக்கொண்டு வருகிறோம். கொள்முதல் ஆகிறது. தொல்லை இல்லாமல், துன்புறுத்தப்படாமல் செய்கிறோம். சிலர் ஏமாற்றப் பார்க்கிறார்கள். பெரிய விவசாயிகளை விட்டு விடுகிறோம், சிறிய விவசாயிகளிடமிருந்து வாங்குகிறோம் என்று சொன்னார்கள்.

பெரிய விவசாயிகளிடம் வற்புறுத்தி வாங்கப்படுகிறது. இப்போது சொல்லுவதெல்லாம் அவர்கள் சொல்லுவதுதான்; சிறிய விவசாயிகள் பெயரில் சொல்லுகிறார்கள். சிலர் இதை ஒரு ஜீவனமாகவே வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கங்கே பணம் வசூல் செய்வது, தந்தி கொடுப்பது, இங்கே வந்து பேசுவது என்று வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களைப் பார்த்தாலேயே தெரிகிறது. சிறிய விவசாயிகள் துன்புறுத்தப்படுகிறார்கள். அவர்களிடம் 'கட்டாயப் படுத்தி நெல் கொள்முதல் செய்கிறார்கள் என்று சொல்லுகிறார்களே இவர்கள் யாருக்காக வருகிறார்கள், சிறிய விவசாயிகளுக்காகக் கண்ணீர் விடுவதாகச் சொல்லுகிறார்களே இவர்கள் யாருக்காக வருகிறார்கள் என்பதெல்லாம் எனக்குத் தெரியாமல் இல்லை.

இப்போது நிலைமையைச் சமாளித்துக்கொண்டுதான் வருகிறோம். வேறு வேறு விலை இருக்கிறது என்றால், ஆங்காங்கு இருக்கிற நிலைமையையொட்டி இருக்கிறது. திருச்சியில் எடுத்துக்கொண்டால், புதுக்கோட்டையில் குறைவாக இருக்கிறது. கரூரிலிருந்து கோயம்புத்தூருக்குப் போவதால் அங்கு கொஞ்சம் அதிகமாக இருக்கிறது. ஆனால், விலை குறைந்துகொண்டுதான் வருகிறது. மழை பெய்த பிறகு மார்க்கெட்டில் விலை குறைந்திருக்கிறது.

வெளியிலிருந்து அரிசி வரவழைக்கவேண்டும் என்று கனம் அங்கத்தினர் நல்லசிவம் தெரிவித்தார்கள். எங்கிருந்து வரவழைப்பது? பீஹார், யு.பி. ஆகிய மாநிலங்களில் கடுமையான பஞ்ச நிலை ஏற்பட்டிருக்கிறது என்பது உண்மைதான். அரிசி சாதாரணமாகக் கிடைப்பதில்லை. உலகத்திலேயே பற்றாக்குறை இருக்கிறது. அப்படி வெளியிலிருந்து வரவேண்டிய நிமித்தமும் இல்லை. இப்போது நல்லவேளையாக, நமக்கெல்லாம் நம்பிக்கை அளிக்கக் கூடிய வகையிலே மழை நன்றாகப் பெய்திருக்கிறது. சில பேர்களுக்கு அது ஏமாற்றமாக இருந்தாலும் இருக்கலாம். மொத்தத்தில் மழை பெய்திருக்கிறது; ஆங்காங்கு புயலால் ஓரளவு சேதம் ஏற்பட்டிருக்கிற போதிலும், பொதுவாக நன்றாக விளைந்திருக்கிறது: மேலும் நன்றாக விளையும் என்ற நம்பிக்கை இருக்கிறது. ஆகையினாலே வெளியிலிருந்து அரிசி வரவழைக்கவேண்டிய அவசியம் இல்லை. இதைக் கட்டுப்படுத்த வேண்டுமென்றால் ஓரளவு கொள்முதல் செய்து நாம் வைத்துக்கொண்டு எங்கு எங்கு விநியோகிக்கவேண்டுமோ அங்கு அங்கு விநியோகிக்க ஏற்பாடு செய்யவில்லை என்றால், அப்போதுதான் தொல்லை ஏற்படும்; அப்போதுதான் மக்கள் பாதிக்கப்படுவார்கள். அப்போதுதான் அரிசிப் பஞ்சம் ஏற்படும். இதைத் தடுக்கத்தான் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுகிறோமே தவிர, விவசாயிகளுக்குக் கொல்லை கொடுக்கும் வகையில் ஒன்றும் செய்யவில்லை. இதை விவசாயிகளே உணர்வார்கள், பாராட்டுவார்கள்.

நான் சற்று முன்பு கூறியது போல. சௌகரியமாக உள்ள விவசாயிகள், இன்னும் அதிக விலை வெளியில் இருக்கிறதே, அதை என் அங்கே விற்கக்கூடாது, கொள்முதல் செய்கிறார்களே, என்ற

9th November 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

எண்ணம் ஏற்பட்டு அவர்கள் புகார் செய்கிறார்கள். ஏழை விவசாயிகளின் பெயரால் புகார் செய்கிறார்களே தவிர, மற்றப்படி பொதுவாக தமிழ்நாட்டில் உள்ள விவசாயிகள் நிலைமையை உணர்ந்திருக்கிறார்கள். என்றென்றும் உணவு பயிரிட்டு உற்பத்தி செய்கிறவன் தனக்கு மட்டுமல்ல, மக்கள் எல்லோரையும் வாழ்விக்கிறவன் இந்த உழவன் என்ற பெருமை என்றென்றும் உண்டு. அந்தப் பரம்பரையில் வந்திருக்கிற விவசாயிகள் இதை உணர்ந்திருக்கிறார்கள், பாராட்டுகிறார்கள், ஒத்துழைக்கிறார்கள். ஆனால், ஏதோ ஒரு முறை ஏற்படுத்தவேண்டும். மிகைப்படுத்த வேண்டும் என்ற வகையில் அவ்வாறு மிகைப்படுத்திக் குறை கூறுவது அவர்கள் உரிமைதான். அவர்கள் அவ்வாறு சொல்ல வேண்டுமென்றால் சொல்லலாம்.

இப்போது இருக்கிற நிலையில் நாம் ஜாக்கிரதையாகச் சமாளிக்க வேண்டியிருக்கிறது. அப்படி ஒரு தொல்லை ஏற்படட்டும், அவதி ஏற்படட்டும் என்றால், அது வேறு வகை. ஆனால், அரசாங்கத்திற்கு இருக்கிற நிலைமையில் மக்களுக்கு ஒரு தொல்லையும் அளிக்காமல், துன்புறுத்தாமல், விவசாயிகளை முக்கியமாக ஊக்குவித்து நிலைமையைச் சமாளிக்கவேண்டுமென்றுதான் அரசாங்கம் கவனம் செலுத்திக்கொண்டு வருகிறது. அவ்வாறு சமாளித்துக்கொண்டு வருகிறது.

இன்று வெளி மாநிலங்களிலெல்லாம் ஒரு அவதி ஏற்படுகிறது. அங்கெல்லாம் ஒரு கவலை ஏற்படக்கூடிய நிலை ஏற்படுகிறது என்றால், நாம் உஷாராக இல்லை என்றால் நம் தமிழ்நாட்டையும் பாதிக்கும். அதற்கெல்லாம் இடம் கொடாமல் நடந்துகொள்ள வேண்டுமென்றால் என்ன செய்யவேண்டும் என்பதை மக்கள் உணர்கிறார்கள், அவர்கள் அதற்கு உரிய வகையில் நடந்துகொள்ளுகிறார்கள். அரசாங்கம் விவசாயிகளுக்கு எந்த விதத்திலும் தொல்லையை அளிப்பதற்குச் சிறிதும் இடம் கொடுக்காது. எங்கும் தவறுதல் நடக்கவே இல்லை என்று சொல்லவில்லை. யாராவது அதிகாரிகள் தவறு செய்திருந்தால் அரசாங்கத்தின் கவனத்திற்கு எப்போது வேண்டுமானாலும் கொண்டு வரலாம். அப்படி அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டால் அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் தயங்காமல் எடுத்துக்கொள்ளும். யாரும் சொல்லிவிட்டு ஆதாரத்தோடு நிரூபித்து விட்டோம் என்று சொன்னால் போதாது. எந்த அங்கத்தினரானாலும் விவரமாக எழுதி அனுப்பினால் விசாரிக்கலாம். தொடர்ந்து நான் இதில் கவனம் செலுத்தி வருகிறேன், விசாரித்து வருகிறேன். கலெக்டர்கள் தங்கள் கடமையைத்தான் செய்கிறார்கள். அனாவசியமாக மக்களைத் துன்புறுத்தும் வகையில் ஈடுபடவில்லை. எந்த அதிகாரி அப்படி ஈடுபட்டாலும் அதற்கு இடம் கொடுக்கமாட்டார்கள். விவசாயிகளே போய் தங்களுக்கு இருக்கிற கஷ்டத்தைச் சொன்னால் அதையும் ஆராய்ந்து நியாயமான முறையை அனுசரிக்க வேண்டும் என்பதுதான் கலெக்டர்கள் அனுசரித்து வரும் முறை.

ஆகவே, இதிலே ஏதோ பயங்கரமான நிலை ஏற்பட்டு விட்டது. தொல்லை ஏற்பட்டுவிட்டது என்றெல்லாம் கனம் அங்கத்தினர் நல்லசிவம் அவர்கள் பேசினார்கள்; அது அவர்கள் எப்போதும் பேசுகிற முறை—அதைப்பற்றி நான் ஆட்சேபிக்கவில்லை—இன்றைக்கு தமிழ்நாட்டில் நிலைமை சீர்பட்டிருக்கிறது என்று சொல்லி என் உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

VII.—DISCUSSION ON THE STATEMENT OF CHIEF MINISTER er CYCLONE HAVOC AND RELIEF MEASURES.

MR. SPEAKER: I want to know how many hon. Members are going to participate in this discussion. (Many hon. Members raised their hands). The time allotted for this discussion is only one hour and I will have to apportion time to many hon. Members who have raised their hands. I do not think I can give more than two or three minutes for each hon. Member.

Now, the hon. Member, Sri Thangavelu, will speak.

திரு. ஆ. தங்கவேலு: மதிப்பிற்குரிய சட்ட மன்றத் தலைவர் அவர்களே, சென்ற வாரம் ஏற்பட்ட கோரப் புயலாலும், கடுமையான மழையாலும் ஏற்பட்ட விளைவு பற்றி விவாதிக்கச் சந்தர்ப்பம் அளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இந்தக் கொடுமையான புயலையும், கடுமையான மழையையும், அதனால் ஏற்பட்டிருக்கக் கூடிய விளைவைப் பற்றியும் நினைக்கிற போதே நெஞ்சம் குமுறுகிறது; வேதனைதான் ஏற்படுகிறது. திண்டிவனம் தாலுகாவிலே ஐப்பசி மாத ஆரம்பத்திலேயே கடுமையான மழை பெய்து ஏரிகளெல்லாம் நிறைந்துவிட்டன. ஏரிக் கரைகளெல்லாம் ஊறி, ஈரமாக இருந்தன. மரங்களுடைய வேர்களெல்லாம் ஊறி இருந்தன. வீடுகள் எல்லாம் கூட பதமாக விழக் கூடிய வகையில் இருந்தன. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், சென்னையில் வீசியதைவிட பதின் மடங்கு அதிகமான வேகத்தில் புயல் வீசியிருக்கிறது. 100-150 மைல்கள் வேகத்தில் வீசிய புயலும் 252 மி.மீ. மழை ஒரே நாளில் மட்டும் பெய்து, அங்கு உள்ள பெரியவர்கள் சொல்கிறபடி இது வரையில் இப்படிப்பட்ட மழையைக் கண்டதில்லை என்பதாகும். "நான்காவது வருஷத்தில் அடித்த காற்று சாதாரணமானதுதான். இப்போது அடித்த காற்றைப் போல் முன்னர் எங்கள் வாழ்நாளில் காணவில்லை. இது கோரக் காற்று" என்று வயது வந்தவர்களெல்லாம் சொல்லும் அளவிற்கு அவ்வளவு சேதத்தை விளைவித்து விட்டது. கூரை வீடு ஒன்றுகூட கிடையாது. அத்தனை கூரை வீடுகளும் நாசமாகிவிட்டன.
11-30 a.m. சென்னை நகரப் பகுதிகளில் எல்லாம் கட்டடங்களாக இருக்கின்ற காரணத்தினால், இங்கே அதனுடைய விளைவு நமக்குத் தெரியவில்லை. ஆனால் குடிசைப் பகுதிகளில் அந்த நிலைமை தெரிகிறது. கிராமப் பகுதிகளில் அதிலும் குறிப்பாக அரிசன மக்கள் வாழக் கூடிய குடிசைப் பகுதிகள், ஏழை மக்கள் வாழக்கூடிய குடிசைப்

பகுதிகளில் குடிசை ஒன்று கூட முழுவதாக இல்லை. அத்தனையும் பியதது எறியப்பட்டுவிட்டன. ஒரு மரம் கூட கிடையாது. ஏரிகள் அத்தனையும் உடைந்துவிட்டன. நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் தென் ஆற்காடு மாவட்டத்தில் 150 ஏரிகள் உடைந்திருப்பதாக அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்கள். 150 ஏரிகள் செஞ்சித் தாலுகாவில் மட்டும் உடைந்திருப்பதாக நேற்று கனம் உறுப்பினர் கோபால் கவுண்டர் அவர்கள் சொன்னார்கள். செஞ்சித் தாலுகாவில் 150 ஏரிகளும், திண்டிவனத்தில் 200-க்கும் மேற்பட்ட ஏரிகளும் உடைந்திருக்கின்றன. அதிலும் பெரிய ஏரிகள், பி.டபிள்யூ.டி. ஏரிகள் 30-க்கு மேற்பட்டும், மைனர் இர்ரிகேஷன் ஏரிகள் 200-க்கு மேற்பட்டும் உடைந்திருக்கின்றன என்று சொன்னால் விவசாயிகளின் எதிர்காலம் என்ன ஆகும். விவசாயிகள் என்ன கலக்கம் அடைந்திருப்பார்கள் என்பதுபற்றி நான் சொல்லத் தேவையில்லை.

தென் ஆற்காடு மாவட்டத்தில் 5,000 குடிசைகள் விழுந்துவிட்ட தாக முதல் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். செங்கற்பட்டு ஜில்லாவில் 90,000 குடிசைகள் விழுந்துவிட்டதாக மதிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அது அமைச்சர் அவர்களுடைய மாவட்டமாக இருப்பதால் அங்கே கணக்கு ஓரளவுக்கு சரியாக எடுத்திருப்பார்கள். அது பற்றி பரவாயில்லை. அந்த அளவுக்கு திருப்திகரம். ஆனால் தென் ஆற்காடு மாவட்டத்தில் திண்டிவனம், செஞ்சி, விழுப்புரம் தாலுகாக்களில் ஒரு குடிசைகூட இல்லை. ஐயாயிரம் என்று சொல்லும்பொழுது ஒரு பூஜ்யம் விட்டுவிட்டார்கள் என்று நினைக்கிறேன். ஐம்பதினாயிரம் குடிசைகள் என்று இருக்கவேண்டும். கல் வீடுகள் கூட விழுந்திருக்கின்றன. இன்னும் ஒரு மணி நேரம் மாத்திரம் புயல் நீடித்திருந்தால், ஒரு கல்வீடுகூட அங்கு இருந்திருக்காது. பிலோமினா பள்ளி என்ற ஒரு பள்ளி அங்கே இருக்கிறது. கிட்டத்தட்ட ரூ. 50,000 மதிப்புக் கட்டடம், அதெல்லாம் சேதம் அடைந்திருக்கிறது. சினிமா கொட்டகைகளின் மீதிருந்த தகடுகள் எல்லாம் இலை போல் பறந்திருக்கின்றன. கம்பங்கள் ஒன்று கூட இல்லை. எந்த அளவுக்கு அந்தப் பகுதிகளில் கொடுமை நிகழ்ந்திருக்கிறது என்பதை நான் அதிகமாக சொல்லத் தேவையில்லை.

வீடூர் அணைக்கட்டு உடைந்திருக்கக்கூடிய நிலைமையைப் பார்த்தால், அங்கே மூன்று பகுதிகள் உடைந்திருக்கின்றன. ஏழு, எட்டு கிராமங்கள் இருக்கிற இடமே தெரியாமல் போய்விட்டன. அநேக விவசாயிகள் தங்களுடைய சொத்துக்கள் பூராவும் இழந்துவிட்டார்கள். வெள்ளத்தினால் அங்கு இருக்கக் கூடிய பம்பு செட்டுகள் முதலியவைகளெல்லாம் மிகக் கடுமையான அளவுக்கு நாசமாக்கப்பட்டிருக்கின்றன. இதையெல்லாம் பற்றி சொல்வது என்றால் இப்பொழுது இருக்கிற நேரம் போதாது. மிகக் கடுமையான விளைவு ஏற்பட்டிருக்கிறது இப்பொழுது அடித்த புயலினால் மட்டும் என்று சுருக்கமாகச் சொல்லிக்கொள்கிறேன்.

[திரு. ஆ. தங்கவேலு] [9th November 1966

இந்த அரசாங்கம் செய்யக்கூடிய நிவாரணம் இன்னும் அதிகமாக இருக்கவேண்டும். இப்பொழுது செய்திருப்பது போதாது. திண்டிவனம் தாலுகாவை பஞ்சப் பிரதேசமாக பிரகடனப்படுத்த வேண்டும். அவர்களுக்கு வேண்டிய நிவாரண உதவிகள் உடனடியாகச் செய்யவேண்டும். இப்பொழுது உதவித்தொகை ரூ. 30, ரூ. 10 கொடுக்கிற ஒரு முறை இருந்துகொண்டிருக்கிறது. அது ஒன்றும் போதாது. அது யானைக்கு பொறி போடுகிறமாதிரிதான். அவர்களுக்கு இன்னும் அதிகமான உதவிப் பணத்தைக் கொடுத்து, அவர்கள் குடிசைகளை புதுப்பிப்பதற்கு வேண்டிய வழிவகைகளை செய்யவேண்டும். வீடு கட்டிக்கொள்வதற்கு கடன் தொகை ரூ. 300 கொடுக்கப்படுகிறது. புயலினால் பாதிக்கப்பட்ட ஜனங்கள் அங்கும் இங்கும் அலைந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் எங்கு போய் மனுக் கொடுக்கவேண்டும், எப்படிக்கொடுக்கவேண்டும் என்று புரியாமல் கஷ்டமான நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, அரசாங்க அதிகாரிகளே, ரெவின்யூ இன்ஸ்பெக்டர் போன்றவர்களே அந்த ஊர்களுக்குச் சென்று கடன் உதவியை மக்களுக்கு அளித்தால் தான் சிரமம் இல்லாமல் இருக்கும். அதிகாரிகள் இதில் அக்கறை காட்டினால்தான் மக்களுக்கு விரைவில் கடன் உதவி கிடைக்குமே தவிர, மற்றபடி 'அவர்கள் வந்து கேட்கவில்லை, அதனால் நாங்கள் பணம் கொடுக்க முடியவில்லை' என்று சொல்வது அவ்வளவு நன்றாக இருக்காது, நியாயமாக இருக்காது. கடன் உதவியை உடனடியாக அளிப்பதற்கு வழிவகைகள் செய்யவேண்டும். கிராமங்களிலும் நகரங்களிலும், வீட்டு வரி, நில வரி முதலியவைகளை வசூல் செய்வதை தள்ளுபடி செய்யவேண்டும், அதற்கு வேண்டிய வழிவகைகள் செய்யவேண்டும். விவசாயிகள் ஏற்கனவே அரசாங்கத்தினிடமிருந்து கடன் வாங்கியிருப்பதை, 2, 3 ஆண்டுகளுக்கு திருப்பி வசூலிக்காமல், கடன் திருப்பிப் பெறுவதை, கடன் வசூலை ஒத்தி வைக்கவேண்டும். இப்பொழுது காலம் தள்ளுவதே கஷ்டமாக இருக்கிறது. அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய கடன் வசதி தாராளமாக இருக்கவேண்டும். உரம், விதை முதலியவைகளை காலா காலத்தில் கொடுத்து ஏழை விவசாயிகளுக்கு உதவி செய்ய வேண்டும். அவர்களுக்கு உணவு, உடைகள் முதலியவைகளெல்லாம் இனமாகக் கொடுக்கவேண்டும். மின்சாரக் கம்பம் ஒரு கம்பம் கூட கிடையாது. எல்லாம் உடைந்து அப்படியே முறுக்கிக் கொண்டு கிடக்கின்றன. டிரான்ஸ்பார்மர்ஸ் ஒன்று கூட உருப்படியாக கிடையாது. அந்த அளவுக்கு எல்லாம் பாழாகிவிட்டன. பல கிராமங்களில் விளக்கே இல்லை (மணி அடிக்கப்பட்டது)

திரு. கோ. ராஜாராம்: மதிப்பிற்குரிய மன்றத் தலைவர் அவர்களே, கடந்த சில தினங்களுக்கு முன்னாலே ஏற்பட்ட பெரும் புயல் திண்டிவனம், செஞ்சித் தாலுகாக்களிலே பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பித்து, இரவு 10 மணி வரை கோர தாண்டவம் ஆடி, பெருத்த அழிவு, நஷ்டத்தை ஏற்படுத்தியிருக்கிறது. ஏழு மணி நேர புயலின் விளைவைப்பற்றி 3, 4 நிமிஷங்களில் பேசுவது என்பது இயலாதகாரியம். ஆனால் பாதிக்கப்பட்டிருப்பவர்களுக்கு பரிந்துரை கூறுவது என்ற முறையில் அல்லாமல், பாதிக்கப்பட்ட பிரதேசத்திலிருந்து வருகிறவன், நேரிடையாக பாதிக்கப்பட்டவன்

9th November 1966] [திரு. கோ. ராஜாராம்]

என்ற முறையில் நான் சில வார்த்தைகள் இந்த மன்றத்தின் தலைவர் அவர்களின் அனுமதியோடு ஐந்து நிமிஷங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

புயல் வரும், வரும், வருகிறது என்கின்ற அறிவிப்பை மட்டும் பல ஆண்டுகளாக நாங்கள் கேட்டிருந்தாலும், நாங்கள் புயலை சந்தித்தவர்கள் அல்ல. புலி வருகிறது, புலி வருகிறது என்று சொல்லி புலியை சந்தித்தது போல, பயங்கரமான புயலை நாங்கள் சந்தித்தோம். அந்தப் பகுதி வாழ் மக்கள் 50 ஆண்டு காலமாக அந்தப் பிரதேசத்தில் இப்படிப்பட்ட புயல் வீசியதில்லை என்று சொல்லிக்கொள்கிறார்கள். நான் இந்த மன்றத்திற்கும் முதல் அமைச்சர் அவர்களுக்கும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். முதல் அமைச்சர் அவர்கள் இது பற்றி அறிக்கை சமர்ப்பித்திருக்கிறார்கள். பத்திரிகைகளில் தேடி தேடிப் பார்த்தும், எங்களுடைய செஞ்சி, திண்டிவனம் பற்றிய செய்திகள் அங்கே இல்லை. இது எங்களுக்குப் பெரிய குறையாக இருக்கிறது. இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன், சமீபத்தில் புயலினால் மிகவும் பாதிக்கப்பட்ட பிரதேசம், பாதிக்கப்பட்ட பகுதி செஞ்சி, திண்டிவனம் தாலுக்காக்கள் என்பதை எல்லோரும் உணர வேண்டும். மற்ற மாவட்டங்களிலுள்ளவர்களும் அறிந்துகொள்ள வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எனக்கு முன்பு பேசிய திண்டிவனம் உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல் பல ஆயிரக்கணக்கான குடிசைகள் நாசமாகியிருக்கின்றன. குடிசை வேற்றுமை இல்லாமல் எல்லா குடிசைகளும் அழிந்துபோய்விட்டன. 50,000 என்று அவர்கள் சொன்னார்கள். ஒரு லட்சம் குடிசைகள் பாழாகியிருக்கும் என்று நாங்கள் கருதுகிறோம். திண்டிவனம் தாலுகாவில் 10,000 குடிசைகள் நாசமாகியிருக்கின்றன. செஞ்சி நகரத்தைப் பார்த்தால் போருக்குப் பின்னாலே அழிந்தது போல் காட்சி அளிக்கிறது. செஞ்சி, திண்டிவனம் பகுதிகளில், விழுந்த மரங்கள், உடைந்த பாலங்கள், இடிந்த வீடுகள், அழிந்த குடிசைகள், அழிந்த தந்தி கம்பங்கள், முறுக்கிக்கொண்ட கம்பங்கள் இப்படி கோரமான காட்சியைத் தான் காணலாம். செஞ்சி நகரத்தைச் சுற்றியுள்ள கிராமங்கள் என்ன கதியாயிற்று என்று தெரிந்துகொள்ளமுடியவில்லை. அதிகாரிகளைக் கேட்டால் அந்த ஊர்களுக்கு 'ஆக்ஸெஸ்' இல்லை, அந்த ஊர்களுக்குப் போவதற்கு போக்குவரத்து வசதி இல்லை, அங்கு இருக்கிற மக்கள் என்ன ஆனார்களோ தெரியவில்லை என்று சொல்லுகிறார்கள். அமைச்சர்கள் திரு. மஜீத் அவர்களும், திரு. பூவராகன் அவர்களும் நானும் 20 கிராமங்களுக்குச் சென்றிருந்தோம். பக்கத்திலிருந்த ஊர் என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. இரட்டை ஆற்றுக்குப் பக்கத்தில் போக்குவரத்து வசதி இல்லாமல் அந்த இடங்கள் துண்டிக்கப்பட்டுவிட்டதாக சொல்கிறார்கள்.

ஏரிகளெல்லாம் 10, 15 தினங்களுக்கு முன்பு நிறம்பி வழிந்து கொண்டிருந்தன. கண்கொள்ளா காட்சியாக இருந்தது. போகிறவர்கள், வருபவர்கள் கூட அதைப் பார்த்து கண்போட்டுவிடு

[திரு. கோ. ராஜாராம்] [9th November 1966

வார்களோ என்ற நிலைமை இருந்தது. இந்தப் பிரதேசத்தில் எப்பொழுதும் இம்மாதிரி ஏரிகள் நிரம்பியதில்லை. இந்தப் புயலினால் ஏரிகளெல்லாம் உடைந்துபோய்விட்டன. ஏழை மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எந்தெந்த ஏரிகள் உடைந்திருக்கின்றன என்று கேட்டால், கலெக்டர் அவர்கள் எந்த தெந்த ஏரிகள் உடையவில்லை என்று சொல்வது சுலபம் என்று சொல்கிறார்கள். அந்த அளவுக்கு எல்லா ஏரிகளும் அந்தப் பகுதி களில் உடைந்துபோய்விட்டன. ஏழை விவசாயிகளின் நெஞ்சில் நெருப்பை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இவற்றையெல்லாம் 'ரிங்பண்டு' போட்டு உடனடியாக சரி செய்துவிடுவதாக உணவு அமைச்சர் அவர்கள் மக்களுக்கு உறுதி கொடுத்திருக்கிறார்கள். விவசாயிகளின் நெஞ்சம் உடைந்திருக்கிறது. அந்த உடைப்பை முதலில் மூடவேண்டும். ஏரிகளில் நிரம்பியிருந்த தண்ணீர் வற்றி விட்டது. ஏழைகளின் கண்ணீர் பெருகிக்கொண்டிருக்கிறது. அந்தக் கண்ணீரைத் துடைப்பதற்கு ஏரிகளில் தண்ணீர் நிறப்ப வழிவகைகள் செய்யவேண்டும். ஏழை விவசாயிகளுக்கு கடன் கொடுத்து உதவவேண்டும். பம்பு செட்டுகள் அமைப்பதற்கு கிராண்டு கொடுக்கவேண்டும். ஹாஃப் கிராண்டு, ஹாஃப் லோன் கொடுத்து வசதிகள் செய்துதரவேண்டும் என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

செஞ்சியைப் பொருத்தவரையில், ஆண்கள் பள்ளிக்கூடம், பெண்கள் பள்ளிக்கூடம் எல்லாம் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. அரிசனங்கள் அதிகமாகப் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். சங்கரா பரணி நதி வெள்ளம் எடுத்து அதிகமான சேதத்தை விளைவித்தி ருக்கிறது. இதையெல்லாம் பிரதம சூப்பரின்டெண்டிங் எஞ்சி னியரை வைத்து, பார்த்து உதவிகள் செய்யவேண்டும். அது மட்டு மல்லாமல், அதிகாரிகள் எந்த அளவுக்கு ஓடி, ஓடி நிவாரண வேலை களைச் செய்ய முயன்றாலும், துரிதமாகச் செய்ய முடியாது. ஆகவே, அதற்கென்று ஸ்பெஷலாக ஒரு ரெவின்யூ அதிகாரியை நியமித்து—அவர் ஒரு போர்டு மெம்பராக இருக்கலாம் அல்லது செக்ரடரி அளவில் இருக்கலாம் அவர் மூலம் நிவாரண வேலைகள் செய்யப்பட்டால்தான் துரிதமாகச் செய்ய முடியும்.

இராமேச்வரம், தஞ்சை முன்பு அனுபவித்த புயலை தென் ஆர்காடு மாவட்டம், திண்டிவனம், செஞ்சி அனுபவித்திருக்கிறது என்பதை முதல் அமைச்சர் அவர்கள் உணரவேண்டும். இந்தப் புயலால் பாதிக்கப் பட்ட எங்கள் பகுதி மக்களையும் நல்ல மனம் படைத்தவர்களையும் அணுகி உதவிகள் செய்ய வேண்டும். இதை ஒரு அரசியல் பிரச்சினையாக்கி, இயற்கையால் பாதிக்கப் பட்ட நேரத்தில் வியாபாரம் நடத்த முயலுவது, அரியலூரில் ஆற்றில் மக்கள் வீழ்ந்து கிடக்கும்போது, பெண்கள் சங்கிலியை அறுத்தது போலத்தான் ஆகும் என்று சொல்லி முடிக்கிறேன். வணக்கம்.

திரு. முனு. ஆதி . கனம் சட்ட மன்றத் தலைவர் அவர்களே, புயலால் பாதிக்கப்பட்ட செங்கல்பட்டு மாவட்டம் முதலியவை பற்றி முதல் அமைச்சர் அறிக்கை சமர்ப்பித்திருக்கிறார்கள். அதிலும் சைதாப்பேட்டை தாலுகா மீனவர்கள், தாம்பரம், பல்லா

9th November 1966] [திரு. முனு ஆதி]

வரம், பாங்கிமலே முதலிய இடங்களில் குடிசை வாழ் மக்கள் இவர்கள் மிகவும் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 90,000 குடிசைகள், ஒரு குடிசைகூட விடுபடாமல், பாதிக்கப் பட்டிருக்கின்றன. அதற்கான நிவாரண வேலேகளேச் செய்யும் போது, ரூ. 40 உதவி அளிப்பதைக் குறித்து மெத்த மகிழ்ச்சி அடைகிறோம். இந்த உதவியைத் துரிதமாகக் கொடுக்க வேண்டும். இல்லேயென்றால் பலர் விடுபட்டுப் போகிறார்கள். முதலில் 5,000 என்றும், அதற்குப் பிறகு புள்ளிவிரத்தைக் கொடுத்து மறுபடியும் 5,000 என்றும் கொடுக்கிறோம் என்கிறார்கள். அந்த வகையில் செய்யப்படும் நிவாரணம் போதாது. இன்னும் என்னுடைய வட்டாரத்தில் 200, 300 குடிசைபோனவர்களுக்கு நிவாரணம் அளிக்கப்படவில்லே, அவர்களேக் கேட்டால், முதலில் 5,000 ரூபாயை வினியோகம் செய்துவிட்டு பிறகு ஒரு நாள் காத்திருந்து வாங்கி வருகிறோம் என்கிறார்கள். இதனுல் தாமதம் ஏற்படுகிறது. இன்னும் நிவாரணம் கிடைக்காமல் மக்கள் அவதிப்படுகிறார்கள். இன்னும் திருவான்மியூர் பகுதியில் தென்னே மரங்கள் வெகுவாகச் சேதப்பட்டிருக்கின்றன. மீனவர் குடிசைகள் அழிந்து போய்க்கிடக்கின்றன. அவர்களுக்கு உடனடியாக நிவாரணம் அளிக்கப்படவேண்டும். ரூ. 40 என்ற முறையில் கொடுக்கிறார்கள். அது அந்தக் குடும்பத்திற்கு அவசியமாக வாங்கவேண்டிய அரிசி முதலியவற்றிற்கே போதவில்லே. இந்த தொகையைக் கூட்டிக் கொடுக்க அரசாங்கம் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இன்றைக்கு இருக்கும் விலேவாசியில், இந்த ரூ. 40 குடிசை கட்டப் போதாது. குறைந்தது 150 ரூபாயாவது வேண்டும்.

ஒரு நண்பர் பேசும்போது இதை தேர்தல் வேலேயாக்கி விடக் கூடாது என்றார்கள். பல பிரச்சினேகளேப் பற்றிச் சொன்னதற்கு, எங்கள் பகுதியில், கலெக்டர் அவர்களோ, ஸ்பெஷல் ஆபீசர் அவர்களோ எங்களேக் கேட்பதில்லே. எங்களுடைய விருப்பத்தைக் கேட்கவேண்டும் என்று இல்லாவிட்டாலும் கூட, பாதிக்கப்பட்ட மக்களுக்கு கொடுக்கப்படும் ரூ. 40 போதாதது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். இன்னும் சற்றுக் கூடுதலாகக் கொடுக்க வேண்டும் என்றும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். பாதிக்கப் பட்ட மக்களுக்கு உடனடியாக நிவாரணம் அளிக்க மாற்று யோசனே செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் பேச்சை முடிக்கிறேன்.

திரு. கே. எஸ். நடராஜ கவுண்டர்: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த பயங்கரமான கோரப்புயலே நான் நேரில் பார்த்து அனுபவித்தேன். ஒரு இரவு பூரா என்னுடைய காரையே குடும்ப வீடாக வைத்துக் கொண்டு இருந்தோம்.

கனம் சபாநாயகர்: காருக்கு நஷ்ட ஈடு கேட்கிறீர்களா ?

திரு. கே. எஸ். நடராஜ கவுண்டர்: காருக்கு இல்லே. இதிலே மிகவும் பாதிக்கப் பட்ட பகுதி செங்கல்பட்டு மாவட்டத்தில் கருங் குழி ஆகும். அங்கே பல மரங்கள் விழுந்துவிட்டன. எனக்குப்

[திரு. கே. எஸ். நடராஜ கவுண்டர்] [9th November 1966

பின்னால் வந்த லாரிகள் மீது பல மரங்கள் விழுந்தன. அங்கே முன்னால் போய்க்கொண்டிருந்த என் காரில் மரம் விழவில்லை. இரவு முழுவதும் காருக்குள்ளேயே இருந்தோம். எங்கும் ஒரே வெள்ளம். காலை 9 மணிக்குத்தான் ஒரு ராயர் உணவு கொடுத்து ஆதரித்தார். மிகவும் பாதிக்கப் பட்டவை குடிசைகள். அங்கே மக்கள் படும் வேதனைகளை கண்ணால் பார்த்துக்கொண்டே இருந்தோம். 'கச்சி ஏகம்பனே' என்று வேண்டினோம். ஒரு சமயம் என்னுடைய ஏடு கண்ணுக்குப் பட்டுவிட்டதோ என்று அஞ்சினேன். ஆனால் கிடைக்கவில்லை போலும். தேடித் தேடிப் பார்த்ததில் சிலருடைய ஏடுகள் கிடைத்திருக்கின்றன. என்னுடைய ஏடு கிடைக்கவில்லை. ஆண்டவனை வேண்டிக்கொண்டு இருந்தோம்.

SRI K. S. G. HAJA SHERIFF: Mr. Speaker, Sir, I rise to speak about the recent cyclone which hit the Madras City. I do not think that there has been any precedence either for the velocity of the cyclone or for the damage that it has caused to the Madras City and the neighbouring districts, particularly to shipping. I think, this is the first occasion when shipping had the largest casualties either in any major port in India or abroad. In 1946 or so, there was such a colossal damage to shipping in Bombay but the havoc that this cyclone has caused in the Madras City has no precedence, I believe, anywhere in the world. But still there is a greater possibility of the steamers being recovered and I hope this will happen by the grace of the Almighty.

Sir, I appreciate the prompt action taken by the Government to relieve the distress caused to the slum and hut-dwellers. I would suggest that they should concentrate more and more attention on them and see that these slum and hut-dwellers are rehabilitated once and for all. It is only the damaged portions of their huts that can be repaired now. The private agencies also are going to their rescue. But I feel that the Government have got a responsibility in the matter and they should concentrate more and more on this aspect of the matter and see that the entire slum dwellers are rehabilitated and they are helped by improving their living conditions. Thank you.

புலவர் கா. கோவிந்தன்: கனம் தலைவர் அவர்களே, நம்முடைய கனம் முதல் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கும் இந்த புயல் பற்றிய அறிக்கையில் சரியான புள்ளிவிவரம் இல்லை என்பதை கூறிக்கொள்ள விரும்புகிறேன். . .

கனம் திரு. எம். பக்தவத்சலம்: செய்யாறு பற்றிக் குறிப்பிடவில்லை என்று வருந்துகிறேன்.

புலவர் கா. கோவிந்தன்: ஆறாந்தேதிக்குப் பிறகுதான் என்னுடைய தொகுதியில் பஸ்ஸில் போகமுடிந்தது. அங்கே பொதுப்பணித்துறை பொறியாளரும் வந்திருந்தார்கள். திருத்துரை பிர்க்காவிற்குத்தான் போக முடிந்தது. அங்கே ஏரிகளெல்

9th November 1966] [புலவர் கா. கோவிந்தன்]

லாம் உடைத்துக்கொண்டு இருந்தன. சுண்டிவாக்கம், ஆரம் பாக்கம், வெங்காடு முதலிய எல்லா ஏரிகளும் உடைத்துக்கொண்டு வெள்ளப் பெருக்கு எடுத்திருந்தது. ஆங்காங்கே ஊராட்சி மன்றங்களுடைய உதவியால் இரண்டு மாதத்திற்கு வேண்டிய தண்ணீரைத் தேக்கிவைத்துக்கொள்ள ஏற்பாடு செய்துவிட்டு வந்தோம்.

செய்யாறு பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளிக்கவேண்டும். அங்கே குடிசையில் வாழ்கிறவர்களுக்கு தரிசு, புறம்போக்கு நிலத்தில், ஒரு மனைக்குள் இரண்டு, மூன்று பேர்கள் இருக்கிறார்கள். அதனால் ஒருவருக்குத்தான் நிவாரணம் என்று சொல்லாமல், ஒவ்வொரு குடும்பத்திற்கும், அவரவர்களுடைய குடும்பத்திற்குதக்க உதவி அளிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். குறிப்பாகச் சொல்லுகிறேன். தாக்கப்பட்ட வீடுகளெல்லாம் பெரும்பாலும் அரிசன மக்கள் வாழும் பகுதி களில்தான். அரிசன மக்களுக்காக விட்டு மனைகள் வாங்கும் போது, பார்த்துப் பார்த்துப் பள்ளமாக இருக்கும் பகுதிகளிலேயே வாங்கும் வழக்கத்தை இன்னும் மேற்கொண்டு வருகிறோம். அப்படிப்பட்ட காரணத்தால் அவர்கள்தான் பெரிதும் பாதிக்கப் படுகிறார்கள். அந்த மக்களுக்கு முப்பதோடு பத்து ரூபாய் சேர்த்து நாற்பது ரூபாய் கொடுக்கும் நிலையை உண்டாக்க வேண்டும்.

அடுத்து, ஏரிகள் மராமத்து உடனடியாகச் செய்யப்பட வேண்டும். ஏரிகளின் கரைகளை உயர்த்தவேண்டும்; ஏரிகள் செப்ப னிடப்படவேண்டும். ஏரிகள் உடைந்து, அதன் கீழ் இருக்கும் நிலங்கள் மண் மேடிட்டு இருக்கின்றன. அந்த நிலங்களுக்காக நஷ்டயீடு கொடுக்க வேண்டும். அந்தப் பகுதியிலே கொள் முதலுக்காக வைத்திருக்கும் நெல்லின் மீது கடன் வழங்க வேண்டும். விவசாயத்திற்காக வாங்கியிருக்கும் கடனை வசூல் செய்வதை நிறுத்தி வைக்கவேண்டும். அந்தப் பகுதி மக்களுக்கு வரி வஜா செய்யவேண்டும். திருவத்திபுரம் பகுதி மக்களுக்கு அரிசி, செய்யாறு பகுதி மக்களுக்குக் கேழ்வரகு அல்லது சோளம் கொடுப்பதற்கு வழிவகை செய்யவேண்டும். ஆக, இவைகளை உடனடியாகச் செய்து முடிக்கவேண்டும்.

ஓரிடத்தில் கூட மின்சாரக் கம்பம் இல்லை, கம்பியும் உருவாக இல்லை. மின்சார இலாக்காவே பொறுப்பேற்றுச் செய்வதென்றால் நிச்சயமாக முடியாது. அதற்காகச் சர்க்கார் தாராளமாகக் கடன் கொடுக்க வேண்டும். திருவத்திபுரத்தில் நான்கு நாட்களாக மின்சார வசதி இல்லை. அதனால், குடி தண்ணீர் வசதியையும் பெற முடியவில்லை. எங்கெங்கோ சென்று தண்ணீர் கொண்டுவர வேண்டிய நிலை இருக்கிறது. இதையும் உடனடியாகக் கவனித்து ஆவன செய்யவேண்டும். வந்தவாசிப் பகுதியில் 11 பேர்தான் இறந்தார்கள் என்று சொல்லப்படுகிறது. தயவுசெய்து சரியான புள்ளிவிவரம் எடுக்கவேண்டிய நடவடிக்கைகளைச் செய்ய முதல மைச்சர் ஆவனசெய்யவேண்டும் என்று கேட்டு, என்னுடைய உரையை முடிக்கிறேன்.

[9th November 1966

திரு. டி. பி. ஏழுமலை: கனம் சபாநாயகர் அவர்களே, புயலால் ஏற்பட்ட கஷ்டத்திற்கும் நஷ்டத்திற்கும் நம்முடைய சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளினாலும், முதலமைச்சர் அவர்கள் அந்தந்த மாவட்டக் கலெக்டர்களைக் கூப்பிட்டு உடனடியாக அதற்கு வேண்டிய வேலைகளைச் செய்யவேண்டும் என்று போட்ட உத்தரவினாலும், அமைச்சர்கள் அந்தப் பகுதியிலே சுற்றிப் பார்த்து, மக்களுக்கு ஆறுதல் சொன்னதனாலும், அந்த மக்களுக்கு ஓரளவு ஆறுதல் ஏற்பட்டிருப்பதோடு, சர்க்காரிடத்திலும் ஒரு நம்பிக்கை ஏற்பட்டிருப்பதை நான் நேரடியாகப் பார்த்தேன். ஆகையால், இந்த சர்க்காருக்கும், முதலமைச்சர் அவர்களுக்கும் நான் மனமார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இந்தப் புயலால் அதிகமாகப் பாதிக்கப்பட்டவர்கள் அரிசன மக்களும் மீனவ மக்களும்தான் என்று சொன்னால் மிகையாகாது. அந்த அரிசன மக்களுக்கும், மீனவ மக்களுக்கும் சர்க்கார் செய்கிற உதவிகளைத் தவிர, அந்தந்த இலாக்காவே பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் நூறு ரூபாய் கடனாகவோ அல்லது இனாமாகவோ கொடுத்து உதவி செய்தால் மிகவும் நலமாக இருக்கும்.

குறிப்பாக, இந்த நிலைமை ஏற்பட்டபோது, இந்த விஷயத்தைக் கேட்டவுடனேயே, மத்திய சர்க்கார் உதவி அமைச்சர் திரு. அழகேசன் அவர்கள் ஓடோடி வந்தார்கள். அவரோடு நானும் உள்துறை அமைச்சர் அவர்களும் பாதிக்கப்பட்ட மக்கள் வாழும் பகுதிக்குச் சென்று பார்வையிட்டோம். நண்பர் திரு. தங்கவேலு அவர்கள் சொன்னமாதிரி, செங்கற்பட்டு ஜில்லாதான் இந்தப் புயலினால் அதிகம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. நாங்கள் நேரடியாகச் சென்று பார்த்தோம். ஒரு தாய் தன்னுடைய குழந்தையைக் காப்பாற்றவேண்டும் என்று குழந்தையை எடுத்துக்கொண்டு ஓடுகிறபோது, ஒரு மரம் முறிந்து, அந்தத் தாய் மேல் விழுந்தது. அந்த நேரத்தில் குழந்தையை எப்படியோ அந்தத் தாய் காப்பாற்றிவிட்டு, தன்னுடைய உயிரை விட்ட நிகழ்ச்சியை நாங்கள் நேரடியாகப் பார்த்தோம். உடனே கலெக்டர், அந்தக் குடும்பத்திற்கு 200 ரூபாய் கொடுத்ததோடு, குடிசை கட்டிக்கொள்ளுவதற்காக 40 ரூபாய் கொடுத்தார்கள். அப்பொழுது அந்த முகத்தைப் பார்த்தேன். பெண்ணை இழந்த தகப்பனார் இந்த சர்க்காரைப் பாராட்டிப் புகழ்ந்து பேசியதைப் பின்னால் கேட்டேன். ஆகையால், நிவாரணம் எவ்வளவு அளிக்க முடியுமோ அந்த அளவிற்கு இந்தச் சர்க்கார் அளித்திருக்கிறது. அமைச்சர்கள் மிகுந்த அக்கறையோடு பாடுபட்டிருக்கிறார்கள். கடவுளே வந்திருந்தாலும் இந்தச் சிறந்த முறையிலே நிவாரணம் அளித்திருக்கமுடியாது என்று கூடச் சொல்லலாம். அந்த முறையிலே நம்முடைய சர்க்கார் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளித்திருக்கிறது. என்றாலும், மேலும் அளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். குறிப்பாக, சைதாப்பேட்டை தாலுக்கா, பொன்னேரி தாலுக்கா மக்கள்

9th November 1966] [திரு. டி. பி. ஏழுமலை]

பெரிதும் புயலால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது என்னுடைய கருத்து. திருவொற்றியூரில் உள்ள இரண்டாயிரம் பேருக்கு, நாங்கள் பொதுமக்களிடமிருந்து உதவித்தொகை வசூல் செய்து, மூன்று நாட்கள் சாப்பாடு போட்டோம். அப்படியே பொன்னேரியிலும் செய்திருக்கிறார்கள். கருணை கூர்ந்து, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்த நிலைமையைக் கவனித்து, தன்னுடைய ஜில்லாவாசிகளுக்கு அதிகமாகச் செலவு செய்துவிடக் கூடாதே என்ற எண்ணத்திற்கு இடமளிக்காமல், பெருத்த அளவில் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைக் கருத்தில் கொண்டு, அதிகமாகப் பணத்தை ஒதுக்கி நிவாரணம் அளிக்கவேண்டும். மதுராந்தகம், செய்யாறு போன்ற பகுதிகளிலே இருக்கும் மக்களுக்கும் உடனடியாக நிவாரணம் அளிக்கவேண்டும் என்று நான் முதல் அமைச்சர் அவர்களைப் பணிவன்புடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அரிசன மக்களுக்குக் குடி மனை வழங்கும் விஷயம் நீண்ட நாட்களாகக் காலதாமதமாக இருந்து கொண்டிருக்கிறது. பாதிக்கப்பட்ட அரிசன மக்கள் வசிக்கும் பகுதிகளைப் பொறுத்த வரையில், அரிசன வெல்பேர் டிபார்ட்மென்ட் எடுத்துக்கொண்டு, அந்தப் பணங்களை உடனடியாகக் கொடுத்து, மேடான இடங்களில் அவர்களைக் குடியேறுமாறு செய்து அவர்கள் சுகமாக வசிக்கும் நிலையை ஏற்படுத்தவேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்ளுகிறேன்.

என்னுடைய பழவேற்காடு பகுதியில் மீனவ மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு வலைகள் கிடைப்பதற்கான உதவிகளைச் செய்யவேண்டும். அவர்கள் பிழைப்புக்கான உதவிகளைச் செய்யவேண்டும். குறிப்பாக, அரிசன மக்களுக்கும், மீனவ மக்களுக்கும் மேடான இடங்களில் தனி இடம் ஒதுக்கிக் கொடுத்து, நல்ல குடியேற்றத்தைச் செய்துகொடுக்க வேண்டும். இதற்காக என்ன செலவானாலும் சரி, முதலமைச்சர் அவர்கள் பொருட்படுத்தாமல் தாராளமாக உதவி செய்யவேண்டும். தன்னுடைய ஜில்லாவிற்குச் செய்தால் என்ன சொல்லுவார்களோ என்று பார்க்காமல், உடனடியாக நிவாரணம் அளிக்க ஆவனசெய்யவேண்டும் என்று கேட்டு, என்னுடைய உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

திரு. க. ர. நல்லசிவம்: கனம் சபாநாயகர் அவர்களே, புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலே மிகவும் அதிகமாகப் பாதிக்கப்பட்ட பகுதி மதுராந்தகம் பகுதிதான். குடிசைவாழ் மக்களுக்கு நியாயமாக எவ்வளவு மானியம் கொடுக்க முடியுமோ அவ்வளவு மானியம் கொடுக்கலாம். இலவசமாக உயர்ந்தபட்சம் எவ்வளவு கொடுக்கலாமோ அதைக் கொடுக்கலாம். இது முதலாவது செய்ய வேண்டிய விஷயம். அடுத்து, குடிசை கட்டிக் கொள்ளுவதற்குச் சர்க்கார் கொடுக்கும் மானியத் தொகை போதாது. மேலும் அவர்களுக்குத் தேவைப்படும் தொகையைக் கடனாகவாவது கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

[திரு. க. ர. நல்லசிவம்] [9th November 1966

பூரணமாகக் கொடுப்பதென்றால் பல்வேறு அம்சங்களில் முட்டுக்கட்டை இருக்கலாம். ஆகவே, ஒரு பகுதியை இனாமாகவும், இன்னொரு பகுதியைக் கடனாகவும் கொடுக்கலாம்.

பல இடங்களில் மக்கள் கிணற்றை நம்பி விவசாயம் செய்கிறார்கள். அந்தக் கிணற்றிலிருந்து தண்ணீர் இறைப்பதற்கு மின்சார இணைப்புகள் கொடுக்க வழி கிடையாது. ஆகவே, முதல் வேலையாக மின்சார இணைப்பு கொடுப்பதற்குத துரிதமான நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். ஏரிகளைக் கட்டுவதற்கும் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். தென்னங் கன்றுகளை இலவசமாக வழங்குவதற்கும் வகை செய்யவேண்டும். 15 நாட்கள், 20 நாட்கள் கழித்துக் கொடுத்தாலும் போதும். ஒரு கன்று எட்டணாவில் இருக்கும். அதைப் பொருட்படுத்தத் தேவையில்லை. இரண்டு லட்சம் தென்னங் கன்றுகளை நடுவதற்கான வகையில், இலவசமாகத் தென்னங்கன்றுகள் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். விவசாயத்திற்குக் கால்நடை மிக முக்கியம். கால்நடை வாங்கிக்கொள்ளுவதற்கு ஓரளவு மானியமாகவும் ஓரளவு கடனாகவும் கொடுத்தால் நல்லது.

கடைசியாக, சாப்பாட்டு விஷயம். உணவு நிலைமையை இன்னும் சற்று அக்கறையோடு கவனித்து, நண்பர் திரு. ஏழுமலை அவர்கள் சொன்னபடி, அரிசன மக்கள், மீனவ மக்கள் ஆகியவர்களுக்கு இன்னும் கொஞ்ச நாட்களுக்கு இலவசமாக உணவுத் தானியம் விநியோகிக்கவேண்டும். சற்று சுமாரான நிலைமையில் உள்ளவர்களுக்குக் கடனாக உணவுத் தானியம் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். குறிப்பாக, கிணறுகளுக்கு மின்சார இணைப்புகள் உடனடியாகக் கொடுக்க வேண்டும். அப்பொழுதுதான் பயிர்கள் நல்ல முறையில் வரும். இல்லாவிட்டால் பயிர் காய்ந்துவிடும். மின்சார இணைப்பைப்பற்றி மிகத் துரிதமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுவதோடு, ஏரிகளையும் செப்பனிட வேண்டும் என்று கேட்டு, என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Mr. Speaker, Sir, the recent cyclone caused extensive damage in South Arcot, North Arcot and Chingleput Districts. The worst horror of the cyclone was felt in the Madurantakam Taluk and Madras City. In addition to the relief measures taken by the Government, Ministers have visited the affected areas and the Collector has taken a personal interest in going round those places and carrying out relief measures. My only request to the Government is to see that loan assistance is given to those agriculturists who are not in a position to start agricultural operations immediately. In the Takkavi Manual, there is provision for loan assistance. The loan assistance provided by the Co-operative Department may not reach the affected people immediately. The Government should seriously consider whether loan assistance could not be extended to the needy agriculturists immediately.

9th November 1966] [Sri C. Chiranjeevulu Naidu]

The temporary structures of some high school buildings have collapsed, and the school authorities are not able to carry on their day-to-day operations. I request the Government to provide a sum of Rs. 10 lakhs for providing temporary structures for high schools wherever the buildings have completely collapsed. Once again I request the Government to provide them with some temporary structures at least, because there are not even trees under whose shade the teachers could conduct the classes.

12–00 noon.

* **திரு. எஸ். முத்துலிங்கம் :** கனம் சபாநாயகர் அவர்களே, அண்மையில் 3-11-1966 அன்று வீசிய புயலின் காரணமாக வந்தவாசி தாலுக்காவில் அநேக ஏரிகள் உடைந்துபோய்விட்டன. அநேக பாமர மக்களுடைய குடிசைகள் நாசமாகியிருக்கின்றன. ஓட்டு வீடுகளும் நாசமாகியிருக்கின்றன. அங்கிருந்த மின்சாரக் கம்பங்கள் பூராவும் சாய்ந்து, வளைந்து கிடக்கின்றன. கம்பிகள் அறுந்து கிடக்கின்றன. அதன் காரணமாக மின்சார சப்ளை தடை பட்டிருக்கிறது. அதை உடனடியாகச் சரிசெய்தாகவேண்டும். உடைந்த ஏரிகளை செப்பனிட்டாகவேண்டும். போக்குவரத்தைத் தடை செய்கின்ற அளவில் ரோடுகள் உடைந்து இருக்கின்றன. அவற்றையும் செப்பனிட்டாகவேண்டும். மண் மேடிட்டுள்ள நிலங்களுக்கு இழப்பீடு தரவேண்டும். வீடு இழந்தவர்களுக்கு உடனடியாக பண உதவி செய்தாகவேண்டும். நியாயவிலையில் அரிசி கொடுக்க வழிவகை செய்தாகவேண்டும். சம்பா அறுவடை வரும்வரையில் கொள்முதல் செய்வதை நிறுத்தி வைத்தாக வேண்டும். சர்க்கார் கொடுத்த கடன்களை வசூலிப்பதை நிறுத்தி வைக்க வேண்டும்.

வந்தவாசியில் அன்றையதினம் நான் இருந்தேன். வெளியில் சென்றிருந்த நான் வீட்டுக்குப் போகிறபோது என் விட்டில் இருந்தவர்கள் எல்லோரும் ஊரில் இருந்த கோயிலில் குடியேறியிருந்தார்கள். எங்கள் வீடு பூராவும் நாசமாகியுள்ளது. அதுபோல எங்கள் ஊரில் ஐநூறு வீடுகளுக்கு மேல் நாசமாகி யிருக்கின்றன. வீடு இழந்து நூற்றுக்கணக்கான பேர்கள் உயர்நிலைப் பள்ளியில் அடைக்கலம் புகுந்திருந்தார்கள். தெள்ளூர் ஏரி உடைப்பெடுத்துக்கொண்டு ஆரணி ரோடை அறுத்துக்கொண்டுபோய்விட்டது. அதனால் போக்குவரத்து பாதிக்கப்பட்டிருக்கிறது. அது இன்னமும் சரிசெய்யப்படவில்லை. உடனடியாக மெயின்ரோடுகளைச் செப்பனிட்டாகவேண்டும். நேற்றையதினமும் கூட அங்கே நல்ல காற்று, மழை அடித்திருப்பதாக எனக்குத் தகவல் கிடைத்துள்ளது. ஆரணி ரோடில் உள்ள ஷண்முகானந்தா ரைஸ் மில்லில் தான் பாதிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான மக்கள் தங்கியிருந்தார்கள். அந்த ரைஸ் மில் அப்படியே அழிந்துவிட்டது. அதனால் நான்கு பேர்கள் இறந்தார்கள். சடகோபன் வொர்க் ஷாப் என்று ஒன்று இருக்கிறது. அதற்கு ஏற்பட்ட சேதத்தினால் ஒரு ஆள் இறந்தார். வந்தவாசியில் 4 பேர்கள் இறந்தார்கள். சுற்றுப்புறத்தில் உள்ள கிராமங்களை எல்லாம் சேர்த்தால் அந்தப் பகுதியில் மட்டும் 11 பேர்களுக்கு மேல் இறந்திருக்கிறார்கள். முதல் அமைச்சர் அவர்கள் கொடுத்த தகவலில் அந்த மாவட்ட த்திலேயே

11 பேர்கள் தான் இறந்தார்கள் என்றார். அது சரியல்ல. சரியான தகவலைச் சேகரித்து உயிர்ச்சேதம் ஏற்பட்டுள்ள குடும்பங்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டும். மொத்தமே அந்த மாவட்டத்தில் 500 குடிசைகள் அழிந்தன என்றார். வந்தவாசியில் மட்டும் ஆயிரக்கணக்கான குடிசைகள் அழிந்திருக்கின்றன. எங்கே பார்த்தாலும் மரங்கள் சாய்ந்து இருப்பதால் எந்த ரோடிலும் போக முடியாத நிலைதான் இருக்கிறது. ஹரிஜன மக்களும், இதர மக்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அரிசி கிடைக்காது தவித்துக்கொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியில் உடனடியாக அரிசி சப்ளை செய்ய உத்தரவிடவேண்டும்.

அடுத்து, குடிசை இழந்தவர்களுக்கு முப்பது ப்ளஸ் பத்து நாற்பது ரூபாய் என்று கொடுப்பதாகச் சொல்கிறார்கள். இது குடிசை இழந்த மக்கள் தங்கள் குடிசைகளைப் போட்டுக்கொள்ள போதாது. அதை அரசாங்கம் உயர்த்தித் தரவேண்டும் என்பதாகப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மின்சார சப்ளை பாதிக்கப்பட்டிருப்பதால் நெல், கோதுமை முதலியவைகளை அறைப்பதற்கு முடியாமல் மக்கள் தவிக்கிறார்கள். உடனடியாக மின்சார சப்ளையை சீர் செய்ய நடவடிக்கை எடுத்துக் கொண்டு, புயலினால் பாதிக்கப் பட்டுள்ள மக்களுக்கு எல்லாவகையான நிவாரணங்களையும் உடனடியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. செ. கோ. விசுவநாதம்: கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, கடந்த வாரம் வீசிய புயலின் காரணமாக செங்கல்பட்டு மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள சேதங்களைப் பற்றி திரு. முனு ஆதி அவர்கள் குறிப்பிட்டார்கள். பொதுவாக இந்தப் புயலானது கடற்கரைப் பகுதியான மகாபலிபுரம், புதுப்பட்டணம், காயல்பட்டணம் போன்ற இடங்களில் உள்ள மீனவர் குடும்பங்களுக்கு பெருத்த நஷ்டத்தையும், பொருள் சேதத்தையும் விளைவித்திருக்கிறது. அந்தப் பகுதியில் இருந்த மீனவர்களுடைய வலைகள் எல்லாம் போய்விட்டன. மீன் பிடி சாதனங்கள் எல்லாம் நஷ்டமாகியிருக்கின்றன. 20 படகுகள் மட்டும் தூள் தூளாகப் போய் இருக்கின்றன. இன்றையதினம் மீண்டும் மீன் பிடி தொழிலில் அவர்கள் இறங்க முடியாதபடி சாதனங்களை எல்லாம் இழந்து நிற்கிறார்கள். அதன் காரணமாக அவர்கள் குடும்பங்கள் பட்டினி கிடக்கின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. நான் அந்தப் பகுதியைச் சுற்றிப் பார்க்க நேர்ந்ததால்தான் அவர்களுடைய கஷ்டங்களைப் பார்க்க முடிந்தது. அந்தப் பகுதியில் நேற்று தான் நபருக்கு ½ லிட்டர் என்று அரிசி வழங்கிக்கொண்டிருக்கிறார்கள். புயல் நிவாரண வேலைகள் துரிதமாக நடைபெற சர்க்கார் வழிவகைகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மீனவர்களுக்கு தேவைப்படுகிற உபகரணங்களை உடனடியாக வழங்க வேண்டும். கடற்கரைப் பகுதியை ஒட்டியிருக்கிற இடக்காடு போன்ற இடங்களில் செங்கல்பட்டு மாவட்டத்தில் இரண்டு லட்சம் தென்னை மரங்கள் வீழ்ந்துவிட்டதாக தகவல் வந்திருக்கிறது.

9th November 1966] [திரு. செ. கோ. விசுவநாதன்]

வாழைத் தோட்டங்கள் எல்லாம் அழிந்திருக்கின்றன. சர்க்கார் உடனடியாக அந்தத் தோட்டக்காரர்களுக்கு கடனாகவோ, மானிய மாகவோ பண உதவி செய்து அவர்கள் தங்கள் தங்கள் தோட்டங் களைப் புதுப்பித்துக்கொள்ள வழி செய்யவேண்டும். இந்தப் புயலின் காரணமாக மின்சார சப்ளை தடைபட்டிருப்பதனால் அரிசி மில்கள் ஓடவில்லை. பக்கத்து மாவட்டங்களில் இருந்தாவது உடனடியாக அரிசியை செங்கல்பட்டு மாவட்டத்திற்குக்கொண்டு வந்து நியாயவிலைக் கடைகளின் மூலமாக ஒருவார காலத்திற்கு இலவசமாக வழங்க ஏற்பாடு செய்யவேண்டும். பள்ளிக்கூட கட்டடங்கள் எல்லாம் விழுந்திருப்பதனால் தற்காலிகமாகவாவது பள்ளிகள் தொடர்ந்து நடத்த அவ்விலாக்கா அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். ஆக, எல்லா வகையிலும் எல்லா இலாக்காவினரும் புயலினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் அளிக்க துரிதமாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திருமதி டி. என். அனந்தநாயகி : கனம் சபாநாயகர் அவர்களே, புயலின் காரணமாக சென்னை நகரில் மட்டும் பல்லாயிரக் கணக் கான பேர்கள் குடிசைகளை இழந்திருக்கிறார்கள். 750 குடிசை களே இங்கே பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லியிருக் கிறார்கள். இதுபோன்று மூன்று நான்கு மடங்கு பாதிக்கப்பட் டிருக்கும். குடிசை இழந்தவர்களுக்கு எல்லாம் உடனடியாக நிவாரணம் அளிக்க வேண்டும். அதுவும் இப்போது நாற்பது ரூபாய் கொடுப்பதாகச் சொன்னார்கள். நாற்பது ரூபாய் என்பது போதாது. அதுவும் நான்கு சுவர்கள் விழுந்தால் தான் நமது அதிகாரிகள் நாற்பது ரூபாய் கொடுப்பார்கள். ஒரு பக்கத்துச் சுவர், இரண்டு பக்கத்துச் சுவர் விழுந்திருந்தால் கலெக்டர் ஆபீசைச் சேர்ந்தவர்கள் அதைக் கணக்கில் எடுத்துக் கொள் வதில்லை என்று சொல்லப்படுகிறது. சென்ற தடவையே இது போன்ற நிலையைப் பார்த்திருக்கிறேன். ஆகவே , கலெக்டர் ஆபீஸ்களுக்கு நான்கு சுவர் விழுந்தால் தான் கணக்கில் எடுத்துக் கொள்வது என்பது இல்லாமல் ஒரு சுவர் விழுந்திருந்தால் கூட நிவாரணம் அளிக்க வேண்டும் என்பதாக உத்தரவிடவேண்டும்.

இதுபோன்ற பிரச்சினை நமக்கு வருஷா வருஷம் வந்து கொண்டே இருக்கிறது. ஒன்று புயல், இல்லையென்றால் மழை, அதுவும் இல்லையானால் தீ இப்படி ஏற்பட்டுக்கொண்டே இருக் கிறது. இப்போது மத்திய சர்க்காரிடத்தில் 2 கோடி ரூபாய் உதவி கேட்டிருப்பதாகத் தெரிகிறது. இது போதாது. நிரந்தர பரி காரம் ஏற்படுத்த சிலபல கோடிகள் செலவழிந்தாலும் பரவாயில்லை —ஜாகை வசதி போர்டின் கவனத்தை முழு மூச்சாக இந்தக் குடிசைகளின் பக்கம் திருப்பி பர்மெனென்டாக நல்ல டெனமெண்டுகள் கட்ட ஏற்பாடு செய்யவேண்டும். அவர்கள் இந்தப் பக்கமே வருவதில்லை. சேரி ஒழிப்பு என்று ஐந்து வருஷமாகச் சொல்லி வந்தும் ஒன்றும் நடைபெறவில்லை. இதில் ஒரு பணக்காரக் கும்பல் வேறு பின்னணியில் நிற்கிறது. புதுப்புது சேரிகளை ஏற்படுகிற முறையில் கம்பைக் கொடுத்து மேற்றைக்

[திருமதி டி. என். அனந்தநாயகி] [9th November 1966

கொடுத்து—தனியார் நிலமாக இருந்தாலும், அரசாங்கப் புறம்போக்கு நிலமாக இருந்தாலும் குடிசைகள் போட்டுக்கொள்ளச் சொல்லி வாடகை வசூல் செய்து கொண்டே இருக்கிறார்கள். இது போல ஒரு பணக்கார வர்க்கம் வேலை செய்கிறது. இதைத் தடுப்பதற்கு அரசாங்கம் உறுதியான நடவடிக்கை எடுத்து, இருக்கக் கூடிய சேரிகளையும் ஒழித்து நல்ல கட்டடமாகக் கட்டியாக வேண்டும்.

ஆகவே, இதிலே என்ன இருக்கிறது என்பதைக் கவனிப்பதற்காக ஒரு தனிக் கமிட்டியைப் போடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக என்னுடைய தொகுதியிலே உள்ள கள்ளுக்கடை தோட்டங்கள் எல்லாம் இப்பொழுது குடிசைகளாக மாறிக்கொண்டு வருகின்றன. திருநாவுக்கரசு தோட்டம், அப்பாவு சாமித் தோட்டம், கிருஷ்ணப்பநாயக்கன் தோட்டம் என்று எல்லாம் இருக்கிறது. இவற்றையெல்லாம் கவனிக்கவேண்டும். கார்ப்பரேஷனில் தார் ட்ரம்ஸ் இருக்கின்றன, குடிசைகளிலே ஓலைகளைப் போட்டால் அவையெல்லாம் காற்றிலே பறந்துபோய் விடுகின்ற காரணத்தாலே, இந்த தார் ட்ரம்ஸ்களை சரிசெய்து அவற்றை ஷீட் ஆக மாற்றிப் போட்டுக்கொள்ளலாம். அதை கமிஷனர் அவர்கள் செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். இதே மாதிரி ஹைவேஸ் டிபார்ட்மெண்ட்டிலும் இவை இருக்கின்றன. அவற்றையும் நாம் வாங்கி குடிசைகளுக்கு உபயோகித்துக்கொள்ளலாம்.

அடுத்தபடியாக, எலக்ட்ரிக் ஒயர்ஸ் எல்லாம் அறுந்துவிழுந்துவிட்ட காரணத்தால் தெரியாமல் தொட்டு ஷாக் அடிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த மின்சாரக் கம்பிகளையெல்லாம் மேல் நாடுகளிலே இருப்பதைப்போல பூமிக்குக் கீழே கொண்டுபோவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். இப்பொழுது சில இடங்களில் அது நடந்துகொண்டுவருகிறது. குறிப்பாக கீழ்ப்பாக்கம் வட்டத்திலே மரங்கள் விழுந்து மின்சாரக் கம்பங்கள் எல்லாம் விழுந்து விட்ட காரணத்தினாலே கடந்த இரண்டு மூன்று நாட்களாக லைட் இல்லாமல் மக்கள் எல்லாம் கஷ்டப்படுகிறார்கள். இதையும் கவனிக்கவேண்டும்.

இதைத்தவிர தொழில் நடத்துகின்றவர்களும் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். உதாரணமாக, டூரிங் சினிமா வைத்திருக்கிறார்கள், அந்த டூரிங் சினிமாவெல்லாம் இந்தக் காற்றிலே எங்காவது டூர் போய் இருக்கும். அவர்களுக்கு ஏற்கனவே ஷோ டாக்ஸ், என்டர்டெய்ன்மெண்ட் டாக்ஸ் எல்லாம் போடுகிறோம், அதனால் அவர்கள் எவ்வளவுதான் ஒழுங்காக நடத்தினாலும் லாபம் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது, முதலமைச்சர் அவர்கள் இதையெல்லாம் பார்த்து இருப்பார்கள், அவர்கள் சினிமாட்டோகிராப் ஆக்ட் பிரகாரம் ஷெட் போட்டால் அது ஒரு வருஷத்திற்குத்தான் வைத்திருக்கமுடியும் என்று இருக்கிறது. ஆகவே, இந்த நிலைமையையொட்டி அவர்களுக்கு அந்தக் காலத்தை நீட்டித்துக்கொடுக்கக்கூடிய வகையிலே எக்சம்ட் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

9th November 1966] [திருமதி டி. என். அனந்தநாயகி]

அடுத்தபடியாக, இந்த கார்ப்பரேஷன் லாண்டிலே இருக்கிற சில சேரிகள் எல்லாவற்றையும் அரசாங்கமே எடுத்துக்கொள்ள வேண்டும். அவர்களுக்கு வீடுகளைக் கட்டிக்கொடுக்க வேண்டும். அவர்களுக்கு தண்ணீர் வசதி கிடையாது, ரோடு வசதி கிடையாது, விளக்குகள் கிடையாது. கார்ப்பரேஷன் லாண்டாக இருந்தால் கூட அவற்றையெல்லாம் அரசாங்கமே நேரடியாக எடுத்துக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன், நகராண்மைக் கழகத்திடம் கொடுத்தால் இன்னும் அதிகமாக சிக்கல்தான் ஏற்படும். இந்த வேலைகளையெல்லாம் கவனிப்பதற்குத் தனி அதிகாரிகளைப் போட்டு உடனடியாக பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் கிடைக்கக்கூடிய வழியிலே ஏற்பாடுகள் செய்தால் தான் அது சாலச் சிறந்ததாக இருக்கும் என்று கூறிக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் சபாநாயகர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் சமர்ப்பித்து இருக்கக்கூடிய அறிக்கையிலே நம்முடைய ராஜ்யத்திலே என்ன என்ன சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதைக் கூறியிருக்கிறார்கள். பத்திரிகைச் செய்திகளையும், முதலமைச்சர் அவர்களுடைய அறிக்கையையும் பார்த்தால் பத்திரிகைச் செய்திகள் எல்லாம் மிகையல்ல, உண்மையென்றே தெரிகிறது. இத்தகைய சேதங்கள் ஏற்பட்டிருப்பதின் மூலம் இராமேஸ்வரத்திலிருந்து சென்னைவரையிலே உள்ள கடற்கரை அனுகூலமாக இல்லை என்பது தெரியவருகிறது. அடிக்கடி, புயல்காற்று ஏதாவது ஒன்று ஏற்படக்கூடிய விதத்தில்தான் கடற்கரை ஓரங்கள் இருந்துகொண்டிருக்கின்றன. புயல் மத்தியிலும், தீ விபத்தின் மத்தியிலும் குடியிருந்துகொண்டிருக்கிறோம். அதற்காக நாம் பயப்படப்போவதில்லை. பெரும்பாலும் இதனால் பாதிக்கப்படக்கூடியவர்கள் கட்டடமில்லாத ஏழைகள்தான். என்பதைப் புரிந்துகொள்ளலாம். ஆகவே, குடியிருப்பு வசதி ஏழை மக்களுக்கு செய்துகொடுக்கக்கூடிய நீண்டகாலத் திட்டம், உடனடியாக செய்யக் கூடிய நிவாரணங்களைச் செய்துகொண்டே இருக்கலாம், அதோடுகூட என்ன ஏற்பட்டாலும் நம்முடைய மக்கள் பாதுகாப்போடு வாழக்கூடிய முறையில் நீண்டகாலத் திட்டம் ஒன்று இதற்காக வேண்டுமென்று வலியுறுத்திப் பேசுவதற்காகவே நான் பேச விரும்பினேன். முதலமைச்சர் அவர்கள் தமக்குள்ள செல்வாக்கைப் பயன்படுத்தி இப்படி ஒரு திட்டத்தை நிறைவேற்றுவதற்கு, மத்திய சர்க்காருக்கு கடந்த மூன்று ஆண்டுகளாக ஏற்படக்கூடிய நிகழ்ச்சிகளையெல்லாம், தனுஷ்கோடி பாதிக்கப்பட்டதிலிருந்து இன்றுவரை என்ன விபத்துக்கள், சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதையெல்லாம் பார்த்து அதற்குத் தகுந்த முறையில் கடற்கரை ஓரத்திலுள்ள எல்லா நகரங்களுக்கும், கிராமங்களுக்கும் பாதுகாப்புக் கொடுக்கின்ற முறையிலே குடியிருப்பு வசதிகளை அமைக்க ஒரு திட்டத்தை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே சேர்ப்பதற்கு வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [9th November 1966

இன்னொரு யோசனையும் கூற விரும்புகிறேன். இப்பொழுது பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிக்கிறார்கள். அவர்களுக்கு தாராளமாக அளிப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. ஏனென்றால் சமீபத்திலே தேர்தல் வந்துகொண்டிருக்கிறது. ஆகவே, நாம் எடுத்துச் சொல்லாவிட்டாலும் கூட முதலமைச்சர் அவர்கள் அதிலே, கவனம் செலுத்துவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. இந்த நிவாரணத் தொகையிலே, அதாவது முப்பது ரூபாய் கொடுக்கிறார்கள், அதிலேகூட நான்கு சுவர்களும் இடிந்தால்தான் கொடுப்பார்கள் என்ற நிலை இருக்கிறது என்று திருமதி அனந்தநாயகி அவர்கள்கூடச் சொன்னார்கள். ஆகவே முப்பது ரூபாய் அதற்கும், பத்து ரூபாய் துணிக்கும் என்பது போதாது. ஏனென்றால் இப்பொழுது மூங்கில், கயிறு, இவற்றின் விலை ஏறியிருக்கிறது, அவர்களுக்கு இந்தத் தொகை போதுமானதாக இருக்காது. அவர்கள் கொடுப்பதை வாங்கிச் சாப்பிட்டு விட்டு போகிறார்களே தவிர, அவர்கள் திரும்பிக் கட்டிக்கொள்வதற்கு முடியவில்லை. ஆகவே, உடனடியாக அளிக்கக்கூடிய நிவாரணத் தொகையின் அளவை அதிகப்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. இராம. அரங்கண்ணல்: கனம் தலைவரவர்களே, சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில் கடந்த கோரப் புயலின் விளைவாக எவ்வளவு குடிசைகள் நாசமாகியிருக்கின்றன என்ற விவரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பணம் கொடுக்கப்படுகிறது. சகோதரி அனந்தநாயகி அவர்கள் குறிப்பிட்டதைப்போல் குடிசைகள் நாசமாகி இருந்தால் முப்பது ரூபாயும், துணிக்காக பத்து ரூபாயும்தான் கொடுக்கிறார்கள். அதிலேகூட ஒரு பக்கத்துச் சுவர் விழுந்தால் கொடுப்பதில்லை, நான்கு சுவர்களும் விழுந்தால் தான் கொடுக்கிறார்கள். ஒரு சுவர் விழுந்தால் அந்த ரூபாய் கொடுப்பதில்லை, துணிக்கு மட்டும்தான் 10 ரூபாய் கொடுக்கிறார்கள். பல இடங்களிலே அதிகாரிகள் அதிகமாக இல்லாததால், புள்ளி விவரங்கள் சரியாகச் சேகரிக்க முடியவில்லை. இதில் பல கட்சிகள் புகுந்து அவருக்குக் கொடு, இவருக்குக் கொடு என்று சொல்லுகின்ற அளவிலே பிரச்னைகள் கிளம்பிக்கொண்டு இருக்கின்றன. குடிசைகள் பாழாகியிருந்தால், முப்பது ரூபாய்தான் கொடுக்கிறோம். ஆனால் 100 கீற்றுக்களின் விலை 22 ரூபாய் விற்கிறது. இந்த நிலைமையில் கீற்றுக்கூட வாங்கமுடியாத நிலைமைதான் இருந்து வருகிறது. திரு. ஹாஜா ஷெரிப் அவர்களுடைய தலைமையின் கீழ் உள்ள கமிட்டி என்ன நிதி இதற்காகக் கொடுக்கும் என்பதை எதிர்ப் பார்க்காமல், சர்க்கார் இந்தத் தொகையை உடனடியாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சேறு நிரம்பிய, பள்ளங்கள் நிரம்பிய ஒரு சில இடங்கள் இருக்கின்றன. அந்த இடங்களையெல்லாம் கடல் மண்ணைக் கொண்டு நிரப்புவதற்குக் கார்ப்பரேஷன் லாரிகளையோ, பி.டபிள்யூ.டி லாரிகளையோ, ராணுவ லாரிகளையோ வைத்து ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

9th November 1966] [திரு. இராம. அரங்கண்ணல்]

மீனவர்களைப் பொறுத்தவரையில் ஏராளமான கட்டுமரம், வலை இவையெல்லாம் போய் இருக்கின்றன. இதற்கு ஃபிஷரிஸ் டிபார்ட்மெண்ட் விவரங்கள் எடுத்திருக்கின்றது. அந்த விவரங்கள் சரியாக எடுக்கப்பட்ட விவரங்கள் அல்ல. ஆகவே, சரியான விவரங்கள் எடுத்து அவர்களுக்குப் போதுமான அளவு நிவாரணம் அளிக்கவேண்டும். மாடுகள் வைத்திருக்கிறவர்கள் மாடுகளை இழந்திருக்கிறார்கள், அவர்களுக்கும் நிதி உதவி அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருமதி அனந்தநாயகி அவர்கள் கூறியதைப்போல் 120-க்கும் மேற்பட்ட டூரிங் சினிமாக்களுக்குக் கிட்டதட்ட 10 லட்சம் ரூபாய் வரை நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அவர்களும் முதலமைச்சர் அவர்களிடம் மகஜர் கொடுத்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். ஆகவே, அவர்களுக்கும் ஒரு ஆண்டுக் காலம் நீட்டித்துக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நிவாரணங்கள் உடனடியாகக் கிடைக்கக்கூடிய முறையிலே இரண்டு கோடி ரூபாய் என்று பார்க்காமல், நான்கு கோடி ரூபாய் செலவானாலும் பரவாயில்லை, உடனடியாக உதவியளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : கனம் தலைவர் அவர்களே, வந்து போய் விட்ட புயலைப் பற்றி, அதனால் ஏற்பட்ட சேதங்களைப் பற்றி அதிகமாக விவாதிப்பதை விட, புயலால் பாதிக்கப்பட்டிருக்கும் பகுதிகளுக்கும், புயலால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கும் உடனடியாக, போதுமான நிவாரணம் அளிக்க வேண்டும் என்பதிலே இந்த மன்றம் அதிக அக்கறைக் காட்ட வேண்டுமென்பதை நான் இங்கே எடுத்துக் கூற விரும்புகிறேன்.

(திரு. டி. கார்ச்சா கவுடர் தலைமை.)

புயல் ஒவ்வொரு ஆண்டும் வந்து கொண்டிருக்கிறது. இப்படி வருகின்ற நேரத்தில் எல்லாம் லட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். கால்நடைகள் சாகின்றன. பல பகுதிகள் இருந்த இடம் தெரியாமல் அழிக்கப்படுகின்றன. இவைகளுக்கு நீடித்த நிவாரணம் உருவாக்கப்படுகின்ற வகையில், இந்த அரசாங்கம் திட்டமிட்டுச் செயல்பட்டிருக்க வேண்டும். இனியாவது அப்படிப் பட்ட நல்ல செயல் முறைத் திட்டங்களை வகுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள மிகவும் விரும்புகிறேன்.

இப்போது வீசிய புயலால், தென்னாற்காடு மாவட்டத்தில் பெரும் பகுதியும், செங்கற்பட்டு மாவட்டத்தில் பெரும் பகுதியும், வட ஆற்காடு மாவட்டம், சென்னை ஆகியவற்றில் பெரும் பகுதியும் பாதிக்கப்பட்டிருப்பதும், பல்லாயிரக்கணக்கான குடிசைகள் அழிந்திருப்பதும், ஏராளமானவர்கள் இறந்திருப்பதும் ஆகிய விவரங்களைக் கனம் முதலமைச்சர் அவர்கள் இங்கு வாசித்தளித்த அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த அறிக்கை சரியான கணக்குகளின் அடிப்படையில் வெளி வரவில்லை என்பதை எதிர்க்கட்சியிலிருந்து நாங்கள் சொன்னால், முதலமைச்சர் அவர்

கள் கோபித்துக் கொள்ளக்கூடாது. வேண்டுமென்று, குறைத்துக் காட்ட வேண்டுமென்று தயாரித்தார்கள் என்று குற்றம் சொல்லவில்லை, சரியான விவரங்கள் கிடைக்கவில்லை என்ற விளக்கத்தைத்தான் அளிக்க விரும்புகிறேன்.

ஆளும் கட்சியில் இருக்கும் அம்மையார் திருமதி அனந்தநாயகி அவர்கள் கூட, 7,500 குடிசைகள்தான் சென்னையில் சேதமடைந்தன என்று கொடுக்கப்பட்ட புள்ளி விவரம் தவறானது என்றும், அதைப் போல் மூன்று மடங்கு வீடுகள், குடிசைகள் நாசப்படுத்தப்பட்டிருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். இன்னும் சரியான விவரங்களை எடுப்பதற்கு அரசினர் பெருத்த முயற்சியை மேற்கொள்ளவேண்டும்.

விவசாயிகள், மீனவர்கள், குறிப்பாகவும் சிறப்பாகவும் ஆதித் திராவிட மக்கள், ஏழை எளியவர்கள், நடுத்தர மக்கள் இந்தப் புயலால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இவ்வாறு புயலால் பாதிக்கப்பட்ட நேரத்தில் அரசாங்க இலாகாக்களுடைய உதவிகள் உடனடியாகக் கிடைத்தனவா என்றால், இல்லை என்பதைத் தான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அரசாங்கம், இந்தக் காரியத்திலே இன்ன இன்ன இலாகாதான் கவனிக்க வேண்டுமென்று இல்லாமல் எல்லா இலாகாக்களும் இப்படிப்பட்ட கோரச் சம்பவங்கள் நடைபெறுகின்றபோது முன் நின்று ஏழை மக்களுக்கு, பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி புரிகின்ற செயலில் இறங்க வேண்டும், குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால் போலீஸ் துறையில் இருப்பவர்கள்கூட இந்தக் காரியங்களுக்குப் பயன்படுத்தப்பட வேண்டும்.

நான் ஒன்றைச் சொல்வேன். நண்பர் திரு. நடராஜ கவுண்டர் சிக்கிக் கொண்ட அதே பகுதியிலே, மதுராந்தகம் பகுதியிலே புயலை நேரடியாகச் சந்திக்கும் அளவுக்கு நானும் சிக்கிக் கொண்டேன். சிக்கிக் கொண்ட நாங்கள் சட்ட மன்ற உறுப்பினர்கள், ஓரளவு வசதி படைத்தவர்கள். எங்களாலேயே புயலால் ஏற்பட்ட விளைவுகளை இரண்டு நாட்களுக்குத் தாங்கிக் கொள்ள முடியவில்லை என்றால், இருக்கின்ற ஓட்டைக் குடிசைகளையும் இழந்து விட்ட மக்கள், ஹரிஜன மக்கள், ஏழை மக்கள், பாட்டாளிகள் எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டிருப்பார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். நான் சிக்கிக் கொண்ட இடத்திலிருந்து சென்னைக்கு வர இரண்டு நாட்கள் பிடித்தது. நல்ல காலமாக நெய்வேலியிலிருந்து வந்த புல்டோசர் அங்குள்ள ஆர்.டி.ஓ. உத்தரவுப்படி, அங்குள்ள மரங்களை எல்லாம் ஒதுக்கி விட்டதன் காரணமாகக் காட்டுப்பாக்கம் வரையிலே காரிலே பிரயாணம் செய்ய முடிந்தது. நூற்றுக் கணக்கான பஸ்களில் மக்கள் காட்டுப்பாக்கம் வரையில் வர முடிந்தது. நான் இங்கே கேட்பதெல்லாம்—மதுராந்தகத்தில் இருந்து காட்டுப்பாக்கம் வரையில் 40, 50 மைல் தேறும். அவர்கள் நெய்வேலியிலிருந்து புல்டோசரை வரவழைத்து மரங்களை அப்புறப்படுத்தினார்கள்.

9th November 1966] [திரு. மு. கருணாநிதி]

ஆனல், காட்டுப்பாக்கத்திலிருந்து சென்னைவரை உள்ள 20 கல் தொலைவில் உள்ள மரங்களைச் சென்னையிலுள்ள இலாகாவினர் அகற்றுவதற்கு எந்த வித முயற்சியையும் ஏன் எடுத்துக் கொள்ள வில்லை என்பதுதான். இது போன்ற நிலைமையில் துரிதமாக நடவடிக்கை எடுத்துக் கொள்வதில் இலாகாவினர் இறங்கவில்லை என்பதற்கு இது போதுமான சான்றுகும் என்பதற்காகத்தான் இதைக்குறிப்பிட விரும்புகிறேன்.

சென்னை போன்ற இடங்களில் பல பகுதிகளில் தண்ணிர் தேங்கி இருக்கும் நிலையில் அந்தத் தண்ணீரை அகற்ற வேண்டும். அதற்காகத் தீயணைக்கும் படையினரை அழைத்தால், அதற்கான கட்டணத்தைக் கட்டினுல்தான் தண்ணீரை அகற்ற முடியும் என்று சொன்னுர்கள். இதனுல் தியணைக்கும் லாரிகள் வந்து தண்ணீரை இறைக்க முடியவில்லை. தியணைக்கும் படையினர் மீது குற்றமாகச் சொல்லவில்லை. இப்படிப்பட்ட நேரங்களில் அரசாங்கம் உத்தரவு போட்டு, இந்த மாதிரிப் பகுதிகளில் தேங்கி நிற்கும் தண்ணீரை அகற்றுவதற்கு வழி செய்யவேண்டும். அப்படிப்பட்ட உத்தரவைத் தீயணைக்கும் படையினருக்கு இந்த அரசாங்கம் தந்திருக்க வேண்டும். இதுவரை அப்படிப்பட்ட உத்தரவைத் தராமல் இருந்தது உள்ளபடியே குற்றமாகும்.

ஆங்காங்கு தூர்ந்து கிடக்கின்ற வயல் வெளிகள், கழனிகள் ஆகியவற்றை மறுபடியும் பயன்படுத்தி விளைச்சல் நிலமாக்க தீவிரமான திட்டங்களை விவசாய இலாகா வகுக்க வேண்டும். அதற்கு மற்ற மாவட்டங்களிலிருக்கின்ற விவசாயக் கருவிகள், மற்றவைகள் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு வரவழைக்கப்படுகின்ற அளவில் அரசாங்கம் துரிதமாக நடவடிக்கைகளில் இறங்க வேண்டும். பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு வரி நிவாரணம் அளிக்க வேண்டும். குறிப்பாக வீட்டு வரி, நிலவரி இவைகளிலே நிவாரணம் அளிக்க வேண்டுமென்று குறிப்பிடப்பட்டது. அதையே நானும் வலியுறுத்திக் குறிப்பிட விரும்புகிறேன். நிலவரியை ரத்து செய்ய வேண்டுமென்பதைக் கொள்கை வடிவில் ஏற்றுக் கொண்டிருக்கிற இந்த அரசு 25 சத விகிதம் சர்சார்ஜை விலக்குகிறேம் என்ற தீர்மானத்தையும் இந்த மன்றத்திலே கொண்டு வந்து முடிவெடுத்திருக்கிறது. இந்த 25 சத விகித வரியைப் போட நேரத்திலேயே எதிர்க்கட்சியினராகிய நாங்கள் பலத்த கண்டனத்தைத் தெரிவித்திருக்கிறேம். இது விவசாயிகளுக்கு ஏற்றதல்ல, அவர்களை வாட்டுவதாகும் என்று கூறியிருக்கிறேம். ஆனுலும் பெரும்பான்மை காரணமாக அன்றையதினம் இந்த வரி போடுவது நிறைவேற்றப்பட்டது. இந்த வரி பலரிடம் வசூலிக்கப்பட்டும் இருக்கிறது. இப்போது அதை நீக்குகிற போது, எல்லா மாவட்டங்களுக்கும் இல்லா விட்டாலும், இந்தப் புயலால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் இருக்கக் கூடிய விவசாயிகளுக்காவது அவர்களிடமிருந்து முன்பு வசூலிக்கப்பட்ட அந்த 25 சத விகிதம் சர்சார்ஜைத் திருப்பித் தர வேண்டுமென்பதையும் இந்த மன்றத்திலே எடுத்துக் கூற கடமைப் பட்டிருக்கிறேன். விவசாயக் கடன்களையும் கூட்டுறவுக் கடன்களை

[திரு. மு. கருணாநிதி] [9th November 1966

யும் கூடுமான வரையில் முழுவதும் தள்ள முடியாவிட்டாலும், பாதிக்கப்பட்டவர்களுக்கு ஐந்து வருஷ காலத்திற்காவது இந்தக் கடன்களைத் திருப்பிக் கேட்காமல் இருக்கும் அளவில் தள்ளிப் போடும் நிலைமையை உருவாக்க வேண்டும். மின்சாரக் கட்டணங் கள் குறிப்பிட்ட காலத்திற்குத் தள்ளப்பட வேண்டுமென்பதையும் அரசினரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். வீடு இழந்த வர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கத் தேவையான பணம் கடன் கொடுக்கப்பட வேண்டும். தண்டாரம்பட்டி கிராமத்தில் தீ விபத் தால் பாதிக்கப்பட்டவர்களுக்குக் கனம் திரு. கக்கன் அவர்கள் முன் நின்று வீடு ஒன்றுக்கு 300 ரூபாய் வீதம் கடன் கொடுக்க ஏற்பாடு செய்து கொடுத்தார்கள் என்பதை ஞாபகப்படுத்தி, அதைப்போலவே புயலால் வீடுகளை இழந்த ஏராளமான விவசாயி களுக்கு, ஏழை நடுத்தர மக்களுக்கு அவர்கள் கோருகின்ற கடனை அளித்து வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்ற நிலைமையை உருவாக்க வேண்டும்.

சென்னை நகரத்தில் ரோடுகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று பல உறுப்பினர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். சென்ற ஆண்டு புயல் அடித்த போது சர்க்காருக்குச் சொந்தமாக இருக்கக்கூடிய இரண்டொரு பெரும் சாலைகளைத் தவிர, மாநகராட்சிப் பொறுப் பில் இருக்கக்கூடிய சாலைகளைப் பழுது பார்ப்பதற்காக 12 லட்சம் ரூபாய் மாநகராட்சிக்கு அதிகச் செலவு ஏற்பட்டது. அதை அரசாங்கம் தரவேண்டுமென்று கேட்கப்பட்ட நேரத்தில், அரசாங் கம் அதைக் கண்டிப்பாக மறுத்து விட்டது. புயலால் திடீரென்று ஏற்படுகின்ற செலவுகளைச் சரிக்கட்டும் வகையில் மாநகராட்சியின் நிதிநிலை போதுமானதாக இல்லாத நிலைமையில், அரசாங்கம் முன் நின்று அத்தகைய செலவுகளை ஈடுகட்ட உதவி செய்யவேண்டும். அப்படி உதவி செய்தால்தான் அத்தகைய சாலைகளை உடனடியாகப் பழுது பார்ப்பதற்கும், சுகாதார வசதிகளைக் காப்பாற்றவும் சூழ் நிலை உருவாகும். அதேபோல் ஊராட்சி மன்றம், நகராட்சி மன்றங் களுக்கும் விசேஷ கடன்களைத் தருவதற்கும் முன்வர வேண்டு மென்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுவாக தென் ஆற்காடு, வட ஆற்காடு, சென்னை, செங்கல் பட்டு மாவட்டங்களில் பாதிக்கப்பட்டிருக்கிற இந்த மக்களுக்கு உதவி செய்வதற்கு ஒரு பொதுவான கமிட்டி ஆங்காங்கு உருவாக் கப்பட்டு அந்தக் கமிட்டிகள் மூலம் ஏற்பட்டிருக்கிற சேதங்களை
12-30 p.m. ஒழுங்காக ஆராயவும், சரியானத் தகவல்களைப் பெறவும், பெற்ற தகவல்களுக்கேற்ப அவர்களுக்கு நிவாரணம் அளிக்கவும் இந்தக் கமிட்டிகளைப் பயன்படுத்திக் கொள்கிற முயற்சியில் இந்த அரசு ஈடுபடவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

* **கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் நடைபெற்ற விவாதங்களில் இது கடைசி விவாதம். இந்தக் கடைசிக் கட்டத்தில் நாம் காண்கிற காட்சி இரண்டு பக்கங்கள் என்று பெயரே தவிர, இரண்டு பக்கங்களும்

ஒன்ருக இணைந்து விட்டன, கலந்து விட்டன என்ற காட்சியைத் தான் காண்கிருேம். அது பொருத்தம்தான். கலந்து போகிற போது அம்மாதிரி ஒரு ஒற்றுமை நிலை ஏற்படுவது வரவேற்கத் தக்கதுதான். புயல் நிவாரணம் பற்றி இந்தப் பக்கத்திலுள்ள அங்கத்தினர்களாஞலும் சரி, அந்தப் பக்கத்திலுள்ள அங்கத்தினர் களாஞலும் சரி என்னென்ன நிவாரணங்கள் அளிக்கப்பட வேண்டும், அளிக்கப்படுகிற நிவாரணம் போதாது, சேதம் எவ்வாறு அதிகரித்திருக்கிறது என்று ஒவ்வொரு தொகுதியில் உள்ளவர் களும் அந்தந்தத் தொகுதிகளில் சர்க்காருக்கு கிடைத்த தகவல்களை வைத்துக்கொண்டு, கொடுத்த விவரங்கள் குறைவாக இருக்கிறது, இதற்கு மேலும் சாவு ஏற்பட்டிருக்கிறது என்றெல் லாம் கூறினுர்கள், அதிலும் கூட போட்டி. போட்டி என்ருல் ஒற்றுமையான ஒரு போட்டி. தொகுதிக்குத் தொகுதி போட்டி மற்றபடி கட்சிகளுக்குள் போட்டியில்லை. கட்சிகள் எல்லாம் ஒன்ருக கலந்துவிட்டன.

(கனம் சபாநாயகர் தலைமை)

ஒரு ஆங்கிலப் பழமொழி உண்டு. ஒரு விபத்து ஏற்படும்போது தோழமை ஏற்படும் என்று சொல்வார்கள். அதை இங்கு நாம் பிரத்தியட்சமாகக் காண்கிருேம். நிவாரணம் அளிப்பது, நிவாரணம் சரியாகயில்லை, நிவாரணம் அதிகமாக அளிக்கப்பட வேண்டும் என்ருர்கள். உணவு தான்யங்கள் அறுவடையாகி புயல் ஏற்பட்டதால் வசதியுள்ளவர்களுக்குக் கூட நஷ்டம் ஏற்பட்டிருக் கிறது. பெரும்பாலும் ஏழை மக்கள்தான் அதிகமாகப் பாதிக்கப் பட்டிருக்கிருர்கள். யாராக இருந்தாலும் சரி, அவர்கள் தானியம் வைத்திருந்தால் கொள்முதல் செய்யக் கூடாது, அவர்கள் எங்கு வேண்டுமாஞலும் விற்றுக் கொள்ளலாம். அதிக விலைக்கு விற்றுக் கொள்ளலாம், ஆனல் அரிசி கொடுக்கவேண்டும். இலவசமாகக் கூட கொடுக்கவேண்டும் என்பதில் எல்லோருக்கும் ஒற்றுமை. சற்று முன்பு நடந்த விவாதத்தில் பார்த்தோம். எல்லோரும் சேர்ந்து விட்டார்கள். எந்த நிலையிலும் மக்களுக்கு நிவாரணம் அளிப்பது, உதவி அளிப்பது, நிலைமையைச் சமாளிப்பது என்பதில் நன்ருக ஆராய்ந்துதான் முடிவு செய்கிறது அரசாங்கம். திரு. கலியாண சுந்தரம் அவர்கள் இன்று பேசியதைப் பார்த்தால், அவர்கள் தேர்தலுக்கு நிற்கப் போவதில்லை என்று தெரிகிறது. நாங்கள்தான் மக்களிடம் போகிருேம், மற்றவர்கள் அப்படிப் போவதில்லை, நாங்கள் அப்படிச் செல்வதிஞல்தான் குறைகளை உணர முடிகிறது என்றெல்லாம் சொன்ஞர்கள். அது அவர்கள் பாணி. குத்தல் இல்லாமல் அவர்களால் பேச முடியாது. பின்ஞல் பேசு வதில்கூட குத்தல் இருக்கும். சுமுகமாகப் பேசுவதில் கூட குத்தல் இல்லாமல் அவர்களால் பேச முடியாது. அப்படிப் பேசிஞல் அவர்கள் கலியாணசுந்தரம் அல்ல. அப்போது அவர்கள் பெயரை மாற்றிக்கொள்ளவேண்டும்.

என்னைக் கேட்கிறவர்கள், அரிசி கிடைக்கச் செய்யுங்கள் என்கிறார்கள். ஃபுட் பாக்கட்ஸ் கூட செங்கல்பட்டு மாவட்டத்தில் கொடுக்கப்பட்டது. அரிசிக் கிடைக்கச் செய்வதில் தொடர்ந்து அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது. எவ்வளவு பேர்கள் இறந்து போனார்கள் என்றால் தெரிந்த கணக்கைக் கொடுக்கிறோம். குறைத்துக் கொடுக்கவேண்டும் என்பதல்ல. அதனால் யாருக்கு என்ன வந்து விட்டது? கொஞ்சம் அதிகம் இறந்துவிட்டார்கள் என்று சொல்லவேண்டுமென்றால் சொல்லலாம். யாரும் இறக்கவே வேண்டாம். உயிரோடு இருக்கட்டும். உயிரோடு இருப்பவர்களுக்கு நிவாரணம் அளிப்பதில் அரசாங்கம் தயங்காது. தாராளமாக வேண்டிய நிவாரணத்தை அளிக்கும். நான் வேறு ஒரு இடத்தில் சொல்லியிருக்கிறேன். சின்னக் குழந்தைகள், ஒரு குழந்தைக்கு காய்ச்சல் வந்தால் அதற்கு மருந்துகள் எல்லாம் கொடுக்கும்போது மற்றொரு குழந்தை தனக்கு காய்ச்சல் வரவில்லையே என்று வருந்தும், நம்மைக் கவனிப்பார் இல்லையே என்ற ஏமாற்றம் அதற்கு ஏற்படும். அப்படி சில சமயங்களில் நமக்குத் தோன்றுகிறது. ஆனால், இது இயற்கையால் ஏற்பட்ட கோளாறு, கடுமையான கோளாறு. தி.மு.க. துணைத் தலைவர் அவர்கள் கூறியதுபோல் இந்த விவாதம் புயல் காற்றைப் பற்றியதல்ல. விபத்து ஏற்பட்டதை எவ்வாறு சமாளிப்பது என்பதில் கவனம் செலுத்தவேண்டியிருக்கிறது. மக்கள் பலவிதங்களில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த மன்ற அங்கத்தினர்கள் கூட பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். தி.மு.க. துணைத் தலைவர் அவர்கள் கூட பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். வேறு என்ன சான்று வேண்டும்? நாம் இவ்வளவு பாதிக்கப்பட்டிருக்கிறபோது சாதாரண ஏழை மக்கள் எவ்வளவு தூரம் தவிப்பார்கள் என்பதை எல்லோரும் உணர்ந்து உருக்கமாகப் பேசினார்கள்.

சென்னை நகரில் உள்ள ஃபயர் என்ஜின்ஸ் பற்றிச் சொன்னார்கள். அதுபற்றி தடையில்லை. தண்ணீரால் பாதிக்கப்பட்டிருந்தால் அதை இறைக்க ஒன்றும் தாமதம் இருக்காது. சென்னையில் நானும் சுற்றிப்பார்த்தேன். தண்ணீர் மறுநாளே வடிந்துவிட்டது. குடிசைகள் கூடாதுதான். அதனால் அடிக்கடி விபத்து வருகிறது. தீ விபத்து ஏற்படுகிறது, வெள்ளம் புயல் இவற்றினால் பாதிப்பு ஏற்படுகிறது. கல் கட்டடங்கள் கூட பாதிக்கப்பட்டன. ஃபோர் ஷோர் எஸ்டேட்டைச் சென்று பார்த்தேன். அங்கு வீடுகள் கட்டியிருக்கிறார்கள், வேறு இடமில்லை. அவர்கள் கூட பாதிக்கப்பட்டார்கள். மறுநாள் வந்து விட்டார்கள். மின்சார இணைப்புக்கள் எல்லாம் பாதிக்கப்பட்டன. இன்று கூட காலையில் மின்சார போர்ட் தலைவர் அவர்களை வரவழைத்துப் பேசினேன். இது விஷயமாக இரண்டு மூன்று நாட்களாக சுற்றிக் கொண்டிருக்கிறேன், உடனடியாக எவ்வளவு சீக்கிரமாக இதையெல்லாம் சீர்படுத்த முடியுமோ, அப்படிச் சீர்படுத்தி வருகிறோம் என்று சொன்னார்கள்.

9th November 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

நான் கொடுத்த அறிக்கையில் சிலவிடங்களை விட்டுவிட்டேன், செய்யாறை விட்டுவிட்டேன் என்று வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன் புலவர் கோவிந்தன் அவர்களிடம். அதிகமாகப் பாதிக்கப்பட்டதைச் சொன்னேன். அங்கும் அதிகப் பாதிப்பு என்று சொன்னால் இதில் சர்ச்சை இல்லை. பாதிக்கப்பட்டது எந்த அளவிற்கு என்பதைப் பற்றி ஆராயவேண்டியதில்லை. எந்த அளவிற்கு பாதிக்கப்பட்டிருந்தாலும், உடனடியாக மக்களுக்கு வேண்டிய நிவாரணம் அளிக்கவேண்டும் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை. ஏரிகள் உடைந்திருக்கின்றன. வீடூர் ரிசர்வாயரே காலியாகிவிட்டது. அதுபற்றி நேற்றைய தினம் திரு. கலியாணசுந்தரம் அவர்கள் சொன்னார்கள். அதுபற்றி விசாரித்ததில் ஷட்டர்களில் முந்திய நாளே மின்சார இணைப்பு போய்விட்டது. ஷட்டரில் ஒன்று தவிர, மற்றவை கையால் செய்யவேண்டியிருந்தது. அதை எடுக்க முடியவில்லை. அதை எடுத்து தண்ணீரை விட்டிருந்தால் பாதிக்காதிருக்கலாம். அது முடியவில்லை. இருந்தாலும் அங்குள்ளவர் ஒரு சூப்பர்வைசர். அவர் வேறு என்ன செய்திருக்கக்கூடுமென்பதைப் பற்றி விசாரணை வைத்து என்ன செய்யவேண்டும், தவறுதல் இருக்கிறதா என்பதைக் கூடப் பார்க்க இப்போது கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. ஏரிகளை எல்லாம் சீக்கிரமாகச் சீர்படுத்துவதற்கு மராமத்து இலாகாவினர் தொடர்ந்து கவனம் செலுத்தி வருகின்றனர். நான் அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதுபோல் வேறு திட்டங்களுக்காக இருக்கிற இயந்திரங்கள் இவற்றையெல்லாம் கூட பயன்படுத்தி வருகிறார்கள். அதேபோல் பாதைகள் சீரமைப்பிலும் உடனடியாகத் தொடர்ந்து கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

கடன்கள் கொடுப்பது பற்றி சொன்னார்கள். நீண்ட கால சீரமைப்பு பற்றிச் சொன்னார்கள். அவையெல்லாம் கவனிக்கப்பட்டு வருகிறது. உடனடியாக என்ன நிவாரணம் அளிப்பது, எவ்வளவு அளிக்கவேண்டும், பின்னர் எவ்வளவு அளிப்பது என்பதெல்லாம் இருக்கின்றன. இப்போது அளிக்கிற நிவாரணத்தை மானியமாக கொடுப்பது என்றால், அதோடு கூட மேலும் எவ்வளவு கடன் கொடுப்பது என்பதெல்லாம் இருக்கின்றன. பணம் பற்றி கவலையில்லை. எவ்வளவு வேண்டும், எவ்வளவு அவசியம், எவ்வளவு நியாயமாக இருக்குமோ, அந்த அளவிற்கு நிவாரணம் அரசாங்கத்தால் அளிக்கப்படும். இவற்றையெல்லாம் ஒட்டுமொத்தமாக கவனிக்க ஒரு ஸ்பெஷல் ஆபீசரைப் போட்டிருக்கிறோம், ரெவின்யூ போர்ட் காரியதரிசியாக இருப்பவர். எவ்வளவு நாட்களாகுமோ, அதுவரை சில மாதங்கள் இதே வேலையைக் கவனித்து ஒவ்வொரு ஜில்லாவோடும் தொடர்பு வைத்துக் கொண்டு எல்லாத் துறைகளிலும் கவனம் செலுத்துவது, மீன் இலாகாவாக இருந்தாலும், மின்சார இலாகாவாக இருந்தாலும், ஹைவேஸ் இலாகாவாக இருந்தாலும் நீர்ப்பாசன இலாக்காவாக இருந்தாலும் எந்த இலாகாவாக இருந்தாலும் எல்லா

[திரு. எம். பக்தவத்சலம்] [9th November 1966

இலாக்காக்களோடும் தொடர்பு வைத்துக்கொண்டு எல்லா வேலைகளையும் இணைத்து, இதில் முழுக் கவனமும் செலுத்தி உடனடியாக நிவாரணம் அளிப்பதற்கு ஒரு ஸ்பெஷல் ஆபீசரைப் போட்டிருக்கிறோம். இப்போது சுமாராகச் சொன்னேன் இரண்டு கோடி ரூபாய் என்று. போதாது என்றால், மூன்று கோடி என்றால் வைத்துக்கொள்ளலாம்; நான்கு கோடி என்றால் வைத்துக் கொள்ளலாம். என்ன ஆனாலும் செய்ய வேண்டியது தான். பட்ஜெட் போட்டு இவ்வளவு தான் என்பது அல்ல. இதற்கு மத்திய அரசாங்கத்தின் உதவியும் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம். இது சம்பந்தமாக நான் மத்திய அரசாங்க அதிகாரி ஒருவரிடம் பேசிக்கொண்டிருந்தேன். மத்திய அரசாங்கம் இது வரையில் கொடுத்து வந்த உதவிகூட இப்போது தாராளமாக ஆக்கப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது. நிவாரணம் அளிக்கும் விஷயத்தில் தாராளமாகக் கிடைக்கும் என்று தெரிகிறது. என்னென்ன செய்யவேண்டும், என்ன செலவு ஆகும் என்பதைக் கூடிய வரையில் கணக்குப் போட்டு, மத்திய அரசாங்கத்திற்குத் தெரிவித்து, அவர்களிடம் கிடைக்கக் கூடிய உதவியையும் பெற்று, நிவாரண வேலைகளைத் துரிதமாகச் செய்யவேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம்.

நீண்ட காலத் திட்டமும் செய்வது தான் அரசாங்கத்தின் நோக்கம். தென்னைகள் போனது பற்றி கனம் அங்கத்தினர் திரு. நல்லசிவம் அவர்கள் சொன்னார்கள். ஏராளமான தென்னைகள் அழிந்து போய்விட்டன. சவுக்கு அழிந்தது, மாந்தோப்பு அழிந்தது, எல்லாம் இருக்கிறது. தென்னைகள் அழிந்தது என்றால், முன்னே அடித்த புயலின்போது தென்னைகள் அழிந்த போது திட்டம்போட்டு, கடன் கொடுத்து, தென்னங்கன்றுகள் கொடுத்து சீராக வைக்க ஏற்பாடு செய்தோம். அங்கே இப்போது தென்னைகள் வந்துவிட்டன. அதே வகையிலே செங்கற்பட்டிலே, வட ஆர்க்காடு மாவட்டத்திலே, தென் ஆர்க்காடு மாவட்டத்திலே, சென்னை நகரத்திலே எங்கு எங்கு போயிருந்தாலும், அதையும் பார்த்து வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய முடியும்.

கால்நடைகளை இழந்தவர்கள் பலர் அதுவும் கவனிக்கப்பட்டு வருகிறது. பள்ளிக்கூடக் கட்டடங்கள் போயிருக்கின்றன. அவைகளையும் சீராக அமைக்க வேண்டியிருக்கிறது. அநேகமாக பஞ்சாயத்து யூனியன் கட்டடங்கள் போயிருக்கின்றன. முன்பு இந்தமாதிரி விபத்துக்கள் ஏற்பட்ட காலத்தில் நிவாரணம் அளிக்கப்பட்டது. அதேமாதிரி மீண்டும் அளிக்கப்படும். நிவாரணம் அளிப்பதை நாம் உடனடியாகத் தான் அளிக்கப் பல உறுப்பினர்கள் பேசினார்கள். உடனடியாகத் தான் அளிக்கப்பட்டு வருகிறது. உடனடியாக அளிக்கப்பட்டு வருகிறது என்று சம்பந்தப்பட்ட மக்களே ஒப்புக்கொள்ளுகிறார்கள், பாராட்டுகிறார்கள். அதிலே தாமதம் இருக்கக் கூடாது என்பதுதான் அரசாங்கத்தின் கவலை.

9th November 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

வரி வஜா என்று சொன்னார்கள். நெல்லை வைத்துக்கொண்டிருந்தால் கூட கொள்முதல் செய்யக்கூடாது, எந்த விலைக்கு வேண்டுமென்றாலும் விற்றுக்கொள்ளலாம் என்று சொல்லுவது போல, எல்லா வரியையும் வஜா செய்யவேண்டுமென்று சொல்லலாம். எது, எது வஜா செய்யப்படவேண்டுமோ, தள்ளிப் போடப்பட வேண்டுமோ அவைகளெல்லாம் செய்யப்படும். புயல் காற்று இல்லாமலேயே சென்ற ஆண்டு அரசாங்கம் போட்ட 25 சத விகிதம் சர்சார்ஜை இப்போது தள்ளி விட்டோம் என்று சொன்னதற்கு கனம் எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள், சென்ற ஆண்டில் போட்டதைத் திருப்பிக்கொடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். இந்தப் பக்கத்திலிருந்தும் அந்த மாதிரிக் கோரிக்கைகள் வரவில்லையே என்பது தான் எனக்கு ஆச்சரியமாக இருந்தது. சென்ற ஆண்டு போட்டதைப் போல இரட்டிப்புத் தொகை திருப்பிக் கொடுக்கவேண்டுமென்று கூடக் கேட்கலாம். அப்படிக் கேட்பதில் தவறு இல்லை. வரி வஜாவாக இருந்தாலும், நிவாரண வேலையாக இருந்தாலும், உதவி அளிப்பதாக இருந்தாலும், கொஞ்சம்கூட செலவு ஆகிவிடுமே என்ற கவலை இருக்காது. எல்லாவற்றையும் பார்த்து, துரிதமாக என்ன என்ன வகையில் அளிக்க வேண்டுமோ, அந்த வகையில் அளிக்கப்படும்.

காட்டுப்பாக்கத்தில் விழுந்த மரத்தை எடுக்க முடியவில்லை என்று சொன்னார்கள். நான் பார்த்த வரையில், சென்னை நகரத்தில் கூட மரங்கள் விழுந்திருக்கின்றன. சுற்றிலும் விழுந்திருக்கின்றன. நான் பார்த்துக்கொண்டுதான் வருகிறேன். பாதைகளெல்லாம் சீர்படுத்தப்பட்டுத்தான் இருக்கிறது. புயல் திடீரென்று எதிர்பாராமல் வந்தது. மன்றத்திற்கே தெரியாமல் வந்தது; கூட்டத்தைக் கூட தள்ளி வைக்க வேண்டியிருந்தது. உடனடியாக கவனம் செலுத்தி வருகிறார்கள் என்பதற்காகப் பாராட்டித் தெரிவிக்க விரும்புகிறேன். தவறுதல் இல்லை. அப்படி யாராவது அஜாக்கிரதையாக இருந்து கவனம் செலுத்தாமல் இருந்தால் தவறுதான். அதை அரசாங்கம் பார்த்துக்கொண்டு இராது. அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் திடீரென்று எப்படி வந்ததோ, அந்த மாதிரி பல துறை அதிகாரிகளெல்லாம் ஒரே ஊக்கத்தோடு, கவலையோடு, ஆர்வத்தோடு, மக்களுக்கு உடனடியாக நிவாரணம் அளிக்கும் முறையில் செயல்பட்டு வருகிறார்கள். அவர்களுக்கெல்லாம் என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

நமது பிரதமர் அவர்கள் கூட புயல் அடித்து ஏற்பட்ட சேதத்தைப் பற்றிக் கேள்விப்பட்டு இன்றைக்கு எனக்குத் தந்தி கூட வந்தது. ப்ரைம் மினிஸ்டர்ஸ் ரிலீஃப் ஃபண்டிலிருந்து 50,000 ரூபாய் நன்கொடையாக—50,000 ரூபாய் எந்த மூலைக்கு என்று கேட்கலாம்: இது டோக்கன் தான்—பிரதம மந்திரி அவர்களும் இதை அறிந்து இதிலே அக்கறை செலுத்துகிறார்கள் என்ற முறையில், அனுதாபத்தைத் தெரிவிக்கும் முறையில், 50,000 ரூபாய் நன்கொடை அளித்திருப்பதாகத் தந்தி அனுப்பியிருக்கிறார்கள்.

அது சற்று முன்புதான் வந்தது. இதற்கு மேல் மத்திய அரசாங்கத்தின் உதவி தாராளமாகக் கிடைக்கும் என்று நம்புகிறேன். மத்திய அரசாங்கத்திலிருந்து எவ்வளவு கிடைத்தாலும் எவ்வளவு வேண்டுமோ, அவ்வளவுக்கு நிவாரணம் அளிக்க, உடனடியாக நிவாரணம் அளிக்க, ஏழை மக்களுக்கு வேண்டிய நிவாரணம் அளிக்க, ஏதாவது சங்கடங்கள் இருந்தாலும், செய்ய வேண்டியதைச் செய்ய அரசாங்கம் தயங்காது என்று கூறி முடித்துக்கொள்ளுகிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தப் புயலால் ஏற்பட்ட பயங்கரச் சேதத்தைப் பற்றி கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்தச் சேதத்தின் தன்மையையொட்டி மத்திய சர்க்காரின் உதவியைப் பெறுகிற நேரத்தில், அஸ்ஸாம், பீஹார் போன்றவைகளிலெல்லாம் வெள்ளச் சேதத்திற்காக மூன்ருவது திட்டத்தில் 100 கோடி ரூபாய்க்கு மேல் ஒதுக்கியிருக்கிருர்கள் ; அந்த வெள்ளத் தடுப்பு நிதியிலிருந்து நாம் இதுவரையில் எதுவுமே பெறறதில்லே. மத்திய அமைச்சர் திரு. அழகேசன் அவர்களே போய்ப் பார்த்துவிட்டு செங்கற்பட்டு மாவட்டத்தில் 2 கோடி ரூபாய் அளவுக்குச் சேதம் இருக்கும் என்று சொல்லியிருக்கிருர்கள். மூன்ருவது திட்டப்படி வடநாட்டு மாநிலங்களுக்குச் செலவிடுகிற தொகையைக் காட்டி, டோக்கன் நிவாரணமாக இல்லாமல், ஏறக்குறைய சேதம் 10 கோடி ரூபாய் அளவுக்கு இருக்கிற காரணத்திஞல், மத்திய அரசாங்கத்தின் உதவியை அந்த அளவுக்குப் பெற்று, வெள்ளச் சேதத்தைப் போன்று புயலால் ஏற்பட்ட சேதமும் இருப்பதால் முழுவதுமே பெற வேண்டிய பிரச்னேயாக இருக்கிற காரணத்திஞல், பெரும் அளவில் நிதி உதவி பெற்று நிவாரண நடவடிக்கைகளே மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினர் அவர்கள் முன்ஞலேயே வந்துபேச முடியாமல் போனதால், இப்போது சொன்ஞர்கள். பத்து கோடி என்ன ? இருபத்தைந்து கோடி என்று சொல்ல வேண்டும் என்ருலும் சொல்லத் தயார். பத்து கோடி இருக்கட்டும். இதற்கு அஸ்ஸாம் எதற்காக ? பீஹார் எதற்காக ? அதை ஏன் காட்டவேண்டும் ? (திரு. மதியழகன் குறுக்கீடு.) ஸ்பெஷல் அலொகேஷன் கூட 10 கோடி என்று ஏன் கேட்க வேண்டும் ? என்ன வேண்டுமோ அதைக் கேட்கவேண்டும். அதற்காக அனுவசியமாகக் கேட்கவேண்டியதில்லே.

VIII.—FAREWELL SPEECHES.

MR. SPEAKER : In the Farewell Speeches, I think only the Leaders of Parties can speak.

SRI. C. CHIRANJEEVULU NAIDU : Sir, I want to speak.

கனம் சபாநாயகர் : எல்லோரையும் பேச அனுமதிப்பது என்ருல் நேரம் இருக்காது. இதில் கூட மணி அடிக்கும் நிலைமையில் என்னே விட்டுவிட வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

9th November 1966] [சபாநாயகர்]

பத்து நிமிஷம், அல்லது அதிகமாகப் போனால் 15 நிமிஷங்கள் மட்டும் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. இராம. அரங்கண்ணல்: இது ரொம்பவும் முக்கியமானது; இரண்டு நிமிஷத்தில் சொல்லலாம்.

திரு. க. ர. நல்லசிவம்: கனம் தலைவர் அவர்களே, நான் முதலில் பேசவேண்டும் என்று எதிர்பார்க்கவில்லை. கடந்த ஐந்து ஆண்டு காலமாக இங்கே ஜனநாயக அடிப்படையிலே எவ்வளவு சிறந்த முறையிலே பணியாற்ற முடியுமோ, அந்த அடிப்படையிலே ஆளுகின்ற கட்சியைச் சேர்ந்தவர்களும் சரியே, எதிர்க்கட்சியினரைச் சேர்ந்தவர்களும் சரியே, எந்த அளவுக்கு திறமையான முறையிலே பணியாற்ற முடியுமோ, அந்த அளவுக்கு மிகச் சிறப்பான முறையில் பணியாற்றியிருக்கிறார்கள். ஜனநாயகம் வெறும் தேங்கிக் கிடக்கும் தத்துவம் அல்ல. காலப்போக்கிலே ஜனங்களுடைய மனோபாவம் வளர்ச்சி அடைகிறது. பண்பாடும், பற்றும் உள்ள அரசியல் துறையில் வளர்ச்சி ஏற்படுகிறது. இந்த வளர்ச்சிற்கேற்ப நாம் சிறந்த முறையில் பணியாற்றிக்கொண்டிருக்கிறோம். தமிழ்நாடு சட்டசபையில் அந்த உணர்வுகளைப் புரிந்து கொண்டு, அதே அளவுக்கு நாமும் உணர்ச்சிகளை வளர்த்துக் கொண்டிருக்கிறோம். மற்ற ராஜ்யங்களைப் பற்றி நான் குறைத்துச் சொல்ல விரும்பவில்லை. இருந்தபோதிலும்கூட, நம்முடைய ராஜ்யத்தில், எதிர்க் கட்சியினரும் சரி, ஆளும் கட்சியினரும் சரி, ஜனநாயகத்தைப் பேணிக்காக்கும் முறையில், சிறந்த முறையில் ஜனநாயகப் பண்பாட்டுடன் பணியாற்றியிருக்கிறார்கள். அதை யாரும் மறுக்க முடியாது. தேசத்தில் ஜனநாயக உணர்வுகள் மங்கிக் கொண்டிருக்கிற நேரத்தில், தெற்கே இருக்கக்கூடிய நாமாவது சிறப்பான முறையில் பணியாற்றினால், நாடு பூராவுக்கும் அது பயன் உள்ளதாக இருக்கும். அந்தப் பணியைச் சிறப்பாகச் செய்வதற்கு நாம் எல்லோருக்கும் சிறந்த மனோதிடம் மேலும் மேலும் ஏற்படவேண்டும். எதிர்க்கட்சியானாலும் சரி, ஆளும் கட்சியானாலும்சரி, ஜனநாயகத்தைப் பேணி வளர்க்கக்கூடிய முறை மேலும் மேலும் வளரவேண்டும் என்ற விருப்பத்தைத் தெரிவித்துக்கொண்டு எனது பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் சபாநாயகர் அவர்களே, ஐந்து ஆண்டுகள் பூர்த்தியாவதற்கு இன்னும் சில மாதங்கள் இருந்தபோதிலும், நம்முடைய பதவி காலத்தை நாம் இன்றோடு பூர்த்தி செய்துகொண்டு பிரியப்போகிறோம் (கனம் சபாநாயகர்: சட்டசபை வேலைகளை என்று சொல்லுங்கள்.) சபையில் கூடிப் பேசும் சந்தர்ப்பத்தை நாம் இன்றோடு முடித்துக்கொண்டு தேர்தல் வேலையில் இறங்க இருக்கிறோம். சட்டசபை வேலைகளை முடித்துக் கொண்டு தேர்தல் வேலைகளில் இறங்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. இன்னும் தேர்தலுக்கு மூன்று மாதங்களுக்கு சற்று அதிகமான காலம்தான் இருக்கிறது. அந்தச் சமயத்தில் நாம் ஒருவரை ஒருவர் சந்தித்தால் இம்மாதிரி உறவு இருக்குமா என்ற சந்தேகம் ஏற்படுகிறது. அநேகமாக இந்த ஐந்து வருடகாலம் நம்முடைய நாட்டிற்கு

[திரு. மீ. கலியாணசுந்தரம்] November 1966

சர்க்காருக்கு மிகவும் முக்கியமான ஒரு காலமாகும். பல நெருக்கடி பல சோதனைகள் இவைகளுக்கு உள்ளாகியிருக்கக்கூடிய காலம். இப்படி பல சோதனைகள் ஏற்பட்ட ஒரு சமயத்தில் இந்த மூன்ருவது சட்டசபை இங்கு கூடி, பல சந்தர்ப்பங்களில் அந்த நிலைமைக்கு ஏற்றவாறு இந்தச் சபையில் எதிர்க் கட்சியினரும், ஆளும் கட்சியினரும் நிலைமையை சமாளித்து வந்திருக்கின்றனர் என்று திருப்தி அடைவதற்குள்ள சந்தர்ப்பம் இருக்கிறது என்பதை நான் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

என்னைப் பொறுத்தமட்டில் இந்த ஐந்து வருட காலத்தில் பூரணமாக தொடர்ந்து பணியாற்ற முடியாத நிலைமை ஏற்பட்டது. அதுவும் ஒரு பணி என்றுதான் நான் நினைத்துக்கொள்கிறேன். 10, 11 மாத காலம் என்று நினைக்கிறேன். இந்தச் சபைக்கு வரவேண்டாம் என்று எனக்கு நல்ல ஓய்வு கொடுத்து ஒரு இடத்தில் வைத்திருந்தார்கள். மேலும், எனக்கு உடல் நிலை சரியாக இல்லாத காரணத்தினுல் ஒரு பட்ஜெட் கூட்டத்தில் முழுதும் கலந்து கொள்ள முடியவில்லை, ஒரு சில தினங்கள்தான் கலந்துகொண்டேன். என் சம்பந்தப்பட்ட மட்டில் இன்னும் நாம் பணி செய்வதற்கு சந்தர்ப்பமும், வாய்ப்பும் நிறைய இருக்கிறது. எனக்கு திருப்தி இல்லை. இன்னும் எவ்வளவோ செய்யவேண்டும், செய்வதற்கு சந்தர்ப்பங்களும், வாய்ப்பும் இருக்கின்றன. அப்பொழுது தான் நம்முடைய சட்டசபையில் கவுரவத்தையும், சட்டசபையின் மீது நம்முடைய மக்களுக்கு ஏற்படக்கூடிய நம்பிக்கையையும் நாம் பலப்படுத்த முடியும். அதில் எதிர்க்கட்சிக்கும் பொறுப்பு உண்டு, ஆளும் கட்சிக்கும் பொறுப்பு உண்டு. ஜனங்கள் சம்பந்தப்பட்ட மட்டில் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்கின்ற பிரச்னைக்கு இடம் இருக்கக்கூடாது என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். நாம் இந்தச் சபையில் கூடிப்பேசுவது ஒருவருக்கொருவர் மனதில் இருக்கக்கூடிய எண்ணத்தை மறைத்துவைத்து, முக மலர்ச்சியோடு உபசாரத்திற்காக பேசக்கூடிய பேச்சு அல்ல. அப்படிப் பேசினுல், 'ம்யூச்வல் அட்மிரேஷன் சொஸைடி' என்று சொல்வார்களே, அதைப்போலதான் இருக்கும். இங்கே அது அல்ல. சபையிலே நமக்குள்ளே காரசாரமாக விவாதம் நடைபெற்றிருந்தாலும்கூட அல்லது ஒருவரை ஒருவர் தாக்கிப் பேசுவதற்கு சந்தர்ப்பம் ஏற்பட்டிருந்தாலும், அவையெல்லாம் கொள்கை விளைவினுல் அல்லது அரசியல் விளைவினுல் ஏற்பட்டவையே தவிர, அவை பகைமைக்கு இடம் அளிக்கக்கூடியவை அல்ல. அதிலே பகைமைக்கு இடமே இல்லை. பல சந்தர்ப்பங்களில் மனது புண்படும்படி பேசியிருக்கலாம். அதெல்லாம் அரசியல் கொள்கை காரணமாக ஏற்பட்ட நிலைமைதான் என்று எடுத்துக்கொள்ளவேண்டும்.

இந்தச் சபையில் ஒரு விஷயத்தை கனம் முதல் அமைச்சர் அவர்கள் கவனிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். தேர்தல் முறையில், இப்பொழுது இருக்கிற தேர்தல் முறையில் நாம் ஜனநாயகத்தைப் பாதுகாக்க முடியுமா, தேர்தல் முறையில் என்னென்ன மாறுதல் அவசியம் என்பது பற்றி பரிசீலிக்க வேண்டும். மூன்று பொது தேர்தல்கள் முடிந்து, நான்காவது

9th November 1966] *[திரு. மீ. கலியாணசுந்தரம்]*

பொதுத் தேர்தல் வர இருக்கிறது. இப்பொழுது இருக்கும் தேர்தல் முறையில்தான், நான்காவது பொதுத் தேர்தலும் நடக்க முடியும். ஆனால், ஐந்தாவது பொதுத் தேர்தல் வருவதற்கு முன்னால், நான்காவது பொதுத்தேர்தல்களில் ஏற்பட்ட அனுபவத்தை வைத்து, தேர்தல் விதிகளில், தேர்தல் சட்டத்தில் என்னென்ன திருத்தங்கள், மாறுதல்கள் வேண்டும் என்பதில் கவனம் செலுத்தி, வேண்டிய திருத்தங்களைச் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயம். கனம் தொழில் அமைச்சர் அவர்கள் இப்பொழுது இங்கு இல்லை. அவர்கள் ஒரு யோசனை கூறினார்கள். அந்த யோசனை இந்த நாட்டிற்குப் பொருந்தாது. நம் நாட்டிற்கு அது அபாயத்தை விளைவிக்கும். அமெரிக்காவிலேயே அந்த முறைக்கு எதிர்ப்பு இருக்கிறது. நமது நாடு பல மொழிபேசக்கூடிய ஒரு நாடு. ஐரோப்பிய நாடுகளில் மிகப் பெரிய நாடாக இருக்கக்கூடிய நாட்டைவிட நம்முடைய ஒவ்வொரு ராஜ்யமும் பெரியது. சோவியத் யூனியனை எடுத்துக்கொண்டால் அங்கு ஒவ்வொரு ராஜ்யமும் ஒரு தனிக்கொடியுடன் சுதந்திர நாடாக விளங்குகிறது. அப்படி இருக்கக்கூடிய நிலைமையில் தான் ஒற்றுமை புலப்படுகிறது. அமெரிக்க ஆட்சி முறை நம் நாட்டிற்குப் பொருந்தாது. அந்த முறையில் இந்த நாட்டில் தேர்தல் நடத்தினால் கஷ்டமாக இருக்கும். மெஜாரிடி வாக்குகளைப் பெருமலே, மெஜாரிடி சீட்டுகளைப் பெற்ற கட்சி அதிகாரத்தில் இருக்கும் என்ற நிலைமை சரியில்லை. எல்லாக் கட்சிகளுக்கும் அப்படித்தான். கேரளாவில் கம்யூனிஸ்டு கட்சியும் அப்படித்தான் ஆட்சிக்கு வந்தது. வோட்டு அளிக்கக்கூடிய மக்கள் கொள்கைகளை ஆதரிக்கக்கூடிய நிலைமையில் இருக்கவேண்டும். அப்பொழுதுதான் ஜனநாயகம் பாதுகாக்கப்படும். நம்முடைய ஜாதியைச் சேர்ந்தவர்கள், பணம் படைத்தவர்கள் என்பதற்காக, அல்லது பணத்திற்காக, வோட்டுப் போட்டுவிட்டு பின்னால் அரசாங்கம் எடுக்கக்கூடிய நடவடிக்கைகளுக்கு ஆதரவு கொடுக்கவில்லை என்றால் ஜனநாயகத்தைப் பாதுகாக்க முடியாது. அதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பிரபோர்ஷனல் ரெப்ரஸென்டேஷன் என்ற முறைதான் நம்முடைய நாட்டிற்கு உகந்த முறையாக இருக்கும் என்று நினைக்கிறேன். அப்பொழுதுதான் சிறு சிறு கட்சிகளுக்கும், சுயேச்சைகளுக்கும் போட்டி ஏற்படுவதைத் தடுக்க முடியும். ஒரு கட்சி எவ்வளவு வோட்டுகள் பெற்றிருக்கிறதோ, அந்த விகிதாசாரப்படி அந்தக் கட்சிக்கு சீட்டுகள் கொடுப்பது என்ற முறைதான் சிறந்தது. இதனால் எந்த ஒரு கட்சியும் எதேச்சாதிகாரமாக நடந்து கொள்ள முடியாது. பல கட்சிகள் இணைந்து பணியாற்ற சந்தர்ப்பம் ஏற்படும். அது தான் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்குள்ள சிறந்த பண்பாகும். ஜாதி, மதம், பணம் இவைகள் அடிப்படையிலே தேர்தல் நடக்காமல், கட்சிக் கொள்கை என்ற அடிப்படையில் ஜனங்களிடையே வோட்டுகள் கேட்பதற்கு சந்தர்ப்பம் ஏற்படும். கனம் முதல் அமைச்சர் அவர்கள் அவர்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி, நான்காவது பொதுத் தேர்தல் முடிந்தபிற்பாடாவது இதைப்பற்றி

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [9th November 1966

பரிசிலனை செய்து, அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுப்பது சிறப்பாக இருக்கும்.

இந்தச் சபை சம்பந்தப்பட்ட மட்டில் நமக்கு இருக்கக்கூடிய காலத்தையும், சந்தர்ப்பத்தையும் இன்னும் அதிகமாகச் செய்து கொடுக்க வேண்டும். இந்த ஐந்து ஆண்டுகளில் நாம் 252 தினங்களுக்குத்தான் கூடியிருப்போம். இன்றைய தினத்தையும் சேர்த்து. வருஷம் ஒன்றுக்கு 50 தினங்கள்தான் நாம் கூடுகிறோம். இது மிகவும் குறைவானது. எங்கள் மேலே கூட குறை கூறலாம். எதிர்க்கட்சிகள் இது சம்பந்தமாக நிர்ப்பந்தம் செய்யாததினால், வற்புறுத்தாததினால், தீர்மானங்கள் அதிகமாகக் கொண்டு வரவில்லையாதலால், அதிக தினம் கூடவில்லை என்று கூட சொல்லலாம். ஒரு வருஷத்தில் 100 தினங்களாவது இந்தச் சபை கூடுவதற்கு வாய்ப்பு இருக்கவேண்டும். எல்லா அங்கத்தினர்களும் விவாதத்தில் கலந்துகொள்வதற்கும், பல பிரச்னைகளை சபை முன்பு கொண்டு வருவதற்கும் வாய்ப்பு ஏற்படும். அப்பொழுதுதான் நிர்வாகத்தை ஒழுங்குபடுத்த முடியும். ஜனங்களுடைய பல்வேறு பிரச்னைகளை எடுத்துச்சொல்வதற்கு சந்தர்ப்பம் ஏற்படக்கூடும். சட்டசபை கூடுகிற நாட்கள் குறைந்து இருப்பது எனக்கு திருப்தி அளிக்கவில்லை. அதை அதிகப்படுத்துவதற்கு உள்ள வாய்ப்புகள் இருக்கவேண்டும்.

1957-ல் இந்த இடத்திற்கு மாறுகிறபொழுதே நான் சில யோசனைகள் கூறினேன். அங்கு இருந்து சபையை இங்கு மாற்றுவதை ஆட்சேபித்தவர்களில் நானும் ஒருவன். இங்கு இப்பொழுது சட்டசபை மாற்றப்பட்டுவிட்டாலும் இட வசதி போதாது. சபை அங்கத்தினர்கள் உட்காருவதற்கும், பிரஸ் காலரியில் நிருபர்கள் உட்காருவதற்கும், அதிகாரிகள் உட்காருவதற்கும், மற்றப்படி காலரியில் உட்கார்ந்து நடவடிக்கைகளை மற்ற பிரமுகர்கள் கவனிப்பதற்கும் போதுமான இடவசதி இல்லை. அலுவலகங்கள் வைப்பதற்கும் போதுமான வசதி இல்லை. 1–00 p.m. முன்பு அந்த யோசனை இருந்தது; அப்பொழுது நிதி அமைச்சராக இருந்த திரு. சுப்பிரமணியம் அவர்கள் சமாதானம் கூறினார்கள், இந்த இடத்தையெல்லாம் நாம் எடுத்துக் கொள்ளலாம், இங்கே கான்டீன் வரும், எல்லா இடமும் கிடைத்து வசதிகள் அதிகரிக்கப்படும் என்று. ஆனால் பத்து ஆண்டு காலம் முடிந்து விட்டது, எந்தவிதமான வசதியும் ஏற்படவில்லை. அலுவலகத்திற்கே இடம் இல்லை. வசதிகள் இல்லை. வராந்தாவில் இருந்து கொண்டே தொந்தரவு கொடுக்க வேண்டியிருக்கிறது. கட்சித் தலைவர்களுக்குக் கூட தனித்தனியாக இடம் இல்லாமல் இருக்கிறது. அதைப் பற்றியும் யோசிக்கவேண்டும். நெருக்கடி என்று சொல்லிவிடக்கூடாது. நெருக்கடி நிலை தொடர்ந்து இருந்து கொண்டேதான் இருக்கும். சமுத்திரத்தில் அலை இருந்து கொண்டேதான் இருக்கும். ஆகவே, இதற்கெல்லாம் நெருக்கடி தீரவேண்டும் என்று சொல்வதில் நியாயம் இல்லை.

இந்த சந்தர்ப்பத்திலே நான் முதலிலே நன்றி செலுத்த வேண்டியது, சட்டசபை இலாகாவிற்கு. அதில் இருக்கும் எல்லா ஊழியர்களுக்கும், கடை நிலை ஊழியர் முதல், செயலாளர் வரை,

9th November 1966] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

பணியாளர்கள் அத்தனைபேருக்கும் என் நன்றியைத் தெரிவிக்கிறேன். குறைபாடுகள் இருக்கலாம்; ஆனால், ஒட்டு மொத்தத்தில், அவர்கள் கொடுக்கக் கூடிய உதவிகள் நாம் பணிசெய்ய மிக்க உதவியாக இருந்திருக்கிறது. இந்த சந்தர்ப்பத்திலே , நான் யாரையும் குறைத்துச் சொல்லவில்லை. இருந்தும், இந்த இலாகாவை விரிவுபடுத்த வேண்டும். அதற்கான அவசியம் இருக்கிறது. இப்பொழுது இருக்கக் கூடிய லைப்ரரி இன்னும் விரிவு படுத்தப்படவேண்டும். அங்கே திறமையான லைப்ரேரியன் இருக்க வேண்டும். திறமைசாலியான ஒருவர் அவசியம். அடுத்து, ஆர்.ஆர். செக்ஷன். அது அமைக்கப்பட்டதே என்னைப் போன்றவர்கள் கூறிய ஆலோசனையின் பேரில்தான். 'ரிசர்ச் அண்ட் ரெஃபரன்ஸ்' என்று ஒன்றை ஏற்படுத்தி, நமக்கு உதவியாகத் தகவல்களைச் சேகரிக்க வேண்டும் என்று அமைக்கப்பட்டது. இன்ஃபர்மேஷன் டிபார்ட்மெண்டில் கிடைக்காத தகவல்களைச் சேரிக்க வேண்டும் என்று செய்யப்பட்டது. இன்ஃபர்மேஷன் டிபார்ட்மெண்டில் கிடைக்காத தகவல்கள்கூட அங்கே கிடைக்கவேண்டும். அதுதான் நமக்கு கேந்திரமாக அமையவேண்டும். அந்த செக்ஷனுக்கும் திறமையான ஊழியர்களைப் போட்டு, தகவல்களைச் சேகரித்து, அங்கத்தினர்களுக்கு உண்மையிலேயே உதவியுள்ளதாகச் செய்ய வேண்டும். லைப்ரரியை விஸ்தரிக்க வேண்டும். திறமையான லைப்ரேரியன் வேண்டும். இந்த யோசனைகளையெல்லாம், கனம் முதல் அமைச்சர் அவர்கள் இப்பொழுதே கவனத்தில் எடுக்க வேண்டும். பணியாளர்களுக்கெல்லாம் இந்த ஐந்தாண்டு காலத்தில் தொந்தரவுகள் கொடுத்திருக்கலாம்; அங்கத்தினர்களுக்கு அவர்கள் கொடுத்திருக்கலாம், அல்லது அங்கத்தினர்கள் அவர்களுக்குக் கொடுத்திருக்கலாம். அவற்றையெல்லாம் மறந்து, நாம் அவர்களுக்கு இப்பொழுது நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த சபையிலே எல்லா அங்கத்தினர்களும் பல கட்சியைச் சேர்ந்தவர்களும், விருப்பு வெறுப்போடு கூடியவர்கள் இருக்கிறோம். எதிர்க் கட்சிக்குள்ளேயே பல பிரிவுகள் இருக்கின்றன. அப்படியிருந்தும், நாம் கூடியவரையில் சுமுகமாக இருந்து பணியாற்றியிருக்கிறோம். எனக்கே கூட சில குறைகள் ஏற்பட்டது உண்டு. கட்சியினுடைய எண்ணிக்கையை மட்டும் வைத்துக் கணக்குப் போடாமல், கொள்கை, திட்டம் இவற்றின் பலம் பார்த்து, என்ன சொல்லுகிறோம் என்று பார்த்துச் செய்ய வேண்டும். அந்த வகையில் எனக்கே கூட குறைபாடுகள் ஏற்பட்டது உண்டு. இருந்தாலும், விட்டுக் கொடுக்காமல், என் சக்திக்கு தக்க அளவில் பங்கு கொண்டு பணியாற்றியிருக்கிறேன். நாம் இந்த சபையில் பல வேலைகளைச் செய்திருக்கிறோம். பல இடையூறுகள் ஏற்பட்டிருந்த போதிலும், அவை எல்லாம் கொள்கை விளைவாக ஏற்பட்டவைதான்.

இங்கே நமக்கு மிக்க மகிழ்ச்சியைக் கொடுக்கக் கூடியது, ஆளும் கட்சி, எதிர்க் கட்சி என்று பாகுபாடு இல்லாமல், நாம் பழகும் முறை நமக்கு ரொம்ப நம்பிக்கையைக் கொடுக்கிறதாக இருக்கிறது. வெளியிலே எப்படியிருந்தபோதிலும், இங்கே சுமுகமாக

கண்டு, சந்தித்து, பேசிப் பழகுகிறோம். ஆனால், அந்த அளவுக்கு வெளியிலே பழகுவதில்லை. ஒரு வேண்டுகோள். இதே முறையில் வெளியிலேயும் நாம் ஏன் பேசிப்பழகக் கூடாது ? இதே சுமுகமாக ஏன் நாம் வெளியிலேயும் பழகக் கூடாது? என்றுதான் புரியவில்லை. தேர்தல் காலத்தில் பேச்சுத்தரம், ஒழுங்கு விதிகள் இவற்றை எல்லோருமே ஏன் உயர்ந்ததாகச் செய்யக் கூடாது , என்றுதான் புரியவில்லை. கடினமாகப் பேசவேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால், தரத்தோடு பேசி, சுமுகமாக ஏன் நாம் இருக்கக் கூடாது ? இங்கே நாம் மனத்தில் ஏற்படும் உணர்ச்சிகளை மறைத்துவைத்துக் கொள்ளும் கலையில் பேசுவதில்லை என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த ஐந்தாண்டு காலத்தில் மாறுதல்கள் ஏற்பட்டன. முதலிலே தேர்தல் நடந்தவுடன் திரு. காமராஜர் முதல் அமைச்சராக இருந்து, அதன் பிறகு அவர்கள் விலகிக்கொண்டு, இந்த சபையை விட்டு விலகவில்லை, இன்னும் அங்கத்தினராகத்தான் இருக்கிறார், வேறு வேலை, பொறுப்புகள் காரணமாக, நம்மைவிட்டு விடுதலை பெற்றுப் போனார்களோ என்னவோ, வடக்கே சென்று புகழ் தேடித்தர வேண்டும் என்று சென்றிருக்கிறார்கள். அவர்கள் சொல்வதையெல்லாம் நான் ஏற்றுக்கொள்ள முடியவில்லையென்றாலும், அவரை வீடு தேடிச் சென்று தாக்கிய செயலை நான் கண்டிக்காமல் இருக்க முடியவில்லை. அது எந்தக் காரணமாக இருந்தாலும் சரி, அது சரியானது அல்ல. காமராஜருக்கு ஏற்பட்டுவிட்டது என்பதால் அல்ல நான் சொல்லுவது. அதிலிருந்து நம் நாடு எந்த திசையில் போய்க் கொண்டு இருக்கிறது என்பதைக் காண, ஜன நாயகத்தில் நம்பிக்கை எந்த அளவுக்கு இருக்கிறது என்பதில் சந்தேகம் உண்டாகிவிடுகிறது. சோஷலிசம் என்று சொன்னால் மட்டும் போதாது. சோஷலிசத்திற்கு எத்தகைய சக்திகள் எதிராக இருக்கின்றன, நம்முள்ளேயே நண்பர்கள், விரோதிகள் யார் என்று தெரிந்துக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது. அந்த முறையில் திரு. காமராஜர் விட்டிற்கு தீ வைக்க முற்பட்டார்கள் என்பது ஒரு எச்சரிக்கையாக இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டாமல் இருக்க முடியவில்லை.

கனம் முதல் அமைச்சர் 70 வயது நிரம்பிய இளைஞர் (ஆரவாரம்). அவர்களைப் பார்த்து நாம்--நான் வித்தியாசமாகச் சொல்லவில்லை--தெரிந்து கொள்ள வேண்டியது ரொம்ப இருக்கிறது. அவர்கள் ரொம்ப சுறு சுறுப்பாகவும் கடுமையாகவும் காரியங்களை செய்து முடிக்கிறவர்கள். அவர்களுடைய காரியங்கள் திருப்தியளிக்கக் கூடியவைகள். ' இல்லை ' என்றாலும் சட்டெனச் சொல்வார்கள். 'ஆகட்டும், பார்க்கலாம்' என்பதை விட இன்றைக்கே இல்லை என்று சொல்வது மிக்க நலமானது. அதிகாரிகள் கூட the fastest Chief Minister we have come across என்று சொல்வார்கள். அந்த அளவுக்கு அதி சீக்கிரத்தில் பணியாற்றும் ஆற்றல் படைத்தவர்கள். அவர்களுக்கும் ஒரு விபத்து ஏற்பட்டது, நாட்டுக்கும் பல ஏற்பட்டது. ஆஸ்பத்திரியில் இருந்தபோதுகூட, கையில் கட்டுப் போட்டுக் கொண்டே, சுறு சுறுப்பாக வேலை

செய்து அவர்கள் தன்னுடைய கொள்கைகளை நிறைவேற்றியிருக்கிறார்கள். நாட்டில் பிரச்சினைகள் தீர்ந்ததா இல்லையா என்பது வேறு பிரச்சினை. அது மக்கள் பார்த்து தேர்தல் சமயத்தில் தீர்ப்பு கூறவேண்டிய விஷயம். மூன்று சட்டசபைத் தொடர்கள் ஆகியும் கூட இன்னும் நாட்டில் பல குறைபாடுகள் இருக்கின்றனவே என்றால், இவ்வளவு திறமையான முதல் அமைச்சர் இருந்தும், பிரச்சினைகள் தீரவில்லையே என்றால், அது கொள்கையிலே இருக்கக் கூடிய கோளாறுகள் என்றுதான் நான் கருதுகிறேன்.

தொழில் அமைச்சர் அவர்கள் இப்பொழுது இங்கே இல்லை. ஒரு வதந்திகூட இருக்கிறது, அவர்கள் டெல்லிக்குப் போகப்போவதாக. அது அவர்களுடைய அரசியல் விஷயம். அவர்கள் சென்னையில் பல அபிவிருத்திகளுக்கான முயற்சிகளைச் செய்திருக்கிறார்கள். மற்ற அமைச்சர்களில், உள் துறை அமைச்சர் மிகக் கடுமையாக, கஷ்டப்பட்டு வேலை செய்பவர்கள். அவர்கள் நமக்குப் பதில் சொல்வதில் பெரும் முயற்சி எடுத்து, ஆர்வத்தோடு வேலை செய்வதை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. கேள்வி நேரத்தில் கொஞ்சம் கூடக் கோபம் இல்லாமல் பொறுமையோடு பதில் சொல்லக்கூடிய அமைச்சர்.

அடுத்து உணவு அமைச்சர், உணவுப் பிரச்சினை சம்பந்தப்பட்டவரை, அமைச்சர்கள் மாறிய போதிலும், மக்கள் சம்பந்தப்பட்டவரையில் இன்னும் அப்படியேதான் இருக்கிறது. ஆயினும் அவர்கள் உணவு நிலையைத் தெரிந்து கொண்டவர்கள்.

மற்றவர்களெல்லாம் இளைஞர்கள். அவர்கள் தாங்கள் தாங்கள் செய்த வேலையை மக்களிடம் எடுத்துச்சொல்லி, அவர்களுடைய ஆதரவைப் பெறுவது அவர்களுடைய திறமையைப் பொறுத்திருக்கிறது.

இந்தச் சபையிலே தங்களுக்கு பல சந்தர்ப்பங்களில் தொந்தரவு கொடுத்திருப்போம். என் சம்பந்தப்பட்டமட்டில், தாங்கள் ஒப்புக்கொள்ள முடியாத காரியங்களைக்கூட சமாளித்துக் கொண்டு, பொறுமையோடு தீர்ப்பளித்திருக்கிறீர்கள். சில சமயங்களில், தங்களுக்கும் ஒப்புக் கொள்ளலாமா என்ற எண்ணம் ஏற்படும், ஆனால், ஒப்புக் கொள்ள முடியவில்லை என்றும், தாங்கள் சபாநாயகர் என்கிற எண்ணமும் வந்துவிடும். முதலிலே எண்ணம் வரும், ஆனால் உடனேயே சபாநாயகர் என்கிறதை மறந்துவிடாமல், எங்களுக்கு உதவிகள் செய்து பொறுமையாக நடத்தியதற்கு எங்கள் நன்றி உரியது. மற்ற மாநிலங்களில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் அந்த அந்த இடங்களில் இருக்கக் கூடிய சந்தர்ப்பங்கள், நிர்வாகத்தில் இருக்கும் சிக்கல்கள் காரணமாக நடப்பவைகள். அப்படிப் பட்டவைகளுக்கு இடம் கொடுக்காமல், அப்படிப் பட்ட சூழ்நிலைகள் ஏற்படாமல், இந்த சபை நடக்க உதவிய சபாநாயகர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, என்னை இந்த மன்றத்தில் இருந்து பணிசெய்ய அனுப்பிய என்னுடைய தொகுதி மக்களுக்கும் இந்த சந்தர்ப்பத்தில் நன்றி தெரிவித்துக்கொண்டு, முதல் அமைச்சர் எழுப்பிய சந்தேகத்தைத் தீர்க்கும் முறையில், நான்காவது

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [9th November 1966

தேர்தலிலும் நிற்பதாக இருக்கிறேன். அதுவும் அதே தொகுதியிலேயே நிற்பதாக இருக்கிறேன் என்று தெரிவித்துக்கொண்டு விடை பெற்றுக் கொள்ளுகிறேன்.

* **திரு. சா. கணேசன்** : கனம் சபாநாயகர் அவர்களே, இன்றைய தினம் எல்லோருக்கும் மகிழ்ச்சியான ஒரு தினம். '*நிறைவுநாள்*' என்று இதைத் தமிழிலே சொல்லலாம். ஆங்கிலத்திலே, 'வாலிடெக்டரி' என்ற சொல்லுவது அவ்வளவு அழகான சொல் என்று நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். இந்த சபைக் கூட்டத்தின் நிறைவு நாள் என்று சொல்லுவதைவிட மற்றொரு வகையாகவும் சொல்லலாம். மங்களமான கல்யாணம் ஏறக்குறைய நடந்து முடிந்தவுடன் தாம்பூலம் வாங்கிக்கொண்டு போவது போல இப்பொழுது நாம் பரஸ்பரம் விடை பெற்றுக்கொள்ள இங்கே கூடியிருக்கிறோம். அந்த மாதிரி ஒரு நல்ல நேரத்திலே, இந்தக் கூட்டத்திலே கலந்துகொள்ள, பாராட்டிலே பங்குகொள்ள வாய்ப்புக் கிடைத்ததை நான் பெருமையாக எடுத்துக் கொள்ளுகிறேன்.

முன்னே பேசியவர்கள் சில குறிப்பிட்டார்கள். பொதுவாக, இந்த ஐந்தாண்டு முழுவதிலும் 252 சபைக் கூட்டங்கள் கூட்டப்பட்டிருக்கின்றன, அல்லது கூட்டியிருக்கிறோம். கணக்குப் பார்த்தால், அதில் ஒன்றிரண்டு நாட்கள் பல்வேறு காரணங்களுக்காகக் கூடி, உடனேயே கலைந்தும் இருக்கிறோம். அதையெல்லாம் தள்ளினால், ஆண்டுக்கு ஐம்பது நாட்கள்தான் தேறுகிறது கூட்டம். அதில் பட்ஜெட்டுக்கென்றே ஒதுக்குகிற தினங்கள் முப்பது நாட்களுக்குக் குறையாது. இறுதியிலே பார்த்தால், பட்ஜெட் அல்லாத பிற விஷயங்களுக்கு ஒதுக்கப்படுவது இருபது நாட்கள்தான் என்பதை நாம் காண முடிகிறது. இதைக்கொண்டு பார்த்தால், சட்டசபையே பட்ஜெட்டை நிறைவேற்றுவதற்காகத்தான் இருக்கிறதோ என்று கூடச் சொல்லத் தோன்றுகிறது. 'Majority of the days' என்று சொல்லுகிற வகையில், காலத்தின் மிகப் பெரும்பான்மை நாட்கள் பட்ஜெட்டுக்காகவே ஒதுக்கப்படுவதைக் கணக்கில் கொண்டு பார்த்தால், இது உள்ளபடியே ஜனநாயக ரீதியிலே வளருகிற, வளர விரும்புகிற, வளர்ந்து கொண்டே இருக்கிற ஒரு சமுதாயத்திற்குப் பொருந்தியதல்ல. கனம் உறுப்பினர் திரு. கலியாணசுந்தரம் அவர்கள் கூறியதைப் போலவே, அதிக நாட்கள் இதற்கு ஒதுக்கினால்தான் எல்லா விவகாரங்களையும், எல்லா விஷயங்களையும் நாம் ஆய்ந்து, அலசி, லாப நஷ்டத்தைக் கணித்து, அதன் மூலமாகத் தவறுகளை நீக்க, தேவைகளை உணர்ந்து வசதிகளைப் பெருக்க நல்லதொரு வாய்ப்பு கிடைக்கும். நம்மைப் போன்றவர்களுக்கும், நமக்குப் பின்னால் வருகின்றவர்களுக்கும் சிறந்த ஜனநாயகப் பயிற்சியையும் இது கொடுக்கும். ஆகவே, இதை மனத்திலே கொள்ளவேண்டும் என்பதையும் நான் வற்புறுத்திக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்தச் சபையின் நடைமுறைத் தாம் மிகத் திருப்திகரமாக இருந்தது. ஏதோ ஆங்காங்கு சலசலப்பு இல்லாமல் தீரவே மாட்டாது. ஒரே குடும்பமாக இருந்தாலும்கூட, அதற்குள்ளும் அபிப்பிராய பேதங்கள், கருத்து வேறுபாடுகள், அதன் மூலமாகச்

9th November 1966] *[திரு. சா. கணேசன்]*

சிறிது மன பேதங்கள் இவையெல்லாம் ஏற்படுவது இயல்பு. அந்தக் கணக்கை எல்லாம் எடுத்துக்கொண்டு பார்த்தால், தமிழ் மாநில சட்டசபை எல்லா வகையிலும் சிறப்பாக இருந்தது என்று சொன்னால் யாரும் மறுக்க மாட்டார்கள். ஆளுங் கட்சியினரும் அதற்கேற்ப அமைந்தார்கள்—நான் எதிர்க்கட்சியில் இருப்பதால் சொல்லக் கூடாதோ என்று கூட நினைத்தேன். ஆனால், சொல்லியாக வேண்டிய நிலையில் சொல்லத்தான் வேண்டும்—இவ்வளவு சிறப்பாக இருப்பதற்கு முக்கிய காரணம், எதிர்க் கட்சி என்பதையும் மறந்துவிடப் படாது. ஆளுங்கட்சியினர் நிர்வாகத்தை நடத்திக்கொண்டு போக வேண்டியவர்கள். ஆகவே, அவர்களுடைய பொறுப்பைக் கருதி, மிகச் சாதுரியமாகவும், திறமையாகவும், அதே நேரத்தில் கொஞ்சமும் கஷ்டம் வந்துவிடப் படாது என்ற காரணத்திற்காக, ஜாக்கிரதையான முறையில், அமைதியாகப் போக வேண்டியவர்கள். ரோஜா மலரைப் போன்றவர்கள். ரோஜா மலர் முள்ளில் பட்டால் ரோஜா மலருக்குத்தான் தீமை. ரோஜா மலரில் முள் குத்தினாலும் முள் சேதம் ஆகாது; மலர்தான் சேதம் ஆகும். ஆனால், ரோஜா மலரைக் காப்பாற்றுவது முள்தான். அதை மறந்துவிடப் படாது. முள் இல்லாவிட்டால் மலரை மட்டுமா, செடியையே தான்தோன்றித்தனம் என்னும் மிருகம் அழித்து ஒழித்துவிடும். ஆளுங்கட்சி என்பது ஒரு ஜனநாயக மலர். அதைக் காப்பதற்கு இருப்பது முள்ளைப் போன்ற எதிர்க் கட்சிகள். அதோடு போதாமல், அதோடு இணைந்திருக்கிற நிலை பெரிது; சிறப்பு. அந்த நிலையிலே எதிர்க் கட்சிகள் மிகக் கண்ணியமாக நடந்துள்ளன, ஆக்கபூர்வமான அளவுக்கு கிடைத்த அளவு வசதியைக் கொண்டு உதவின என்பதையும் நாம் மனத்திலே கொள்ள வேண்டும். அந்த நிலையிலே, 'பிற மாநிலங்கள்' என்று சொன்னால் மெத்தக் கோபம் வரும்—எல்லாம் நம்முடைய நாடு—இந்த நாட்டில் மட்டுமல்ல; பிற நாடுகளிலும் நடக்கின்றவற்றைப் பார்க்கின்றோம். சில நாடுகளிலே மிகவும் சிறப்பாக இருக்கின்றன. சில நாடுகளிலே வேறு விதமாகவும் இருக்கின்றன. பிற நாடுகளில் நிகழ்வனவற்றைக் குறித்து நம் செய்தித் தாள்களில் துணுக்கு மாதிரிதான் செய்திகள் வருகின்றன. அதைப் பார்க்கவே உள்ளம் சகிக்கவில்லை. அந்த நிலையையும் இன்று கணித்துப் பார்ப்போமானால், நம்முடைய மாநில சட்ட சபை மிகப் பண்பாட்டோடு நடந்தது என்று சொல்லிக்கொள்ளுவதிலே கட்சி வேறுபாடின்றி எல்லோருக்கும் உள்ள நிறைவு ஏற்படும். அப்படிச் சொல்லிக்கொள்ளுகின்ற பெருமைக்கு நாம் எல்லோரும் உரியவர்கள். அசம்பாவிதமான செயல் நமது சட்ட சபையின் ஆயுட் காலத்தில் நடக்கவில்லை என்று சொல்லிக் கொள்வதைவிட வேறொரு பெருமையும் சட்ட சபையிலே உறுப்பினர்களாக இருந்தவர்களுக்குப் பெரிதில்லை என்று கூடச் சொல்லுவேன்; அப்படிச் செம்மையாக நடந்தது. இது இப்படிச் செம்மையாக நடப்பதற்கு, கனம் சபாநாயகர் அவர்களே, நீங்கள் உறுதுணையாக இருந்தீர்கள். நீங்கள் செய்த முடிவுகளையெல்லாம் நாங்கள் ஏற்றுக்கொண்டோம். சில முடிவுகள் எங்களுடைய கருத்துக்களுக்குத் திருப்தி தந்துவிட மாட்டா; தந்துவிட்டன என்று நான் சொல்லி இச்சகம் பேச விரும்பவில்லை.

[திரு. சா. கணேசன்] [9th November 1966

'ஃப்ளாட்டரி' என்று ஆங்கிலத்தில் சொல்லுகிறோமே, அப்படிச் சொல்ல விரும்பவில்லை. சில கருத்துக்களில் எங்களுக்கு உடன்பாடு இல்லைதான். ஆனாலும், உங்களுடைய முடிவை ஏற்றுத் தலை பணிந்து நின்றோம். இனியும் எப்போதும் இதைக் கடைப்பிடிப் போம். அதே நேரத்தில், நீங்கள் இந்தச் சபை சிறப்பாக நடைபெற, செம்மையாக நடைபெற, வளமாக நிகழ வழிவகை செய்தீர்கள். அதற்குள்ள விதி முறைகளையெல்லாம் செம்மை யாகக் கடைப்பிடித்து நிகழ்த்தினீர்கள் என்று மனப்பூர்வமாக நான் பாராட்டி, அதற்காக முதலிலே கனம் சபாநாயகர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைப் புலப்படுத்திக் கொள்ளு கிறேன். அப்படியே தாங்கள் இல்லாத நேரத்தில், துணைச் சபா நாயகர் அவர்களும் நிரம்பக் கண்ணியமாக இந்தச் சபையை நடத்திச் சென்றார்கள்; வழிவகுத்தார்கள். அவருக்கும் என்னுடைய நன்றியை நான் புலப்படுத்திக்கொள்ளுகிறேன்.

அதற்கடுத்தபடியாக, இந்த மாநிலத்தில் ஆளுங்கணத்தவர் களாக இருக்கிறவர்களும் தங்கள் கடமையைச் செம்மையாக நடத்தினார்கள். எவ்வளவோ குறைபாடு இருக்கின்றன. அதை மறக்கவே இல்லை. எங்களுக்குப் பூராவும் திருப்தி கொடுத்தது என்று சொல்ல முடியாது. பாதிக்கூடத் திருப்தி இல்லை என்று தான் சொல்வேன். ஆனாலும், அவர்களும் செம்மையாக ஒரு நல்ல பணியைச் செய்தார்கள். இதற்கெல்லாம் தலைமைதாங்கி நடத்திய வர்கள் இருவர் இந்தச் சட்டசபையிலே. கனம் முதலமைச்ச ராக இருந்த திருவாளர் காமராஜர் அவர்கள் ஒருவர். அவர்கள் பதவி துறந்து, வேறு பணியை மேற்கொண்ட பிறகு, அந்தப் பதவியை ஏற்று மிகவும் சிறப்புடன் நடத்திக்கொண்டிருப்பவர்கள் கனம் பக்தவத்சலம் அவர்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் என்னுடைய உணர்ச்சியொன்றைச் சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன். நேற்று கிடைத்த செய்தி நமக்கு மனம் புண்படக்கூடிய செய்தி. திரு. காமராஜர் அவர்களுடைய இல்லத்திலும் பிற இடங் களிலும் நடத்திய முறைதவறான, இசைகேடான, ஒழுக்கஹீன மான, சட்டவிரோதமான, அறம் பாழ்பட்ட நிகழ்ச்சிகள் இருக்கின் றனவே, அவற்றை முழுக்க முழுக்க வன்மையாக நாம் கண்டிக் கிறோம். 'நாம்' என்று கூடச் சொல்லவில்லை. 'நமது சபை' என்று நான் சொல்ல விரும்புகிறேன். ஏனென்றால் உள்ளத்தில் கருத்துவேறுபாடு கொண்டிருக்கலாம்; அபிப்பிராய பேதம் ஏற்பட்டிருக்கலாம். அதற்காக மனிதத் தன்மையற்று விடலாமா? அன்றியும் இதுவோ ஒன்றும் இல்லாத விஷயம் என்று சொல்வேன். இதற்காக எவ்வளவு பெரிய களேபரம் நடைபெறுகிறது. இந்த நிலையில் நமது பண்பாட்டுக்கு உகந்த முறையில் அங்கே நடக்கக் கூடாது; நடந்தும்கூட நாம் அமைதியாக இருக்கிறோம் என்கிற போது நமது பெருமையும், சிறப்பும் புலப்படுகிறது. இவ்வாறு இருப்பது தன்னம்பிக்கை மட்டும் அல்ல. பரம்பரையாக ஊறி வந்த பண்பாடு. வள்ளுவனையும் கம்பனையும் பாரதி வரை படித்துப் படித்து நமது ரத்தத்திலே ஊறித் தோய்த்து வந் திருக்கிற பண்பாட்டின் காரணத்தினால்தான் இத்தகைய ஒரு பெருமை நமக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதை மறுப்பதற்கும் இல்லை, மறைப்பதற்கும் இல்லை. எங்கே பார்த்தாலும்

9th November 1966] [திரு. சா. கணேசன்]

சாக்கடையின் நாற்றம் வீசி அடிக்கிறபோது வீட்டிற்குள்ளே ஜவ்வாது மணக்கிறது என்றால் அது பெரிய விஷயம். அப்படித் தான் இன்றையதினம் நமது மாநிலம் பெருமையோடு செயல்பட்டு வருகிறது. எனக்கு முன்னால் பேசிய திரு. கலியாணசுந்தரம் அவர்கள் மிகத் தெளிவாக, விளக்கமாக ஒன்றைச் சொன்னார்கள். எல்லா ஆண்டுகளைக் காட்டிலும் இந்த ஆண்டுதான் நமது மாநிலத்தில் அதிகமான பிரச்சினைகள், அதிகமான கஷ்டங்கள், சிரமங்கள் இவை எல்லாம் ஏற்பட்டன. அவற்றை எல்லாம் மிகச் சாதுர்யமாக, மிக லாவகமாக சமாளித்துக்கொண்டு காரியங்களை நிறைவேற்றி வந்திருக்கிற நமது முதல் அமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும். அவரது பொறுமை, நிதானமான போக்கு, மிக மிகப் பாராட்டத் தக்கது. சிலசமயங்களில் கொஞ்சம் குத்தலாக தம்மைக் குறைத்துச் சொல்லிக்கொள்வதுபோலச் சொல்லுவதிலும் ஆற்றல் மிக்கவர். 'எனக்குத் தமிழ் தெரியாது', 'நான் படித்தது இவ்வளவு தான்' என்பனபோல குத்தலாக தம்மைத் தாழ்த்திக் கொள்வதுபோல பேசுவதிலும் சளைத்தவர் அல்ல என்று நான் சொன்னால் எல்லோரும் ஏற்றுக்கொள்வார்கள் என்றே நம்பு கிறேன். அதை மறுக்க முடியாது.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: எனக்குத் தெரியும் என்று சொன்னால் அது அகங்காரத்தைக் காட்டுவதாக ஆகலாம்.

திரு. சா. கணேசன்: 'எனக்குத்தான் தெரியும்' என்றால் அகங்காரந்தான்; ஆனால் 'எனக்குத் தெரியும்' என்பது அகங்கார மாகாது. பணிவின் அடிப்படையில் பிறந்த உண்மை என்பதை உலகம் ஒப்புக்கொள்ளும். பாயசத்தின் நடுவில் ஊறுகாய் தொட்டுக்கொள்வதுபோல சும்மா பாராட்டிக் கொண்டே போனால் போதாது என்பதற்காக இடையில் இதையும் சொன்னேன்.

நமது மாநிலத்தைப் பொறுத்தவரையில் நிர்வாகத்தினர் மிகச் செம்மையாக காரியங்களை நிறைவேற்றி வந்திருக் கிறார்கள். அதற்காக இந்தச் சபையின் முதல்வருக்கும், ஆளும் கணத்தின் தலைவராக இருந்து பணியாற்றி வருகிற கனம் முதல் அமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்களுக்கும் நம்முடைய நன்றியைப் புலப்படுத்திக்கொள்ள வேண்டும். அப்படியே பிற எல்லா அமைச்சர்களுக்கும். கேள்வி கேட்கும்போது, பதில் சொல்லும்போது பல இடர்ப்பாடுகள், அமைச்சர்கள் சொல் கிறவை சரியல்ல என்னும் நிலை கூட, ஏற்பட்டது உண்டு. இருந்தும் பரஸ்பரம், விரசமான மோதல் இல்லாமல் திறமையாக இந்தச் சபையின் காரியங்கள் நடைபெற்று வந்திருக்கின்றன. அதற்காக நான் மகிழ்ச்சி தெரிவித்துக்கொள்கிறேன். அப்படியே எதிர்க் கட்சித் தலைவர் திரு. நெடுஞ்செழியன் அவர்களை நாம் மனமாரப் பாராட்டவேண்டும். அன்பும் பண்பும் நிறைந்து யாவரையும் தழுவி அணைத்துச் சென்ற அவரை நான் மனமாரப் பாராட்டுகிறேன்.

சட்டசபை இவ்வளவு திறமையாக, செம்மையாக, நடை பெறுவதற்கு பல ஆண்டு காலமாக நல்ல சட்டசபை மரபுகளை நிலை

[திரு. சா. கணேசன்] [9th November 1966

நாட்டி, அதைப் பின்பற்றி இந்த சட்டசபைத் துறை ஊழியர்கள்—காரியதரிசியில் இருந்து கீழ் நிலையில் உள்ள அட்டெண்டர்கள், சேவகர்கள், ப்யூன் என்றால் மன வருத்த முண்டாகும், கீழ் நிலை ஊழியர்கள் வரை—அத்தனைபேரும் மிகச் செம்மையாகப் பணியாற்றினார்கள். அதற்காகப் பாராட்டுகிறேன். இன்னும் ஒன்றை கவனத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். சட்டசபை இலாக்காவில் லைப்ரரி இருக்கிறது. அது நன்றாக வளர்ந்து இருக்கிறது. என்றாலும் செம்மையாக ஒரு சிஸ்டம் வகுக் கப்படாத காரணத்தினால் ஆசிரியர் பேரைச் சொன்னால் புத்தகங் கள் கிடைப்பதில்லை; புத்தகப் பெயரைச் சொன்னால் கிடைப்பதில்லை; இந்த க்ரூப்பைச் சேர்ந்தது என்று சொன்னால் கிடைப்பதில்லை. காரணம், இன்னமும் க்ரூப்பிங் சிஸ்டம் ஏற்படுத்தப்படவில்லை. ஆதர் வாரியாக, சப்ஜெக்ட் வாரியாக, புத்தகத்தின் அகரவரிசைப் பெயர் வாரியாக, தனித்தனியாக அமைக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமாகும். இத்தகைய மூன்றுவகையான இன்டெக்ஸ் கார்டும் வருகிற சபைக்குள்ளாக வாவது தயாரிக்கப்படவேண்டும்.

அதற்குமேலே என் போன்ற அவசரத் தேவையாளர் இருப் பார்கள். இந்த இலாக்காவிலே ஆர். ஆர். செக்ஷன் என்று ஒன்று இருக்கிறது. சட்டென்று அங்கே போய் ஒரு விஷயத்தைப் பற்றிக் கேட்டால் உடனே அவர்கள் சொல்கிற அளவில் இன்டெக்ஸ் பீரோ அமைய வேண்டும். போன வருஷம் இந்த ஊரில் எத்தனை விபத்துக்கள் நடந்தன என்று கேட்டால் உடனே பதில் கிடைக்கிற அளவில் அமைச்சரைக் கேட்டுத்தான் ஒரு மாதம் கழித்துத் தெரிந்து கொள்ளவேண்டும் என்பது இல்லாமல் அமையவேண்டும். அப்போது இங்கே கேட்கப்படுகிற பல கேள்வி களுக்கு இடமில்லாது போய்விடும். இப்போது எத்தனையோ கேள்விகள்—மன்னிக்கவேண்டும் தேவையில்லாத பல—வந்து விடுகின்றன. அவற்றை நீக்க உபயோகமாக இருக்கும். இன்றைக்கு இந்து பத்திரிகை காரியாலயத்திலோ, மெயில் பத்திரிகை காரியாலயத்திலோ ஜப்பான் நாட்டில் இருந்து இந்த ஆண்டு இன்ன பொருள் எவ்வளவு இறக்குமதியாயிற்று என்று கேட்டால் ஐந்து நிமிஷத்தில் இன்டெக்சிங் டிபார்ட்மெண்டில் இருந்து கேட்டுச் சொல்லிவிடுவார்கள். அதுபோல இந்த இலாக் காவில் உள்ள ஆர்.ஆர். செக்ஷனில் இன்டெக்சிங் முறை வளர்ச்சி அடைய வேண்டும். அதற்கான காரியங்களைத் தொடங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஜனநாயகத்தை வளர்ச்சி அடையச் செய்வதற்கு சிறப்பான முறையில் பணியாற்றி வந்திருக்கிற நம்மையே நாம் பாராட்டிக்கொள்ளத்தான் வேண்டும். இறுதியில் என்னாலேயோ, அல்லது எந்தக் கட்சித் தலைவரோ இங்கே இருக் கிறேனே அந்த சுதந்திரக் கட்சி உறுப்பினர் எவராலேயும் யாராவது மனம் புண்படும்படியாக எந்தச் சந்தர்ப்பத்திலாவது பேசப்பட்டிருந்தால் மன்னிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமைகிறேன். வணக்கம்.

திரு. கே. ஏ. மதியழகன்: கனம் சபாநாயகர் அவர்களே, நம்முடைய சட்டமன்ற நடவடிக்கைகள் முடிவடைகிற நேரத்தில்,

9th November 1966] [திரு. கே. ஏ. மதியழகன்]

கட்டத்தில், இனிமையாகவும், சுருக்கமாகவும் பேசவேண்டுமென்று குறிப்பிட்டார்கள். சுதந்திரத்திற்குப் பிறகு அமைந்த நமது மூன்ருவது சட்டசபை மிக இனிமையாகவும், வெற்றிகரமாகவும் நடந்து வந்திருக்கிறது என்பதை எல்லோருமே ஒத்துக்கொள்வார்கள். இவ்வளவு இனிமையாக நடைபெற்றதற்குக் காரணம், கனம் சபாநாயகர் அவர்களே, உங்களுடைய பங்கு தலைசிறந்ததாக நின்றிருக்கிறது என்பதுதான். இப்படிச் சொன்னல் ஏதோ நல்ல வார்த்தைக்காக நான் சொல்வதாக தயவு செய்து கருதிவிட வேண்டாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு என்னுடைய நண்பர்கள், எதிர்க்கட்சித் தலைவர்கள், சொன்ன மாதிரி ஜனநாயகத்தின் பெருங்காவலராக தாங்கள் நின்றிருக்கிறீர்கள். இன்றைக்கு ஜனநாயக அடிப்படையில் மக்கள் பிரதிநிதிகள், மக்களுக்காகப் பணியாற்றுகிறபோது தாங்களும், தங்கள் இலாக்காவும் சபை உறுப்பினர்களின் உரிமையைக் காத்து நிற்கிற போதுதான் சிறந்து விளங்குகிறது. அதுவும் நம்முடைய சபையை தாங்கள் எப்படி நடத்தி வந்திருக்கிறீர்கள் என்பதே நாம் பெருமைப் படக்கூடிய ஒன்ருக அமைந்திருக்கிறது. எனக்கு முன்னே பேசிய நண்பர் டெல்லியில் நடைபெற்றதைக் குறிப்பிட்டார்கள். திரு. காமராசர் வீட்டிற்கு ஏற்பட்ட நிலையைச் சொன்ஞர்கள். டெல்லி மாநகரில் ரத்தக் கிளறி போல வெறும் காட்டுமிராண்டித் தனமும், கட்டாரி, துப்பாக்கி என்கிற நிலையில் நிலைமை போகிறபோது, ஜனநாயக அரசியல் வாழ்வு ஊருக்குலைக்கப்படுகிற போது, தாங்கள் இங்கே எப்படி ஜனநாயகம் நல்லமுறையில் வேரூன்றி செயல்பட வழிகாட்டியிருக்கிறீர்கள் என்பதைப் பார்க்கிறபோது பெருமை அடையாமல் யாரும் இருக்க முடியாது. என்றைக்குமே நமது சட்டசபை சபாநாயகராக வருகிறவர்கள் ஒரு சம்பிரதாயத்தை, நல்ல பாரம்பர்யத்தை நிலைநாட்டி வந்திருக்கிருர்கள். திரு. ஹுகும்சிங் அவர்கள் மிகப் பெயர் பெற்றவர் என்ருலும் அவராலேயே பாராளு மன்றத்தில் ஒரு ஒழுங்கை நிலை நாட்ட முடியாது போன சந்தர்ப்பங்களைப் பார்க்கிருேம். ஆனல் தாங்கள் இங்கே ஒரு நல்ல பாரம்பர்யத்தை, பண்பாட்டை நிலைநாட்டி எங்களுடைய பாராட்டுதல்களுக்கு உள்ளாகிவிட்டீர்கள். மிகப் பெரிய பொறுப்பு உங்களுக்கு இருக்கிறது என்பதுபோல, இங்கே உள்ள உறுப்பினர்களாகிய எங்களுக்கும் மிகப் பெரிய பொறுப்பு இருந்தது. உங்களோடு சபை நடவடிக்கைகளை செம்மையாக நடைபெறச் செய்ய எங்களால் இயன்ற அளவு உதவியிருக்கிருேம். “இந்தச் சபையின் சபாநாயகராக விளங்கிய மதிப்பிற்குரிய திரு. சிவஷண்முகம் பிள்ளை, திரு. யூ. கிருஷ்ண ராவ், திரு. புலுசு சாம்பமூர்த்தி ஆகியவர்கள் நிலைநாட்டி வந்திருக்கிற பாரம்பர்யத்தைத் தாங்களும் நிலைநாட்டி, எங்களது பாராட்டுதல்களைப் பெற வேண்டும்” என்பதாக தாங்கள் சபாநாயகராக வந்தவுடனே இந்தச் சபையில் தங்களைப் பாராட்டி நான் பேசியிருக்கிறேன். அந்தப் பாரம்பர்யத்தை நிலைநாட்டி, புகழைப் பெற்றுள்ள தங்களை இன்றைக்குப் பாராட்டும் பெருமை எனக்குக் கிடைத்திருக்கிறது. இந்தச் சட்டமன்றத்தினுடைய உரிமைகள் எல்லாம் சாதாரணமாகப் பெற்றவை அல்ல. ஒரு உண்மையைச் 1-30 p.m. சொன்னதற்காகத்தான் சாக்ரடீஸுக்கு விஷம் தரப்பட்டது;

கலிலியோ சிறையிலே போடப்பட்டார். இங்கிலாந்திலே பெண்கள் வாக்குரிமைக்காக ஒரு பெரிய போராட்டமே நடந்தது. ஆகவே, இந்த உரிமைகள் எல்லாம் சாதாரணமாகக் கிடைத்தவை அல்ல. இப்படிப்பட்ட உரிமைகளையும், சம்பிரதாயங்களையும் நிலைநிறுத்துவதிலே தாங்கள் ஐந்து வருஷங்கள் பாடுபட்டுப் பெருமையை அடைந்திருக்கிறீர்கள். நேற்றுக்கூட தாங்கள் 'கில்லட்டின்' பற்றி தீர்ப்பு வழங்கினீர்கள். 'கில்லட்டின்' நடந்தபிறகு 'டிவிஷன்' அனுமதிக்கலாமா வேண்டாமா என்ற பிரச்னையை நான் எழுப்பியிருந்தேன். அதற்குத் தாங்கள் அளித்த தீர்ப்பு இதுவரை உலகத்திலே எந்த சட்டமன்றத்திலும் கொடுக்கப்படாத தீர்ப்பு. காரணம் என்னவென்றால், இதுமாதிரி ஹவுஸ் ஆப் காமன்ஸில் கூட வரவில்லை; 'மேஸ் பார்லிமெண்டரி ப்ராக்டிஸிலும்' இப்படிப்பட்ட நிலைமை குறிப்பிடப் படவில்லை; இந்திய நாட்டிலே உள்ள அத்தனை சட்டமன்றங்களும் கூட இதுமாதிரித் தீர்ப்பு இதுவரை கொடுக்கவில்லை. நான் கடந்த சட்டசபைக் கூட்டத்திலே இந்தப் பிரச்னையை எழுப்பினேன்; அப்போது தாங்கள் ஒரு தீர்ப்பு வழங்கினீர்கள். ஆனால், அந்தத் தீர்ப்புக்கு மாறான தீர்ப்பை தாங்கள் நேற்றுப் பெருமையுடனே இந்தச் சட்டமன்றத்திலே வழங்கி, மதியழகன் சொல்லியது சரியாக இருக்கிறது என்று மாற்றித் தீர்ப்புக் கூறியிருக்கின்றீர்கள். அது மிகவும் பெருமைப் படத்தக்கது. நேற்றைக்கு ஒரு பட்டயத்தை வழங்கியிருக்கிறீர்கள். அதே போன்று திரு. உமாநாத் பற்றியும் தீர்ப்பு வழங்கியிருக்கிறீர்கள். இங்கிலாந்திலே ப்ரஃபியூமோ, ஹவுஸ் ஆப் காமன்ஸை விட்டு வெளியேற்றப்பட்டார். தாங்கள் கொடுத்த தீர்ப்பிலே அதைவிட அதிகமான அளவுக்கு சட்ட நுணுக்கங்களும், அறிவாற்றலும் காணமுடிந்தது. அப்ஜெக்டிவ் டெஸ்ட், சப்ஜெக்டிவ் டெஸ்ட் என்று எல்லாம் அவர்கள் எடுத்து ஒரு கோணத்திலே இருந்து பார்த்தார்கள்; தாங்கள் வேறு கோணத்திலிருந்து சட்ட நுணுக்கங்களை ஆராய்ந்து தீர்ப்பு அளித்தீர்கள். அந்தத் தீர்ப்பு எங்களுக்குத் திருப்தியாக இருக்கலாம், இல்லாமல் இருக்கலாம். ஆனால், தாங்கள் அதன்மூலம் இந்தச் சட்டமன்றச் சம்பிரதாயங்களுக்குப் பெருமை தேடித்தந்திருக்கிறீர்கள். சபாநாயகர் அவர்கள் போட்டிபோடுகின்ற தொகுதியில் வேறு யாரும் போட்டிபோடக் கூடாது என்ற சம்பிரதாயம்கூட இருக்கலாம். சபாநாயகருக்குப் பல சங்கடங்கள் இருக்கின்றன; பல மாதிரியான காரியங்கள் செய்யும்பொழுது சில நிகழ்ச்சிகள் எல்லாம் குறுக்கிடுகின்றன. நாம் நல்ல முறையில் இந்தவிதமாக சபாநாயகர்களை உருவாக்கலாம். அவர்களுடைய திறமை இந்த நாட்டினுடைய சேவைக்குப் பயன்படக்கூடிய முறையிலே செய்யலாம். நான் ஒன்று உங்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நீங்கள் ஒரு கட்சியினுடைய சார்பிலே போட்டிபோடாமல் தனியாகப் போட்டியிட்டால் என்னுடைய கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய முழு ஆதரவும், மற்றையக் கட்சிகளுடைய ஆதரவும் தங்களுக்கு இருக்கும் என்ற வாக்குறுதியை நான் தங்களுக்கு அளிக்க விரும்புகிறேன். அதேபோன்று மற்றக் கட்சிக்காரர்களும் சொல்வார்கள். நீங்கள் போட்டியிடுகிற அந்தத் தொகுதியிலே அப்படிப் போட்டியிடவேண்டுமென்று விரும்புகிறேன்.

9th November 1966] [திரு. கே. ஏ. மதியழகன்]

அடுத்தபடியாக, கனம் முதலமைச்சர் அவர்களைப்பற்றி ஒன்றிரண்டு வார்த்தைகளைக்கூற விரும்புகிறேன். மற்றத் தலைவர்கள் எல்லாம் பேசுவதற்கு இருக்கின்ற நேரத்திலே நான் உருக்கமாக நின்றுகொண்டிருக்கின்றேன். திரு. கலியாணசுந்தரம் அவர்கள் கூடச் சொன்னார்கள். அவர்கள் 7, 8 மாதங்கள் சிறைச்சாலையிலே இருந்திருக்கிறார்கள். எனக்கும் அந்தச் சந்தர்ப்பத்தைக் கொடுத்திருக்கிறார்கள் முதலமைச்சர் அவர்கள். இந்தச் சட்டசபை ஐந்து ஆண்டுகள் நடந்தது. நான் 1962ஆம் வருஷத்திலே விலைவாசிப் போராட்டத்திலே 4½ மாதங்கள், 1965--ஆம் வருஷத்திலே டிசம்பர் மாதத்திலிருந்து, மே மாதம் முடிய இந்தச் சட்டசபையில் நிதி நிலை அறிக்கைக் கூட்டங்களிலே, இரண்டு கூட்டங்களிலே, மொத்தம் 11 மாதங்கள் கலந்துகொள்ள முடியவில்லை. மொத்தம் 252 நாட்கள் கூட்டம் நடந்திருக்கிறது. கனம் முதலமைச்சர் அவர்கள் எனக்கு ஒரு பாக்கியத்தைக் கொடுத்தார்கள். 207 உறுப்பினர்களில் எனக்கு தனிச் சிறப்பாக முதலமைச்சர் அவர்கள் என்னை விருந்தாளியாக வைத்திருந்திருக்கிறார்கள். நான் அதைக் குறையாகச் சொல்லவில்லை. இந்தச் சட்டமன்றத்தினுடைய நாட்களை அதிகமாக்கவேண்டுமென்று திரு. கணேசன் அவர்கள் சொன்னார்கள். அதிகப்படுத்தவேண்டுமென்று நானும் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ப்ரபோர்ஷனல் ரெப்ரசன்டேஷன் வரவேண்டுமென்றும் சொன்னார்கள். நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள்கூட அதைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். சில நாடுகளிலே 'ரிகால்' என்ற முறையும் வைத்திருக்கிறார்கள். மக்களுடைய புனிதத்துவத்தைக் காட்டுகிற முறையில் ஒரு தொகுதியிலே உள்ள மக்களில் மூன்றில் இரண்டு பங்கினர் ஆட்சேபணை செய்தால் அந்த உறுப்பினரைத் திருப்பிப்பெற வேண்டும் என்ற, நிலைமையும் வரவேண்டும்.

நான் முதலமைச்சர் அவர்களுக்கு மிகுந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வாழ்த்தேகூடக் கூறுவேன். இந்த மன்றத்திலே நான் கடுமையான விமரிசனங்கள் செய்திருக்கலாம். நீங்கள் கூறுவதிலே உங்கள் கட்சியிலே மேம்பாடாகக் கருதுபவற்றைக் கூறுகிறீர்கள்; நான் அப்படி விமர்சனம் செய்திருப்பதெல்லாம் அந்தக் கருத்துக்களின் மீதுதானே ஒழிய தங்கள்மீது எனக்கு எந்தவிதமான ஆசாபாசமும் இல்லை என்பதை நான் சொல்லிக் கொள்கிறேன், நீங்களும் அதை உணர்வீர்கள். திரு. கலியாண சுந்தரம் அவர்கள் குறிப்பிடுகிற நேரத்திலே 70 வயது அடைந்த இளைஞர் என்று சொன்னார்கள். நான் சொல்லிக்கொள்வதெல்லாம் நீங்கள் இன்னும் பல ஆண்டுகள் இளைஞராக வாழ வேண்டும். நீங்கள் இந்த நாட்டினுடைய முதலமைச்சராக இருக்க வேண்டுமென்று நான் சொல்லாவிட்டாலும், இளைஞராக இருக்கவேண்டும் என்று விரும்புகிறேன். எனக்குக்கூட பொறாமையாக இருக்கிறது திருச்சியிலே அவர்கள், கோயம்புத்தூரிலே அவர்கள், மதுரையிலே அவர்கள், எம்.எல்.ஏ-க்களைத் தேர்ந்தெடுப்பது அவர்கள், கோயில் களிலே அவர்களுக்குப் பரிவட்டம், இவ்வளவு வேலைகளையும் அவர்கள் செய்கிறார்கள். இவ்வளவும் அவர்கள் செய்கிறார்கள், தூங்குவதற்கு எங்கே நேரம் இருக்கிறது என்று நான் கூட சில நேரங்களிலே ஆச்சரியப்படுவதுண்டு. அதற்கு எனர்ஜி என்று ஆங்கிலத்

திலே சொல்வார்களே, தமிழிலே சரியாக எனக்குச் சொல்ல வரவில்லை, அது வேண்டும். தமிழ்நாட்டிலே வயது முதிர்ந்த தலைவர்களின் பட்டியலிலே அவர்களும் இருக்கிறார்கள். முதலமைச்சர் பதவியால் அவருக்குப் பெருமையல்ல, முதலமைச்சர் ஆக அவர் இருப்பதால் அந்தப் பதவிக்குப் பெருமை என்ற அளவுக்கு அவர்கள் இருக்கிறார்கள். சொத்தையான வழக்கை எடுத்துத் திறமையாக வாதிக்கின்றவர்கள் என்று தான் அவர்களைக் குறிப்பிட வேண்டும். அவரைவிட அவர்களுடைய கட்சியிலே வேறு யாரையும் தேர்ந்தெடுக்கமுடியாது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அவரிடத்திலே எனக்கு மிகுந்த அன்பும் பற்றும் உண்டு. தமிழ்நாட்டு மக்களுக்கு, அவர்கள் நல்வாழ்விற்கு மாறாகச் செய்கின்ற தவறான காரியங்களுக்குத்தான் என்னுடைய விமர்சனங்கள் இருந்திருக்குமேயன்றி வேறு எந்த விதமான ஆசாபாசமோ அறுவெறுப்போ இல்லையென்பதை நான் சொல்லிக்கொள்வேன்.

தொழில் அமைச்சர் அவர்கள் தலை சிறந்த நிபுணர். ஆங்கிலத்திலே நினைத்து அவர்கள் தமிழிலே பேசுகிறார்கள். அதனால் அவர்கள் கோபமாகப் பேசுவதுபோல் தெரியும். அவர் சிறந்த நுட்பமும், ஏழை எளியவர்களிடம் அக்கறை உள்ளவராகவும் இருந்து இந்த சட்டசபைச் சம்பிரதாயங்களுக்குப் பெரிதும் உதவியிருக்கிறார்கள் என்று அவரையும் வாழ்த்துகிறேன். உள்துறை அமைச்சர் அவர்கள் கூட, நசுக்கப்பட்ட மக்களுக்கு எவ்வளவு ஆர்வத்தோடு காரியங்கள் செய்கிறார்கள் என்பதை நான் அனுபவத்திலிருந்து தெரிந்து கொண்டேன். பட்டகாரர் அவர்கள் என்னுடைய சகோதரர்போல் உள்ளவர்கள். அவர் என்னுடைய ஊரிலிருந்து வருகின்றவர். அவர்களுடைய சகோதரர் அர்ஜுனன் அவர்கள் என்னுடன் கூட வேலை செய்தவர். அவர் ஏதோ ஒரு நிலைமையினால் அங்கே உட்கார்ந்திருக்கிறார். மற்றும் இளைஞர்களான மந்திரி பூவராகன் அவர்களும், மந்திரி மஜீத் அவர்களும் இருக்கிறார்கள். மந்திரி ராமையா அவர்கள் கடுமையாகப் பேசுவதுபோல் தெரியும்; நாம் அதற்கு பயப்பட்டுவிடக்கூடாது. சுறுசுறுப்போடு அவர்கள் காரியங்கள் செய்கிறார்கள். சுருக்கமாகச் சொல்லவேண்டுமென்றால் திறமையாக இருந்தாலும் பிரச்னைகளுக்குப் பரிகாரம் தேடமுடியவில்லை.

குறிப்பாக, முதலமைச்சர் அவர்களைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். நான் இங்கே முதன்முதலாக வந்தபோது, தமிழிலே பாடங்கள் நடத்துவதற்கு முயலவேண்டும், தமிழைப் பாடமொழியாக்கவேண்டும் என்று சொன்னபொழுது, அவர்கள் எப்படி முடியும் என்ற முறையிலே அப்பொழுது சொன்னார்கள். ஆனால், இப்பொழுது ஐந்தாவது வருஷத்திலே, நான்காவது வருஷத்தின் கடைசியிலேகூட அப்படிச் செய்யலாம் என்று சொல்லக்கூடிய நிலைமைக்கு வந்துவிட்டார்கள். இது எங்களுடைய வெற்றி. ஆங்கிலத்தினால்தான் முடியும், தமிழால் முடியுமா என்று கேட்டவர்களுக்கு 'முடியும்' என்று பதில் சொன்னார்கள். அதற்கும் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். உமாநாத் அவர்கள் பிரச்னை வந்த நேரத்திலே, இந்தச் சட்ட மன்றம் 'சாவரின் லெஜிஸ்லேசர்', மத்திய சர்க்காருக்குச் சில வரம்புகள்

இருக்கின்றன, அதேமாதிரி இந்தச் சட்டமன்றத்திற்கும் உண்டு என்று, டெல்லிக்குப் பயப்படமாட்டேன் என்ற அளவிலே துணிந்து சொன்னார்கள். அதுதான் தமிழகத்தின் அரசியல் சாசனமாக இருக்கப்போகிறது. முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் பல ஆண்டுகள் வாழவேண்டும். அவர்கள் பழந்தமிழர் தியாகக் குடும்பத்திலே பிறந்தவர்கள். அவர்கள் நெடுங்காலம் திடகாத்திரமாக வாழவேண்டும். கனம் உதவி சபாநாயகர் அவர்களைப்பற்றிச் சொல்ல நேரமில்லை. தங்களுக்கு இணையாக அவர்கள் இருந்திருக்கிறார்கள்.

சகோதரி திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் அந்தக் கட்சியில் இருக்கிறார்கள் என்றாலும் அவர்கள் அரை மணி நேரம் பேசுகிறார்கள் என்றால் அதிலே 20 நிமிஷம் உங்களுக்காகவும், 10 நிமிஷம் எங்களுக்காக இருக்கக் கூடிய குறைகளைப் பற்றியும் எடுத்துக் கூறுவார்கள். சென்னை நகரத்தைப் பற்றி வந்தவுடனேயே மதியழகன் பேசவேண்டியவை என்னவோ அதையேதான் பேசுவார்கள். திருமதி குழந்தையம்மாளும் அப்படித்தான். பெரிய குடும்பம் போல் இருந்து வந்திருக்கிறதே தவிர குஸ்தி மண்டபமாகச் செயல்படவில்லை; மாநிலத்தின் வளர்ச்சியிலே மிகுந்த அக்கறை கொண்டு செயல்பட்டு வந்திருக்கிறோம் என்று கூறி உங்களுக்கும் மற்றவர்களுக்கும் நல்வாழ்த்துக்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி: கனம் தலைவர் அவர்களே, பத்தாண்டுக் காலமாக இந்த மன்றத்திலே பணியாற்றிக் கொண்டிருக்கிறேன் என்ற பெருமையோடும், நல்ல ஜனநாயகத்தைப் பொலிவோடும், வலிவோடும் காப்பாற்ற வேண்டும் என்கிற நல்ல எண்ணம் இருதரப்பிலும் வளர வேண்டுமென்ற ஆசையோடும் என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை எடுத்து வைப்பது என்னுடைய கடமை எனக் கருதுகிறேன்.

பொதுவாக, ஒரு காரியத்தைத் தொடங்கலாம் என்று அனுமதிக்கப்படுகிற நேரத்தில் பச்சைச் சின்னம், பச்சை விளக்கு இதுதான் போட்டுக் காட்டுவது வழக்கம். ஆனால் நம்முடைய சட்ட மன்றத்தில் பேசலாம் என்றால் அனுமதி அளிப்பதற்குச் சிவப்பு விளக்குதான் போடுவது வாடிக்கை. சிவப்பு விளக்குப் போட்டாலே 'நிறுத்து, தொடராதே' என்று பொருள். ஆனால் இங்கே சிவப்பு விளக்குப் போடுவதற்குக் காரணம், 'பேசுவதை ஜாக்கிரதையாகப் பேசு, கட்டுப்பாட்டோடு பேசு, எல்லை மீறிப் பேசாதே, அளவோடு பேசு, ஆற்றலோடு பேசு ஜனநாயக உரிமையை நிலைநிறுத்துகிற வகையில் பேசு' என்றெல்லாம் சட்ட மன்றத்தில் இருக்கின்ற உறுப்பினர்களுக்கும் அமைச்சர்களுக்கும் அறிவிக்கின்ற வகையிலேதான் அந்தச் சிவப்பு விளக்கு பொருத்தப்படுவதாக எண்ணி என்னுடைய கடமையை இந்தப் பத்தாண்டு காலமாக இந்த மாமன்றத்திலே நான் ஆற்றிக் கொண்டு வந்திருக்கிறேன்.

கனம் முதலமைச்சர் அவர்களையும் ஏனைய அமைச்சர் பெருமக்களையும் பாராட்டுகிறோம் என்றாலும், நாங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக அல்லது எதிர்க்கட்சிகள் சார்பாக

[திரு. மு. கருணாநிதி] [9th November 1966

இந்த மாமன்றத்திலே எடுத்து வைத்த நல்ல பல கருத்துக்களை எல்லாம் அவர்கள் ஒப்புக் கொண்டார்கள் என்ற காரணத்திற்காக நாங்கள் பாராட்டுகிறோம் என்று அர்த்தமல்ல. நேரம் அதிகமாகி விட்ட காரணத்தால், தாங்கள் இதுவரை காட்டிய பொறுமையை, பொறுத்துக் கொள்கின்ற தன்மையை, என்னிடத்தில் கொஞ்சம் காட்டுவீர்கள் என்ற எண்ணத்தில், நம்பிக்கையில் ஒன்றிரண்டு கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

ஜனநாயக ரீதியில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நாங்கள் அளித்த பல்வேறு தீர்மானங்கள் ஆளும் கட்சி பெரும் பான்மை என்கின்ற ஒரே காரணத்திற்காக தோற்கடிக்கப்பட்டன என்றாலும் நாங்கள் இன்றையதினம் அமைச்சர்களைப் பாராட்டு கிறோம் என்றால் தோற்கடிக்கப்பட்டதற்காக அல்ல. அவைகளுக் காக நாங்கள் வருந்துவது வேறு; அமைச்சர்களைப் பாராட்டுவது வேறு. இரண்டையும் ஒன்றோடொன்று போட்டுக் குழப்பாமல் தனித் தனியாக பிரித்துப் பார்ப்பதுதான் அரசியல் தெளிவு படைத்தவர்களுடைய கடமையாகும்.

22-7-1963-ல் எங்கள் கட்சியின் சார்பில் அன்பில் தர்மலிங்கம் அவர்கள் ஐந்து ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு உள்ளாக இருக்கின்றவர் களுக்கு வரி விலக்கு அளிக்க வேண்டுமென்று கொண்டு வந்த தீர் மானம் 58 ஓட்டுகள் ஆளும் கட்சியினரால் எதிராக அளிக்கப்பட்டு நாங்கள் 39 வாக்குகள் அளித்து தோல்வியுற்றது என்றாலும் நான் இன்றையதினம் அமைச்சர் பெருமக்களைப் பாராட்டுகிறேன். 1963-ம் ஆண்டு மார்ச் மாதம் 28-ம் நாள் எங்கள் கட்சியின் சார்பில் நண்பர் அரங்கண்ணல் அவர்களின் உணவுப் பொருள் மீது விதிக் கப்பட்ட வரியை நீக்க வேண்டுமென்ற தீர்மானம் ஓட்டு எடுக்கப் பட்டு தோல்வியுற்றது என்றாலும் அமைச்சர் பெருமக்களைப் பாராட்டுகிறேன். 1965-ம் ஆண்டு ஆகஸ்ட் 5-ம் தேதி, எங்கள் கட்சி யின் செயலாளர் நண்பர் மதியழகன் அவர்கள் மத்திய அரசு அலுவலகத் தேர்வுகளை எழுதுவதற்கான மொழிகளிலே தமிழையும் ஒன்றாகச் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று மத்திய அரசை வற் புறுத்த வேண்டுமென்று கொண்டுவந்த தீர்மானம் ஆளும் கட்சி யின் சார்பாக 78 ஓட்டுகளும், எதிர்க்கட்சிகளின் சார்பாக 34 ஓட்டு களும் பெற்று பெரும்பான்மையினால் தோற்கடிக்கப்பட்டாலும் நான் அமைச்சர்களைப் பாராட்டுகிறேன். சட்ட மன்ற உறுப்பினர் கள் தங்களுடைய சொத்து விவரங்களைப் பற்றிய கணக்குகளைக் காட்ட வேண்டுமென்று எங்கள் கட்சியின் சார்பில் மாதவன் அவர் கள் கொண்டு வந்த தனிநபர் தீர்மானம் ஆளும் கட்சியின் சார்பில் 65 ஓட்டுகளும், எதிர்க்கட்சியின் சார்பில் 49 ஓட்டுகளும் பெற்று தோற்கடிக்கப்பட்டாலும் அமைச்சர்களைப் பாராட்டுகிறேன். ஆகஸ்டு 5, 1965-ல் புலவர் கோவிந்தன் அவர்கள் துவக்கப்பள்ளி ஆசிரியர்களுக்குச் சட்ட மன்றத்தில் இடம் ஒதுக்கும் வகையில் தனித் தொகுதி அமைக்க அரசியல் சட்டத் திருத்தம் கோர வேண்டுமென்ற தீர்மானம் ஓட்டு எடுக்கப்பட்டு தோல்வியுற்றாலும் அமைச்சர் பெருமக்களைப் பாராட்டுகிறேன். அரசியல் சட்டம் 351-வது விதியில் தகுந்த திருத்தத்தைச் செய்வதன் மூலமாக எட்டாவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா மொழிகளும் இந்தியாவின் தேசிய மொழிகளாக அறிவிக்கப்பட வேண்டுமென்ற

9th November 1966] [திரு. மு. கருணாநிதி]

நண்பர் அழகமுத்துவின் தீர்மானம் ஓட்டுக்கு விடப்பட்டு தோல்வியுற்ற பிறகும் அமைச்சர் பெருமக்களைப் பாராட்டுகிறேன். அரசினரின் முத்திரையில் கோபுரத்தைச் சுற்றி 'கவர்ன்மென்ட் ஆப் மெட்ராஸ்' என்ற எழுத்துக்களுக்கு பதில் 'தமிழக அரசு' என்று எழுதப்பட வேண்டுமென்று கூறிய கருத்து இந்த மன்றத்தி லே ஆட்சேபிக்கப்பட்டது, எதிர்க்கப்பட்டது, தோல்வியுற்றது என்றாலும் மந்திரிகளைப் பாராட்டுவதற்குக் கடமைப்பட்டிருக் கிறேன். காங்கிரஸ் தேர்தலிலே கணிசமான வெற்றியைப் பெற வேண்டும், எல்லோரையும் விட சமதர்மத்திலே நம்பிக்கையுள்ளவர் காமராஜர், அவருடைய கரம் வலுக்க வேண்டும், அதற்குக் காங்கிரஸ் வெற்றி பெற வேண்டுமென்று அல்லும் பகலும் பணி புரியும் பெரியார் ராமசாமி அவர்களைத் திருப்திப் படுத்துகிற அளவுக்காவது அவரால் உருவாக்கப்பட்ட பிரசாரமான 'சுய மரியாதைத் திருமணம்' சட்டப்படி செல்லுபடியாக வேண்டு மென்று நாங்கள் கொண்டுவந்த தீர்மானத்தை ஒரேயடியாகப் புறக்கணித்துத் தள்ளி விட்டபிறகும் இந்த அமைச்சர் பெருமக்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஜனநாயகம் பேசுகின்ற இந்த அரசு ஜனநாயகத்திற்கு விரோதமாக நகராட்சி, மாநகராட்சி மன்றங்களைக் கலைப்பதற்கான மசோதாவைக் கொண்டு வந்து நிறைவேற்றியது என்றாலும் இந்த அமைச் சர்களைப் பாராட்டுகிறேன். சோஷலிசம் பேசுகிற கட்சி, பஸ் தொழிலைத் தேசிய மயமாக்க வேண்டுமென்று கொண்டு வந்த தீர்மானத்தைத் தோற்கடித்த பிறகும் இந்த அமைச்சர்களை நான் பாராட்டுகிறேன். நெல்லை நகரசபை கலைக்கப்பட்டு அதையொட்டி உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டு தீர்ப்பில், 'ஜனநாயகத்திற்கு மாறாக இரண்டு ஆண்டு காலத்திற்கு நகர சபையைக் கலைத்து வைத்திருப்பதைப் பொருத்து மறு பரிசிலனை செய்ய வேண்டும்' என்று நீதிபதிகள் குறிப்பிட்ட பிறகும், அதைப் பற்றி இன்று வரை யோசனை செய்யாமல் இந்த அரசு இருக்கிறது என்றாலும் இந்த அமைச்சர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஜனநாயக ரீதியில் ஆலோசிக்கப் படாமல், எங்களுடைய கட்சியினுடைய கோரிக்கைகள், தள்ளப் பட்டான பிறகும், ஒதுக்கப்பட்டான பிறகும், தோற்கடிக்கப்பட் டான பிறகும், கனம் சபாநாயகர் அவர்களே, நான் முதலமைச்சர் அவர்களையும், தொழிலமைச்சர் அவர்களையும், உணவு அமைச்சர் அவர்களையும் மற்றும் அவரோடு ஒத்துழைந்து அரசு பரிபாலனம் நடத்துகின்ற மற்ற அமைச்சர்களையும் நான் பாராட்டுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்; அது எதிர்க்கட்சிகள் பெற வேண்டிய பண்பு என்ற அடிப்படையில் பாராட்டுகிறேன்.

கனம் சபாநாயகர் அவர்களே, ஆண்டவன் என்ற ஒருவன் இருந்து நான் அவனைச் சந்தித்தால் அவனைப் பார்த்து நான் கேட் கின்ற வரம் 'முதலமைச்சரைப் போன்ற சுறுசுறுப்பைக் கொடு' என்றுதான் கேட்பேன். அந்த வரத்தைக் கேட்ட பிறகு 'முதலமைச்சர் அவர்களுடைய பிடிவாத உள்ளத்தைப் போக்கிவிடு' என்று அந்த ஆண்டவனைப் பார்த்துக் கேட்பேன்--முதலமைச்சர் அவர்களுடைய பிடிவாதம் என்றால் அவர்களுடைய கட்சி ரீதியில், கொள்கை ரீதியில் இருப்பதை அல்ல, எதிர்க்கட்சிகளின்

[திரு. மு. கருணாநிதி] [9th November 1966

தீர்மானங்களை ஏற்றுக் கொள்ளாத பிடிவாதத்தைத் தான் நான் குறிப்பிடுகிறேனே அல்லாது வேறு அல்ல. முதலிலே திரு. கலியாண சுந்தரம் அவர்கள் எடுத்துக் கூறியது போல் அவர்கள் 70 ஆண்டு இளைஞராக, இந்த மாமன்றத்திலே 20 ஆண்டு காலமாகப் பணியாற்றி வருகிறார்கள். இருபது ஆண்டு காலம் என்று பொறுமையின் காரணமாகச் சொல்லவில்லை. ஏ! அப்பா! அவ்வளவா! என்று மலைக்கின்ற அளவுக்குப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஏறத்தாழ மூன்று, நான்கு ஆண்டுகளாக முதல் அமைச்சராக ஆற்றியிருக்கிற பணி சாதாரணமானதல்ல. எங்கள் கோரிக்கைகளை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்றாலும் அவர்கள் தமிழகத்தைச் சுற்றிச் சுற்றி, சுழன்று சுழன்று அவர்கள் காட்டியிருக்கிற உழைப்பானது, அவர்கள் ஆற்றியிருக்கும் பணியானது உள்ளபடியே மற்றக் கட்சிக்காரர்கள் அதைப் பார்த்து செயல்படும் அளவிற்குள்ள பணியாகும். அவர்கள் அமைச்சராக இருந்த இந்த இருபது ஆண்டுக் காலத்தில், அதிலும் குறிப்பாக இந்தப் பத்துப் பதினைந்து ஆண்டுக் காலத்தில், அதிலும் குறிப்பாக இந்த ஐந்து வருடக் காலத்தில் ஆளும் கட்சித் தலைவராக இருந்து எதிர்க்கட்சியில் உள்ள எங்களுக்கு ஆளும் கட்சித் தலைவர் எப்படிச் செயல்படவேண்டும் என்ற அனுபவத்தை ஊட்டியிருக்கிறார்கள்.

முதல் அமைச்சர் அவர்களிடம் ஒரு குறை உண்டு எங்களுக்கு. அவர்கள், 'எதிர்க்கட்சி நல்ல அனுபவம் பெறவில்லை, நல்ல அனுபவம் பெறவில்லை' என்று கூறிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களிடம் ஒன்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அதற்கான அனுபவத்தை அளிக்கும் வகையில் அந்த ஒரு இடத்தை இந்த சட்ட மன்றத்தில் பிடிக்கக் கொண்டு அடுத்த தடவை எதிர்க்கட்சியின் அனுபவங்களை எல்லாம் எங்களுக்குச் சொல்லித் தரவேண்டுமென்று அவர்களை நான் பணிவன்புடன் சபாநாயகர் அவர்கள் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தொழில் அமைச்சர் அவர்கள், திரு. மதியழகன் அவர்கள் கூறியபடி நல்ல கனிவான உள்ளமும், பிரச்சினைகளை ஆழமாகப் புரிந்து கொள்கிற நல்ல தன்மையும் உள்ளவர்கள். அதே நேரத்தில் அவர்கள் எல்லாவற்றையும் புரிந்து கொண்டிருக்கிறோம் என்ற காரணத்திற்காக கர்வமோ இறுமாப்போ அடையாமல் மற்றவர்களுக்கு விளங்க வைக்கவேண்டுமென்ற வகையில் பிரச்சினைகளை எடுத்துச் சொல்கிறவர்கள். அவர்களோடு எனக்கு ஆயிரக்கணக்கான கொள்கை வேறுபாடுகள், கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் அவர்களிடம் நல்ல மதிப்பு ஏற்படும் வகையில் நடந்து கொண்டிருக்கிறார்கள்.

உள்துறை அமைச்சர் அவர்கள் நல்ல கட்சிப் பற்று வாய்ந்தவர். அந்தக் கட்சிப் பற்றை அவர்கள் சட்ட மன்றத்தில் காட்டுவாரா என்று கேட்டால் இல்லை. ஆனால் அந்தக் கட்சிப் பற்று வெளியே காட்டப்படுகிறது. கட்சிக்காகப் பாடுபடுகிற தொண்டு உள்ளம் அவருக்கு இருப்பதுபோன்று எல்லாக் கட்சிகளுக்கும் வரவேண்டும் என்ற விருப்பத்தைத் தெரிவிக்காமல் இருக்க முடியாது. உணவு அமைச்சர் திரு. ராமையா அவர்கள் எங்களோடு பழகிடவும், நல்ல பல கருத்துக்களை விளக்கி, நல்ல முறையில் பணியாற்றியிருக்கிறார்கள்.

9th November 1966] [திரு. மு. கருணாநிதி]

அம்மையார் அவர்கள் இங்கில்லாததால் அவர்களை மறந்துவிடவில்லை. பெண்மையின் திரு உருவமாக இருந்து சுகாதார அமைச்சராகப் பணியாற்றி வந்திருக்கும் திரு. ஜோதி அம்மையார் அவர்களுக்கும், திரு. மன்றாடியார், திரு. பூவராகன் திரு மஜீத் எல்லோருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுத்தேர்தல் வெகு விரைவாக வந்து கொண்டிருக்கிறது. அந்தத் தேர்தல் ஜனநாயக அடிப்படையில், தமிழகம் கட்டிக் காத்து வருகிற பண்பாட்டின் அடிப்படையில் நடத்தப்பட வேண்டும். நான் முதல் அமைச்சர் அவர்களைப் பணிவுடனும், மரியாதையுடனும் கேட்டுக்கொள்கிறேன். வருகிற பொதுத் தேர்தல் ஜனநாயக ரீதியில் கட்சிகள் உருவாகவும், வெற்றி தோல்விகள் ஜனநாயக ரீதியில் அமையவும் வழி வகுக்கவேண்டும் என்று சபாநாயகர் அவர்கள் மூலம் முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். சில நேரங்களில் கட்சிக்கும் ஆட்சிக்கும் வித்தியாசம் தெரியாமல் போய் விடுவதால் இதைச் சொல்ல விரும்புகிறேன். சமீபத்தில்கூட கள்ளக்குறிச்சியில் நடைபெற்ற மகாநாட்டில் அந்த வித்தியாசம் தெரியாத நிலையை, சென்னையில் இவர்களுக்குத் தெரியுமோ தெரியாதோ, அதிகாரிகள் உருவாக்கி விட்டார்கள். பள்ளிக்கூடங்களை மூடி விட்டு பிள்ளைகளை அந்த மாநாட்டுக்கு அனுப்புங்கள் என்று கூறுகிற அளவிற்கு தியாகதுர்க்கம் பஞ்சாயத்து யூனியன் பள்ளி தலைமை ஆசிரியர் உத்திரவிட்டிருக்கிறார்கள்; இதை மறுக்க முடியாது. அதற்கான ஆதாரங்களை வைத்திருக்கிறேன். அப்படிப்பட்ட சூழ்நிலைகள் பொதுத் தேர்தலில் ஏற்படாதவாறு வழிவகுக்கப்படவேண்டும்.

இறுதியாக, அதிலும் சிறப்பாக, சபாநாயகர் அவர்களும், துணைச் சபாநாயகர் அவர்களும் நல்ல ஒத்துழைப்புத் தந்து இந்த மன்றத்தில் புயல் வீசுகிற நேரத்தில் எல்லாம் சபாநாயகர் அவர்களுக்குப் பிரத்தியேகமாக அமைந்துள்ள புன்னகை மூலம் அந்தப் புயலைப் போக்கியிருக்கிறீர்கள். தீப்பொறி பறந்த நேரங்களில் தங்கள் தீர்ப்புகளின் மூலம் அவற்றை அணைத்திருக்கிறீர்கள். பத்தமடைப் பகுதியில் இருந்து வருகிறீர்கள்; ஆகவே பத்தமடைப் பாயைப் போன்ற மிருதுவான உள்ளத்தோடு நடத்துங்கள்' என்று தொடக்கத்திலேயே நான் கேட்டுக்கொண்டேன். அப்படியே நடத்தினீர்கள். அதற்காக அவர்களுக்கு என் நன்றி. மற்றும் எதிர்க் கட்சியில் உள்ளவர்கள், ஆளும் கட்சியில் உள்ள உறுப்பினர்கள் அத்தனை பேர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. நெடுஞ்செழியன்: கனம் அவைத்தலைவர் அவர்களே, மூன்றாவது தமிழக சட்டமன்றத்தின் நடவடிக்கைகள் இன்று இறுதிக் கட்டத்தை அடைந்திருக்கின்றன. இந்தச் சட்ட மன்றத்தில் பணியாற்றியிருக்கிற உறுப்பினர்கள் அத்தனை பேர்களும் இதை விட்டுச் செல்கிறபோது மிக மகிழ்ச்சிகரமான நினைவுகளுடன் செல்லத் தக்க அளவிற்கு இந்த சட்டமன்ற நடவடிக்கைகள் வந்து சேர்ந்திருப்பது உள்ளபடியே மிக்க மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும். ஐந்தாண்டுக் காலம் மிக விரைவாக உருண்டோடி விட்ட அத்தகைய உணர்வை நமக்கெல்லாம் தருகிற அளவிற்கு

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [9th November 1966

அமைந்திருக்கிறது. இந்த தமிழக சட்டமன்றம் தங்கள் சீரிய தலைமையின்கீழ் நம் மரபையும், பண்பாட்டையும் காப்பாற்றி வந்திருக்கிறது என்பதை உறுப்பினர்கள் பலரும் தெளிவுபட எடுத்துக்கூறியிருக்கிறார்கள். நமது தமிழக சட்டமன்றத்திற்கு ஒரு சிறப்பான மரபு இருந்து வந்திருக்கிறது, இருந்து கொண்டு வந்திருக்கிறது என்பதை கனம் முதல் அமைச்சர் அவர்களும் அடிக்கடி எடுத்துத் தெரிவித்து வந்திருக்கிறார்கள். இந்தச் சட்ட மன்றம் அரசியல் நாகரீகத்தையும், அரசியல் கண்யத்தையும், அரசியல் பண்பாட்டையும் காப்பாற்றுகிற வகையில் இந்த சட்ட மன்ற உறுப்பினர்கள் அத்தனை பேர்களும் பங்கேற்றிருக்கிறார்கள் என்பதை விவாதங்களிலிருந்து நாம் நன்கு அறிகிறோம். சட்ட மன்றம் என்று சொல்கிறபோது இங்கு விவாதங்கள் ஏற்படுவதும், கருத்து வேறுபாடுகள் உள்ள கட்சிகள் வந்து அமர்வதும், தத்தம் வாதங்களை எடுத்துக்கூறும்போது அதற்கான காரண காரியங்களை அழுத்தந்திருத்தமாக எடுத்துச் சொல்லுவதும் அப்படிச் சொல்கிற நேரத்தில் சூடு ஏற்படுவதும், சூடு தணிகிற அளவிற்கு ஒளி ஏற்பட விரும்புவதும் ஆகிய நிகழ்ச்சிகள் ஏற்படுவதும் ஜனநாயகத்தில் எதிர்பார்க்கப்படுவதேயாகும். நம் பண்பாட்டைக் காப்பாற்றும் விதத்தில், காப்பாற்றப்படுகிற அளவிற்கு நிலைமை நிலவி வருவதைக் காண்கிறோம். ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்ற வகையில் கருத்து வேறுபாடுகள் இருக்கத்தான் செய்யும். ஆனால் எல்லோரும் கோருவது ஒன்றுதான். இங்கு வீற்றிருக்கிற மன்ற உறுப்பினர்கள் அத்தனை பேர்களுடைய எண்ணமும், தமிழகம் பொலிவுபெற வேண்டும், இங்கு வாய்ப்பு வசதிகள் பெருக வேண்டும், நம் வாழ்க்கைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்கிற அளவிற்கு செயல்கள் ஆற்றப்படவேண்டும், நம் இயற்கை வசதிகள், வளங்கள் இவற்றை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்றும் அதற்கான முறைகளை மேற்கொள்ளவேண்டும் என்றும், அவற்றிலுள்ள குறைபாடுகளை நீக்கவும், நம் இன்றியமையாத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளவேண்டும் என்ற இவற்றில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க வழியில்லை. ஆனால் அவற்றைப் பெறுவதற்கான வழிமுறைகளில், நடவடிக்கைகள் எடுப்பதில் வாதப்பிரதிவாதங்கள் வருகின்றன. அதை யொட்டித் தான் தங்கள் தங்கள் கருத்துக்களின் அடிப்படையில் வாதங்கள் புரிகிறார்கள். ஆகவே, வாதங்களில் சூடு ஏற்படுவது இயற்கையே. அப்படி சூடு ஏற்படுகிற நேரத்தில் தாங்கள் தலையிட்டு அந்தச் சூட்டைத் தணித்து ஒளி நிலவ வழி செய்திருக்கிறீர்கள். அது காரணமாகவும் தாங்கள் அனைவருடைய பாராட்டுதல்களுக்கும் உரியவராவீர்கள்.

நல்ல ஜனநாயகம் வளரவும், மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக் காட்டாக விளங்கத் தக்க வகையில் தமிழகம் விளங்குவது நமக்கு பெருமை அளிக்கக் கூடியதாகும். பல வகைகளில் பார்த்தால் உலக நாகரீகத்திற்கே தமிழகம் எடுத்துக்காட்டாக இருந்து வந்திருக்கிறது என்பது வரலாற்று அறிஞர்கள், வல்லுநர்கள் எடுத்துக் கூறும் உண்மையாகும். வெள்ளையன் ஆண்டு வந்த காலத்தில் கூட மதராஸ் செகரட்டேரியட் மற்ற செகரட்டேரியட்களுக்கு எடுத்துக் காட்டாக விளங்கத்தக்க வகையில் இருந்து வந்திருக்கிறது.

9th November 1966] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

வெள்ளையன் ஆண்டபோது கூட பல வகைகளில் பண்பாட்டு முறையிலும், நிர்வாக முறையிலும் நிர்வாகத்தை வகிக்கின்ற வகையிலும் தமிழகம் சிறப்பாக இருந்து வந்திருக்கிறது. இன்றுகூட அகில இந்திய அளவில் எடுத்துப் பார்த்தால் நமது போலீஸ் துறையை எடுத்துக் கொண்டாலும், மற்ற மாநிலங்களில் இருப்பதை விட மிகத் திறமையாக, ஆற்றலோடு, அறிவோடு பணியாற்றுகிற சூழ்நிலை நம் மாநிலத்தில் இருக்கிறது என்று மற்றவர்கள் எடுத்துச் சொல்வதில் இருந்தும் அறிகிறோம். கருத்து வேறுபாடுகளுக்கு மதிப்பு கொடுப்பதோடுகூட மனிதனுக்கு மனிதன் காட்டுகிற மதிப்பும் வளரவேண்டும்.

நாம் நல்ல சீரிய முறைகளை, பண்பாடுகளைக் கையாள்வதின் மூலம்தான் எதிர்காலத்தில் ஊராட்சி மன்ற ஒன்றிப்புகளிலும், நகர மன்றங்களிலும், மாநகர மன்றங்களிலும் அவை ஏற்பட வாய்ப்பு ஏற்படும். அவற்றை கையாள்கிற வகையில் இந்தச் சட்ட மன்றம் சிறந்த முறையில் பணியாற்றி வந்திருக்கிறது. அந்த வகையிலே நண்பர்கள் எடுத்துச் சொன்னதைப் போல 252 நாட்கள் தான் இந்தச் சட்ட மன்றம் கூடும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆண்டுக்கு 50 நாட்கள் தான் உட்கார்ந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதிகமான நாட்களை ஒதுக்கும் வாய்ப்பு இருக்குமானால் பல்வேறு பிரச்னைகளை விவாதிக்க வாய்ப்பும் வசதிகளும் இருக்கும். இன்னும் அதிகமான நாட்களை ஒதுக்கி இந்தியச் சட்ட மன்றத்திலும், வேறு இடங்களிலும் பல்வேறு பிரச்னைகளை விவாதிக்கும் சூழ்நிலை ஏற்படுகிறது. அதிகமான நாட்கள் சட்ட மன்றம் கூடுவதற்கான வாய்ப்புகள் ஏற்படுவதால் அதன் மூலம் பல விளக்கங்களைப் பொது மக்கள் அடையக் கூடிய வாய்ப்பு ஏற்படும். இங்கே வாதப் பிரதிவாதங்கள் எழுப்பப்பட்டு, அதன் பேரில் நிலைமைகளை விளக்கித் தெளிவாக்கும் முறையில் மக்கள் மன்றம் நிலைமைகளைப் 2-00
புரிந்துகொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது. மக்கள் மன்றத்தின் p.m.
கவனத்தை ஈர்க்க, மக்கள் பிரச்னைகளைக் கொண்டுவர, சட்ட மன்ற விவாதம் பெரிதும் பயன்படுகிறது. விவாதிக்காமல் விடப்படுகிற பிரச்னைகளையொட்டி அரசாங்கம் புரிய வைக்க வேண்டிய நிலைமைகள் விளக்கப்படாமல் விடப்படுகின்றன. இந்த நிலைமை மாறி, அதிகமான நாள் சட்ட மன்றம் கூடும் நிலைமைகளை உருவாக்குவது நமது ஜனநாயக அமைப்புக்கு ஏற்பு உள்ளதாக இருக்கும்.

சட்ட மன்றத்திற்கு அதிக மதிப்புத் தரும் சூழ்நிலை எதிர்காலத்தில் வரவேண்டும். இன்றைக்கு அரசாங்கத்திலே பல பல முடிவுகள் எடுக்கப்படுகின்றன. உடனடியாக, இன்று அல்லது 24 மணி நேரத்தில் முதல் அமைச்சரோ அல்லது அமைச்சர் அவையோ கூடி முடிவு எடுத்து அறிவிக்கவேண்டுமென்பது பொருத்தமாக இருந்தாலும் கூட, காலம் தாழ்த்தி அறிவிக்கப்படலாம் என்ற முடிவுகள் கூட சட்ட மன்றத்தில் அல்லாமல் வெளியிலே அறிவிக்கப்படுகின்றன. சட்ட மன்றத்திற்கு ஒரு பொலிவு, ஒரு பெருமை ஏற்படவேண்டுமென்றால், காலம் தாழ்த்தி செய்யக் கூடியவைகள், பொது மக்களுக்கு எட்டக் கூடியவைகளாக இருக்க சட்ட மன்றத்திலேயே அறிவிக்கப்படும் என்ற சூழ்நிலை இருக்குமானால், அதன் பேரில் விவாதங்கள் ஏற்பட்டு, கருத்துக்கள் வழங்கி,

விளக்கங்கள் பெற வாய்ப்பு ஏற்படும். இப்படிப் பிரச்னைகள் சட்ட மன்றத்தில் வரும் என்ற சூழ்நிலை ஏற்பட்டால், சட்ட மன்றம் கூடும்போது கூட என்ன புதிதாக ஏற்படப் போகிறதோ, என்னென்ன முடிவுகள் அறிவிக்கப் படப் போகிறதோ என்ற ஆவல் உணர்ச்சி அல்லது வியப்பு உணர்ச்சிகூட ஏற்படக் கூடிய சூழ்நிலை ஏற்படக் கூடும். சட்ட மன்றத்திற்கே முக்கியத்துவம் ஏற்படவேண்டுமென்றால், கூடுமான வரையில் அவசியமாக அறிவிக்க வேண்டியதைத் தவிர, உடனடியாக அறிவிக்க வேண்டியதைத் தவிர, ஒரு மருத்துவக் கல்லூரி அமைப்பது, ஒரு பொறியியல் கல்லூரி அமைப்பது, கல்வித் திட்டத்தில் மாறுதல் மேற்கொள்ளுவது, நிலவரி அமைப்பில் மாறுதல் மேற்கொள்ளுவது போன்ற பிரச்னைகளை மன்றத்தின் முன்னால் வைத்து, மன்றத்திற்கு அறிமுகப்படுத்தும் சூழ்நிலையை ஏற்படுத்தினால், அதன் மூலம் பல்வேறு பிரச்னைகளை நன்கு விவாதிக்கும் சூழ்நிலையை ஏற்படுத்த முடியும். அதன் மூலம் நல்ல ஜனநாயகம் வளர, ஜனநாயகம் மலர, கருத்துக்கள் பரிமாற, வாய்ப்பும் வசதிகளும் ஏற்படும்.

இந்த ஐந்தாண்டுக் காலத்தில் 142 ஒத்திவைப்புத் தீர்மானங்கள் வந்தன. அவற்றுள் ஒன்றுகூட ஏற்றுக்கொள்ளப்படும் நிலைமை இல்லாமல், 142 தீர்மானங்களும் நிராகரிக்கப்பட்ட நிலையில் தான் வருகிறது. இந்த 142 தீர்மானங்களிலும் கடுகளவாவது, எள் அளவாவது நியாயமே இருக்க முடியாது என்று கொள்ளுவதற்கில்லை. அத்தனையுமே ஏற்றுக்கொள்ளுவதற்குத் தகுதியற்றவை என்று கொள்ளுவதற்கில்லை. ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கூட ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அதற்காக நான் வருத்தப்படவில்லை. கொண்டு வந்த ஒத்திவைப்புத் தீர்மானங்களையெல்லாம் தலைவர் அவர்கள் தன்னுடைய அறையிலேயே தள்ளிவிட்டு, மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவராத நிலைமை ஏற்படாமல் இங்கே நல்ல மரபை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவையிலே கொண்டு வந்து ஒத்தி வைப்புத் தீர்மானம் அனுமதிக்கப்பட்டால் எந்தெந்தக் கருத்துக்களை எடுத்துச் சொல்லவேண்டுமோ அந்தக் கருத்துக்களையெல்லாம் எடுத்துச் சொல்ல, 5-10 நிமிடங்களில் எடுத்துச் சொல்ல வாய்ப்பையும், தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளவில்லை என்று கனம் முதல் அமைச்சர் அவர்கள் சொன்னாலும் கூட, விவாதத்திற்கு எடுத்துக்கொண்டால் என்ன பதில் கொடுக்க வேண்டுமோ அந்த பதில்களைக் கொடுக்கும் முறையில் தான் நடந்து வந்திருக்கிறது. அண்மையில் நடைபெற்ற சபாநாயகர்கள் மாநாட்டிலும், இந்தியப் பாராளுமன்றத்தில் சபாநாயகராக இருக்கிற திரு. ஹுகம் சிங் அவர்கள் தெளிவுபட எடுத்துக் கூறியிருக்கிறார்கள். எதிர்க் கட்சிகளின் நியாயமான கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளும் பண்பும், அவைகளுக்கு ஆதரவு தரும் நிலைமையும் எதிர் காலத்தில் ஏற்பட்டால் தான் சட்ட மன்றங்களிலும், பாராளுமன்றத்திலும் நல்ல சூழ்நிலை ஏற்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஜனநாயகமே 'கன்ஸெண்ட் ஆஃப் தி பீப்பிள்', 'கன்ஸெண்ட் ஆஃப் தி ஹவுஸ்'—நாட்டு மக்களின் ஒப்புதலும், மன்றத்தின் ஒப்புதலும் ஆகும், டெஸிஷன் ஆஃப் தி மெஜாரிடி'—பெரும்பான்மையினரின் முடிவு என்பது அல்ல. கன்ஸெண்ட் கொடுப்பது என்று சொல்லும்

9th November 1966] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

போது, ஒரே ஒருவர் கூட இருக்கலாம்; இரண்டு பேர்கள் கூட இருக்கலாம். இரண்டு பேர்கள் கூறுவதிலே நியாயம் இருக்கலாம். ஜனநாயக அடிப்படையில் இயங்கும்போது ஒரு பக்கத்தில் 150 பேர்கள் இருக்கலாம்; இன்னொரு பக்கத்தில் 2-3 பேர்கள் கூட இருக்கலாம். இரண்டு மூன்று பேர்கள் எடுத்துக் கூறுகிற கருத்தாக இருந்தாலும் நியாயத்திற்கு மதிப்பு அளிக்கும் மனப்பான்மை ஏற்பட்டு, எதிர்க்கட்சி சொல்லுகிற அத்தனையிலும் நியாயம் இருக்காது என்ற முடிவுக்கு வராமல் செயல்பட்டால் தான் நல்ல முறையில் ஜனநாயகம் வளர வசதிகளும் மற்ற நிலைமைகளும் ஏற்பட முடியும். அந்த முறையில் ஜன நாயகத்தை வளர்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அந்தப் படிப்பினையைக் கடைபிடிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

நமது முதல் அமைச்சர் அவர்கள் 20 ஆண்டுகள் அனுபவம் பெற்று நடத்தும் அளவுக்குத் திறமை பெற்றிருக்கிறார். என்னைப் போன்றவர்கள் சட்ட மன்றத்திற்குப் புதிதானவர்கள். ஐந்து ஆண்டுகள் பயிற்சி பெற்றவர்கள். வேறு பல பேர்களும் ஐந்தாண்டுகள் தான் பயிற்சி பெற்றவர்களாக இருக்கிறார்கள். எதிர்க் கட்சிகளுக்கு நூற்றுக் கணக்கான செய்திகள் வரக் கூடியவைகளை, அத்தனையையும் அறிந்து எடுத்துச் சொல்லும் வாய்ப்பு இல்லை. அமைச்சரவைக்கு எல்லாவற்றையும் அறிந்துகொள்ள அதிகாரிகள் இருக்கிறார்கள், மற்ற வழிகள் இருக்கின்றன. எதிர்க் கட்சிகளுக்கு எடுத்துச் சொல்லும் பொறுப்பு ஏற்பட்டாலும் அறிவதற்கு உள்ள வாய்ப்பும் வசதிகளும் மிக மிகக் குறைவாகத் தான் இருக்கின்றன. முழுவதையும் வேண்டிய அளவுக்கு அறிந்துகொள்ளும் வாய்ப்பு அமைச்சர்களுக்குத் தான் இருக்கிறது, அமைச்சரவைக்குத் தான் இருக்கிறது. அவர்கள் நிலைமைகளை எடுத்துச் சொல்லி விளக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். இந்த ஐந்தாண்டு காலத்தில் கிட்டத் தட்ட 6,107 கேள்விகள் பல்வேறு வகைகளில் கேட்கப்பட்டு பதிலளிக்கப்பட்டிருக்கின்றன. 5,390 உடுக்குறியிட்ட கேள்விகள், 661 உடுக்குறியிடாத கேள்விகள், 49 குறுகிய கால அறிவிப்புக் கேள்விகள், 7 தனி நபர் கேள்விகள் ஆக 6107 கேள்விகள் கேட்கப் பட்டிருக்கின்றன. இது இரு சாரருக்கும் பலன் அளிக்கும் ஒன்று—அமைச்சர் அவைக்கும் பலன் அளிக்கும் ஒன்று, எதிர்க்கட்சிகளுக்கும் பலன் அளிக்கும் ஒன்று. பொது மக்கள் தங்களுக்கு விளங்காதவைகளைத் தெரிந்துகொள்ள, ஏற்படுகிற சந்தேகங்களைப் போக்கிக்கொள்ள, நிலையானவைகளை உணர்ந்துகொள்ள இந்த நிலைமைகள் பெரிதும் பயன்படக் கூடிய ஒன்று. அமைச்சர் அவையும் அரசாங்கமும் அளிக்கும் பதில்கள் மக்களுக்கு பெரிதும் பயன்படக் கூடிய ஒன்று. எதிர்க் கட்சிக்காரர்கள் படித்துக் கொண்டு வந்து பேசவேண்டுமென்று முதல் அமைச்சர் அவர்கள் கூட எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதை நாங்கள் மறுக்கவில்லை. எங்களுக்கு உள்ள வசதி வாய்ப்புகளுக்கு ஏற்ப, அறிவுக்கு ஏற்ப படித்துக்கொண்டு, நிலைமைகளைத் தெரிந்துகொனடு பேச வேண்டும் என்று சொல்லுவது போலவே அமைச்சர்களும் முழு விவரங்களையும் கையில் வைத்துக்கொண்டு, எதிர்க் கட்சிகள் படித்துக் கொண்டு கேட்கவேண்டும் என்று சொல்லுவது போல அமைச்சர்கள் பதில் கொடுக்கும்போது அத்தனையையும் எடுத்துச் சொல்லும் வாய்ப்போடு வரும் நிலைமை நல்லது. தனிப்பட்ட,

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [9th November 1966

குறிப்பிட்ட எதையும் நான் குறிப்பிட விரும்பவில்லை. பரவலாக இருக்கிற சூழ்நிலையைத்தான், நிலைமையைத்தான் குறிப்பிடுகிறேன். அந்த முறையில் அமைச்சர்கள் விவரங்களைக் கொடுக்கும் நிலைமை ஏற்படுமானால்தான் ஜனநாயகம் மலர வாய்ப்பு ஏற்படும்.

ஜனநாயகத்தில் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்ற நிலைமை இருக்கிறது. கொள்கையை நிலைநாட்ட ஆளும் கட்சி முயற்சிக்கலாம். எதிர்க்கட்சி கருத்துக்களை எடுத்து வைக்கலாம். அரசியல் முறையில் போட்டி இருப்பது ஜனநாயக முறையாக இருக்கிறது. எதிர்க் கட்சிகளை ஆளும் கட்சி நடத்திச் செல்லும் முறையில் செய்யக் கூடிய காரியங்களைக் கலந்து செய்கிற சூழ்நிலை ஏற்படக் கூடும். உதாரணத்திற்கு, சில விஷயங்களில் அந்த நிலைமை இருக்கிறது; சில விஷயங்களில் இல்லை. கல்வியைப் பொறுத்த வரையில் ஒரு ஆலோசனைக்குழு இருக்கிறது. அதே போன்று கொள்முதல் பிரச்னை, பல்வேறு வரி விதிக்கும் பிரச்னைகளில் கலந்துகொள்ளும் வாய்ப்பு இருந்தால், சட்ட மன்றத்தில் சூடு தணிய, ஒளி ஏற்பட, கொள்கை அடிப்படையில் விவாதம் ஏற்பட வழிவகை ஏற்படக் கூடும்.

எதிர்க் கட்சித் தலைவனாக இருக்கின்ற காரணத்தினால் எதிர்காலத்தில் எப்படி இருக்க வேண்டுமென்று கடைசி நாளாக இருக்கிற காரணத்தினாலே இது வரையில் சொல்லாமல் இன்று சொல்லலாம் என்று இருக்கிறேன். அதையும் கட்சி அடிப்படையில் சொல்ல வரவில்லை. ஜனநாயக அடிப்படையிலும் அரசியல் நோக்கத்திலும் எடுத்துச் சொல்லுகிறேன். தனிப்பட்ட முறையிலும் கூட எடுத்துச் சொல்லவில்லை. இறுதிநாளாக, இறுதிக் கட்டமாக இருக்கிற காரணத்தினால் அரசியல் அடிப்படையில் இருக்க வேண்டுமென்று எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். எதிர்க்கட்சிகளுக்கு இருக்கிற வாய்ப்புகளும், வசதிகளும் குறைவு. எதிர்க் கட்சித் தலைவர் என்ற முறையில் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்திருக்கிற பொழுது, நடைபெற வேண்டிய காரியங்கள் அத்தனையும் செய்கிற பொழுது எனக்கு சாதாரணமாக உதவி செய்வதற்கு பணியாளர் கூட, ஒரு கிளார்க் கூட இல்லை. அதைப் பற்றி 2, 3 தடவைகள் கேட்டும் கிடைப்பதற்கு வழிவகை இல்லை. எதிர்காலத்திற்கு எடுத்துக்காட்டாக இருக்கவேண்டும் என்பதற்காகத் தான் சொல்கிறேன். இத்தனை காலமாக இந்தக் குறையை எடுத்துச் சொல்லவில்லை. இறுதி தினமாகிய இன்றைக்குத்தான் இதைப் பற்றி கூறவேண்டும் என்ற முறையில் தான் சொல்கிறேன். நிலைமை எப்படியிருக்கிறது என்றால், பொது மக்கள் கூறுகிற குறைபாடுகளை எடுத்துச் சொல்லி, விவரங்களை அறிந்து கொள்ளவேண்டுமென்றால், நானே இலாகாவிற்கு செல்லவேண்டியிருக்கிறது. எனக்கு உதவியாக அங்கே சென்று வேண்டிய கருத்தை அல்லது விவரத்தைத் திரட்ட ஒரு பணியாளரும் இல்லை. எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் சட்ட மன்றத்தில் கருத்துக்களை எடுத்துவைக்க சில விவரங்கள் திரட்டவேண்டுமென்று சொன்னால், கருத்து திரட்ட வேண்டுமென்று சொன்னால், எனக்கு உதவி செய்கின்ற அளவுக்கு ஒரு எழுத்தாளர், பணியாளர் இல்லாத ஒரு சூழ்நிலை தான் இருந்துகொண்டே இருக்கிறது. அந்த நிலை நல்ல நிலை இல்லை. எதிர்காலத்தில் அம்மாதிரி நிலை இருக்கக் கூடாது என்பதற்காகத் தான் நான் இதை இங்கே குறிப்பிடு

9th November 1966] *[திரு. இரா. நெடுஞ்செழியன்]*

கிறேன். இங்கிலாந்து போன்ற வேறு பலநாடுகளில் சென்று பார்க்கும்பொழுது தலைமை அமைச்சருக்கு அடுத்த இடம் எதிர்க்கட்சித் தலைவருக்குத் தான் கொடுக்கப்படுகிறது. மதிப்பும் வசதிகளும் வாய்ப்பும், இன்னும் பல உரிமைகளும், சலுகைளும் அவருக்கு அங்கே அளிக்கப்பட்டு வருகிறது. 'நெக்ஸ் டு தி பிரைம்மினிஸ்டர்' எதிர்க்கட்சித் தலைவர்தான். பிறகுதான் மற்ற அமைச்சர்கள் வருகிறார்கள். அந்த அளவுக்கு சம்பளத்தைக் கூட்டிக் கொடுக்க வேண்டும் என்று நான் வாதாட வரவில்லை. ஆனால் எதிர்க்கட்சித் தலைவருக்கு வேண்டிய மற்ற வசதிகளும், வாய்ப்புகளும், மரியாதையும் கொடுக்கப்பட வேண்டும். அப்பொழுது தான் காரியங்கள் செம்மையாக நடைபெறக்கூடிய வகையில் நிலைமைகள் அமையும். அமைச்சர்கள் இருக்கிறார்கள் என்றால், அவர்களுக்கு உதவியாக காரியங்களைச் செய்ய, விவரங்களைச் சேகரித்துக் கொடுக்க ஒரு பெரிய இலாகா இருக்கிறது. கருத்துக்களை திரட்டி, அவர்களுக்கு உதவியாக எடுத்துவைக்க அந்த இலாகாவினர் உதவி அளிக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவராக இருப்பவர், 8 அமைச்சர்களுக்கும் சேர்த்து இருக்கக்கூடிய பொறுப்பை ஏற்று, பிரச்னைகள் அத்தனையையும் ஆராய்ந்து பார்க்க வேண்டியிருக்கிறது. அதற்கு வேண்டிய விவரங்களை, கருத்துக்களை திரட்ட உதவி நிச்சயம் இருந்தால் தான், பணிகளை நல்ல முறையில் செய்ய வழிவகை ஏற்படும்; ஜனநாயகம் தழைத்தோங்க வழி ஏற்படும்.

நான் இன்னொன்றும் சொல்ல விரும்புகிறேன். தனிப்பட்ட முறையில் நான் இதை எடுத்துச்சொல்ல வரவில்லை. அமைச்சர்களிடமோ அல்லது முதல் அமைச்சர் அவர்களிடமோ இது வரையில் இதைப்பற்றி குறையாகக் கூட எடுத்துச்சொல்லவில்லை. நான் எதற்காகச் சொல்ல வருகிறேன் என்றால், எதிர்க்கட்சியினரும், ஆளும் கட்சியினரும் கூடி உறவாடுகிற சூழ்நிலை ஏற்பட்டால்தான் ஜனநாயகம் வளர்வதற்கு வழிவகை செய்வதாக அது அமையும். இந்த ஐந்தாண்டு காலத்தில் எந்த நிகழ்ச்சியிலும் அமைச்சர்களோடும், ஆளும் கட்சியினரோடும் சேர்ந்து எதிர்க்கட்சித் தலைவர் பங்கு கொண்டார் என்ற நிகழ்ச்சியே, அம்மாதிரி பங்கு கொள்கிற நிகழ்ச்சியே ஏற்படவில்லை. நான் வருத்தப்பட்டுச் சொல்கிறேன் என்று யாரும் கருதவேண்டாம். நான் பேசுவதற்கு ஏங்கியிருக்கிறேன் என்று யாரும் கருதாதீர்கள். நான் மக்களைச் சந்திப்பதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக்கொள்ள விரும்புகிறேன் என்று நினைக்க வேண்டாம். மக்களைச் சந்திப்பதற்கு எனக்கு வாய்ப்பு இல்லை, மக்களிடையே பேசுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன் என்று யாரும் கருத மாட்டீர்கள் என்று நினைக்கிறேன். இந்த ஐந்தாண்டு காலத்தில் அரசாங்க நிகழ்ச்சிகளில் அமைச்சர்களோடு சேர்ந்து பங்கு ஏற்று கலந்துகொண்ட நிகழ்ச்சியே கிடையாது; ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் அத்தகைய நிகழ்ச்சிகளில் ஒன்று சேர்ந்து கலந்து கொள்ள வழியே ஏற்பட வில்லை. கல்லூரி திறப்பதிலும், பாலம் திறப்பதிலும் ஆளும் கட்சிக்கும் எதிர்க்கட்சிக்கும் மாறுபாடு இருக்க வழியே இல்லை. இந்த நன்மைகளுக்குப் பொறுப்பாக இருப்பது எல்லோரும் என்பதை எடுத்துக்காட்ட இந்த நிகழ்ச்சிகளில் எதிர்க்கட்சியனரும் கலந்துகொள்ள வழிவகைகள் ஏற்பட வேண்டும். இந்த ஐந்தாண்டு காலத்தில் தனியார் நிகழ்ச்சிகளில்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [9th November 1966

முதல் அமைச்சர் அவர்களோடு நான் கலந்துகொண்ட நிகழ்ச்சிகள் இரண்டு மூன்று தான் இருக்கும். நாங்கள் அப்படி இரண்டு, மூன்று நிகழ்ச்சிகளில் தான் சேர்ந்து கலந்துகொண்டிருப்போம். கனம் அமைச்சர் திரு. வெங்கட்டராமன் அவர்களோடு இரண்டு நிகழ்ச்சிகளில் தான் சேர்ந்து கலந்துகொண்டிருக்கிறேன். கனம் திரு. மஜீத்தும் நானும் ஒரு நிகழ்ச்சியில் சேர்ந்து கலந்து கொண்டிருப்போம். அதுவும் கோச் ஃபாக்டரி நிகழ்ச்சி, பொங்கல் விழாவில். கனம் அமைச்சர் திரு ராமையா. கனம் அமைச்சர் திரு. கக்கன், கனம் அமைச்சர் திருமதி ஜோதி வெங்கடாசலம், கனம் அமைச்சர் திரு. பூவராகன் இவர்களோடு சேர்ந்து நான் கலந்துகொண்ட ஒரு நிகழ்ச்சி கூட இல்லை. பேசுவதற்கு வாய்ப்பு ஏற்படவேண்டும், அதற்காக நான் ஏங்குகிறேன் என்று யாரும் கருதாதீர்கள். எதற்காக நான் இதைச் சொல்ல வருகிறேன் என்றால், இருக்கிற நிலைமையைத் தான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இப்படிப்பட்ட நிலைமை இருப்பது நல்ல ஜனநாயகத்திற்கு எடுத்துக்காட்டாக இருக்காது.

நடைபெறுகிற நிகழ்ச்சிகளுக்கு எதிர்க்கட்சியினரை வரவழைக்கக்கூடாது என்று அமைச்சர்கள் சொல்லுகிறார்கள் என்று கூட நான் கூறுவதற்கு இல்லை. ஆனால், அதிகாரிகளுக்கே அப்படி ஒரு எண்ணம் ஏற்பட்டிருக்கிறது. அமைச்சர்களை மட்டும் தான் வரவழைக்கவேண்டும், ஆளும் கட்சியினரை மட்டும்தான் வரவழைக்கவேண்டும், எதிர்க்கட்சியினரை வரவழைத்தால், வேலைக்கு ஆபத்து வந்துவிடும், உயர்வுக்கு ஆபத்து வந்துவிடும், வேறுபல சலுகைகள், உரிமைகள் போய்விடும் என்று திட்டவட்டமாக அவர்கள் இதை முறையாகக் கொண்டு, எதிர்க்கட்சியினரை அங்கே வரவழைப்பதில்லை. அப்படி ஒன்றிரண்டு பேர் தாங்களாகவே வரவழைக்கலாம் என்று நினைத்தாலும், பின்னால் அதனால் ஏதாவது பாதகம் வந்துவிடுமோ என்று எண்ணக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. வெடரினரி காலேஜில் என்னை ஒரு விழாவுக்குக் கூப்பிட்டார்கள். ஒத்துக் கொண்டேன். பிறகு மறுத்துவிட்டார்கள். என்னவென்று கேட்டால், ஏதாவது அரசாங்கத்திலிருந்து கடுமையான நிலைமைகள் வந்துவிடும் என்று நினைத்து, அந்த விழாவை ஒத்திவைத்துவிட்டதாகச் சொல்லிவிட்டார்கள். சாதாரணமாக, இதை நான் யாரிடமும் இதுவரையில் சொல்லவில்லை. கனம் அமைச்சர் அவர்களிடமும் இதை ஒரு பெரியதாகக் கருதி சொல்லவரவில்லை. அப்படிப்பட்ட நிலைமைகள் அதிகாரிகளிடையே ஏற்பட்டிருக்கக்கூடிய சூழ் நிலை இருக்குமானால், அது ஜனநாயக வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டாக இருக்காது. உதாரணத்திற்காகத் தான் நான் இதைப்பற்றிச் சொன்னேன். பொது நிகழ்ச்சிகளில் எல்லோரும் கலந்துகொள்கிற வாய்ப்பு ஏற்பட்டால் தான் சுமுகமான உறவு ஏற்படும், பொதுவான எல்லா நன்மைகளையும் எல்லோரும் சேர்ந்து ஆதரிக்க வாய்ப்பு ஏற்படும். இத்தகைய குறைபாடுகள் நீக்கப்படவேண்டும் என்பதற்காகத்தான் நான் இதை இங்கே கூறுகிறேன்.

மேலும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்படுகிற மதிப்பும், மரியாதையும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இல்லை என்பதை இந்த மன்றத்தில் தெளிவாக எடுத்துச் சொல்ல விரும்பு

9th November 1966] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

கிறேன். மத்திய அரசாங்கத்து அதிகாரிகளும், அலுவலர்களும், மற்றவர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுக்கிற மதிப்பு, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இங்கே கொடுப்பதில்லை. அவர்கள் நியாயமாக எடுத்துச்சொல்வதை மதிப்போடு கேட்டுக் கொள்ளக்கூடிய தன்மையையும், அவர்கள் எழுதுவதை அமைச்சர்களும், அதிகாரிகளும், மற்றவர்களும், உடனுக்குடன் கவனிக்கின்ற தன்மையையும் பார்க்கிறோம். அத்தகைய நிலைமையும், தன்மையும் சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தவரையில் ஏற்படவில்லை. நான் இரு சாரார்களுக்கும் சேர்த்துத்தான் சொல்கிறேன். கனம் முதல் அமைச்சர் அவர்கள், மன்ற உறுப்பினர்கள்' சொல்வது அத்தனையையும் அதிகாரிகள் கேட்கவேண்டுமா என்று கூடச் சொல்லலாம். மன்ற உறுப்பினர்கள் சொல்வது அத்தனையும் நியாயமாகத்தான் இருக்க முடியும் என்று நான் சொல்ல வரவில்லை. ஆனால், மன்ற உறுப்பினர்கள் சொல்வதை, கேட்பதை, நியாயமான முறையில், மதிப்பும், மரியாதையும் கொடுத்து அதிகாரிகள் கேட்டுக்கொள்ளக்கூடிய சூழ்நிலை ஏற்படவேண்டும். அதுதான் மிக மிக நல்லது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

சில பேர்கள் நினைக்கிறார்கள், சட்டமன்ற உறுப்பினராக இருப்பதைவிட ஊராட்சி ஒன்றிப்புமன்றத் தலைவராக இருக்கலாம் என்று கூட நினைக்கிறார்கள். ஊராட்சி ஒன்றிப்பு மன்றத் தலைவராக இருப்பவருக்கு அதற்குரிய ஆதிக்கம், அதிகாரம், ஜீப் கார், இரண்டு கிளார்க்குகள், ஒரு பியூன் இப்படியெல்லாம் ஜபர்தஸ்து இருக்கிறது. ஊராட்சித் தலைவர்களுக்கு, ஊராட்சி ஒன்றிப்பு மன்றத்தலைவர்களுக்கு இருக்கக்கூடிய மதிப்பும் மரியாதையும் கூட சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஏற்படாத சூழ்நிலை நிலவக்கூடிய நிலைமை இருக்கிறது. இந்த அமைச்சர் அவை இந்த மன்ற உறுப்பினர்களுக்கு எவ்வளவு மதிப்புக் கொடுக்கிறார்களோ, எத்தகைய நிலைமைகளை உருவாக்கிக் கொடுக்கின்றார்களோ, அதைப் பொறுத்துத்தான் ஜனநாயகம் தழைக்கவும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பொது மக்களிடையே மதிப்பு வளரவும், அவர்களுடைய செயல்களை நிறைவேற்றுவதற்கு வாய்ப்பு வசதிகள் ஏற்படவும் செய்யும்.

இந்தச் சபையிலே ஆளும் கட்சியினரும், எதிர்க்கட்சியினரும் இந்தப் பக்கத்திலும் அந்தப் பக்கத்திலுமாக அமைந்திருக்கிறோம். ஐந்து நிமிடம், பத்து நிமிடம் சேர்ந்து உட்கார்ந்து ஒருவருக்கொருவர் ஒருமுகமாக உறவாடிப் பழகுவதற்கு வாய்ப்பு ஏற்படாமல் இருக்கிறது. அப்படி நெருங்கிப் பழகுவதற்கு சந்தர்ப்பங்கள் ஏற்பட்டால் ஒருவருக்கொருவர் இருக்கிற மாச்சரியங்கள், தனிப்பட்ட முறையில் இருக்கிற தாக்குதல்கள் இவையெல்லாம் கூட நடைமுறையில் சட்டசபையில் குறைவதற்கு வழிவகைகள் ஏற்பட முடியும். நமது மன்றத்தில் உட்கார்ந்துகொள்கிற முறையில் இந்தப் பக்கத்தில் இருப்பவர்களை அந்தப் பக்கத்தில் இருப்பவர்கள் சந்திக்கவே முடியாது. ஒருவரோடு ஒருவர் ஐந்து நிமிடம், 10 நிமிடம் சேர்ந்து உட்கார்ந்து நட்புறவோடு கலந்து பேசுவதற்கு வழி ஏற்படக்கூடிய தன்மையில் லாபி அமைய இல்லை, சூழ்நிலை ஏற்படவில்லை. பாராளுமன்றத்தில் சென்டிரல் ஹாலில் லோக்சபா உறுப்பினர்களும், ராஜ்ய சபா

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [9th November 1966

உறுப்பினர்களும் கூட கலந்து கூடிப் பேசுவதற்கு வாய்ப்பும், வசதியும் இருக்கிறது. இன்னும் அங்கே அமைச்சர்கள் கூட லாபியில் வந்து உட்கார்ந்து எல்லோருடன் கூட நட்புறவோடு பேசுவதற்கான சூழ்நிலை இருக்கிறது. இங்கே கூட பல பிரச்னை களைப் பற்றி பேசவேண்டுமென்றால் அமைச்சர் அவர்களுடைய அறைக்குச் சென்றுதான் பேச வேண்டியிருக்கிறது. அப்படி நாம் அங்கே செல்லும்போது, கியூ வரிசையில் நிற்பவர்களுக்கு முன்னால் முண்டி அடித்துக்கொண்டு போகவேண்டி இருக்க, கியூவில் இருப்பவர்கள் வேதனைப்பட, முணுமுணுக்க, நமக்கு அமைச்சர்களை சந்திக்க வாய்ப்பு இல்லாமல் போய்விட்டதே, அவர்கள் முன்னால் போய்விட்டார்களே என்று கருத, அத்தகைய நிலைமைகளெல்லாம் ஏற்படுகிறது. ஆகவே, அந்த நிலைமை ஏற்படாமல் இருக்கவேண்டுமென்றால் அமைச்சர்கள் கூட லாபியில் வந்து உட்கார்ந்து மற்ற உறுப்பினர்களுடன் கலந்து பேசக்கூடிய ஒரு சூழ்நிலையை, கருத்துக்களை பரிமாறிக்கொள்ளக்கூடிய வாய்ப் புகளையும், வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். லாபியில் ஒருவருடன் ஒருவர் கலந்து உறவாட வாய்ப்பும், வசதிகளும் ஏற்பட்டால், தனிப்பட்ட முறையில் தாக்குதல்கள் நடைமுறையில் குறைவதற்கான வழிவகைகள் ஏற்படும், கருத்துக்களை மட்டும் எடுத்துச் சொல்லக்கூடிய சூழ்நிலை ஏற்படும்.

நூல்நிலையம் பற்றிச் சொன்னார்கள். அதை இன்னும் விரிவாக்க வேண்டும்.

கனம் சபாநாயகர்: இன்னும் ஒருவரும் சாப்பிடவில்லை. 45 நிமிடங்கள்தான் நாம் இதற்காக ஒதுக்கியிருந்தோம்.

திரு. இரா. நெடுஞ்செழியன்: இன்று இறுதி நாளாக இருப் பதினால்தான் கொஞ்சம் அவகாசம் எடுத்துக்கொள்கிறோம்.

கனம் சபாநாயகர்: இது முன்பே தெரிந்தால் காலையிலேயே இதை ஆரம்பித்திருக்கலாம்.

திரு. இரா. நெடுஞ்செழியன்: கனம் சபாநாயகர் அவர்கள் நேரமாகிவிட்டது என்று சொல்வதினால், மேலும் சொல்ல வேண்டும் என்றிருந்த கருத்துக்களைச் சொல்லாமல் இத்துடன் விடுகிறேன். இந்தக் கருத்துக்களை எல்லாம் உள்ளபடியே சிந்தித்துப் பார்க்கவேண்டும், எதிர்காலத்தில் நல்லதொரு சூழ் நிலை நிலவவேண்டும் என்ற வகையில்தான் நான் அவற்றை எடுத்துச்சொன்னேன்.

நண்பர்கள் பலர் கூறியதுபோல் நானும் தங்களுக்கு நன்றி செலுத்த, தங்களைப் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன். தாங்கள் இந்த மன்றத்தை மிக அழகாகவும், அமைதியாகவும், கள்ளங்கபட மற்ற முறையிலும், வஞ்சகம் இல்லாத முறையிலும், தெளிவாக தங்கள் உள்ளத்தில் தோன்றிய எண்ணத்துடனும், உள்ளப் பண்பாட்டுடனும் நடத்திச் சென்றீர்கள். உறுப்பினர்கள் பலரும் எடுத்துத் தெரிவித்ததுபோல், தாங்கள் தீர்ப்புகள் பல எங்கள் கருத்துக்கு ஒப்புதல் ஆகாமல் இருக்கலாம். இருந்தாலும் தாங்கள் தங்கள் உள்ளத்தில் பட்டதை தெளிவு பட எடுத்துச் சொன்னீர்கள்.

9th November 1966] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

சிலபல நேரங்களில் நடுநிலையில் இருக்க முயன்றும் இருக்கிறீர்கள். இந்த மன்றத்தை அமைதியாகவும், அழகாகவும், புன்முறுவலோடும், மிகத்திறமையாகவும் நடத்திச் சென்றமைக்கு நான் தங்களுக்கு நன்றி செலுத்த கடமைப்பட்டிருக்கிறேன், தங்களைப் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று துணை அவைத் தலைவரும் மிக அமைதியான தன்மையில், நெருங்கிப் பழகுகிற தோரணையில், ஆத்திரத்திற்கு இடம் அளிக்காத வகையில், இந்தச் சட்டமன்றத்தை தாங்கள் விட்டுச் சென்ற நேரங்களில், நடத்திக் கொண்டு வந்ததற்காக அவர்களுக்கும் நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கனம் முதல் அமைச்சர் அவர்களைப் பற்றி மற்ற உறுப்பினர்கள் எடுத்துக் கூறினர்கள். நான் முதலிலே குறிப்பிட்டது போல, கொள்கை வேறுபாடு வேறு, மனிதனுக்கு மனிதன் பழகுவது என்பதின் தன்மைகள் வேறு. அவர்கள் அந்த வகையில் இன் முகத்தோடு பழகி, தன்னுடைய பொறுப்பு, கடமைகளை ஆற்றி வருகிறவர்கள். அவர்கள் 70 வயது நிறைந்த இளைஞர், இளமை உள்ளம் படைத்தவர்கள். இளமை வேறு, இளமை உள்ளம் வேறு. முதியோர் இளமை உள்ளம் படைத்திருக்கலாம், இளைஞர் முதுமையான உள்ளம் உள்ளவராகவும் இருக்கலாம். எனக்குக் கூட ஒரு பெருங்குறை. மன்றத்திற்கு வரும் இளைஞர்கள் சரியாக வராமல், வந்தாலும் கையெழுத்திட்டு விட்டுச் சென்றுவிடுகிறார்கள். அது முறையல்ல. ஆனல் முதல் அமைச்சர் வயது 70 ஆகிய நிலையிலும் கூட இளமை உள்ளத்தோடு, பொறுமையோடு, 20 ஆண்டு அனுபவத்தையும், மற்றவைகளையும் வைத்து ஆற்றும் பணி பாராட்டத்தக்கது என்பதை உறுப்பினர்கள் தெளிவுபட எடுத்துச் சொன்னர்கள். நண்பர் கலியாணசுந்தரம் எடுத்துச் சொன்னது போல உண்டு, இல்லை என்று விரைவாக, தெளிவாக எடுத்துச் சொல்லும் தன்மையிலிருந்து பல பேர்கள் அவர்களுடைய பேச்சிலிருந்து ஒன்று இப்பொழுது நடக்கும் அல்லது நடக்காது என்று கூறிவிடுவார்கள். அந்த வகையிலும் அவர்களைப் பாராட்டவும், போற்றவும் கடமைப்பட்டிருக்கிறோம். அது மட்டுமல்ல. நண்பர்கள் பலர் எடுத்துக் காட்டியது போல, அவர்கள் மிக அக்கறையுடன் கல்வி நிலையங்களை நிறுவுவதிலும், அவைகளுடைய வளர்ச்சியைப் பெருக்குவதிலும், கல்லூரிகளை நிறுவுவதிலும், உயர்நிலைப்பள்ளிகள், பெண்கள் பள்ளிகள் இவைகளையும், கல்வி நிலையை உயர்த்துவதிலும் மிக மிக அக்கறையோடு பணியாற்றி, தானே கல்வி அமைச்சராகவும், நிதி அமைச்சராகவும் இருக்கின்ற காரணத்தினுல் எதையும் தேவையான அளவுக்கு, துணிவோடு செய்யவும், தொகைகளை ஒதுக்கவும், அந்த வகையில் கல்வியின் வளர்ச்சியில் ஈடுபட்டிருப்பது மகிழ்ச்சிக்கு உரிய ஒன்ருகும். அவர்களுடைய 20 ஆண்டு அனுபவத்திலே சட்டமன்றத்திலே எதையும் பற்றி வாக்குறுதி தந்ததேயில்லை. வாக்குறுதி கொடுப்பதிலிருந்து நழுவிச் செல்லும் அளவிற்கு பேசிச் சமாளித்துவிடுவார்கள். சில நண்பர்கள் கூறியதுபோல, தன்னுடைய பதிலில் கேலி, கிண்டல், குத்தல் இவற்றைப் புகுத்தி பிரச்சினையை சமாளித்து விட்டுச் செல்லும் வாதாடும் திறமை படைத்தவர்கள்.

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [9th November 1966

நிர்வாகத்தை நடத்துகிறவர்களுக்கு அத்தகைய தன்மைகள் வேண்டும் என்று சொல்லுவார்கள். அந்த வகையில் இந்த சபையை நடத்திச் சென்றதற்காக அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

மற்ற அமைச்சர்களைப்பற்றிச் சொல்லும்போது, கனம் தொழில் அமைச்சரைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் டெல்லிக்குப் போகப் போகிறார்கள் என்கிற வதந்தி பற்றி. எப்படியிருந்தாலும், ஒவ்வொரு மாநிலமும் தனக்கு என்று ஒரு ஆள் டெல்லியில் இருந்தால்தான் தன் காரியம் நடக்கும் என்று இந்திய அரசின் நிலை ஏற்பட்டுவிட்டது. ஆகவே, அங்கே ஒரு ஆள் போகவேண்டும் என்கிற நிலையில், அவர்கள் அங்கே போவது இந்த மாநிலத்திற்கு நன்மைகள் தரும் அளவிற்கு அமைதல் வேண்டும். அவர்களை நீண்ட நாளாக எனக்குத் தெரியும். இரண்டு தலைமுறையாக அவருக்கும் எனக்கும் பழக்கம் உண்டு. அவர்களுடைய ஊரும் பட்டுக்கோட்டை, என்னுடைய ஊரும் பட்டுக்கோட்டைதான். அவருடைய தந்தை சிறந்த வழக்கறிஞர், என் தந்தை முன்சிப் கோர்ட்டில் தலைமை குமாஸ்தா. அந்த வகையில் இரண்டு தலைமுறையாக தொழில் அமைச்சருக்கும் எனக்கும் சம்பந்தம் உண்டு. அவர்கள் இனிய முகத்தோடு, என்னென்ன வாதப் பிரதி வாதங்கள் இருந்தாலும், புன்சிரிப்போடு பிரச்சினைகளை ஆராய்ந்து, கோரிக்கைகளுக்கு பதிலை அளிப்பதில் திறம்பட விளங்குகிறவர்கள்.

அமைச்சர் கக்கன் அவர்களும் மிகக் கடுமையாக உழைப்பவர். நண்பர் கருணாநிதி குறிப்பிட்டது போல, அவர் கொள்கை பற்று எவ்வளவு பற்று இருந்தால் கொள்கை நிறைவேறும் என்பதற்கு எடுத்துக்காட்டாக இருந்து தன் பணிகளை ஆற்றி வருகிறார்கள். நேரிடையாக நியாயத்தை அறிந்து அன்போடு நடந்துகொள்ளும் தன்மை படைத்தவர்கள். அந்த வகையில் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவிக்கிறேன்.

கனம் உணவு அமைச்சரைப் பற்றிக் கூறவேண்டிய அவசியமில்லை என்று நினைக்கிறேன். நாங்கள் இருவரும் ஒரே வகுப்பில் படித்த மாணவர்கள், கிளாஸ்-மேட் என்று சொல்லும் அளவிற்கு மாணவர்களாக இருந்தவர்கள். அப்பொழுது நான் இங்கே இருப்பேன், அவர்கள் அங்கே இருப்பார்கள் என்று அவருக்கும் தெரியாது, எனக்கும் தெரியாது. அந்த அளவிற்குப் பழக்கமானவர்கள். அவர்கள் மிக்க அழுத்தமானவர். சொற்கள் மூலம் கூட விரைவில் எதையும் வெளியிட மாட்டார்கள். ஆனால் தன் உணர்ச்சியை முகத்தில் கூட மாற்றத்தால் காட்டாத அளவிற்கு அழுத்தத்தோடு பணியாற்றி வருகிறவர்கள். அவர்களுக்கும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

கனம் சுகாதார அமைச்சர் திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்கள் அனைவராலும், 'பண்போடு கூடியவர்கள், இரக்க உள்ளத்தோடு கூடியவர்கள்' என்று புகழப்படுபவர்கள். அவர்களுக்கும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

9th November 1966] *[திரு. இரா. நெடுஞ்செழியன்]*

கனம் கூட்டுறவு அமைச்சரை நான் 20 ஆண்டுகாலமாக அறிவேன். அந்தப் பக்கத்தில் இருந்தபோதும் இந்தப் பககத்தில் இருக்கும்போதும் அறிவேன். எல்லோருடைய உள்ளமும் தெரிந்து வெள்ளை உள்ளத்தோடு காரியங்களைச் செய்து, பண்போடு பழகும் அமைச்சர். அந்த முறையில் அவர்களுக்கும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கனம் அமைச்சர் பூவராகன், கனம் அமைச்சர் மஜீத் இவர்களோடு அதிகப் பழக்கம் ஏற்படக் கூடிய நிலைமைகள் உருவாக வில்லை. இருந்து அவர்கள் அன்போடு, நியாயமான அக்கறை காட்டிவந்திருக்கிறார்கள் என்பதைக் கண்டிருக்கிறேன். பொதுவாக பணிகள் ஆற்றுவதில் திறமை காட்டி வந்திருக்கிறார்கள். அவர்களையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கூடுமான வரையில் எதிர்க் கட்சிகள் நியாயமான முறையில், நல்ல ஜனநாயகப் பண்போடு, பல்வேறு கருத்துடைய பல்வேறு எதிர்க்கட்சிகள் இருந்தபோதிலும், தீவிரமான வேறுபாடுகள் இருந்தாலும், இந்த ஐந்தாண்டுக் காலமாக நியாயமான கோரிக்கைகளை மன்றத்தின் முன் எடுத்து வைக்க, சட்டதிட்டங்களை நடத்துவதில் ஒத்துழைப்பு தந்திருக்கிறார்கள். அந்த வகையில் எதிர்க் கட்சிகளின் அத்தனை தலைவர்களுக்கும், எதிர்க் கட்சித் தலைவன் என்ற வகையிலும் திராவிட முன்னேற்றக் கட்சியின் தலைவன் என்ற முறையிலும் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அமைச்சரவைக்குள்ளேயே இரண்டு கோஷ்டிகள், போராட்டங்கள், வேறு பல நிலைகள் என்றெல்லாம் இல்லாமல், அந்த வகையில் குழப்பம் இல்லாமல் இருந்து வந்திருக்கிற இந்த மாநிலத்தின் தன்மையைக் காப்பாற்றும் அளவில் அமைந்திருப்பதும் மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும்.

நண்பர்கள், உறுப்பினர்கள், அத்தனைபேரும் தனிப்பட்ட முறையில் யாருக்கும் குற்றம் இழைக்காமல், அன்போடு நெருங்கிப் பழகும் மனப்பான்மையில் இருக்கிறார்கள் என்பதனை மதிப்பீட்டுக் குழு, பொதுக்கணக்குக் குழு இவற்றில் பல உறுப்பினர்களோடு நெருங்கிப் பழகும் வாய்ப்பும் வசதியும் எனக்கு ஏற்பட்டிருந்ததால் உணர முடிந்திருக்கிறது. எந்த நேரத்திலும் அவர்கள் ஒத்துழைப்புத் தந்து, ஒரு மாச்சரியம் வராமல், ஒரு கட்டத்திலும் கருத்து வேறுபாடு வராமல், இந்த ஐந்தாண்டு ஓடியிருக்கிறது. அந்த அளவுக்குப் பண்போடு கமிட்டிகள் நடந்து வந்திருக்கின்றன. அத்தகைய பண்பாடுகள் மேலும் மேலும் வளர்ந்து, செயல்கள் திறம்பட நடைபெறுவதற்கு காரணமாக இருக்கின்றது சட்ட மன்ற அலுவலகம். அதன் செயலாளர் ஊக்கத்தோடும், ஆக்கத்தோடும் பணியாற்றி வருகிறார்கள். அவருக்கு உறு துணையாக துணைச் செயலாளரும், இன்னும் உதவிச் செயலாளர்களும், இலாகாவினர் அத்தனைபேரும், பண்போடு, பண்பு உள்ளத்தோடு, உறுப்பினர்கள் நெருங்கிய நேரங்களில் அவர்களுக்குத் தேவையானவற்றை அறிந்து அத்தகைய முறையில் உதவிகள் செய்து திறம்பட பணிசெய்து வருகிறார்கள். அவர்கள் அத்தனைபேர்

களையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நல்ல உள்ளங்கள் வாழவேண்டும், நல்ல மரபுகள் வளரவேண்டும், அரசியல் கண்ணியம் உயரவேண்டும், நாகரிகம், பண்பாடு காப்பாற்றப்பட வேண்டும் என்பதில் கருத்து வேறுபாடு இன்றி, இந்த மாநிலத்திற்குரிய பெருமையையும், தமிழுக்குரிய சிறப்பையும், தமிழகத்திற்குரிய மாண்ட புகழையும் காப்பாற்றும் பணியில் ஈடுபடுவோமாக என்று கூறி, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நன்றி செலுத்தி,

"செவிக்குணவு இல்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப்படும்

என்ற திருவள்ளுவர் குறளுக்கேற்ப வயிற்றின் பசியையும் பாராமல் இந்த மன்றத்தை நீட்டிச் செல்வதற்கு அனுமதி தந்த தங்களுக்கும், எல்லோரும் பொறுமையோடு கேட்டுக் கொண்டிருந்ததற்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு என் உரையை முடிக்கிறேன், வணக்கம்.

2-30 p.m. * **கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் சபாநாயகர் அவர்களே, இன்று இந்த சட்டமன்றக் கூட்டத்தின் இறுதி நாள். ஒருவருக்கொருவர் சுமுகமான முறையில் பேசி விடைபெற்றுக்கொள்ள வேண்டிய இந்த நல்ல நாளில் நாம் உண்ணாவிரதம் மேற்கொள்ள வேண்டியதில்லை; மேற்கொள்ளுவதும் நல்லதல்ல. (**திரு. கே. ஏ. மதியழகன்:** *4-00 மணிக்கு டீ பார்ட்டி இருக்கிறது*) இருந்தாலும் கூட, இந்த நல்ல நாளில் உண்ணாவிரதம் இருப்பது நல்லதல்ல. உண்ணாவிரதம் வேறு எதற்காகவாவது இருக்கலாம். ஆனால், இன்று இருக்கக் கூடாது. ஆகையால், சில வார்த்தைகள் மட்டும் கூறி நான் என்னுடைய உரையை முடித்துவிடலாம் என்று நினைக்கிறேன்.

உலகத்திலேயே பெரியதொரு ஜனநாயகத்தை நாம் அமைத்து நடத்திக் கொண்டு வருகின்றோம். ஆனால், நாம் விரும்புவது, நாம் அனுசரிப்பது ஜனநாயகம் மட்டுமல்ல; பொறுப்பாட்சியையும் நடத்துகிறோம். ஜனநாயக நாடுகளில் பொறுப்பாட்சி இல்லாத நாடுகளும் உண்டு. நாம் இங்கே பொறுப்பாட்சி நடத்திகிறோம் என்றால், எதிர்க் கட்சியினுடைய முக்கியத்துவத்தை நாம் நன்றாக உணர்ந்திருக்கிறோம். ஜனநாயக அமைப்பில் எதிர்க் கட்சி இல்லாமல் பொறுப்பாட்சி நடத்த முடியாது. எதிர்க் கட்சி அவசியம் என்னும்போது, எதிர்க் கட்சி சீராக விளங்கவேண்டும் என்பதை நாம் உணர்கிறோம். எங்கள் கட்சியைப் பொறுத்த வரையில், அதில் மிகுந்த நம்பிக்கை கொண்டிருக்கிறது. இன்று இந்த ஐந்தாண்டுகளில் எதிர்க் கட்சி உறுப்பினர்கள் இங்கே நடந்துகொண்டிருக்கும் முறையைக் குறித்து நான் அவர்களைப் பாராட்ட வேண்டியவனாக இருக்கிறேன்.

எத்தனையோ குறைபாடுகள் இருந்தாலும், ஜனநாயகம் நல்ல முறையில் தமிழ்நாட்டில் நடைபெறுகிறது என்று பலரும் பாராட்டக்கூடிய அளவுக்கு, தமிழ்நாட்டிலுள்ள இந்த சட்டமன்றம்

9th November 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

சீராக என் டைபெற்றது என்று மற்றவர்கள் மெச்சத்தக்க அளவுக்குமிக நாம் இங்கே நல்லமுறையில் நடந்துகொண்டு வந்திருக் கிறோம். ஆனால், வேறு பல இடங்களில் பார்க்கிறோம், நாட்டுக்கு அப்ப லும் பார்க்கிறோம், நாட்டுக்குள்ளேயும் பார்க்கிறோம், வேறு பல ஸ்தலங்களில் பலவிதமான கோளாறுகள், பலவிதமான சம்ப வங்கள், சிரிக்கத்தக்க சம்பவங்கள், வெறுக்கத்தக்க சம்பவங்க ளெல்லாம் நடைபெற்றன.

எதிர்க் கட்சி என்றால் காரசாரமாகத்தான் பேசவேண்டும். காரசாரமாகப் பேசுவதை நான் வரவேற்கிறேன். 'அப்போ ஸிஷன்' இருப்பது நல்லது. ஆனால், 'டேம் அப்போஸிஷன்' இருந் தால், அது கூட அவ்வளவு நல்லதல்ல. 'டேம் அப்போஸிஷன்' இருந்தால் பயன் இல்லை. அரசாங்கத்தை நடத்துகிறவர்களுக்கு மக்களுடைய ஆதரவு இருக்கிறது, மக்களுடைய நம்பிக்கை இருக் கிறது என்றாலும், குற்றங்குறைகளை எடுத்துச் சொல்லுவதற்கு எதிர்க் கட்சி வேண்டும்.

நான் கந்து ஆண்டுகளுக்கு முன்பு ரஷ்யா சென்றிருந்தபோது, அங்குள்ள ஒரு மாநிலப் பார்லிமென்ட் சபைக்கு என்னை அழைத்துச் சென்றிருந்தார்கள். அங்கே போய்ப் பார்த்தபோது, அந்தச் சபையிலுள்ள 500 அங்கத்தினர்களும் பெரும்பாலும் இளைஞர்கள். கூட்டம் ஆரம்பித்ததும் கதவையெல்லாம் அவர்கள் சாத்திவிட்டார்கள். இங்கே நாம் ஓட்டெடுப்பதற்காக கதவைச் சாத்துகிறோமே அம்மாதிரி அவர்கள் அங்கே கதவைச் சாத்தி விட்டார்கள். கூட்டம் முடிகிற வரைக்கும் யாரும் வெளியே போகக் கூடாது என்பதற்காக அவ்வாறு செய்வதாக அங்குள்ள வர்கள் அதற்குக் காரணம் சொன்னார்கள். அவ்வளவு கண்டிப்பு இருக்கிறது அங்கே. இங்கே நிலைமை வேறு. சில சமயங்களில் 'கோரம்' கூட இல்லாமல் போகிறது. அவரவர்கள் இஷ்டம் என்று நாம் இங்கே இருந்துவிடுகிறோம். இதுவும் சிந்திப்பதற்குரிய விஷயம்.

எதிர்க் கட்சியினர் விழிப்போடுதான் இருக்க வேண்டும். குற்றங்குறைகள் இருந்தால், தவறுகள் இருந்தால், அவைகளை எடுத்துச்சொல்லத்தான் வேண்டும். குற்றங்குறைகள் என்று சொல்லும்போது, சில சமயங்களில் அபாண்டமாகச் சொல்வ தானாலும் சொல்லட்டும். நமக்கும் திருப்பிச் சொல்ல வாய்ப்பு அளிக்கிறது என்ற வகையிலே நாம் கவனம் செலுத்திக்கொண்டு வருகிறோம். வேறு பல இடங்களிலே நடைபெறுகிற சம்பவங்களை யெல்லாம் பார்க்கும்போது, நம்மையே நாம் பாராட்டிக் கொள்ள வேண்டிய அளவுக்கு நாம் மற்றவர்களுக்கெல்லாம் எடுத்துக்காட் டாகத்தான் இருக்கிறோம்.

கனம் எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள், இந்தப் பாராட்டுப் பேச்சிலே கூட பழைய கதையையெல்லாம் எடுத்துக் கொண்டு, அவருடைய பாணியில் அவர் எப்போதும் வழக்க மாகப் பேசுகிற வகையிலே அரசாங்கத்தைப்பற்றிக் குறிப்பிட்டு, அதைச் செய்தது, இதைச் செய்தது என்று குற்றஞ்சாட்டினார்கள். அதற்கும் அவரைப் பாராட்டுகிறேன். அவர் அப்படித்தான்

[திரு. எம். பக்தவத்சலம்] [9th November 1966

சொல்ல வேண்டும், சொல்லட்டும். கனம் எதிர்க்கட் ... துணைத்
தலைவர் அவர்கள் சில சமயங்களில் பேசுகிற பேச்சு உள்ள ... எனக்கு
ஏமாற்றத்தைக் கொடுத்திருப்பதாகக் கூட நான் இங்கே ... விவித்த
சந்தர்ப்பங்கள் உண்டு. அவரிடத்திலிருந்து எவ்வள ... கார
சாரத்தை எதிர்பார்த்தேனே அவ்வளவு காரசாரம் அவரு ... டைய
பேச்சில் இல்லையே என்று கூட நான் தெரிவித்ததுண்டு. ஆ ... னல்,
இன்று அப்படியல்ல. இன்றைய பாராட்டுப் பேச்சிலே ... கூட:
காரசாரத்தை அவரால் விட முடியவில்லை. அதற்காக ந ... நான்
அவரைப் பாராட்டுகிறேன்.

கனம் எதிர்க் கட்சித் துணைத் தலைவரவர்கள் இங்கே ... வந்து
உட்காரவேண்டுமென்றால் அது அவர் கையில் இல்லை; ம ... க்கள்
கையில் இருக்கிறது. அவர் விரும்புகிறபடி நான் அங்கே ... போய்
உட்காரவேண்டும் என்றாலும் அதுவும் மக்கள் கையில்தான் ... இருக்
கிறது. இதெல்லாம் நம்முடைய தனிப்பட்ட விருப்பு வெறுப ... பைப்
பொறுத்ததல்ல, மக்கள்தான் முடிவு கட்ட வேண்டும். இ ... வ்வளவு
தூரம் எதிர்க் கட்சித் துணைத் தலைவரவர்கள் விரும்புகிற ... ர என்று
பச்சாதாபத்தோடு இடம் மாற்றிக்கொள்ளலாமா எ ... ன்றாலும்,
தாம்பூலம் மாற்றிக் கொள்ளுவது போல் மாற்றிக் ... கொள்ள
முடியாது. ஏனென்றால், ஜனநாயகத்தில் அவரவர்கள் ... இஷ்டம்
போல் இடத்தை மாற்றிக்கொள்ளுவதில்லை.

கனம் உறுப்பினர் திரு. மதியழகன் அவர்கள் பே ... சும்போது,
அவரிடம் எனக்குப் பாரபட்சம் இருப்பதாகச் செ ... ான்னார்கள்.
அப்படி இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஆனால், ... நற்று நான்
மேல்சபையில் பேசும்போது 'கனம் அங்கத்தி ... னர் திரு.
அன்பழகன்' என்று சொல்லுவதற்குப் பதிலாக 'க ... னம் அங்கத்
தினர் திரு. மதியழகன்' என்று சொல்லிவிட்டேன். ... அவ்வளவு
தூரம் அவரிடத்தில் எனக்கு அன்பு இருக்கிறது. ... புன்சிரிப்பு,
பெரிய சிரிப்பு என்று ஏதேதோ கனம் அ ... ங்கத்தினர் திரு.
மதியழகன் சொன்னார்களே, அதெல்லாம் அவ ... ருக்கும் உண்டு.
ரொம்ப மனுஷத்தன்மையோடு, மரியாதை ... யோடு, ரொம்ப
அன்போடு, உருக்கமாகப் பேசுகிறவர்தான் அவ ... ர்கள். இதெல்லாம்
எப்போது? உட்கார்ந்திருக்கிற வரையில்தா ... ன். ஆனால், எழுந்து
நின்றுவிட்டால் அவருக்குப் பரவசம் வந்து ... விடுகிறது. பரவசம்
வந்துவிட்டால் ரொம்பக் காரசாரமாகத்தா ... ன் பேசுகிறார். அதை
நான் அனுபவித்துக்கொண்டுதான் ... இருக்கிறேன். எனக்கு
அவரிடம் கொஞ்சங்கூட வெறுப்பு இல் ... லை; ஆத்திரம் இல்லை. அவர்
பேசிக் கொண்டிருக்கும்போது, "அ ... ருக்கு இன்னும் கொஞ்சம்
அவகாசம் கொடுங்கள்" என்று ச ... ட நான் தங்களிடம் ஓரிரு
சமயங்களில் கேட்டுக்கொண்டது க ... னம் அங்கத்தினருக்கே நினை
விருக்கும். (திரு. சா. கணேசன் ... அதைத்தான் 'பாரபட்சம்'
என்கிறார் போலும்.) அவையெல் ... லாம் கூட சில்லரைச் சம்பவங்கள்
என்றுதான் நான் சொல்வே ... ன். அவற்றையெல்லாம் பெரிய
சம்பவங்களாக நான் சொல் ... லுகிறேன் என்று கனம் அங்கத்தினர்
கள் யாரும் தவருக எடுத்து ... க்கொள்ளக் கூடாது. சிற்சில சமயங்
களில் அப்படிப்பட்ட சில்ல ... ரைச் சம்பவங்களும் நடந்திருக்

9th November 1966] *[திரு. எம். பக்தவத்சலம்]*

கின்றன என்றுதான் குறிப்பிட்டேன். இதெல்லாம் ஒன்றும் பிரமாதமில்லே. அதுகூட இல்லையென்ருல், எதிர்க் கட்சி இல்லே. மொத்தமாகப் பார்த்தால் நாம் பெருமைப்படத்தக்க முறையில் நடந்துகொண்டிருக்கிறேம் என்பதில் சந்தேகம் இல்லே.

எதிர்க் கட்சி உறுப்பினர்களுக்கு, பொதுவாக உறுப்பினர் களுக்கெல்லாம் எத்தனேயோ வசதியின்மைகள் இருக்கின்றன என்று சொன்னர்கள். எத்தனேயோ 'இன்மைகள்' இருக்கின்றன. கேள்வி கேட்கும் நேரத்தில் கேள்வி கேட்கிற முறையைப்பற்றி யெல்லாம் சொன்னர்கள். கனம் சுதந்திராக் கட்சித் தலேவர் அவர்கள், "அனுவசியமான கேள்வி" என்றெல்லாம் குறிப்பிட் டார்கள். அவ்வாறு நான் சொல்ல மாட்டேன். கேள்வி கேட்கும் போதும், மற்ற சமயங்களில் பேசும்போதும், அரசாங்கத்தைத் தாக்கிப் பேசுகிற முறை இந்த ஐந்தாண்டுகளில் படிப்படியாக அபிவிருத்தியாகிக் கொண்டு வந்திருக்கிறது. அதிலே கூட எனக்குத் திருப்திதான்; வருத்தமே இல்லே. பலமான 'அப்போ ஸிஷன்' இல்லேயே என்ற ஏமாற்றம்தான் எனக்கும். அப்போ ஸிஷன் நன்ருக, சீராக, கடுமையாக அரசாங்கத்தைத் தாக்கிப் பேசினுலும் நான் அதையெல்லாம் வரவேற்கக்கூடியவன்தான். ஒருவாறு எதிர்க்கட்சி நடந்து கொண்டபோதிலும் சுமுகமான முறையிலேதான் நாம் பழகிக்கொண்டு வருகிறேம். வெளியிலே சந்திப்போம். வேறு வகையிலே சந்திப்போம். இங்கே சந்திப்பது ஒன்று. இங்கேயும் எதிர்க் கட்சியினர் யாரும் விட்டுக் கொடுப் பதில்லே. வெளியிலே சந்திக்கிற முறை இருக்கிறது. தேர்தலின் போது சந்திக்க இருக்கிறேம். தேர்தலிலே பலமாகப் போட்டா போட்டி இருந்தாலும், எவ்வளவு பலமான போட்டியிலே ஈடுபட் டாலும், சுமுகமான முறை பாதிக்கப்படுவதற்குக் கொஞ்சங்கூட இடமில்லே. தமிழ்நாடு பல வழிகளில் மற்றவர்களுக்கு வழிகாட்டி யிருக்கிறது. இந்த சட்டமன்றத்திலே நல்ல முறையில் நாம் நடந்து கொண்டு மற்றவர்களுக்கு வழிகாட்டியாக இருக்கிறேம் என்ற பெருமை நமக்கு உண்டு.

வேறு பல இடங்களில், குறிப்பாகப் பாரத நாட்டின் தலேநகரில் நடைபெற்ற சம்பவங்களேப்பற்றி இங்கே குறிப்பிடப் பட்டது. அங்கே நடைபெற்றதைப் பார்த்தால், ஜனநாயகத்திற்கு என்ன ஏற்படுமோ என்ற அச்சம், கவலே ஏற்படுகிறது. அது தவிர்க்கப்படத்தான் வேண்டும். அதைத் தவிர்க்கும் வகையிலும் தேசத்திற்கே தமிழ்நாடு வழிகாட்டும் என்றுதான் நான் நம்பு கிறேன். நேற்றுமுன்தினம் இந்த தேசத்தின் தலேநகரில் நடந்த சம்பவம் உலகத்தையே கலக்க வைத்திருக்கும். உலகமே பாராட்டுகிற நம்முடைய காங்கிரஸ் தலேவரவர்களுடைய இல்லத் திற்கு காலிகள் சென்று தீயிட்டார்கள். இதையெல்லாம் நாம் தீவிரமாகச் சிந்தித்துப் பார்க்கும்போது, ஜனநாயகத்தை நாம் எப்படி நடத்தப் போகிறேம், ஜனநாயகத்திற்கு எத்தகைய ஆபத்தெல்லாம் வருகிறது என்பதைக் குறித்து கவலே ஏற்படு கிறது. இங்கே நான் உட்கார்ந்துகொண்டிருக்கும்போது, சற்று முன்பு டெல்லியிலிருந்து ஒரு செய்தி வந்தது. அந்தச் செய்தியிலே

[திரு. எம். பக்தவத்சலம்] [9th November 1966

அகில இந்திய காங்கிரஸ் தலைவரவர்களுடைய வீட்டுக்கு போக்கிரிகள் தீ வைத்த செய்தியும் இருந்தது. ஓரிடத்தில் நடந்ததைப் பார்த்து, நாமும் அம்மாதிரி செய்தால் என்ன என்று மற்றவர்களுக்கும் தோன்றக் கூடும். அதெல்லாம் வகுப்புத் துவேஷ அடிப்படையில் எழுவதாகும். அத்தகைய வகுப்புத் துவேஷத்திற்குக் கொஞ்சமும் இடம் கொடுக்கக் கூடாது என்பதில், தமிழ்நாடு மற்றவற்றில் எல்லாம் எப்படி வழிகாட்டியாக இருக்கிறதோ அப்படியே வழிகாட்டும் என்ற நம்பிக்கை இருக்கிறது என்று அந்தச் செய்தியிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அங்கு நடந்த சம்பவங்களைக் குறிப்பிட்டு, இங்கே தமிழ்நாட்டிலே அத்தகைய நிலைமைகளுக்கு இடம் கொடுக்காமல் இருப்பது மட்டுமல்லாமல், மற்றவர்களுக்கும் வழிகாட்டும் முறையில் தமிழ்நாடு நடந்துகொள்ளும் என்ற நம்பிக்கை அந்தச் செய்தியிலே இருந்தது. அந்தச் செய்தி எனக்கு சற்று முன்புதான் கிடைத்தது.

பொதுத் தேர்தல் வருகிறது. இந்த மன்றத்தில் எப்படி நாம் நடந்துகொள்ளுகிறோமோ அந்த அடிப்படையிலேயே பொதுத் தேர்தலையும் நடத்துவோம் என்று நான் நம்புகிறேன். தேர்தலில் போட்டி இருக்கலாம். என்றாலும், நாம் ஜனநாயக அடிப்படையில் இதுவரைக்கும் மூன்று பொதுத் தேர்தல்களை நடத்தியிருக்கும் சிறப்பை உலகமே பாராட்டுகிறது. எல்லோருக்கும் ஓட்டுரிமை கொடுத்து, பெரிய அளவில், சுமுகமான முறையில் ஜனநாயகத்தை நாம் நடத்திக்கொண்டு வருகிறோம். தமிழ்நாட்டு சட்டமன்றம் எப்படி இதுவரையில் நடந்து வந்திருக்கிறதோ, எப்படி மற்றவர்களுக்கு வழிகாட்டியிருக்கிறதோ, அதைவிடச் சீரிய முறையில் தமிழ்நாட்டு மக்கள் வருகிற பொதுத் தேர்தலின்போது நடந்து கொண்டு உலகினரின் பாராட்டுதலைப் பெறுவார்கள் என்றுதான் நான் நம்புகிறேன்.

இந்தச் சட்டமன்ற மண்டபத்தைப் பற்றிச் சொன்னார்கள். இதைப்பற்றி முன்பு யோசித்தோம். மண்டபம் கட்டுவதாக இருந்தால் பல கோடி ரூபாய்கள் ஆகும். 207 அங்கத்தினர்கள் தான் இருக்கிறார்கள். பண நெருக்கடியில் அதற்கு ஏன் அவ்வளவு இப்போது செலவு செய்யவேண்டும், தேவைப்படுமானால் பின்னால் பார்த்துக்கொள்ளலாம் என்பதாக ஒத்தி வைத்தோம். ஆனால் ஒன்று. இந்த மண்டபத்தில் போதுமான வசதிகள் இல்லை என்கிற குறை எனக்கும் இருக்கிறது. லாபி வசதி, லைப்ரரி வசதி போன்ற பல வசதிகள் அளிக்கப்படத்தான் வேண்டும். இன்னும் இந்தச் சபையை அதிக நாட்கள் நடத்த வேண்டும் என்றார்கள். அதை நானும் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் அதிக நாட்கள் நடத்த வேண்டுமென்றால் பிசினஸ் இல்லை. அதிக நாட்கள் நடத்த வேண்டுமென்றால் அதற்கான பிசினஸ் வேண்டும்.

முக்கியமாக தங்களை நான் பாராட்ட விரும்புகிறேன். தமிழ்நாடு சட்டமன்ற—சென்னை சட்டமன்ற சபாநாயகர்களைப் பொறுத்த வரையில் தொடர்ந்து ஒரு பாரம்பரியத்தை நிலைநாட்டி வந்திருக்

9th November 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

கிறார்கள். அந்த பாரம்பரியத்தை தங்களும் நிலைநாட்டி மற்றவர்களுக்கெல்லாம் வழிகாட்டியாக பெருமை அடையச் செய்திருக்கிறீர்கள். சில சந்தர்ப்பங்களில் கொஞ்சம் நடிப்புக்காவது கோபத்தைக் காட்ட வேண்டியிருக்கிறது. காரசாரம் இல்லை என்றாலும் சுவை இருப்பது இல்லை. தங்களுக்கு சில சமயங்களில் கோபமும் வந்திருக்கிறது. கோபம் வரத்தான் வேண்டும். ஆனால் ஆறுவதுதான் சிறப்பு. உலகமே நாடக மேடை என்று ஒரு ஆங்கிலக் கவி சொன்னான். கோபம் வராவிட்டாலும் கோபம் வந்துவிட்டதுபோல் நடிக்க வேண்டியிருக்கிறது. கோபம் வந்தால் அதை அடக்கிக்கொள்வதில்தான் பெருமை ஏற்படுகிறது. பொறுமை இழக்கும்படியான சந்தர்ப்பம் வந்தால் மீண்டும் பொறுமை அடைவதுதான் பெருமை. தாங்கள் நல்ல வகையில் இந்த மன்றத்தை நடத்திச் சென்று எல்லோருடைய பாராட்டுதல்களையும் பெற்றிருக்கிறீர்கள். அதேமாதிரி தாங்கள் இங்கு இல்லாத சந்தர்ப்பங்களில் துணை சபாநாயகர் அவர்கள் இந்தச் சபையை மிகவும் சிறப்பாக நடத்தி வந்திருக்கிறார்கள். அவர்களுக்கும் என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். சட்டமன்றக் காரியதரிசி, துணைக் காரியதரிசி, உதவிக் காரியதரிசிகள், இந்த இலாக்கா சிப்பந்திகள் எல்லோரும் நமது பாராட்டுதல்களுக்கு உரியவர்கள். அவர்கள் பணி மிகவும் பொறுப்பு வாய்ந்ததாகும். இந்த மன்றத்திலே எத்தனையோ கட்சிகள் இருக்கின்றன. எல்லாக் கட்சி உறுப்பினர்களுக்கும் விருப்பு வெறுப்பின்றி அவர்கள் ஆலோசனைகள் கூறவேண்டியவர்களாக இருக்கிறார்கள். உறுப்பினர்களுக்குத் தேவைப்படுகிற உதவிகளை அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் கட்சி மனோபாவமின்றி, கட்சி விருப்பு வெறுப்பின்றி எல்லா அங்கத்தினர்களுக்கும் தேவைப்படுகிற உதவிகளை அளித்து, ஆலோசனைகள் கூறி, வழி காட்டி, தங்கள் பணிகளை ஆற்றி வந்திருப்பது பாராட்டுவதற்குரியது.

இன்றையதினம் நமக்கு எத்தனையோ பிரச்சினைகள் இருக்கின்றன. விருப்பு வெறுப்பு, குறைகள் இருக்கின்றன. சபை முடிவுபெறும் இந்தக் கட்டத்தில் கூட நம்மை அறியாமல் அவை வெளிப்படுகின்றன. நம் மனத்தில் அவை உறுத்திக் கொண்டிருக்கின்றன. பொதுத் தேர்தலுக்குப் பிறகு இங்கே நம்மில் யார் யார் வருவார்கள், புதிதாக எந்த எந்த இளைஞர்கள் வருவார்கள் என்பது ஒன்றும் இப்போது நமக்குத் தெரியாது. அப்படி வரச் செய்வது நம் கையிலும் இல்லை. எப்படி இருந்தாலும் ஜனநாயகம் நல்ல முறையில் நமது நாட்டிலே நிலைபெற நம்மாலான பணிகளை எல்லாம் செய்து இருக்கிறோம். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு இந்த மன்றத்திலே புதிதாக வந்து உட்கார இருக்கிறவர்களும் இந்த ஜனநாயக முறை சிறப்பான முறையில் தொடர்ந்து வேரூன்றி நிலைபெற தொண்டாற்ற முற்படுவார்கள் என்ற நம்பிக்கையோடு எனது வார்த்தைகளை நான் முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

[9th November 1966

கனம் சபாநாயகர் : கனம் முதல் அமைச்சர் அவர்களே, மற்ற கனம் அமைச்சர்களே, கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே, மற்ற கட்சிகளின் கனம் தலைவர்களே, கனம் அங்கத்தினர்களே, இன்றைய தினம் நீங்கள் எல்லோரும் என்னையும், எனது சகோதரர் உதவி சபாநாயகர் அவர்களையும், எங்களுக்குக் கீழே இந்த சட்ட மன்ற இலாகாவில் பணி புரிகிற நிர்வாகஸ்தர்களாகிய காரியதரிசி, துணைக் காரியதரிசி, உதவிக் காரியதரிசிகள், மற்ற சிப்பந்திகளையும், பணியாளர்களையும் புகழ்ந்து, பாராட்டி, இவ்வளவு நேரம் பேசிக் கொண்டிருந்தீர்கள். நீங்கள் ஒருவருக்கொருவர் பாராட்டிக் கொண்டவைகளைப் பற்றி நான் ஒன்றும் சொல்வதற்கில்லை. என்னையும், என்னைச் சார்ந்த மற்றவர்களையும் தாங்கள் புகழ்ந்து அன்பாக பாராட்டிப் பேசியதற்காக தங்கள் எல்லோருக்கும் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஜனநாயகம் உலகத்தில் நிலைபெறவேண்டும் என்பதை நாம் ஒத்துக் கொண்டிருக்கிறோம். ஜனநாயகம் எப்படி எப்படி அமைய வேண்டும் என்பதை நாம் தெரிந்து கொண்டிருக்கலாம். ஆனால், அதைச் செயல்படுத்துவது மிகவும் சிரமமான காரியம். மற்ற முறைகளைப் போன்று அல்லாது ஜனநாயக அமைப்பிலே மக்களுக்கு நல்ல பணிகளைச் செய்ய, நிர்வாகம் செம்மையாக நடைபெறச்செய்ய நாம் நிர்வாக அமைப்பு, சட்டசபை, ஜுடிஷியரி என்பதாக மூன்று பிரிவுகளாகப் பிரித்து வைத்துக்கொண்டு செயல்படுகிறோம் என்பதை எல்லோரும் அறிவீர்கள். அதில் ஒரு அங்கமாக இருப்பது லெஜிஸ்லேச்சர். இதில் சபாநாயகராக வேலை செய்வது பொறுப்பான வேலையாக இருக்கிறது. இந்தப் பொறுப்பை தாங்கள் எல்லோரும் ஏகமனதாக என்னைத் தேர்ந்தெடுத்து என்னிடம் ஒப்படைத்தீர்கள். நானும் கடந்த ஐந்து ஆண்டு காலமாக இந்தச் சபையின் தலைவராக இருந்து பணியாற்ற தாங்கள் வாய்ப்பு அளித்ததற்கு என்னுடைய நன்றி. நான் ஏற்றுக்கொண்ட வேலையை நல்ல முறையில் நடத்த நீங்கள் எல்லோரும் ஒத்துழைப்பை அளித்திருக்கிறீர்கள். அதற்காகப் பாராட்டுகிறேன். நான் முதலில் குறிப்பிட்டதுபோல இந்த ஸ்தானத்தில் இருந்து பணிபுரிவது மிகக் கஷ்டமானது. ஒரு பக்கம் சபைவிதிகள் இருக்கின்றன. ஒரு பக்கத்தில் கனம் அங்கத்தினர்களுடைய உணர்ச்சிகள், அவர்களுடைய உரிமைகள், அவர்களுடைய கருத்துக்கள்—இதற்கிடையில் சபையின் நடவடிக்கைகளுக்கு குந்தகம் ஏற்படாதவாறு சபையை நடத்திச் செல்லும் பெரும் பொறுப்பு ஏற்படுகிறது. இன்று காலையில் கூட ஒரு மணி நேரத்தை பத்துப் பேர்களுக்கு பங்கு போட்டுக் கொடுக்கும் நிலை எனக்கு ஏற்பட்டது. பங்கெடுத்துக்கொள்ள விரும்புகிற அங்கத்தினர்களுக்கு நான் சந்தர்ப்பம் அளிக்க வேண்டிய நிலை, அதோடு குறிப்பிட்ட காலத்தில் சபை முன் வருகிற விஷயங்களை முடித்தாகவேண்டிய நிலை—இதற்கிடையில் எனக்கு குசேலர் ஞாபகம் தான் வரும். இருப்பதை அத்தனை பேர்களுக்கும் பகிர்ந்தளிக்கத் தவிக்கிறது போல, இருக்கிற நேரத்தை நான் பங்கெடுத்துக் கொள்ள விரும்புகிற அத்தனைபேர்களுக்கும் பகிர்ந்து கொடுக்க வேண்டியதாக இருந்தது. இன்று காலையில் கூட நண்பர் திரு. மதியழகன், திரு. கருணாநிதி ஆகிய இருவரும் மாற்றி மாற்றி ஒரு

9th November 1966] [சபாநாயகர்]

கேள்விக்கு பத்து உபகேள்விகள் போட்டு விட்டார்கள். அதற்கே பதினைந்து நிமிஷங்கள் ஆகிவிட்டன. பாக்கி நேரத்தில் எல்லாக் கேள்விகளையும் முடிக்கவேண்டிய பொறுப்போ எனக்கு இருந்தது. திரு. மணி எழுந்தார்கள். நான் அழைக்க முடியவில்லை. 'அவர் எழுந்திருக்கிறார்' என்பதால் திரு. மதியழகன் அவர்களும் குறிப்பிட்டு உட்கார்ந்தார்கள். நான் என்ன செய்வது? என்னுடைய மேசை மீது இருக்கிற "பெல்" மிகவும் கஷ்டத்திற்கு உள்ளாகியிருக்கிறது. வேறு சபாநாயகர் யாரும் என்னைப் போல அவ்வளவு பலமாக அதை அடிக்கடி அடித்திருக்கமாட்டார்கள். இப்படி மிகவும் கஷ்டப்பட்டு வேலை செய்கிற சந்தர்ப்பங்கள் அடிக்கடி ஏற்பட்டிருக்கின்றன.

கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது கூட ஒத்தி வைப்புப் பிரேரணை 142 கொடுக்கப்பட்டதற்கு ஒன்று கூட அனுமதிக்கப்படவில்லையே என்று தெரிவித்தார்கள். வாஸ்தவம் தான். விதி அவ்வாறு இருக்கிறது. ஒத்தி வைப்புப் பிரேரணை என்றால் The matter to be discussed must involve more than the ordinary administration of law. என்று இருக்கிறது. அப்படிப் பார்க்கும்போது ஒன்று கூட விதிகளுக்கு உட்பட்டதாக அமையவில்லை, அன்றாட நிர்வாகத்திற்கு உட்படாத, "எக்ஸ்டார்டினரி சர்க்கம்ஸ்டென்ஸ்" வந்தது, அதனால் ஏற்படுகிற விளைவை உடனடியாகக் கவனித்தாக வேண்டிய நிலை என்று வருகிறபோது ஒத்தி வைப்புப் பிரேரணை கொணர்ந்து விவாதிக்கவேண்டும் என்கிற நிலை வருகிறது. அப்படி வரும்போது அது சர்க்கார் மீது ஒரு ஸென்ஷர் மோஷன் கொண்டு வருவது போன்று அர்த்தம். ஆகவே, கடந்த ஐந்து வருடங்களில் பல ஒத்திவைப்புப் பிரேரணைகள் கொடுக்கப்பட்டும் ஒன்றைக் கூட விதியின் கீழ் அனுமதிக்க முடியவில்லை. நான் கூட, ஏதாவது ஒன்றையாவது அனுமதித்துப் பார்க்கலாமே என்று எண்ணியது உண்டு. விதிகள் இடம் கொடுக்கவில்லை. விதிகளின் கீழ் பார்க்கப்போனால் சபையில் அவை பற்றிக் குறிப்பிடுவதற்கே சந்தர்ப்பம் இல்லை. நான் அதைப்பற்றி இங்கே எடுத்துச் சொல்ல அனுமதித்துவிட்டு, கடைசியில் "disallow" பண்ணிக்கொண்டு வந்தேன் இப்படிச் செய்து வந்திருப்பது கூட ஒருவகையில் தாராளமாக நடந்து வந்திருப்பதாகத்தான் நினைக்கிறேன்.

இன்னொரு பெரிய கஷ்டம் தீர்ப்புக்கள் கொடுப்பது. சபையில் ஏதாவது ஆட்சேபணைகள் எழுப்பப்பட்டால் சபாநாயகர் தம்முடைய தீர்ப்பைக் கொடுத்தாக வேண்டும். சபாநாயகர் தீர்ப்பே ஃபைனல் என்று வைத்து இருக்கிறார்கள். சபாநாயகர் தீர்ப்புக்கு ஒரு அப்பீல் என்று இருந்திருந்தால் மிகவும் சிரமங்கள் ஏற்படும். ஆகவே, அந்த வகையில் பூரண பொறுப்போடு சபாநாயகர் தீர்ப்புக் கொடுக்கவேண்டும்.

சபையில் எத்தனையோ விஷயங்கள் வருகின்றன. என்ன வருகிறது என்பதைப்பற்றிக் கவலை கிடையாது. சபை விதிகளின் கீழ் சபையின் கவனத்திற்கு வருகிற விஷயங்களைப் பற்றி தங்கள் தங்கள் அபிப்பிராயங்களை எடுத்துச் சொல்வதற்கு எல்லா அங்கத்

[சபாநாயகர்] [9th November 1966

தினர்களுக்கும் வழிவகை செய்யவேண்டும். அதுதான் சட்டமன்ற விதிகளின் கருத்தெல்லாம். ஒரு நண்பர் ஒரு மோஷனில் பேசி விட்டார், இன்னொரு நண்பர் அதில் பேசவில்லை யென்றால் அவர் வேறு இன்னொரு மோஷன் எதிலாவது பேசியிருப்பார்கள் என்று தான் நான் நம்புகிறேன். அவர்களைப் பேசவிடக் கூடாது என்ற நிலையை நான் என்றும் எடுத்துக் கொண்டது கிடையாது.

என்னைப் பற்றிச் சொன்னார்கள், புன்னகையோடு இருக்கிறீர்கள் என்று. எனக்குத் தெரியும், விடாப் பிடியாக, கோபத்தின் சொரூப மாக நான் இருந்த நாட்களும் உண்டு. நான் அப்படி இருந்தது வேண்டுமென்றே இருந்தது அல்ல. அவ்விதம் கூட இந்தச் சட்ட சபையிலே இருக்கவேண்டிய அவசியம் இருந்திருக்கிறது. இல்லை யென்றால் ஆபத்துத்தான். முதலமைச்சர் அவர்கள், மற்ற அமைச்சர்கள், எதிர்க்கட்சித் தலைவர், மற்றத் தலைவர்கள் எல்லோரும் இந்தச் சபாநாயகர் பதவிக்கு மிகுந்த கண்ணியமும் மரியாதையும் கொடுத்துக்கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த முறையினாலேதான் நான் என்னுடைய கடமையைச் சரிவரச் செய்வதற்குத் தைரியம் ஏற்பட்டது. அதுதான் காரணமே தவிர, கெட்டிக்காரத்தனம் ஒன்றும் கிடையாது. நீங்கள் அந்தமாதிரி ஒத்துழைப்புக் கொடுத்தால் நாங்கள் சம்பந்தப்பட்ட விதிகளையும், முறைகளையும் எடுத்துச் சொல்வதற்குப் போதிய தைரியத்தைப் பெற்றுக்கொள்கிறோம். அதுதான் ஜனநாயகத்தின் அடிப்படைக் கொள்கை.

குறிப்பாக முதலமைச்சர் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மற்ற அங்கத்தினர்கள் பேசும்பொழுது எவ்வளவு வேகமாக இருந்தாலும், அவர்கள் இருவரும் மிகவும் பொறுமை யாக இருந்து வந்திருக்கிறார்கள். இதற்காக நான் மற்றவர்களைச் சொல்லவில்லை என்று யாரும் நினைக்க வேண்டாம். நான் இதை எதற்காகச் சொல்லுகிறேன் என்றால் கட்சியைக் கட்டுப்படுத்திக் கொண்டுவருவது அவ்வளவு கஷ்டமாக இருக்கும். இந்தச் சட்டசபை பொறுமையோடும், பொறுப்போடும் நடத்தப்பட்டு வந்திருக்கிறது.

இந்தச் சட்டசபையின் காலத்திலே 157 சட்டங்கள் இயற்றி யிருக்கிறோம். 6,107 கேள்விகளுக்குப் பதில் சொல்லப்பட்டிருக் கின்றன. இன்னும் தனியே கேள்விகள் பிரிண்டிலே வந்திருக் கின்றன இதுமாதிரி பல காரியங்களை நாம் செய்திருக்கிறோம். பொறுப்பான காரியங்கள் பல நடந்திருக்கின்றன.

உங்கள் எல்லோருக்கும் நான் ஒரே ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். இன்னும் வரக்கூடிய காலத்திலேயும் கண்ணிய மான முறையிலே எல்லோரும் நடந்துகொள்ளவேண்டும். உணர்ச்சி வசப்பட்டு பொறுமை மீறி நடந்து கொள்ளக் கூடாது. ஏனென்றால் விதிகளை மீறி சட்டசபையை நாம் நடத்த முடியாது. நான் சென்ற இடங்களில் எல்லாம், சமீபத்தில் நான் டெல்லிக்கு சட்டசபைத் தலைவர்கள் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காகச் சென்றபொழுதும்கூட, அங்கேயுள்ள தலைவர்கள், அதிகாரிகள்

9th November 1966] [சபாநாயகர்]

எல்லோரும் என்னைப் பாராட்டினார்கள். ஏனென்றால், இங்கிருந்து ஒரு பிரச்னையும் கிடையாது. அவ்வளவு அமைதியாக நாம் இங்கு அலுவல்களை நடத்தி வந்திருக்கிறோம் என்பதுதான்.

நம்முடைய கவர்னர் அவர்கள் சமீபத்திலே இங்கே விஜயம் செய்திருந்தார்கள். அவர்களோடு, முதலமைச்சர் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் என்னுடைய சேம்பரிலே சந்தித்துப் பேசுகின்றபோழுது, அவர்கள் கேட்டார்கள், "முதலமைச்சர் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் பக்கத்திலே பக்கத்திலே உட்கார்ந்திருக்கிறார்களே, மேஜை அவ்வளவு குறுகலாக இருக்கிறதே, வேகத்தில் ஏதாவது செய்யக் கூடிய நிலைமை வாராதா?" என்று. நான் "அது தமிழ்நாட்டு பண்பாடு நாகரிகம், எவ்வளவு வேகமாக இருந்தாலும் அந்த நிலை வாராது" என்று சொன்னேன். ஆகவே, எல்லோரும் ஜன நாயகத்தை வளர்ப்பதற்குப் பாடுபடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தேர்தலைப்பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. யார் வந்தாலும், இந்த நாட்டிலே பிறந்த தமிழன்தான் வரப் போகிறான் என்ற பரந்த நோக்கத்தோடு, கண்ணியத்தோடு தேர்தலை நடத்தவேண்டும். நம்மவர்கள்தான் வரப்போகின்றனர். இங்கு உட்காரப் போகின்றனர் என்ற அந்த அளவிலேதான் நாம் எதிர்காலத்தைப்பற்றி நினைத்துக்கொள்ளவேண்டும்.

நான் முன்பே சொன்னதைப் போன்று டெபுடி ஸ்பீக்கர் அவர்கள் மிகுந்த ஆர்வத்தோடு அமைதியாக சபையை நடத்தி வந்திருக்கிறார்கள். அதேபோன்று பேனல் ஆப் சேர்மன் நியமிக்கப்பட்டு, அவர்களும் மிகுந்த உதவியைச் செய்திருக்கிறார்கள். லெஜிஸ்லேச்சர் செக்ரடரியேட்டிலே காரியதரிசி அவர்களும், டெபுடி காரியதரிசி அவர்களும், மற்றும் பணியாளர்கள் எல்லோரும் சபையைச் சரியாக நடத்தவேண்டுமே, அங்கத்தினர்கள் கோபித்துக் கொள்ளக்கூடாதே என்ற முறையிலே இரவு பகலாக வேலைசெய்திருக்கிறார்கள், அவர்களுக்கும் பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக, பிரஸ் இருக்கிறது. சட்டசபை ப்ரொஸீடிங்ஸ், அதாவது நிகழ்ச்சிகளை நல்ல முறையிலே வெளியிட்டு வந்திருக்கிறார்கள். நல்ல உதவி செய்திருக்கிறார்கள். மற்ற அதிகாரிகளும் சட்டசபை நடவடிக்கைகளுக்குப் போதிய ஆதரவு கொடுத்திருக்கிறார்கள், அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னைப்பற்றி நல்லமுறையிலே அன்புடன் பேசிய முதலமைச்சர் அவர்களுக்கும் எதிர்க்கட்சித் தலைவர்களுக்கும், மற்றவர்களுக்கும் நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வணக்கம்.

The House is adjourned *sine die*. 2–56 p.m.

The House then adjourned *sine die*.

IX.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory Rules and Orders.

283. *Notification issued with G.O. Ms. No.* 2694, *Agriculture, dated the* 20*th August* 1966, *making an amendment to the Madras Pawnbrokers Rules*, 1944, *regarding the powers of the Appellate Authorities in cases of refusal and cancellation of licences.* [*Laid on the Table of the House under section* 22 (4) *of the Madras Pawnbrokers Act*, 1943 (*Madras Act XXIII of* 1943)].

284. *Notification issued with G.O. Ms. No.* 3442, *Industries, Labour and Housing (Labour), dated the* 20*th August* 1966, *making an amendment to the Industries, Labour and Housing Department Notification II*-1 *No.* 107 *of* 1965, *dated the* 18*th December* 1964, *published at page* 32 *of Part II—Section* 1 *of the* Fort St. George Gazette, *dated the* 20*th January* 1965, *as subsequently amended.* [*Laid on the Table of the House under section* 29 (4) *of the Madras Catering Establishments Act* 1958 (*Madras Act XIII of* 1958.)]

285. *Notification issued with G.O. Ms. No.* 3601, *Industries, Labour and Housing (Labour), dated the* 3*rd September* 1966, *making an amendment to rule* 23 *of the Madras Catering Establishments Rules*, 1950, *regarding the Revised Jurisdiction of certain Labour Officers.* [*Laid on the Table of the House under section* 29 (4) *of the Madras Catering Establishments Act*, 1958 (*Madras Act* XIII *of* 1958).]

286. *Notification issued with G.O. Ms. No.* 2969, *Revenue, dated the* 6*th October* 1966, *making an amendment to rule* 37 *of the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Rules*, 1965, *published with the Revenue Department Notification S.R.O. No. A*-163 *of* 1965, *dated the* 10*th February* 1965. [*Laid on the Table of the House under section* 73 (5) *of the Madras Inam Estates (Abolition and Conversion into Ryowari) Act* 1963 (*Madras Act XXVI of* 1963).]

287. *Notification issued with G.O. Ms. No.* 2894, *Home, dated the* 29*th August* 1966, *regarding exemption of tax leviable under the Madras Motor Vehicles Taxation Act*, 1931 *in respect of the motor car bearing registration number C.C.* 1199 *intended for the personal use of Vice-Consul of Japan at Madras.* [*Laid on the Table of the House under section* 11 (2) *of the Madras Motor Vehicles Taxation Act*, 1931 (*Madras Act III of* 1931).]

288. *Notification issued with G.O. Ms. No.* 2392, *Home, dated the* 19*th July* 1966, *regarding exemption of tax leviable under the Madras Motor Vehicles Taxation Act*, 1931, *in respect of the vehicle bearing Registration No. MSS* 9332 *belonging to the United Nations Special Fund Project, Care of Ground Water Cell, Public Works Department, Madras*-5. [*Laid on the Table of the House under section* 11 (2) *of the Madras Motor Vehicles Taxation Act*, 1931 (*Madras Act III of* 1931).]

9th November 1966]

289. *Notification issued with G.O. Ms.* 3182, *Home dated the 21st September* 1966, *regarding fixation of quarterly tax to be collected in respect of the luxury coach bearing registration No. MSR* 1231, *belonging to Sri R. Soundararajan, Rasipuram, Salem district.* [*Laid on the Table of the House under section* 11 (2) *of the Madras Motor Vehicles Taxation Act,* 1931 (*Madras Act III of* 1931).]

290. *Notification issued with G.O. Ms. No.* 3100, *Agriculture, dated the 26th September* 1966, *declaring the intention to exercise control over the purchase and sale of sugarcane products except crystal sugar in the taluks of Srivilliputhur and Sivaganga in Ramanathapuram district and chillies in the entire district of Ramanathapuram.* [*Laid on the Table of the House under section* 29 (4) *of the Madras Agricultural Produce Markets Act,* 1959 (*Madras Act XXIII of* 1959).]

291. *Notification issued with G.O. Ms. No.* 3284, *Agriculture, dated the* 11*th October* 1966, *directing the Tirunelveli Market Committee to establish a market at Karivalamvandanallur in Tirunelveli district to provide facilities for the purchase and sale of chillies, cotton and groundnut.* [*Laid on the Table of the House under section* 29 (4) *of the Madras Agriculture Produce Markets Act,* 1959 (*Madras Act XXIII of* 1959).]

292. *Notification issued with G.O. Ms. No.* 2330, *Rural Development and Local Administration, dated the* 3*rd October* 1966, *amending the rules relating to the qualifications of the* **Park Superintendents**, *employed under Municipal Councils* **published** *with the Local Administration Department Notification No.* 1078, *dated the* 21*st October* 1941. [*Laid on the Table of the House under section* 304 (*d*) *of the Madras District Municipalities Act,* 1920 (*Madras Act V of* 1920).]

293. *Notification issued with G.O. Ms. Nos.* 3183, 3184, 3188, 3190 *to* 3198, *Home, dated* 21*st September* 1966. 3213 *and* 3214, *Home, dated* 22*nd September* 1966, 3247 *and* 3248, *Home, dated* 26*th September* 1966 *regarding the levy of reduced rate of tax on Luxury Coaches belonging to certain transport services in Madras State.* [*Laid on the Table of the House under section* 11. (27 *of the Madras Motor Vehicles Taxation Act,* 1931 (*Madras Act III of* 1931).]

B. Reports, Notifications and other papers.

* 63. *The Madras Appropriation* (*No.* 4) *Bill,* 1966 (*L.A. Bill No.* 21 *of* 1966).

* 64. *The Madras Appropriation* (*No.* 5) *Bill,* 1966 (*L. A. Bill No.* 22 *of* 1966).

65. *List of unstarred Questions and Answers from* 6 *to* 14.

[9th November 1966

66. *Report of the Committee on Public Accounts on the purchase of vacant land comprised in R.S. No. 124/6 of Perambur Division (Erukkancheri) by the Madras State Electricity Board in* 1963.

